
# சுஜாதா

# வஸந்த்! வஸந்த்!



# வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

உயிர்மை
பதிப்பகம்

விலை: ரூ. 125

உயிர்மை பதிப்பக வெளியீடு : 48

வஸந்த்! வஸந்த்! ⁄⁄ நாவல் ⁄⁄ ஆசிரியர் : சுஜாதா ⁄⁄ © சுஜாதா ⁄⁄ முதல் பதிப்பு : நவம்பர் 1981 ⁄⁄ இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் 1983 ⁄⁄ மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 2005 ⁄⁄ நான்காம் பதிப்பு: ஆகஸ்டு 2011 ⁄⁄ வெளியீடு: உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை –600 018 தொலைபேசி : 91 – 44 – 24993448, மின்னஞ்சல் : uyirmmai@gmail.com ⁄⁄ இணையதளம்: www.uyirmmai.com ⁄⁄ அச்சாக்கம் : மணி ஆஃப்செட், சென்னை 600 005

Vasanth! Vasanth! ⁄⁄ Novel ⁄⁄ Author : Sujatha ⁄⁄ © Sujatha ⁄⁄ Language: Tamil ⁄⁄ First Edition : Nov.1981 ⁄⁄ Second Edition : Sep.1983 ⁄⁄ Third Edition : Dec.2005 ⁄⁄ Fourth Edition : Aug. 2011 ⁄⁄ Demy 1x8 ⁄⁄ Paper : 18.6 kg maplitho ⁄⁄ Pages : 176 ⁄⁄ Published by : Uyirmmai Pathippagam, 11/29 Subramaniam Street, Abiramapuram, Chennai - 600 018, India. Tele/Fax : 91- 44 -24993448, e-mail : uyirmmai @gmail.com Website: www.uyirmmai.com ⁄⁄ Printed at Mani Offset, Chennai 600 005 ⁄⁄ Price : Rs. 125

ISBN : 81-88641-47-2

# முன்னுரை

வஸந்த் முதலில் என் கதைகளில் தோன்றியது 'ப்ரியா'வின் ஆரம்ப அத்தியாயத்தில். அதில் கணேஷ் லண்டன் புறப்பட்டபோது கூடவே வஸந்த்தை ஏனோ நான் அனுப்பவில்லை. கணேஷ் தனியாகத் தோன்றியது. என் முதல் நாவலிலிருந்தே குற்றக்கதைகள் எழுதும்போது வழக்கறிஞர், வழக்குரைனர்கள் இருப்பது சௌகரியம். குற்றத்தின் பல அம்சங்களை விவாதிக்கும்போது இருவர் இருப்பது இன்னும் சௌகரியம். அவ்விருவரும் மாறுபட்ட குணமுள்ளவர்களாக இருப்பது இன்னும் இன்னும் வசதி. அந்தவிதத்தில் கணேஷை சீனியராக ஒரு பண்பட்ட, சற்று வயதான, புத்திகூர்மையுள்ள லாயராகவும், வஸந்தை விளையாட்டுப் போக்குள்ள இளம் உதவியாளனாகவும் அமைத்தேன். காதல், கல்யாணம் என்பதெல்லாம் வைத்து கதைகளைக் குழப்பவில்லை. வஸந்த் பெண்களைப் பார்த்தால் லேசாக அசடு வழிவதோடு சரி. (நாம் எல்லோருமேதானே!) கணேஷ்-வஸந்த் கதைகள் இவ்வாறுதான் துவங்கின. இருவரில் வஸந்த்தை இளைஞர்களுக்கும், கணேஷை புத்திசாலிகளுக்கும் பிடித்துப் போனது. இருவரும் சேர்ந்து பல குற்றங்களை, சமூக விரோதச் செயல்களை, பெண்களுக்கு இழைக்கப்படும் அநியாயங்களை எதிர்த்து வாதாடி நியாயம் செய்கிறார்கள். 'கல்கி'யில் வெளிவந்த இந்தக் கதையில் போல் சரித்திர ஆராய்ச்சிகூட செய்கிறார்கள். வஸந்த் முதலில் தோன்றி முப்பதாண்டுகள் ஆகின்றன. இன்றும் இளமை மாறாமல் இருக்கிறான். பெயர் மட்டும் இப்போது 'வசந்த்' என்று எழுதுகிறேன். இருவருக்கும் இன்னும் கல்யாணம் ஆகவில்லை. அதே தம்புசெட்டி தெரு ஆபீசில்தான் இருக்கிறார்கள். கார்தான் மாறியிருக்கிறது. குற்றங்கள் ஓயவில்லை.

அக்டோபர், 2005

**சுஜாதா**

தமிழ்நேசன் மின்நூலகம்

www.tamilnesan1981.blogspot.in

# 1

*“சுந்தர சோழன் தனது மூத்த புதல்வனது வீரச் செயலையும் ஆற்றலையும் உணர்ந்து கி.பி. 966–ல் அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான். மற்றொரு மகனாகிய அருள்மொழித் தேவன் என்பவனே பின்னர் எத்திசையும் புகழ் பரப்பி இனிது வாழ்ந்த முதல் ராஜராஜ சோழன் ஆவான்.”*

எஸ்டேட் டியூட்டி ஆக்ட்டில் ஆழ்ந்திருந்த கணேஷ் எரிச்சலுடன் நிமிர்ந்து “வஸந்த்! இப்ப நிறுத்தப் போறியா இல்லையா?” என்றான்.

“ரொம்ப சுவாரஸ்யமா இருக்குது பாஸ்! இந்த ஆதித்த கரிகாலன் 969–ல் க்ளோஸ்! நாலு பேர் சேர்ந்து ஆளைத் தீர்த்துட்டாங்க! இதில ஒரு பெரிய சஸ்பென்ஸ் கதையே இருக்கு. உத்தம சோழன் ஏன் அந்த நாலு பேருக்கும் தண்டனை கொடுக்கலை? அதுலதான் பாஸ் இருக்கு மர்மம்.”

“வஸந்த்! நிஜமாச் சொல்லு. திடீரென்று உனக்கு ஏன் சரித்திரத்தில் இத்தனை ஈ.பா?”

“என்ன பண்றது பாஸ்? சரித்திரக் கதையெல்லாம் இப்பப் படக்குன்னு நிறுத்திர்றான்களே! அதான் சொந்தமாகவே படிச்சுக்கலாம்னுட்டு...எல்லாக் காரியங்களையும் சொந்தமா செஞ்சுக்கிறது நல்லதில்லையா?”

“ஏய்! நிஜமாவே உனக்குச் சரித்திரத்தில இன்ட்ரஸ்ட்டா?”

“பின்னே?”

“நான் நம்பலை. ஏதாவது சரித்திரம் படிக்கிற பொண்ணை ஸைட் அடிக்கிறியா?”

“நடு சென்டர்லே குத்திட்டிங்களே, பாஸ். நான் சரித்திரம் படிக்கிறதுக்குக் காரணம் ஒரு பெண்ணில்லை. அவ அப்பா!”

“சரிதான்! பொம்பளை விஷயம்தான்!”

"இல்லை பாஸ்; காதல்! தெய்வீகக் காதல்!"

மூத்தவர் சம்மதியில் – வதுவை

முறைகள் பின்பு செய்வோம்

காத்திருப்பேனோடி – இதுபார்

கன்னத்து முத்தமொன்று!"

"ஏன்டா பாரதியை கோட் பண்றதுக்கு வேறெதுவும் வரி அகப்படலையா?"

"சும்மாவா பாடியிருக்கார் மகாகவி! தலைப்பாவை விலக்கித் தலையைத் தடவிக் கொடுக்கணும் போல இருக்கு பாஸ்! அவர் சொல்ற அதே நிலைதான் எனக்கும் இப்ப பாஸ்! ஐ'ம் இன் லவ்!"

"வித் வாட்?"

"வித் என் ஏஞ்ஜல்! அவ பேரு இனியா. இ..னி..யா என்னா பேரு! நாக்கிலே ஒரு ஓட்டு ஓட்டிப் பாருங்க. தித்திப்பா இல்லை? இனி..யா! அவளை நான் கல்யாணம் செஞ்சுக்கத் தீர்மானிச்சுட்டேன்!"

"இந்த வாக்கியத்தை நான் உங்கிட்ட இருந்து அடிக்கடி கேட்டுட்டேன்."

"பாஸ், இந்த முறை எந்த நூற்றாண்டிலும் செலாவணியாகும் தெய்வீகக் காதல்! லைலா மஜ்னு எங்களைப் பார்த்து வாத்தியாரே உஸ்தாத்; நாங்க அற்பர்கள்! வேற கல்லிக்குப் போறோம்'னு சைட் வாங்கிடுவாங்க. அப்படி ஒரு உக்கிரமான காதல்! லைலா ஹும்... லைலாஆ..!" தம் தம் ததம் தம்தம் என்று மானசீக டிரம் அடிக்கத் துவங்கினான் வஸந்த்!

கணேஷ் தலையில் அடித்துக்கொண்டு "அப்ப நிஜமாவே கல்யாணமா?" என்றான்.

"ஷ்யூர்! பாஸ் நீங்களும் கல்யாணம் பண்ணிக்கிங்களேன்! பயப்படாதீங்க. அண்ணியை சைட் அடிக்க மாட்டேன்! சீனியர் நீங்க கல்யாணம் பண்ணிக்கங்க. உங்களுக்காக ஒரு நாலு மணி நேரம் வெயிட் பண்ணட்டுமா?"

"வேண்டாம்!"

"சும்மா பண்ணிக்கங்க பாஸ்! சரிகை வேட்டியெல்லாம் கொடுப்பாங்க!"

"கூட ஒரு பொண்ணையும் குடுப்பாங்க! அதான் ட்ரபிள் நான் ஒரு கன்ஃபர்ம்ட் பாச்சலர்!"

"உங்களை ஒண்ணு கேக்கட்டுமா?"

"கேக்காதே. என்ன கேப்பேன்னு தெரியும்!"

"பதில்?"

"ம்ஹூம். இன்னும் இல்லை!"

"ஆ! இந்த ரீல் நம்மகிட்டே விடாதீங்க! கியர்க்காட் என்ன சொன்னான் தெரியுமா?"

"அது யாரு கியர்க்காட்!"

"எக்ஸிஸ்டென்ஷியலிஸ்ட் ரைட்டர்!"

"இந்த மாதிரி கதம்பமா உதவாக்கரையா எதாவது படிச்சுண்டே இரு! எஸ்டேட் டியூட்டி ஆக்ட்டை மட்டும் படிக்காதே!"

"அதையும் படிச்சிருக்கேன். செக்ஷன் 25 சொல்லட்டுமா? Conditions for exemptions in respect of settled property. . ."

"ஹோல்டான்! டெலிபோன் அடிக்குது!"

வஸந்த் டெலிபோனை நோக்கி ஓடினான். "அவதான் இருக்கும்!"

"ஹலோ!"

மறுமுனை "மிஸ்டர் வஸந்த் ப்ளீஸ்!"

"இனியா! என் இனிய இனியா! இன்னி! ஓ மை ஸ்வீட்டி! பை! வஸந்தகாலம் வழங்கிய நன்கொடையே!"

கணேஷ் மறுபடியும் தலையில் அடித்துக்கொண்டான்.

"இன்னி! இன்னைக்கு வரலாமா? அப்பா எப்படி இருக்கார்? கடிப்பாரா?"

"சேச்சே! நான் சொல்லி வச்சிருக்கேன் வஸந்த்! எத்தனை மணிக்கு வர்ரீங்க?"

"ராகுகாலம் முடிஞ்ச கையோட ஆறு மணிக்கு?"

"சரித்திரம் படிச்சிருக்கீங்களா? எதாவது அதைப் பத்திப் பேசுவீங்களா?"

"தாராளமா! லேட்டர் சோளாஸ்ல விளையாடுவேன். மலையனூர் ரேவதாச கிரமவித்தன் யாருன்னு கேளு?"

"கேக்க மாட்டேன். ஏதாவது வந்து உளறாதீங்க. அப்பா லேட்டர் சோளாஸ்ல பிஎச்.டி. வாங்கியிருக்கார்!"

"கவலையே படாதே! அவரை அப்படியே ஜெயமாலினி மாதிரி கவர்ச்சி பண்ணிடறேன்! ஆமா? எத்தனை மணிக்கு எழுந்தே? எப்பப் பல் தேச்சே? எல்லாம் சொல்லு?"

கணேஷ் அவன் மேல் புஸ்தகத்தை எறிந்தான்.

"அப்புறம் என்ன படிக்கறே?"

"பால் வீதி!"

"சபாஷ்! எனக்கும் அப்துல் ரகுமான் பிடிக்கும்! மெழுகு வத்தியைப் பத்தி பாடியிருக்கிறார் பாரு!

'இருட்டை மதம் மாற்றச்
சுடர் நாவால் உபதேசிக்கும்
பாதிரிகள்!'

ன்னு...ஃபன்டாஸ்டிக்!" கணேஷைப் பார்த்துக் கண்ணடித்தான்.

"அப்ப வந்துறவா? அதென்ன படக் படக்குன்னு சப்தம் கேக்குது? உன் மாரா? சரி குட்பை இன்னி!"

கணேஷ் அவனையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"அதாவது அவ அப்பாவை இம்ப்ரஸ் பண்றதுக்குச் சரித்திரம் படிச்சுட்டு ரெண்டு மூணு சோழன் பேரை வெச்சுக்கிட்டுக் கதை பண்ணப் போறியாக்கும்?"

"அதான் பாஸ் ஸினேரியோ! உங்க ஆசீர்வாதங்கள் தேவை சீனியர்!"

"உருப்பட மாட்டே நீ."

"எங்கப்பா கூட அப்படித்தான் சொன்னார். அ.ஆ. சாந்தி அடைவதாக!"

"அந்தப் பொண்ணோட அப்பா யாரு?"

"பேராசிரியர் அப்பாதுரை. மெட்றாஸ் யுனிவர்சிட்டியில சரித்திரத் துறை! பிஎச்.டி. பேராசிரியர்."

"அவரை ஏமாத்தப் போறியா? நிச்சயம் உன் பிளஃப் எல்லாம் தெரிஞ்சுரும் அவருக்கு...மாட்டேன்னு சொல்லிவிடுவார்!"

"பாஸ்! அப்படி மாட்டேன்னு சொல்லிட்டா எங்க காதலை வெட்டிற முடியுமா?"

'வேலிக்கு வெளியே
தலையை நீட்டிய என்
கிளைகளை வெட்டிய
தோட்டக்காரனே
வேலிக்கு அடியில்
நழுவும் என் வேர்களை
என்ன செய்வாய்?"

"இன்னும் ஒரு முறை என்கிட்டே அப்துல் ரகுமானை வெச்சுப் பயங்காட்டினே, உன்னை டிஸ்மிஸ் பண்ணிடுவேன்!"

"பாஸ் ஒரு ரெண்டு அவர் பர்மிஷன் கிடைக்குமா?"

"ஒழி!"

வஸந்த் சாயம் போன லீ ஜீன்ஸும், டி.ஷர்ட்டும் அணிந்துகொண்டு கண்ணாடியில் ஒரு முறை தலையைக் கலைத்துக்கொண்டு புறப்பட்டான்.

"காரை எடுத்துக்கிட்டுப் போகட்டுமா பாஸ்?"

"ஏழு மணிக்குள்ள வந்துரு."

கடற்கரையில் அஷ்டலட்சுமி கோயிலுக்கு எதிரில் தனித் தனியான வீடுகளில் ஒன்று பேராசிரியர் அப்பாதுரை என்றது.

வஸந்த் துள்ளி இறங்கி மணி பார்த்தான். ஆறு ஐந்து, ஞாயிறு 21 என்றது எல்.ஸி.டி. வாசலில் வெண் சாமரம் போன்ற பாமிரேனியன் ஒன்று ஓடிவந்து சின்னக் குரலில் குரைத்தது. "ஹலோ, ஜூடி! அப்பா இருக்காரா?" என்று கேட்டான். நாய் தோட்டத்தில் ஓடியது.

மணி அடித்தான். காத்திருந்தான். தலையை மறுபடி கலைத்துக்கொண்டான். "ஒன் மினிட்!" என்று உள்ளேயிருந்து வஸந்துக்குப் புல்லாங்குழல் ஒலித்தது.

"உனக்காக ஒரு வருஷம் காத்திருப்பேன். இன்னி! காரைத் திருப்பிக் கொடுக்கணும்; அவ்வளவுதான்!"

வஸந்த் உலகின் உச்சியில் இருந்தான். மனசுக்குள் பாப் சங்கீதம் ஒலித்தது. அதற்கேற்ப மெலிதாக நடனமாடினான். கதவு திறந்தது.

"இனியா... ஓ மை ஸ்வீட்..." வஸந்த் திடுக்கிட்டு நின்றான். "என்ன இனியா?"

அந்தப் பெண் கண்களில் கண்ணீருடன் நின்றாள். "என்ன இனியா! வெங்காயம் நறுக்கினியா?"

"வஸந்த்! நல்ல வேளை வந்தீங்க! அப்பாவைக் காணோம்!"

"என்னது காணோமா! இன்னிக்குப் பார்த்தா? மணி ஆறுதானே ஆறது... பஸ் பிடிச்சு வர லேட்டாகும். உட்காரு. கவலைப்படாதே!"

இனியா சட்டை பாண்ட் அணிந்து தலையை அலைய விட்டிருந்தாள். பதினெட்டு வயசிருக்கும். சின்ன மூக்கை அடிக்கடி சிந்திக்கொண்டு அழுதுகொண்டிருந்தாள். கன்னங்கள் அழுகையாலும் அழகாலும் சிவந்திருந்தன.

"காலைல யுனிவர்சிட்டிக்குக் கிளம்பிப் போனார்! சரியா நாலரைக்கு வந்துருவார். ஆறாச்சே, இன்னும் வரலியேன்னு டிபார்ட்மெண்டுக்குப் போன் பண்ணிப் பார்த்தேன். அவர் இன்னிக்கு அங்க வரவே இல்லையாம்! உறவுக்காரங்க வீட்டுக்கெல்லாம் போன் செய்துட்டேன். எங்கேயும் போகலையாம்!"

"எங்கேயாவது லைப்ரரியில் உட்கார்ந்துகிட்டு ரிசர்ச் பண்ணிக்கிட்டிருப்பார்! இத பார், நீ அழுதா எனக்கு நெஞ்சத்திலே ஆயிரம் ஈட்டிகளைத் தீட்டி வச்சுக் குத்தற மாதிரி இருக்கு.

அழாதே! ப்ளீஸ்! ஒரு ஜோக் சொல்லட்டுமா. ஒரு ஊர்ல ஒரு கணவனும் மனைவியுமாம்!..."

இனியா அவன் சொன்னதைக் கவனிக்காமல் "எங்கிட்ட சொல்லாத எங்கயும் போக மாட்டார். இன்னிக்கு லைப்ரரி கிடையாது. வஸந்த்! எனக்கு என்னவோ கவலையா இருக்கு..." என்றாள்.

"கவலைப்படாதே இன்னி! நான் வந்துட்டேனில்லே எப்படியாவது அவரைக் கண்டுபிடிச்சு உங்கிட்ட ஒப்படைச்சுட்டுத் தான் வீட்டுக்குப் போவேன்!"

"நிஜம்மா?"

"நிஜம்மா!"

சற்று ஆறுதல் அடைந்து "உட்காருங்க. என்ன சாப்பிடறீங்க?" என்று கேட்டாள்!

"கொஞ்சம் கெச்சப் தொட்டுண்டு உன்னையே சாப்பிடலாம்னு தோணுது. இத பார், இனிமே நீ அழாதே. அழக் கூடாது. அழுதா உன் அழகு ஜாஸ்தியாகறது. என் இதயம் சாந்தினி சௌக் புறா மாதிரி படபடக்குது. அந்த ஜோக்கை சொல்லி முடிக்கட்டுமா?"

"வேண்டாம். உங்க ஜோக்கெல்லாம் ஒரு மாதிரி இருக்கும்."

"இது ரொம்பக் க்ளீன்... ஒரு கணவனும் மனைவியும் புதுசாக் கல்யாணம் பண்ணிண்டு ஹனிமூன் போனாங்களாம்."

"வேண்டாம்! வேண்டாம்!"

"அப்ப அவளோட பழைய காதலனும் வந்துட்டானாம்."

டெலிபோன் ஒலித்தது.

இனியா, "அப்பாவாத்தான் இருக்கும்" என்று ஓடினாள்.

"இனியா! நான்தான் அப்பா பேசறேன்!"

பதற்றத்தில் "அப்பா! அப்பா! எங்க இருக்கீங்க, என்ன ஆச்சு?" என்றாள்.

"அதெல்லாம் அப்புறம் சொல்றேன் இனியா. நீ தனியே இருக்கியா?"

"வஸந்த் வந்திருக்கார்!"

"ஹலோ, ஸார்!" என்று வஸந்த் இங்கிருந்து இரைந்தான். "குட் ஈவினிங்!"

"இத பாரு! நீ ஒரு காரியம் பண்ணு... அவன்கிட்ட ஏதும் சொல்லாதே! என்ன? ஒண்ணும் சொல்லாம அலமாரில மேல் தட்டில் அட்டைல க்ளிப் குத்தி ஒரு கட்டுரை எழுதி வைச்சிருக்கேன் 'ராஜராஜன் கிணறு'ன்னு ஒரு கட்டுரை; டைட்டிலை நல்லாப் பாரு! பார்த்து அப்படியே அந்தக் காகிதங்களை ஒரு கவர்ல போட்டு... எங்க வாணும்..." என்று

அவர் அருகே யாரிடமோ கேட்டது அவளுக்குக் கேட்டது.

"பல்லாவரம் ரயில்வே ஸ்டேஷன்கிட்ட வா! என்ன? சொன்னதைச் செய்!"

"என்னப்பா நீங்க ஏதாவது ஆபத்திலே இருக்கீங்களா?"

"அழாதே மகளே! ஒரு இக்கட்டில அகப்பட்டுண்டிருக்கேன். அவ்வளவுதான்; கவலைப்படாதே! வீட்டுக்கு வந்துடுவேன்!"

"அங்க வந்து உங்களை அழைச்சுண்டு போகட்டுமா?"

"வேண்டாம். நான் வந்துடுவேன்! சீக்கிரம் கொண்டு வா!"

"அப்பா!"

டக்கென்று வெட்டப்பட்டது.

"என்ன இன்னி?" என்றான் வஸந்த்.

இனியா உடனே அலமாரிக்குச் சென்று தேட ஆரம்பித்தாள். "ராஜராஜன் கிணறு, ராஜராஜன் கிணறு!" என்று சொல்லிக் கொண்டே!

"ராஜராஜன் கிணறா?"

"வஸந்த்! கார் கொண்டுவந்திருக்கீங்களா?"

"ஆமாம். ஏன்?"

"இந்தக் கட்டுரையைப் பல்லாவரத்தில் கொண்டுசேர்க்கணும்!"

"என்ன கட்டுரை, என்ன பல்லாவரம்?"

"ராஜராஜன் கிணறு!"

"புரியும்படியாப் பேசேன்!"

"உங்ககிட்ட இதெல்லாம் சொல்லக் கூடாதுன்னு அப்பா சொல்லி இருக்கார் வஸந்த். வாங்க உடனே போகலாம்!"

"எங்கே?"

"ராஜராஜன் கிணறுக்கு. ஐ மீன் பல்லாவரத்துக்கு!"

"ஹய்யோ! என்னது! திடீர்னு பாயைப் பிராண்ட ஆரம்பிச்சுட்டே!"

"அப்பா ஆபத்துலே இருக்கார்!"

"ராஜராஜன் கிணத்துலயா?"

"இப்ப வரப் போறியா இல்லையா?"

வஸந்த் புரியாமல் காரை நோக்கிச் சென்றான்.

# 2

ஸ்டியரிங்கில் உட்கார்ந்து ஸ்டார்ட்டரை கிர்ர்ர்ரக்கி காரை விரட்டிய வஸந்த், "இனியா, என் நெத்திலே கவலை ரேகைகள் படிஞ்சிருக்கே கவனிச்சியோ?" என்றான்.

"வஸந்த், எனக்கும் கவலையாத்தான் இருக்குது."

"மெட்ராஸ்ல நடு சென்டர்ல இருந்த ஆளுக்குப் பல்லாவரத்தில் என்ன வேலை? அங்க கல்லை உடைப்பாங்களே தவிர கல்வெட்டு ஏதும் கிடைக்காதே!"

"புரியலையே?"

"அப்புறம் இது என்ன கட்டுரை? ராஜராஜன் கிணறு? கொஞ்சம் சாம்பிள் படி!"

இனியா சற்றுத் தடுமாற்றத்துடன் கையிலிருந்த கட்டுரையைப் படித்தாள்.

"ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கேயுரிமை பூண்டமை மனக்கொள காந்தளூர்ச் சாலையும் கலமறுத்தருளி வேங்கை நாடும் கங்கபாடியும் நாளம்பாடியும் தடிகைபாடியும்..."

"நாயுடு ஹால் பாடியும்... ஹோல்டான். நிறுத்து. கார் உதறுது. கட்டுரை பூரா பாடியா?"

"ஆராய்ச்சிக் குறிப்புகள் இருக்கு. South Indian Inscriptions, Vol III, No 44 on .."

"ஆமா, எனக்கு ஒரு சின்னச் சந்தேகம். உங்கப்பா தினப்படி இப்படித்தான் எழுதிக்கிட்டிருப்பாரா?"

"ஆமாம்!"

"நான் ஆடறேன்! ஐ ஸ்வே! இதெல்லாம் யார் படிக்கிறாங்க! அவரைத் தவிர!"

"ஏன், நிறைய ஸ்காலர்ஸ் இருக்காங்க!"

மாதிரி ஸ்வஸ்திஸ்ரீயா?"

"முதல்லே அப்பாவைச் சந்திக்கலாம்."

"அதானே!" என்று வஸந்த் காரை மிதித்தான் ஒரு அனகாபுத்தூர் பஸ்ஸைச் சாப்பிட்டுவிட்டு 'நூறு' என்றது முள்.

"என் ஜாதக ராசி! இடது பக்கம் காதலி. கார்! ஏகாந்தமா மவுண்ட் ரோடு! பேச்சென்னவோ ராஜராஜன் கிணறு! பல்லாவரத்திலே எங்கே?"

"ஸ்டேஷனுக்குப் பக்கத்திலே வரச் சொல்லி இருக்கார் வஸந்த்! அப்பா குரல்ல பதற்றம் இருந்தது. பக்கத்திலே யாரோ இருந்து சொல்லிக்கொடுக்கிறாப்பல பேசினார். ஒருவேளை கிட்நாப் பண்ணியிருப்பாங்களோ!"

"கிட்நாப்பா! ஒரு பாட்டம் 'ஸ்வஸ்திஸ்ரீ, ஸ்ரீதிருமகள்' போல பெருநிலச் செல்வத்தை அளந்துவிட்டார்னா கேள்வி கேட்காம பார்ட்டி வீட்டில கொண்டு அவரைச் சேர்த்துடும்."

"வஸந்த்! ராத்திரிக்குள்ள அப்பா திரும்ப வந்து சேரலேன்னா?"

"ம்ஹூம். ராத்திரி நீயும் நானும் தனியா இருக்கக் கூடாது. விளக்கு அணையும்; மழை பெய்யும்... அப்புறம் ஐ.வி. சசி படம் மாதிரி ஏதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு மேலன்னு ஆய்டும். என் கற்பு என்ன ஆறது? பேசாம என் உறவுக்காரங்க வீட்ல கொண்டு விட்டுடறேன்!"

"வஸந்த்! நீங்க எப்ப சீரியஸாப் பேசுவீங்க சொல்லுங்க."

"கவலைப்படாதே கண்ணே! வாழ்க்கைல எதையுமே சீரியஸா எடுத்துக்காதே. நேத்திக்கு இருக்கறவன் இன்னைக்கு இல்லை! 'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகுன்னு' வள்ளுவர் சும்மாவா சொன்னார்? பல்லாவரம் வந்துருச்சு பாரு!"

வஸந்த் பல்லாவரம் ரயில் நிலையத்தின் வாசலில் நிறுத்தி "நீ அப்பா வராரா பாரு. நான் குட்டியா ஒரு தம் அடிச்சிட்டு வரேன்!" என்று காருக்கு வெளியே வந்தான்.

மின் ரயில் ஒன்று வந்து நிற்க ஸ்டேஷன் வாசல் ஜன உயிர் பெற்றது. இருட்டிவிட்டது. சைக்கிள் ஸ்டாண்டில் வண்டிகளை விடுவித்துக்கொண்டு மனைவிகளை நோக்கி டிபன் பாக்ஸுடன் பலர் சென்றார்கள். இரண்டு இந்தியப் பிரஜைகள் (வயசு 4–6) பிச்சைக்கு ஆயத்தமானார்கள். மண்ணெண்ணெய் விளக்கில் பலாச் சுளைகள் கூப்பிட்டன.

வஸந்த் சற்று அவசரமாக சிகரெட்டை இழுத்தான். கடையில் தொங்கிய 'காமத் தீ' என்று பின் குத்தின புத்தகத்தைச் சற்றுப் பிரித்தான். "ஜெயஹேமா தன்மா" வரைதான் படிக்க முடிந்தது. "வஸந்த் வஸந்த்!" என்று குரல் கேட்டுத் திரும்பினான்.

இனியா காருக்கு வெளியே படபடப்புடன் நின்றுகொண்டு கையை உதறிக்கொண்டிருந்தாள். வஸந்த் அவள் அருகே வந்தான்.

"என்ன இன்னி?"

"புடிங்க அந்த ஆளைப் புடிங்க!"

"எந்த ஆளை?"

"அதோ ஓடறான் பாருங்க! கட்டுரையை லபக்குன்னு என்கிட்ட இருந்து புடுங்கிக்கிட்டு ஓடறான்!"

வஸந்த் அவள் காட்டிய திசையில் பார்த்தான். ஸ்டேஷனை விட்டு விலகின பாதையில் ஒருவன் ஓடுவது தெரிந்தது. வஸந்த் துரத்தினான்.

சரசரவென்று நடக்கும், நிற்கும், பேரம் பேசும், சைக்கிள் தள்ளும் ஜனங்களின் ஊடே திறமையாக ஓடினான். அவன் திரும்பிப் பார்க்காமல் ஓடுவது தெரிந்தது. அவன் மேல் கண்கள் பதித்து ஓடினான். ராஜராஜன் கிணறு, பல்லாவரம்... அந்தக் கட்டுரை யாருக்கோ முக்கியம். சே! சிகரெட் குடிக்க இறங்கியிருக்கக் கூடாது..

வஸந்த் சாலையின் முனைக்கு வந்து ப்ரேக் போட்டாற் போல நிறுத்தினான். எதிரே சினிமாத் தியேட்டர். இடது பக்க முனையில் உடுப்பி ஹோட்டல். கோலாகலமாக சாயங்கால வியாபாரக் கடைத்தெரு. வெளிச்சம். லாரிகள், பஸ்கள்.

ஆசாமி உடுப்பிக்குள் துடிப்பாக நுழைவதைப் பார்த்து வஸந்த் நேராக அங்கே சென்றான். வாசலில் கல்லா மேஜையில் முதலாளி சில்லறையைச் சீய்ச்சிக்கொண்டிருக்க ஹால் பூரா டிபன் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். காற்றில் விவிதபாரதியும், ஊதுபத்தி மணமும் கலந்திருந்தது. மெர்க்குரி விளக்கின் மேல்தட்டு, இனிப்புக்கள் காத்திருந்தன. வஸந்த் அந்த வட்டாரத்தைப் பான் செய்தான். ஓடி வந்தவன் புதிதாக நுழைந்திருக்கிறவன். இன்னும் சாப்பிட ஆரம்பித்திருக்க மாட்டான். (அம்மாதிரி பத்துப் பதினைந்து பேர் இருந்தார்கள்.) வெள்ளைச் சட்டை அணிந்திருந்தானே! (பாதிக்கு மேல் வெள்ளைச் சட்டை!) அதோ தண்ணீர் குடிக்கிறானே! ம்ஹூம் பக்கத்தில் மனைவி.

ஒரு உடுப்பி ஹோட்டலில் மறைவது எவ்வளவு சுலபம். போதாக் குறைக்கு மாடி மேலே மீல்ஸ் ரெடி என்று வரவேற்றது.

"உக்காருங்க ஸார், என்ன வேணும்?"

"ஒண்ணுமில்லே, உள்ளே ஒரு ஆள் வந்திருக்கான் பாக்கறேன்."

"அப்ப ஓரமா நில்லுங்க. பிஸி டயம் பாருங்க!" வஸந்த் சற்று நேரம் புரியாமல் நின்றுவிட்டுத் தோல்வியுடன் திரும்பிவிட்டான். 'இனியா! அவளைத் தனியாக விட்டு வந்திருக்கேன். ஓ! என்ன அபத்தமான துரத்தல் மடத்தனம்.'

வஸந்த் விரைவில் ரயில் நிலைய வாசலுக்குத் திரும்பினான். கார் அங்கேயே இருந்தது. கதவு திறந்தே இருந்தது. இனியாவைக் காணவில்லை. திடுக்கிட்டான். எங்கே அவள்! ஸ்டேஷன் வாயிலுக்கு ஓடினான். மாடிப்படி ஏறி நின்று இருப்புப் பாதையையும் பிளாட்பாரத்தையும் பார்த்தான். இறங்கி வந்து கடையில் விசாரித்தான்.

"ஏம்பா இங்க ஒரு பொண்ணு நின்னுக்கிட்டிருந்ததே பாத்தியா?"

"பொண்ணா? என்ன வாத்தியாரே?" கடைக்காரன் அவனைப் பார்த்த பார்வை 'காமலோலா' என்றது. சே! கேட்ட விதம் தப்பு. 'கேஸ்' என்று நினைத்துக்கொள்வான். வஸந்துக்கு அன்று மாலை நிகழ்ச்சிகள் அனைத்தும் புரியவில்லை. ஒன்றுடன் ஒன்று தொடர்பே இல்லை. கடைசியில் எல்லாவற்றையும் கோட்டை விட்டு நிற்கிறான். போலீஸ் ஸ்டேஷன்? ம்ஹூம். முதலில் கணேஷ்.

"பாஸ்! வஸந்த்!"

"ஏய்! எங்கேடா காரு! நீ பாட்டுக்கு என்னைத் திராட்டிலே விட்டுட்டு எடுத்துட்டுப் போயிட்டே! எங்கே இருந்து பேசறே?"

"பல்லாவரத்திலே ஒரு ஓட்டல்லே இருந்து."

"என்ன ஆச்சு உன் காரியம்?"

"ஊத்திக்கிச்சு?"

"பல்லாவரத்திலே என்ன செய்யறே!"

"நாலு விரல் நகத்தை இதுவரைக்கும் மொண்ணையாக் கடிச்சு முடிச்சிருக்கேன். இனியாவைக் காணோம்!"

"ஹூ தி ஹெல் இஸ் இனியா?"

"என்ன பாஸ் இப்படிக் கேக்கறிங்க? என் கர்ள் ஃபிரண்டு; சரித்திரப் பேராசிரியர் மகள்."

"அவளா? சொல்லு."

"ரெண்டு பேரும் ராஜராஜன் கிணத்தை எடுத்துக்கிட்டு பல்லாவரம் வந்தமா? ஒரு ஆள் கட்டுரையை அவகிட்ட இருந்து பிடுங்கிட்டு ஓட, அவனை நான் துரத்த, அவனும் ஆப்படலை. இனியாவையும் காணோம்!"

"ஏய் வஸந்த்! என்ன ஏதாவது 'பாட்' கீட் போட்டிருக்கியா?"

"சேச்சே! அதெல்லாம் நிறுத்தியாச்சே."

"பின்ன ஏன் என்னவோ உளர்றே?"

"விவகாரம் முழுக்கவே உளறல்தான் பாஸ். பரம உளறல்."

"அப்ப அந்தப் பொண்ணைக் காணமா? அவ்வளவுதானே! நீ அடிக்கிற ஜோக்கைத் தாங்க முடியாம புறப்பட்டுப்

போயிருப்பா. பேசாமத் திரும்பி வா. பார் அஸோஸியேஷன் மீட்டிங் இருக்கு எனக்கு."

"போலீஸ்ல புகார் கொடுக்கலாம்னு யோசிக்கிறேன்."

"அவசரப்படாதே. திரும்பி வா முதல்ல."

"எனக்கு அழுகை வரும் போல இருக்கு பாஸ்!"

"வீட்டுக்கு வந்தப்புறம் அழு. ஒரு பெண்ணைத் துரத்தினா இந்தக் கதிதான். வந்து தொலை. விசாரிச்சுக்கலாம்."

வஸந்த் வெறுப்புடன் கார் ஓட்டினான். "வஸந்த்! டேய் உன் ஜாதகம்டா! இதோ இதே சீட்லேதான் உட்கார்ந்திருந்தா. இன்னும் கசங்கல் கூடக் கலையலை. பவுடர் வாசனை இன்னும் பாக்கி இருக்கு. இன்னி! நீ எங்கே இருக்கே? ஒருவேளை போர் அடிச்சுட்டேனா? தாங்காமத்தான் கிளம்பிட்டாளா? இல்லை வேற யாராவது பார்ட்டி அவளைப் பலவந்தமா இழுத்துக்கிட்டுப் போயிருப்பாங்களோ! இருக்காது. அப்படி ஏதாவது நடந்திருந்தா சத்தம் போட்டிருக்க மாட்டாளா? கடைக்காரன் கவனிச்சிருக்க மாட்டான்? சோம்பேறிக் கூட்டம் சேர்ந்திருக்காது?

"பின்ன எங்கே பாஸ் போயிருப்பா?"

"எங்கேயும் போயிருக்க மாட்டா. நீ போயிருந்த சமயத்தில் யாரையாவது சிநேகிதியைப் பார்த்திருப்பா. அவ கூடப் போயிருப்பா."

"எங்கிட்ட சொல்லாமயா?"

"இத பார்; உன் கவலைகளை நான் பட விரும்பலை. நான் போறேன். திரும்பி வர ஒன்பதரை ஆகும். ராமகிருஷ்ணன் ப்ரீஃபை எழுதி வை. சும்மா ஸல்க் பண்ணிட்டிருக்காதே. எங்க போயிடுவா? வந்த உடனே டெலிபோன் செய்வா!"

"பாஸ்! உங்களுக்கு நடந்ததில எதுவுமே மர்மமாப் படலியா?"

"நடந்ததே புரியலே. மோசமா எடிட் பண்ண ஃபிலிம் மாதிரி இருக்கு. ஒரே ஜம்ப் கட். ராத்திரி நிதானமா சிந்திச்சிக்கலாம். வரேன்."

அவன் சென்றதும், "உங்களுக்கு என்ன புரியும் ஒரு காதல் மனம் படற பாடு" என்று முணுமுணுத்துக்கொண்டு இனியாவுக்கு டெலிபோன் செய்தான். மறு முனை கிர்ரிங் கிர்ரிங்கை பதிமூணு முறை எண்ணிவிட்டு வைத்தான்.

இன்னும் வீட்டுக்கு வந்து சேரலை!

ஒரு சிந்தனை. சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு ஸி.ஆர்.பி.ஸி. யைப் பிரித்தான்.

Section 51(2) provides that when even it is necessary to cause a woman to be searched the search shall be made by another woman with strict regard to decency.

இனியா! உன்னை யாராவது ஸர்ச் பண்ணுகிறார்களோ! யார்? நிச்சயம் தந்தைக்கும், மகளுக்கும் ஏதோ நிகழ்ந்திருக்கிறது. அடுத்தது ஒருவேளை எனக்காக வருவார்களோ?

வஸந்துக்குத் திக்கென்றது. வாயிற் கதவு தாளிட்டிருந்தது. ஜன்னலுக்கு வெளியே தம்புச் செட்டித் தெருவின் சந்து தெரிந்தது. அதிக ஜனநடமாட்டம் இல்லை.

அந்த ராஜராஜன் கிணற்றில் இருக்கிறது சூட்சுமம். 'வேங்கை நாடும் கங்கபாடியும் நாளம்பாடியும்...' என்ன அர்த்தம் இதற்கெல்லாம்?

முதலில் அப்பா; அப்புறம் பெண். எப்படியோ நானும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறேன். என்னை நோக்கியும் அவர்கள் வரலாம்.

அறைவாசல் கதவு லேசாகத் தட்டப்படும் சப்தம் கேட்டது.

# 3

வஸந்த் சந்தேக்க் கதவு திறந்து உடனே, 'இனியா' "இன்னி! நீயா! இ நீயா! நான் காண்பது கனவா? இல்லை ..."

"ஷ்ஷ் ... பின்னால் அப்பா!"

பைப் புகை நெடி மூக்கைத் துளைத்தது. கதவை முழுக்கத் திறந்து, பேராசிரியர் அப்பாதுரையைப் பார்த்து "ஓ! வாங்க ஸார் வாங்க! உங்க பாத–அது என்ன?–தூளி பட்டு இந்த இடம் ..." என்று துவங்கியவனைத் தடுத்து,

"கணேஷ் இல்லையா?" என்றார்.

"வெளியே போயிருக்கிறார். வந்துருவார் ... ரெண்டு பேருமே முழுசா வந்துட்டிங்களே! நான் என்னவெல்லாம் கற்பனை பண்ணிட்டேன் தெரியுமா? சரியான சமயத்தில் வயத்திலே மில்க்! உள்ளே வாங்க ஸார். ஸாரி. பாச்சலர்ஸ் ரூம் ..."

பேராசிரியர் அப்பாதுரை உள்ளே வந்தார்.

"அப்பா இதான் வஸந்த்!"

அவனைக் கவனிக்காமல் சுற்றுமுற்றும் பார்த்தார். ஐம்பது வயதிருக்கும். கிட்டிப்புள் மாதிரி குறுந்தாடி வைத்திருந்தார். ரிம் இல்லாத கண்ணாடி. அகலமான நெற்றியில் 'பேராசிரியர்' என்று எழுதியிருந்தது. காதருகே போனால் போகிறது என்று ரோமங்கள். மற்றபடி வெற்று.

"ஆஷ் டிரே இருக்கா?"

"நிறைய இருக்கு ... ஸாரி ஒண்ணுதான் இருக்கு. நிறைய எப்படி இருக்கும்? இங்க யார் சிகரெட் குடிக்கிறா ... இனியா உக்காரு!"

"கணேஷ்ங்கறது ..."

"என் சீனியர் ஸார். ஸார், உங்க ஆராய்ச்சிக் கட்டுரைகள் எல்லாத்தையும் படிச்சிருக்கேன். பிரமாதம். பொம்பார்டா எழுதியிருக்கீங்க."

"என்ன படிச்சிருக்கே சொல்லு!" என்றார் சுருக்கமாக.

"அது வந்து ... அது என்னது இனியா ... நீ கூட என்கிட்டப் படிச்சுக் காட்டினியே? டாப்பா இருந்ததே?"

இனியா பேச்சை மாற்றி, "அப்பா நாம வந்த விஷயம்?" என்றாள்.

"ஓ. எஸ்! வஸந்த் இன்னிக்கு எனக்கு ஒரு விநோத அனுபவம் ஏற்பட்டுது. வெரி ஸ்ட்ரேஞ்ச்? கணேஷை அட்வைஸ் கேட்கலாம்னுட்டு ..."

"என்னைக் கேளுங்களேன். ஃபுல்லா எதிரிலேயே இருக்கேனே!"

"அவர் வந்துறட்டுமே!"

"என்ன சாப்பிடறீங்க"

"ஒண்ணும் வேண்டாம்பா."

"இனியா என்ன நீ சொல்லாமத் தனியா புறப்பட்டு வந்துட்டே? நான் எவ்வளவு கவலைப்பட்டேன் தெரியுமா? இங்க பாரு ... நகம் பூராக் கடிச்சு முடிச்சாச்சு!"

"அப்பா வந்து அழைச்சுக்கிட்டுப் போயிட்டார் வஸந்த். ஸாரி!"

"அவசரமா அவளை அழைச்சுட்டுப் போக வேண்டியதாயிருந்தது."

"ஒண்ணு கேக்கலாமா ஸார்?"

"கணேஷ் வரட்டுமே!"

"மறுபடியும் கணேஷ்! ஹூம் வரட்டும்!" சற்று நேரம் மௌனமாக இருந்தான். "பைப் அணைஞ்சு போயிடுச்சு. பத்த வைக்கட்டுமா?"

"வேண்டாம்" என்றார். அதிகம் பேசுகிறவராகத் தோன்றவில்லை. வஸந்த் அவரை ஒருமுறை எதிரொலி இல்லாமல் புன்னகை செய்தான். சட்டென்று ஒரு ஐடியா உதயமாகியது.

"ஸார், உங்ககிட்ட சரித்திரத்தில சந்தேகம் கேட்கணும். லேட்டர் சோளாஸ்ல!"

அவர் சற்றுப் பிரகாசமானார். "உனக்கு லேட்டர் சோளாஸ்ல இண்ட்ரஸ்ட் உண்டா?"

"இண்ட்ரஸ்ட்டா, பைத்தியம் ஸார் ... ஒரு பக்கம் ஆரிய பவன் பாதாம் அல்வாவை வையுங்க. இன்னொரு பக்கம் லேட்டர் சோளாஸை வையுங்க. நான் பின்னதை நோக்கித்தான் பாய்வேன். ஆர்ய பவன்? நோ!"

"பரவாயில்லையே. ஒரு வக்கீலுக்குச் சரித்திரத்திலே ஈடுபாடா!"

"ரெண்டிலேயும் நிறையச் சாடு விடலாம் இல்லையா?"

"சரடா?"

"சரடுன்னா ஐ மீன் நிறையப் படிக்கணும்னு சொல்ல வரேன்! இனியா உங்கிட்டச் சொன்னேனோ இதை? என் ஃப்ரண்ட்

சம்பத்துனு பி.ஏ. ஹிஸ்டரி படிச்சிட்டிருந்தான். க்வார்ட்டர்லி எக்ஸாம். ஹிஸ்டரி பேப்பர். மூன்று மணி நேர பேப்பர். Do you consider Rajaraja as the greatest of the Chola Kings? னு ஒரு பெரிய கட்டுரை எழுதச் சொல்லியிருந்தாங்க. இவன் No. I Don'tனு எழுதிட்டு மாட்னிக்குப் போய்ட்டான். ஹ ஹ ஹா!"

அந்த வட்டாரத்திலே யாருமே சிரிக்கவில்லை. பேராசிரியர் முகம் சற்றுக் குறுகி, "யங் மேன்! சரித்திரம் என்கிறது சிரிக்கிற விஷயமில்லை" என்றார்.

"சும்மா சின்னதா ஒரு ஜோக் அடிச்சுப் பார்த்தேன் ஸார். உங்களுக்கு மெக்ஸிகோ தேசத்து லாண்டரி ஜோக் தெரியுமா?"

இனியா அவசரமாக "வஸந்த்! நீங்க என்னவோ அப்பாவைச் சந்தேகம் கேக்கணும்னீங்களே!" என்றாள்.

"அதான் ஸார்! இந்த உத்தம சோழனைப் பத்தி எனக்கு ஒரு பெரிய சந்தேகம்!"

"என்ன?"

"பிளாகாட் ஆதித்த கரிகாலனைக் கொன்னவங்களுக்கு ஏன் பனிஷ்மெண்ட் கொடுக்கலை? அந்தக் கொலைக்கும் இவனுக்கும் கனெக்ஷன்னுதானே அர்த்தம்?"

"அது அவ்வளவு சிம்பிள் இல்லை வஸந்த். பஞ்சவன் பிரமாதி ராஜன்னு பாண்டி நாட்டு அரசியல் அதிகாரி ஒருவன் அதிலே சம்பந்தப்பட்டிருக்கான்!"

"அப்படியா! சொல்லுங்க ஸார்! ரொம்ப இன்ட்ரஸ்டிங்!" என்றான்.

இனியா அப்பாவின் பின்புறத்திலிருந்து, 'உன்னை வெட்டறேன் வா' என்று கையைக் காட்டினாள்.

கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டுப் பேராசிரியர் நிறுத்தினார். கணேஷ் உள்ளே வர "பாஸ்! உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்காங்க!" என்றான்.

கணேஷ் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து "ஸாரி லேட்டாயிடுத்து!" என்றான்.

"பாஸ் இவர்தான் ப்ரொபஸர் டாக்டர் அப்பாதுரை. இது டாட்டர் இனியா. நான் சொல்லலை!"

"ஓ! இவங்கதானா? என்னமோ காணாமப் போயிட்டதுன்னு சொன்னே!"

"அதெப் பத்தித்தான் உங்ககிட்டப் பேச வந்தேன் கணேஷ்!"

"அப்ப நீங்க காணாமப் போகலியா?"

"அதாவது முதல்லே காணாமப் போனாங்க! அப்புறம் வந்துட்டாங்க!"

“வஸந்த் நான் சொன்னேன் பாத்தியா? மிஸ்! இவன் அறுவை ஜோக்குக்குப் பயந்துகிட்டுத்தானே ஓடிட்டீங்க!... உட்காருங்க ப்ரொபஸர்... என்ன விஷயம்?”

“கணேஷ்! இன்னிக்கு காலைல இருந்து எனக்கு ஒரு வினோத அனுபவம்...”

“என்னவோ வஸந்த் சொன்னான். தலை கால் புரியலை... உங்களை யாராவது கிட்நாப் பண்ணப் பார்த்தார்களா?”

“தெரியலை. புரியலை.”

“என்ன நடந்தது சொல்லுங்க!”

பேராசிரியர் அப்பாதுரை சுதாரித்து உட்கார்ந்துகொண்டு தன் பைப்பை நிரப்பிக்கொண்டார். பற்ற வைத்துப் புகை போக்கிவிட்டுப் பேசினார்.

“காலைல யுனிவர்ஸிடிக்குப் போனேன். ஞாயிற்றுக்கிழமையாயிருந்தாலும் டிபார்ட்மெண்ட்டிலே ஒரு ரெஃபரன்ஸ் பார்க்கப் போயிருந்தேன். நுழையறதுக்கு முன்னாடி ஒரு பெரிய கார் சக்குன்னு வந்து நிக்குது...”

“கத்தி செருகினாப்பல!” என்றான் வஸந்த்.

“கொஞ்சம் குறுக்கே பேசாமக் கேக்கறியா வஸந்த்” என்றான் கணேஷ்.

“கார்லே ஒரு ஆள். சுமார் நாற்பது வயசிருக்கும். பார்த்தா வசதியுள்ளவன் மாதிரி வாசனையாயிருந்தான். இறங்கி மரியாதையோட “ப்ரொபஸர் அப்பாதுரை, உங்களைச் சந்தித்ததிலே எனக்கு ரொம்பப் பெரிய பாக்கியம்னு” ஆரம்பிச்சான். என்ன விஷயம்னு கேட்டேன். என் கூட ஒரு அரை மணி வரமுடியுமான்னு கேட்டான். எங்கேன்னேன். எங்கப்பாகிட்டன்னான். உங்கப்பா யாரு? அவரை எனக்குத் தெரியாதேன்னேன் எங்கப்பாவுக்கு உங்களைத் தெரியும். நீங்க சரித்திரத்திலே எப்பேர்ப்பட்ட அத்தாரிட்டி என்று தெரியும்னு. இப்ப வஸந்த் ஐஸ் வெக்கலை? அதே மாதிரி வெச்சான். எங்கப்பா உங்களைச் சந்திக்க விரும்பறார்னான். வீடு கிட்டத்தான் இருக்கு; போயிட்டு வந்துறலாம்னு சொன்னான். கார்ல ஏறிக்கிட்டேன். கார் பாட்டுக்குப் போறது போறது போய்கிட்டே இருக்குது. கிண்டி தாண்டிடுச்சு...மவுண்ட் தாண்டிடுச்சு. மீனம்பாக்கம் தாண்டிடுச்சு... ‘எங்கப்பா? செங்கல்பட்டா’ன்னு கேட்டேன். ‘இல்லே வந்தாச்சு’ன்னான். பல்லாவரத்துக்கு முன்னாடி சட்டுனு ஒரு சின்னப் பாதையிலே கார் திரும்பிச் சுமார் ஒரு மைல் தள்ளிப் போனா ஒரு பண்ணை மாதிரி இருந்தது. அது நடுவில் ஒரு வீடு. அங்க கொண்டு நிறுத்திட்டு உள்ளே வாங்க ப்ரொபஸர்னான். கொஞ்சம் தயக்கத்தோடேயே உள்ளே போனேன். ஒரு பெரிய ஹால்ல உட்கார வெச்சுட்டு அப்பாவைக்

கூட்டியாரேன்னு புறப்பட்டுப் போனான். அரை மணி நேரமாச்சு, ஒரு மணியாச்சு. அப்பா வரலை. நான் எழுந்து பாக்கறேன். வாசற் கதவு பூட்டியிருக்கு ... யாருமில்லையான்னு கூப்பிட்டுப் பாக்கறேன். பதிலே இல்லை. எனக்கு என்னடான்னு ஒரு மாதிரி ஆயிடுத்து. அந்த ஹாலைச் சுத்திச் சுத்தி வரேன். எல்லாக் கதவுகளும் மூடியிருக்கு ... வெளியே வரவும் முடியாது. டெலிபோன் இல்லை ... ஏறக்குறைய கைது பண்ணாப்பல ஆயிடுச்சு!"

"ஸிம்பிள் இம்ப்ரிஸன்மெண்ட்டா? சொல்லுங்க. சுவாரஸ்யமா இருக்குது."

"எனக்கு சுவாரஸ்யமா இல்லை. மணிக்கணக்கா ஒரு இடத்திலே அடைபட்டுப் பாரு தெரியும். எனக்குக் கவலையாயிடுச்சு. விஷயம் வேறயா இருக்குமோ? என்னை அடைச்சு வெச்சுட்டு ஏதாவது பணம் கிணம் கேக்கறதுக்கு பிளான் பண்ணறாங்களோ! அடடா மாட்டிக்கிட்டமேன்னு கவலைப்பட்டேன்."

"சாயங்காலம் நாலரை மணி சுமாருக்கு ஒருத்தன் வரான். கதவைத் திறந்து "ப்ரொபஸர்! ரொம்ப ஸாரி! உங்களைக் காக்க வெச்சுட்டேன்னான். எனக்கா ஒரே கோபம். முதல்லே நீ என்னை வீட்டில் கொண்டுவிடுன்னு கத்தினேன். கோவிச்சுக்காதீங்க. எனக்கு ஒரே ஒரு தகவல் மட்டும் வேணும். அதைச் சொல்லிடுங்க. விட்டுடறேன்னான். என்னடான்னேன்."

"ராஜராஜன் கிணறுங்கிறது எங்க இருக்குன்னு சொல்லிடுங்க விட்டுர்றோம்!"

"எதுக்காகத் தெரியணும்னேன். அதைப் பத்தி நீங்க கவலைப்படாதீங்க. இடத்தைச் சொல்லிடுங்க, விட்டுடறேன்னான். காஞ்சிபுரத்திலே இருந்து வந்தவாசி போற வழியில மாமண்டூருக்குத் தெற்கே எங்கேயோ இருக்குன்னேன். விவரம் போதாது, 'எக்ஸாக்ட்டா' எங்க இருக்குன்னு தெரியணும்னான். அந்த விவரம் தெரியணும்னா ராஜராஜன் கிணறு பற்றி ஒரு கட்டுரை எழுதிட்டிருக்கேன். வீட்டில இருக்கு. அதில ஒரு கல்வெட்டுக் குறிப்பை ஆராய்ச்சி பண்ணி லொக்கேஷன் குடுத்திருக்கேன்னு சொன்னேன். அப்ப உடனே உங்க வீட்டுக்கு போன் பண்ணி அந்தக் கட்டுரையை எடுத்து வரச் சொல்லுங்க வுட்டுடறேன்னான். எனக்கு இதெல்லாம் எதுக்குன்னே புரியலை."

"சொல்ல மாட்டேங்கறான். கட்டுரையை வரவழைங்க விட்டுர்றோம். அவ்வளவுதான்னு சொன்னான். இல்லைன்னா மறுபடியும் உங்களை அடைச்சுப் போட்டுட்டுப் போயிடுவோம். கட்டுரை வர்றவரைக்கும் சோறு தண்ணி கிடையாதுன்னான். என்னடாது வம்பாப் போச்சுன்னு, டெலிபோன் இருக்கான்னு கேட்டேன். மாடிக்கு அழைச்சுட்டுப் போனான். இனியாவுக்கு

அங்கிருந்து போன் பண்ணினேன். யாருக்கும் தெரியாம அந்தப் பொண்ணு மட்டும் தனியா ரயில் ஸ்டேஷனுக்கு வரணும்னான்."

"இப்பப் புரியுது. அப்புறம் நடந்ததுதான் வஸந்த் சொன்னான்" என்றான் கணேஷ். "கட்டுரையை உங்க டாட்டர்கிட்ட இருந்து பிடுங்கிக்கிட்டாங்களாக்கும்!"

"ஆமாம். பிடுங்கிக்கிட்டு என்னை அம்போன்னு தெரு முனையில விட்டுட்டு விருட்டுன்னு கார்ல ஏறிப் போய்ட்டாங்க! எனக்கு ஒண்ணுமே புரியலை. அவங்களைப் பார்த்தா சரித்திரத்திலே உற்சாகம் இருக்கிற மூஞ்சியாத் தெரியலை. வேற ஏதோ! அதுவும் ராஜராஜன் கிணத்துலே இவங்களுக்கு என்ன இன்ட்ரஸ்ட்?"

"ராஜராஜன் கிணறுங்கிறது என்ன ஸார்?"

"செங்கல்பட்டு ஜில்லாவில் உக்கல்ங்கிற கிராமத்துக்குப் பக்கத்திலே ஒரு பழைய கிணறு அது. ராஜராஜன் காலத்திலே ஆவூர்ல கண்ணன் ஆரூரன்னு ஒரு ஆள் ராஜா போல அதை வெட்டித் தண்ணி இறைக்கறதுக்கு விட்டிருக்கான். அது பத்தி ஒரு கோயில்ல கல்வெட்டில் எழுதியிருக்கு."

"கோயில் பேரு?"

"புவனி மாணிக்க விஷ்ணு கிரகம்!"

"சரிதான் சின்னதா இருக்கே!"

"அந்தக் கிணறு இன்னமும் இருக்கா?"

"இருக்கு. அடையாளம் கண்டுபிடிக்கலாம்."

"அந்தக் கல்வெட்டில் அதைப்பத்தி வேற விவரம் ஏதாவது இருக்கா?"

"வேறு விவரம்னா?"

"புதையல் கிதையல், தங்கம் அப்படின்னு."

"சேச்சே! அதெல்லாம் இல்லை . . .?"

"கல்வெட்டு என்ன சொல்றது?"

"இந்த மாதிரி கிணற்றை வெட்ட வெச்சவன் இவன் . . . அதில இருந்து தொட்டிக்குத் தண்ணி இறைக்கிறவனுக்கு எத்தனை மரக்கால்,' எத்தனை குறுணி நெல் கொடுக்கணும்; பந்தல்காரனுக்கு இவ்வளவு. சேதத்துக்கு இவ்வளவுன்னு நெல் கணக்கு . . . என்னைப் போல் சரித்திர ஆசாமிக்குத்தான் இந்தக் கிணத்திலே செய்தி இருக்கு . . . புதையலும் கிடையாது! ஒரு மண்ணாங் கட்டியும் கிடையாது. அதான் ரொம்ப ஆச்சரியமா இருக்கு!"

"இப்ப நாங்க என்ன செய்யணும்னு சொல்றீங்க?" என்றான் கணேஷ்.

"அந்தக் குண்டர்கள் எக்கேடு கெட்டுப் போகட்டும். கிணத்துல போய் விழட்டும். ஆனா அந்தக் கட்டுரை எனக்கு அவசியம் திருப்பி வேணும்! அதுக்காக நீங்க உதவி செய்து எப்படியாவது அதைக் கொண்டுவந்துறணும்!"

"வஸந்த்! கேட்டில்ல? ஸார் கவலைப்படாதீங்க. வஸந்த் கெட்டிக்காரன். அதை மீட்டுக்கிட்டு வந்துருவான்."

# 4

வஸந்த் கணேஷை முறைத்தான். "என்ன பாஸ்? பலி ஆடு மாதிரி என்னை அனுப்பறீங்க."

"இதிலே உனக்குத்தானேடா சாமர்த்தியம் அதிகம்?"

"ஏன் ஸார், அந்தக் கட்டுரை ரொம்ப அவசியமோ? 'ராஜேந்திரன் கிணறு'ன்னு இன்னொண்ணு எழுதிக்குங்களேன்."

"இல்லைப்பா, ஆறு மாசம் ஆராய்ச்சி பண்ணி அதை ஆறு பக்கத்திலே சாறாப் பிழிஞ்சு எழுதியிருக்கேன். ராஜராஜன் கிணறு கல்வெட்டில் எத்தனை விஷயம் இருக்கு! புதுக்குப்புறம்னா என்னன்னு தெரியுமா?"

"புதுசு, குப்புறப் படுத்துக்கறது?"

"இல்லை. காஸ்ட் ஃபார் ரிப்பேருக்கு செந்தமிழ்த் தொடர். அது அந்தக் கல்வெட்டில் எழுதியிருக்கு!"

"ஏன் ஸார் நடு ராத்திரியில புதுக்குப் புறமெல்லாம். எனக்குக் கதை வசனம் புரிஞ்சுடுத்து. உங்களுக்கு அந்தக் கட்டுரை வேணும். அது நாளை உங்களை வந்தடையும். அதுக்கு முன்னாடிச் சில கேள்விகள். உங்களைக் கூட்டிக்கிட்டுப் போனாங்களே அதைச் சரியா—சுத்தமா என்ன இடம்னு வர்ணிக்க முடியுமா?"

"பண்ணை மாதிரி இருந்தது" என்றார் பேராசிரியர்.

"பண்ணை மாதிரின்னா என்ன பண்ணை? பாலா, கோழியா? இல்லை பண்ணையார் பண்ணையா?"

"இல்லைப்பா. தனியா ஒரு நிலத்தின் நடுவிலே ஒரு வீடுன்னு வெச்சுக்கோயேன்!"

"வெச்சுக்கறேன் தாங்க! அப்புறம் வேற ஏதாவது உருப்படியா அடையாளம்? பல்லாவரத்தில் எங்கே?"

"மார்க்கெட் சந்தடியெல்லாம் தாண்டின பிறபாடு கொஞ்ச தூரம் பெரு வழியில் போனோம்?"

"பெரு வழி?"

"ட்ரங்க் ரோடு... ஆதாரம் கல்வெட்டு! அங்க வாசனை அடிச்சுது. அதுக்கப்புறம் வலதுபுறம் திரும்பினோம்."

"வாசனை! என்ன வாசனை?"

"ஸ்னோ பவுடர் வாசனை இல்லை . . . அது . . ."

"ஓ, அங்கே ஏதாவது வாசனாதி திரவியங்கள் பாக்டரி இருக்கலாம்."

"பாண்ட்ஸ்" என்றான் கணேஷ். "அங்க நாம ஒரு முறை கேஸ் சம்பந்தமாகப் போயிருக்கோம் வஸந்த்!"

"ஞாபகம் இருக்கு பாஸ்! அந்தப் பேட்டையே பவுடர் போட்ட மாதிரி வாசனை தீர்த்துக் கட்டிடும் . . .ம் . . . ஸார், நீங்க சொல்லுங்க. இப்பத்தான் குண்டர்கள் ஜாக்ரஃபி புரியுது."

"வாசனையைத் தாண்டியதும் திரும்பினோமா? அங்கிருந்து மண் பாதையிலே ஒரு மைல் போனதாக ஞாபகம். நடுவே ரேடியோ டிரான்ஸ்மிட்டர் மாதிரி சின்னதா ஒரு கட்டிடம் வந்தது . . ."

"ஸிவில் விமான இலாகாவுடைய மார்க்கர் கட்டிடம்!" என்றான் கணேஷ். "அந்த வழியா நான் தண்டலம்னு ஒரு கிராமத்துக்குப் போயிருக்கேன்."

"கவனிச்சிங்களா நம்ம பாஸை? ஞாபக சக்தினா இதானே? போன ஜன்மத்திலே யானை."

"தனியா கட்டிடம். முள் வேலி . . . உள் பக்கம் பூட்டியிருந்த கேட்டு."

"ராஜபாளையம் நாய்?"

"இல்லை. ஏன்?"

"இந்த மாதிரி பண்ணையெல்லாம் கெட்ட காரியத்துக்குன்னே வெச்சிருப்பாங்க. கையைத் தட்டினா ஃபைட்டர் ஷெட்டி வந்தானா?"

"நீ என்ன சொல்றேன்னு புரியலை."

"நீங்க அமிதாப் பச்சன் படம் பார்க்கிறதில்லையா? ஒரு மொட்டைத் தலை வருவானே!"

"நான் கடைசியாப் பார்த்த படம் . . ."

"இருங்க, நான் சொல்றேன். ராஜராஜ சோழன்!"

"கரெக்ட்! அதுக்கப்பறம் . . ."

"படம் பார்க்கிறதையே நிறுத்திட்டீங்க. சரியா?"

"சரி" என்று சிரித்தார் பேராசிரியர்.

"சரி; நீங்க அடையாளம் சொல்லிட்டீங்க. நாளைக்கு வஸந்த் போய் பாக்கி வேலையைக் கவனிச்சுப்பான்" என்றான் கணேஷ்.

வஸந்த், "சார் நான் அந்தக் கட்டுரையை மீட்டுக் கொண்டு வந்தா நீங்க என்ன தருவீங்க?" என்றான்.

"எது வேணா கேள். தரேன்."

வஸந்த் இனியாவைப் பார்த்தான். இனியா அப்பாவுக்குத் தெரியாமல் இப்போது வேண்டாம் என்று அபிநயித்தாள்.

"நீங்க என்னை உங்க மாணாக்கனா ஏத்துக்கிட்டு உங்க வீட்டிலே வந்து சரித்திரப் பாடம் கத்துக்க அனுமதிப்பீங்களா ஸார்?"

"முடியாது!"

"ஏன்?"

"சரித்திரப் பாடமெல்லாம் வேணும்னா யுனிவர்சிட்டிக்கு வரணும்."

"போச்சுடா! உங்க வீட்டில வந்து கத்துக்கும்படியா எதுவும் சின்ன வேலை இல்லையா? தோட்டத்துக்குத் தண்ணி ஊத்தறேன். இஸ்திரி போடறேன்?"

"அதுக்கெல்லாம் வேலைக்காரன் இருக்கான்."

"எதுக்குச் சொல்ல வரேன்னா உங்க மாதிரி சரித்திரப் பேராசிரியர் கிட்டே ஒரு சேவை செய்யற பாக்கியத்தை எனக்கு கொடுங்க ஸார்.." என்றான்.

"பார்க்கலாம். நீ முதல்லே கட்டுரையைக் கொண்டுவா! அப்ப நான் வரட்டுமா? லேட்டாயிடுச்சு. வா பொண்ணு போகலாம்."

"பை கணேஷ்! பை வஸந்த்! ஸ்லீப் வெல்!" என்று இனியா ஒரு புன்னகையைப் பறித்துக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டாள்.

ஸ்லீப் வெல்லாவது.. ஹூம்!

"மயக்கத்தைத் தந்தவளே—ஒரு
மருந்து சொல்லிப் போனாலென்ன?" என்றான் வஸந்த்.

"சரியான ஐஸ் ஃபாக்டரிடா நீ."

"என்ன செய்யறது பாஸ். பேராசிரியர் பேரா—ஆசிரியரா இருக்காரே. ம்ஹூம்.. கிட்ட வரவிட மாட்டார் போலிருக்கே! ஒரு எஸ்கிமோகிட்ட ரெஃப்ரிஜிரேட்டர் வித்துறலாம் போலிருக்கே!"

கணேஷ் மறுபடி கோர்ட் கேஸில் ஆழ்ந்துவிட்டான். வஸந்த் கடிகாரத்தைத் திருகி அலாரம் வைத்தான். "காலைல எழுந்து ஓடணும். பல்லாவரத்துக்கு" என்றான்.

"காரை எடுத்துக்கிட்டு போயிறாதே. பஸ்ல போ. இல்லை, ட்ரெயின்ல போ!"

**ம**றுதினம் காலை வஸந்த் சுமார் ஏழரை மணிக்குப் புறப்பட்டுப் பல்லாவரம் வரை மின்சார ரயிலில் சென்று, அங்கிருந்து நடந்து நடந்து, இன்னும் கொஞ்சம் ஃபாக்டரி வாசனையைக் கடந்து மண் ரோட்டில் சென்றான். சொல்லி வைத்தாற்போல் அந்த

டிரான்ஸ்மிட்டர் கட்டிடம் வந்தது. அங்கிருந்து சற்றுத் தூரத்திலேயே பேராசிரியர் குறிப்பிட்ட அடையாளங்களில் அந்தக் கட்டிடம் தெரிந்தது. வேலி தடுத்துப் பூட்டியிருந்தது. வெற்று நிலம். பின்னணியில் தென்னந்தோப்பு. நிழலில் ஒரு அமைதியான ஓடு வேய்ந்த வீடு. புறத் திண்ணையில் குண்டான தூண்கள், மரக் கதவு, மாடி. ஆள் நடமாட்டம் இல்லை.

வஸந்த் வேலியோரக் கதவுகளைச் சப்தித்தான். "ஹலோ யார் உள்ளே? கதவைத் திறங்க" என்றான்.

பதில் இல்லை. மேலே ஒரு ஏர்பஸ் அலறிக்கொண்டிருந்தது. அதன் நிழல் சடுதியில் தீற்றிவிட்டு மறைந்தது. வஸந்த் யோசித்தான். வேலிக் கம்பி மேல் கால் வைத்தான். ஒரு எவ்வு. உட்புறம் வந்துவிட்டான். நடந்தான். அந்த வீட்டு வாசலை அடைந்தான். கதவை மெல்லத் தட்டினான். ம்ஹூம். சந்தடி இல்லை. தூரத்தில் ரன்வேயில் இறங்கிவிட்டு விமானத்தின் இளைப்பாறல் சப்தல் மட்டும் கேட்டது. வஸந்த் கதவைத் தள்ளிப் பார்த்தான். திறந்துகொண்டது. உள்ளே பாதி இருட்டாக இருந்தது. பழைய காலத்து ஃபர்னிச்சர்களுடன் ஒரு ஸோபா கம் பெட் இருந்தது. வாரப் பத்திரிகைகள் அடுக்கியிருந்தன. டெலிபோன் ரிங்கிக்கொண்டிருந்தது. வஸந்த் அதை எடுத்து "ஹலோ!" என்றான்.

"யாரு ராமலிங்கமா?"

"ம்."

"அவங்கள்ளாம் கிளம்பிட்டாங்களா?"

"ம்."

"வான் அனுப்பிடவா?"

"ம்."

"கிளவனை என்ன செஞ்சீங்க?"

"ம்."

"என்னய்யா உம்? கிளவனை என்ன செஞ்சிங்க?"

வஸந்த் படக்கென்று வைத்துவிட்டான். அங்கிருந்து நடந்தான். டெலிபோன் மறுபடி அடிக்கத் துவங்கியது. கவனிக்காமல் சுற்றுமுற்றும் சோதிக்க ஆரம்பித்தான். வீட்டில் யாரும் இல்லை என்று அவன் புலனறிவுக்குத் தெரிந்தது. மாடிப்படி தெரிந்தது. அங்கே போக விரும்பினான். அதே சமயம் இந்தியன் பீனல் கோடின் பதினேழாம் அத்தியாயம் செக்ஷன் 449லிருந்து 452 வரை ஞாபகம் வந்தது. House trespass in order to commit an offence. இப்போது மாட்டிக்கொண்டால் நேராக காவல் நிலையம். டெலிபோன் ஓய்ந்தது. அலமாரியில் பழைய வெள்ளிக் கோப்பைகள் இருந்தன. சந்தன யானை மரக்கட்டையை நகர்த்த அருகே தந்த நங்கை, கொக்கு, பிரில் இங்க் பாட்டில், ஏகப்பட்ட

மருந்துப் பாட்டில்கள். கீழ்த் தட்டில் சென்ற மாதத்து தினசரி நாளிதழ்கள். மலையாளப் பத்திரிகைகள்.

அந்தக் குப்பையில் ராஜராஜன் கிணற்றை எங்கே தேடுவது? மெல்லப் புரட்டிப் பார்த்தான். எதிர் அலமாரியைத் திறந்து பார்த் . . .

வாயிற்புறம் கார் கதவு சாத்தப்படும் சப்தம் கேட்டது. கேட் திறக்கப்படும் சப்தம் தொடர்ந்து அதன்பின் செருப்புக் கால்களின் சரக் சரக்.

வஸந்த் மறைய இடம் தேடி அகப்படாமல், உடனே மாடிக்குச் சென்றான்.

மரக் கதவு எண்ணெய் எங்கே என்று திறந்தது. இருவர் பேச்சுக் குரல் கேட்டது.

மாடியில் அதிகம் புழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை.

ஓட்டுக்கு மத்தியில் படுத்திருந்த கண்ணாடி ஓடு ஒரு வெளிச்ச அருவி அமைத்திருந்தது. அங்குமிங்கும் சாமான்கள் சிதறியிருந்தன. மண்வெட்டிக்குப் பக்கத்தில் நடைவண்டிக்குப் பக்கத்தில் பழைய ரேடியோவுக்குப் பக்கத்தில் அண்டா. வஸந்த் கவனமாக இடை நடந்தான். வெளியே மொட்டை மாடிக்குச் செல்லும் கதவில் பூட்டு தொங்கியது. அதை லேசாக ஆட்டிப் பார்த்தான். அரை மணிக்குள் திறக்க முடியாது என்று தோன்றியது. ஜன்னல்கள் மூடியிருந்தன.

பைத்தியக்காரத்தனத்தின் சிகரம். எல்லாமே தப்பு. வேலி தாண்டியது. மரக்கதவை திறந்தது. டெலிபோனை எடுத்துப் பதிலளித்தது. பார்த்தது, மாடி ஏறியது. இப்போது வஸந்தின் ஒரே நம்பிக்கை அவர்கள் மாடிக்கு வர மாட்டமல் போய் விடுவார்கள் என்பதே. சட்! என்ன தமிழ்! 'வர மாட்டாமல்' நெஞ்சம் பயத்தில் உளறுகிறது. கீழே பேச்சுக்குரல் கேட்டது.

"கிளம்பியிருப்பாங்க ராமலிங்கம்!" அந்தக் குரலுக்கு நிறைய சக்தி இருந்தது. முப்பத்திச் சொச்சம் வயசு. வெற்றுக் குண்டன். குரலை வஸந்த் அனுமானித்தான்.

"இல்லியே நான் வரலியே!"

"பெரிய வண்டியிலே போயிருப்பாங்க!"

"இல்லடா! டெலிபோன் வரும். காத்திருக்கச் சொன்னாங்க."

டெலிபோன்! இப்போது மறுபடி டெலிபோன் வந்தால்? வஸந்துக்குச் சின்னச் சின்னதாகப் பதினைந்து ஊசிகள் வயிற்றுக்குள் விளையாடின.

டெலிபோன் ஒலித்தது.

"அல்லோ!"

" . . . . . ."

"சொல்லு. ராமலிங்கம்தான் பேசறேன்."

"செத்த முன்னாடியா? எப்ப?"

"பத்து நிமிஷமா? ம்ஹூம். நான் இல்லையே!"

"இந்த நம்பர்தான் கூப்பிட்டாயா?"

"இல்லப்பா. வீட்டில் ஒருத்தரும் இல்லை."

"பதில் சொன்னானா? ... வெச்சுட்டானா!"

வஸந்த் மறைவதற்கு ஏதாவது அழுக்குக் கூடை அகப்படுமா என்று சுற்றிலும் பார்த்தான்.

"என்ன ராமலிங்கம்?"

"கொஞ்ச நேரம் முன்னாடி பெரியசாமி இங்க டெலிபோன் செஞ்சானாம். யாரோ போனை எடுத்துப் பேசினாங்களாம்!"

"என்னது? இங்க யார் வர முடியும்? கேட் பூட்டி இருந்ததே?"

"மரக் கதவு திறந்திருந்ததே! யாரா இருக்கும்?"

"ராங் நம்பரா?"

"இல்லைங்கறான்! நீ எதுக்கும் ஒரு காரியம் பண்ணு. வீட்டை ஒரு முறை சோதனை போட்டுரு. எவனாவது உள்ளே வந்திருக்கானான்னு பாத்துடு!"

"இந்த அத்துவானத்துக்கு எவன் வருவான்?"

"சொல்ல முடியாது பாரு. நல்லா எல்லா ரூம்லேயும் தேடிடு?"

வஸந்த், "டேய்! மாடி வேண்டாண்டா; மாடி வேண்டாண்டா" என்று மனசில் பிரார்த்தித்தான்.

சற்று நேரம் மௌனம். டெலிபோன் டயல் சுழற்றப்படும் கிர்ரக் கிர்ரக்.

"பெரியசாமியா, ராமலிங்கம் பேசறேன். வான் அனுப்பிச்சுட்டியா? சொல்லவே இல்லையே!"

"பத்து மணிக்குள்ள புறப்பட்டு வந்துர்றேன். சிங்காரத்தையும் கூட்டி வெச்சுக்க."

ராமலிங்கம், பெரியசாமி, சிங்காரம் ... என்ன பேசுகிறார்கள்? எதைப் பற்றிப் பேசுகிறார்கள்?

"டீசல் நிறையவே போட்டுக்கிட்டு வந்துரு, ஏ.ஆர்.வி. பங்க்லே போட்டுக்க. நாப்பது ஐம்பது மைல் போகணும் பாரு! ... தேடிக்கிட்டிருக்கான் ... தேடிக்கிட்டிருக்கான்."

"வந்துரு!"

டெலிபோன் வைக்கப்பட்டு "என்னடா?" என்றான். "முழுக்கப் பார்த்துட்டேன் ராமலிங்கம். ஆள் ஒருத்தரும் இல்லை. ராங் நம்பராகத்தான் இருக்கும்."

"எதுக்கும் மாடில ஒரு முறை பாத்துடு!" என்றான் நாசமாப் போற ராமலி ...

# 5

கெட்ட காரியன் படி ஏறி மாடிக்கு வர, அங்கே மாட்டிக் கொண்டுவிட்ட வஸந்த் இரண்டு சா.கூறுகளை ஆராய்ந்தான். ஒளிந்துகொள்வது அல்லது வரப்போகிறவனை ஸோலர் ப்ளெக்ஸஸில் குத்திவிட்டுப் படிகளில் சரிந்து ஓடியே போய் விடுவது.

கண்டா முண்டா ரூமில் ஒளிவதற்கு இடமில்லை. முஷ்டியைத் தயார்படுத்திக்கொண்டு மாடிப்படி விளிம்பில் காத்திருந்தான். வஸந்த்துக்கு அந்த நெருக்கடி வேளையிலும் ஒரு விஷயம் உறுத்தியது. தப்பான இடத்திற்கு வந்துவிட்டோமோ என்ற சந்தேகம். பேராசிரியர், அந்த வீட்டில் கீழே டெலிபோன் இல்லை. மாடிக்கு அழைத்துச் சென்று டெலிபோன் செய்ய வைத்தார்கள் என்று சொன்னதாக ஞா. ஆனால் நான் கீழே அல்லவா டெலிபோனைப் பார்த்துப் பேசி (மாட்டிக்கொண்டேன்) தப்பான அட்ரஸா? அட!

வஸந்த் தன் முஷ்டியை அமுஷ்டியாக்கிக்கொண்டுவிட்டான். வேறு வழி யோசித்துவிட்டான்.

படி ஏறி வந்தவன் வஸந்த்தைத் திடுக்கிட்டு "அண்ணே இங்க ஒரு ஆள் இருக்கான்" என்றான், வாட்டசாட்டன். மீசைக்குக் காலையில் பதினைந்து நிமிஷம் செலவழித்திருந்தது தெரிந்தது. கண்களில் சுத்தமாக நட்பில்லை.

வஸந்த் வீட்டுச் சொந்தக்காரன் மாதிரி "வாங்க" என்றான்.

"யார் நீ?"

"நல்ல கேள்வி! உபநிஷத்துகளும் வேதாந்தங்களும் இதையே தான் கேக்குது."

"யார்றா அது குமரு?"

"தத்துப் பித்துன்னு பேசறான். சின்னப் பையன்."

"அவனைக் கூட்டியா!"

அவன் வஸந்தின் கையைப் பற்றி அழுத்தி மடக்க "நானே சொந்தச் சக்தியிலே வர்றேனே! எதுக்காக ... கையை மடக்கறீங்க .. சொன்னா வர மாட்டனா?" என்றான்.

கீழே நான்கு பேர் நின்றுகொண்டிருந்தார்கள். ராமலிங்கம் இவன்தான் போலும் என்று வஸந்த் நினைத்த ஆசாமி, "யார்றா நீ?" என்றான்.

"என் பேரு ரங்காச்சாரி. த. நாடு சமீபத்திய சுற்றறிக்கைப்படி ஜாதிப் பகுதியை நீக்கிட்டா ரங்கா. வீட்டில கூப்பிறது 'ங்கா.'"

"எதுக்காவ உள்ளே வந்தே?"

"கதவு திறந்திருந்தது. வந்தேன். நீங்க 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' பாத்திங்களா? சுஹாசினி இப்படித்தான் பளிச் பளிச்சுன்னு பதில் சொல்லி ... ஆவ்! எதுக்குக் கிள்ளறீங்க?"

"திறந்த வீட்டில எல்லாம் நுழைவியோ?"

"இத பாருங்க! ஒங்க பேரு தெரியலை, ஷான்ல வர்ற ஷக்கல் மாதிரி இருக்கீங்க?"

"என் பேரு என்னவா இருந்தா உனக்கென்னடா?"

"எனக்கு ஒண்ணுமில்லேதான். இருந்தாலும் உங்களைக் கூப்பிடறப்போ மிஸ்டர் அனாமதேயம்னு ..."

"டேய், உதைடா இவனை!"

"தேவையே இல்லை. நான் இங்க வந்தது ஒரு தப்பான விலாசத்தாலே! உலகத் தமிழ் மாநாட்டிலே முகவரின்னு சொல்லுவாங்க!"

"தப்பு அட்ரஸ்ஸா? எப்படி?"

"எனக்குத் தெரிஞ்ச ஒரு சரித்திரப் பேராசிரியர் ஒரு வீட்டை அடையாளம் சொல்லி அவர் கட்டுரை ஒண்ணை எடுத்துட்டு வரச் சொன்னார்; நான் அதைத் தேடிக்கிட்டுத் தப்பான வீட்டில நுழைஞ்சிட்டேன்."

"எந்தப் பேராசிரியர்? எந்தக் கட்டுரை?"

"அதெல்லாம் இப்ப எதுக்கு கண்ணா! நான் போயிடறேனே!"

"எங்க போறே?"

"அவர் சொன்ன வீட்டைத் தேடிட்டு!"

"அந்த வீடு இதுதான்!"

"இருக்க முடியாது. அடையாளம் ஒத்துப்போகலை. அங்க மாடில டெலிபோன் இருந்தது, கீழே கிடையாதுன்னாரு. இங்க வைஸி வர்ஸா ...!"

"இந்த வீடுதான். மாடில எக்ஸ்டென்ஷன் தனி அறையில இருக்குது. இதைக் கொண்டுபோய் அங்க மாட்டிக்கிடுவோம்!"

“அப்ப ரொம்ப சவுகரியமாப் போச்சு. அந்தக் கட்டுரையைக் கொஞ்சம் கொடுத்துடுங்க, நான் போறேன்!”

“எந்தக் கட்டுரை?”

“ராஜராஜன் கிணறு!”

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள்.

“கட்டுரை வேணும் உனக்கு?” என்று அருகே வந்தவன் வஸந்த்தைக் கன்னத்தில் புறங்கையால் அடித்தான்.

“இத பாருங்க தலைவரே! இது அனாவசியம்தானே? திருப்பி அடிக்க எத்தனை தேசாலம் ஆகும்?”

இதற்குள் ராமலிங்கம் என்று பேசப்பட்ட நடுநாயகன் வஸந்த்தின் தோளில் தட்டிக்கொடுத்து, “ரங்காச்சாரியார்! நீ திருப்பி அடிப்பியா? எங்கே அடி?” என்றான்.

“அடிப்பேன்; ராகுகாலமா இருக்கேன்னு பார்க்கறேன்.”

“ராஜராஜன் கிணறுன்னா என்ன தெரியுமா?”

“ஓ அதுவா? வந்து ராமலிங்கம் ஸார், செங்கல்பட்டு பக்கம் உக்கல்ங்கற கிராமத்துக்குப் பக்கத்திலே ஒரு கிணறு. அது மாண்டூர்ல எக்ஸ்பிரஸ் பஸ்ல டிபன் சாப்பிடறதுக்கு இறங்குவோம் பாருங்க? அங்க இருந்து தெற்கே போனீங்கன்னா ... டெலிபோன் அடிக்குது, விசாரியுங்க.”

ராமலிங்கம் டெலிபோன் அருகே செல்ல, வஸந்த் மற்றவர்களைப் பார்த்து “உங்க நாலு பேர்ல என்னை அடிச்சது யாரு?” என்றான். அவர்கள் அவனை மேலும் விரோதமாக நோக்கினார்கள்.

“விஷயம் தெரிஞ்சவன் போலத்தான் இருக்குங்க. கட்டுரைக்காக வந்தேன்கறான் ..”

“சின்னப் பையன். இருபது இருபத்திரண்டு இருக்கும்.”

“இருபத்தி மூணுங்க” என்றான் வஸந்த்.

“ம்ம்; அப்படியே செய்துறலாம் ... அப்படியே செய்துறலாம் ...”

டெலிபோனைக் கவனமாக வைத்துவிட்டுச் சிந்தனையுடன் ராமலிங்கம் திரும்பி வர வஸந்த் “அப்படியே செய்துறலாம்னா புரியலையே” என்றான்.

“உனக்கு வேளை சரியில்லை.”

“இல்லையே! முந்தாநேத்துதானே தேவியில் வெய்ட் பார்த்தேன். ‘நீ தற்போது எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடையும்’னு போட்டிருந்தது.”

“போட்டிருந்ததா? அதை நெத்தில ஒட்டிக்க. ஏய்! பின்பக்கம் ஷெட்டண்டை போய்க் கயிறு கொண்டா.”

"கயிறா? எதுக்கு?"

"அப்படியே ஒரு கத்தியும் கொண்டா!"

"கத்தி எதுக்குன்னு சொல்லாதீங்க..."

"ஆளைப் பிடிங்கடா!"

உடனே இருவர்அவனைப் பிடித்தார்கள். சரியான கொரில்லாப் பிடி. "விடு! விடு! யோவ் நீ உருப்படுவியாய்யா?" என்று ஏறக்குறைய அந்தரத்தில் காலை உதறினான். அவர்கள் கைப்பிடியைத் தளர்த்தவில்லை. ராமலிங்கம் உள்ளேயிருந்து மஞ்சளாய் வளையம் கொண்டு வந்தான். அதிலிருந்து பத்து சென்டிமீட்டர் நீளத்துக்குப் பட்டை பிரித்துக்கொண்டான்.

"என்னது மாஸ்க்கிங் டேப்பா? இதெல்லாம் எதுக்கு? வேண்டாம் வேண்டாம்..வே.."

வஸந்த் வாயில் சீல் வைக்கப்பட்டான். கொண்டுவரப்பட்ட கயிற்றால் அவன் கைகள் பின்புறம் கட்டப்பட்டு, கால்கள் கட்டப்பட்டு, இரண்டும் இணைக்கப்பட்டு, தோராயமாக ஒரு கால்பந்து அளவுக்கு வஸந்த் சுருட்டப்பட்டு, உருட்டப்பட்டு, உபரியாகத் தோளில் ஒரு முறை வெட்டப்பட்டு, மண்டையில் தட்டப்பட்டு..

அவர்கள் கதவுகளைப் பூட்டும் சப்தமும், வெளியே கார் புறப்படும் சப்தமும் வஸந்த்துக்கு அரை மயக்க நிலையில் கேட்டது.

அறையின் மெலிதான இருட்டில் ஏதோ ஒரு சர்க்கஸ் கட்னியின் நிலையில் இருந்த வஸந்த் கூடுமான வரையில் சுற்றிலும் பார்த்தான். ஒரே ஒரு உச்சாணி ஜன்னலிலிருந்து சூரிய வெளிச்சம் சரிந்தது. அந்த வெளிச்சத்தில் அறையில் பழைய செய்தித் தாள்களும் டிரஸ்ஸிங் டேபிளில் பொருத்தப்பட்ட நிலைக் கண்ணாடியும் இருப்பது தெரிந்தது. கணேஷ் நான் வரவில்லை என்று எப்போது கவலைப்பட ஆரம்பிப்பார்? சாயங்காலம் ஐந்து அல்லது ஐந்தரைக்குத்தான். சுத்தமாக ஏழு மணி நேரம் பாக்கி இருக்கிறது. அதுவரை இந்த மயூராசனத்தில் இருந்தால் உடம்பு ஸ்திரமாகவே இப்படி ஆகிவிடும். கோர்ட்டுக்குப் போக முடியாது. காதல் செய்ய முடியாது. யோசி! எப்படித் தப்பிக்கப் போகிறாய்? முதலில் கைகள்! அவைகளை விடுவிக்க வேண்டும். அசைத்துப் பார்த்தான். குழந்தைகளின் ஆடு–குதிரை போலத்தான் அசைய முடிந்தது. எங்கெங்கோ வலித்தது. உதடுகளை என்ன என்னவோ அசைத்துப் பார்த்தான். வாயில் வைத்த சீல் 'பச்சக்' என்று ஒட்டிக் கொண்டிருந்தது. வேலை சுத்தம். பொட்டலமாகக் கட்டி வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

ஜன்னல் வழி சூரிய ஒளி சர்வ காட்டமாகவே எட்டிப் பார்த்தது. அதனருகில் உருண்டு சென்று சற்று நேரம் அதன்

'சுள்'ளில் மூஞ்சியைக் காட்டினான். கன்னத்துப் பக்கம் ஒட்டியிருந்த டேப் சற்றே இளகினாற் போல் தெரிந்தது. அந்த இளகலைத் தோள் பக்கம் கட்டியிருந்த கயிற்றின் நரநரப்பில் தேய்த்தான். இளகல் விலகல் ஆகியது. மறுபடி சூரிய வெளிச்ச சூடுபண்ணி வாயை விதவித பாவனைகளில் அசக்கி, கயிற்றில் தேய்த்துத் தேய்த்து ஒரு வழியாக வாயை அடைத்திருந்த டேப்பை முழுவதும் விலக்கிவிட்டான்.

சற்றுநேரம் ஆசுவாசப்படுத்திக்கொண்டு "காப்பாத்துங்க! காப்பாத்துங்க!" என்று கத்திப் பார்த்தான். ம்ஹூம். ஒரு இலை அசங்கவில்லை. கூச்சல் வெளியே கேட்கவில்லை.

வஸந்த் யோசித்தான். மூன்று முறை உருண்டு குட்டிக்கரணித்தான். மூன்றாம் முறை அவன் பையிலிருந்த நெருப்புப் பெட்டி வெளியே விழுந்தது. அதைக் கடித்துக் கொண்டு தலையை ஆட்டி ஆட்டி உதிர்த்தான். மருந்து தடவிய பெட்டிப் பகுதியை மூக்கால் தள்ளி ஒரு ஸ்டூலின் காலருகே நகர்த்தி அமைத்துக்கொண்டான். பல்லில் நெருப்புக் குச்சியைக் கடித்துக்கொண்டு பெட்டியின் மருந்துப் பகுதியின் மேல் தேய்த்துத் தேய்த்து உடனே குச்சியைத் துப்பினான்.

நான்காவது குச்சி பற்றிக்கொண்டு எவ்விச் செய்தித்தாளின் மேல் விழுந்து மெல்ல நெருப்புப் படர்ந்தது. வஸந்த் இப்போது டேக்கிக்கொண்டு நிலைக்கண்ணாடி அருகே சென்றான். மண்டையால் முட்டி அதன் சாய்வைச் சற்று மாற்றி நெருப்புத் தெரியுமாறு அமைத்துக்கொண்டு கண்ணாடியில் கவனித்துப் பார்த்து . . .

"அப்படியே பின் கையில் கட்டியிருந்த கயத்தை முதல்ல எரிச்சுட்டேன் பாஸ்; கையை விடுவிச்சுக்கிட்டேன். அப்புறம் கால் கட்டை அவுத்துக்கிட்டேன். எழுந்து நின்னேன். உடம்பெல்லாம் வலி! நெருப்பை அணைச்சேன். கொஞ்ச நேரம் உக்காந்து ரெஸ்ட் எடுத்துக்கிட்டேன். அப்புறம் கதவை ராமலிங்கம் மண்டைன்னு நினைச்சுக்கிட்டு டமால் டமால்னு நாலு சாத்து. பிளந்துக்கிச்சு. அதுக்கப்பறம் சுலபம்."

கணேஷ் அவன் முகத்தைப் பார்த்தான். "ஸாரி வஸந்த். கன்னத்திலே சிராய்ப்பு .. கைல காயம். இந்தா பர்னால் போட்டுக்க. விஷயம் இவ்வளவு தீவிரம்னு தெரிஞ்சா நானும் கூட வந்திருப்பேன்."

"நீங்க கூட வந்திருந்தீங்கன்னா கதையே மாறியிருக்கும். தனியாய் போய் மாட்டிக்கிட்டேன். பாஸ் வேண்டாம். விட்டுறலாம். பேராசிரியருக்குக் கட்டுரை கிடைக்கலைன்னு சொல்லிறலாம்."

“ம்ஹூம். வஸந்த் இந்த விஷயம் எனக்கென்னவோ இன்ட்ரஸ்டிங்கா இருக்குது. உன்னை அந்த மாதிரி டிரீட் பண்ணதுக்கு அவங்களுக்கு ஏதாவது பாடம் தர வேண்டாமா? கொஞ்சம் விசாரிச்சுப் பார்க்கலாம். என்ன தயாரா?”

வஸந்த் மலர்ந்து, “நீங்க சொன்னா தயார் பாஸ்! அந்தத் தே.. ஸாரி, விலைமகள் மகன்களுக்குப் புத்தி வர வேண்டாம்? ரெண்டு ஆள் என்னைப் புடிச்சிருக்கிறான். பாஸ், ஒரு வஸ்தாது தர்ம அடி அடிக்கிறான்!” என்றான்.

“வஸந்த் இன்னிக்கு என்ன கிழமை?”

“திங்கள். நாளைக்குக் கேஸ் எதுவும் கிடையாது நமக்கு.”

கணேஷ் சிரித்து “அடுத்த கேள்வியை எதிர்பார்க்கறதிலே எக்ஸ்பர்ட் நீ. சரி, முதல்ல ராத்திரி ப்ரொபஸரைப் போய்ப் பாரு. அந்தக் கிணறு பத்தி மேல் விவரம் தெரிஞ்சுக்க. அந்தக் கட்டுரையில் என்னதான் எழுதியிருந்தார், அது என்ன ஆராய்ச்சி, எல்லாத்தையும் தெரிஞ்சுக்க” என்றான்.

“சரி பாஸ்! டன்! அதுக்கப்புறம்?”

“நாளைக்கு நாம ராஜராஜன் கிணத்துக்குப் போறோம்.”

# 6

"நாளை காலைல கிளம்பறத்துக்குள்ள நீ ஒரு நடை பேராசிரியரைப் பார்த்துட்டு வந்துரு" என்றான் கணேஷ்.

"இதோ இப்பவே" – வஸந்த் பேராசிரியரைப் பார்ப்பதை விட அவள் மகள் தரிசனத்தில் ஆர்வம் உள்ளவன் போலத் தெரிந்தான். விசிலடித்துக்கொண்டே தலைவாரிக்கொண்டான். அதாவது கலைத்துக்கொண்டான்.

கணேஷ் அவனை சுவாரஸ்யமாகப் பார்த்து, "காதல்னா நடு ராத்திரியில தலைவாரிப்பாங்கன்னு எனக்கு இன்னிக்குத்தான் தெரியும்" என்றான்.

"இல்ல பாஸ்; போறப்ப கொஞ்சம் பர்ஸனால்ட்டியா போலாமேன்னுட்டுத்தான்..."

"போ. ஒழி. நடுராத்திரிக்குள்ள திரும்பி வந்துரு."

"திரும்பி வரப்ப குஷியா ஒரு 'காபரே'. அருண்ல ஒரு பாப்பா துள்ளி விளையாடுதாம்."

"ஏய், ஒழுங்கா வீடு வந்து சேரு."

வஸந்த் பேராசிரியரின் வீட்டை அடைந்தபோது பத்து மணி இருக்கும். வாயில் கதவின் பொத்தானைக் கொஞ்ச நேரம் அழுத்திய பின் உள்ளே பால் சோற்று விசுவாச பாமிரேனியன் வள் என்று ஒரு முறை சாஸ்திரத்துக்குக் குரைத்தது.

"யாரு?" என்று தூக்கக் குரல் கேட்டது.

"நான்தான் ஸார் வஸந்த்."

"எந்த வஸந்த்?"

"இருக்காங்களா என்ன? கதவைத் திறங்க ஸார். உங்களுக்காக அடிபட்டு, கடிபட்டு வந்திருக்கேன்."

"என்ன விஷயமா இருந்தாலும் காலைல பார்த்துக்கலாம். இப்ப கதவைத் திறக்கறதில்லை." இந்த முறை இனியாவின் குரல்.

"இனியா இது அநியாயம்." என்றான்.

“காலைல பேசலாம் எல்லாம்.” – இனியாவின் குரலில் ஏன் இந்த ஐஸ் என்று வஸந்த்துக்குப் புரியவில்லை.

“என்னை உள்ள கூட்டு வெச்சுக்கிட்டுத் திட்டக் கூடாதா?”

“கெட் அவுட். யு பாஸ்டர்ட்!” என்று பேராசிரியர் வெடித்தார்.

“ஹார்ஷ் வர்ட்ஸ் ஸார். உங்களுக்காகத் திருகப்பட்ட கை இன்னும் வலிச்சுக்கிட்டிருக்கு.”

மௌனம். அப்புறம் பேச்சே இல்லை.

வஸந்த்துக்கு ஒரு சின்னச் சந்தேகம் ஏற்பட்டது. மெல்ல அந்த வீட்டைச் சுற்றிப் பின்புறம் குழாயடிக்கு வந்தான். துணி துவைக்கும் கல்லின் மேல் ஏறிப் பார்த்தான். உள்ளே சமையலறை தெரிந்தது. ஹால் வெளிச்சத்தில் தெரிந்தது. வெளிச்சத்தில் மூன்று பேர் தெரிந்தார்கள். மூன்று பேர்!

மூன்றாமவன் முதுகு மட்டும் தெரிந்தது. இனியாவும் பேராசிரியரும் அந்த முதுகுக்கு உரியவனைச் சற்று அச்சத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

“போய்ட்டானா பாரு” என்று அதட்டினான்.

இனியா எதிர் ஜன்னலில் எட்டிப் பார்த்து, “போயிட்டான்” என்றாள்.

“நல்லா ஞாபகம் இருக்கு இல்ல.”

“ம் எல்லாம் – நல்லாத்தான் ஞாபகம் இருக்கு.”

“அப்ப நான் வரட்டுமா? குளந்தே அப்பா உடம்பைப் பார்த்துக்க. அனாவசியத்துக்கு அடிகிடி பட்டுறப் போறாரு.”

“எல்லாம் நான் பார்த்துக்கறேன். நீங்க கிளம்புங்க” என்றாள் இனியா.

இப்போது அந்த மூன்றாம் மனிதன் பக்கவாட்டில் தெரிந்தான்.

காலையில் அந்த ராமலிங்கம் கோஷ்டியில் பார்த்த முகமாக இருந்தது.

அவன் வாயிற் கதவைத் திறந்து வெளியே சென்று சற்று தூரத்தில் மரத்தடியில் நிறுத்தி வைத்திருந்த மொபைக்கை உதைத்துப் புறப்பட்டான். வஸந்த் மறுபடி வாயிற் கதவுக்கு வந்து பெல் அழுத்தினான்.

“யாரு?”

“ஸார். மறுபடியும் வஸந்த்.”

“நீ இன்னும் போகலையா?”

“இப்ப கதவைத் திறக்கலாமில்ல?”

சற்று நேர யோசனைக்குப் பின் கதவு திறந்தது.

“ஏம்ப்பா உங்களுக்கெல்லாம் வேற விவஸ்தையே கிடையாதா?”

"பயப்படாதீங்க. கோவிச்சுக்காதீங்க."

"வஸந்த் சட்டுனு உள்ள வந்துருங்க" என்றாள் இ.

"தட்ஸ் த கர்ள். உங்களுக்கு என் உதவி தேவை, ரைட்?"

வஸந்த் உள்ளே நுழைந்து "உட்காரச் சொல்லாட்டாப் பரவாயில்லை. உக்காந்தே தீர்றேன்." என்றான்.

"சொல்லுங்க. அந்த ஆளு என்ன பயமுறுத்திட்டுப் போனான்?"

பேராசிரியர் தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டு சற்று நேர மௌனத்துக்குப் பிறகு "சே, தெரியாத்தனமாக வெட்டி வம்பில மாட்டிக்கிட்டாச்சு. ஸாரி வஸந்த். முதல்ல கொஞ்சம் ஹார்ஷா பேசிட்டேன். கட்டுரை கிடைச்சுதா? காலைல அங்க போயிருந்தியா?"

"கேக்காதீங்க. போனேன். அடி உதை வாபஸ். அவ்வளவுதான்."

"அடடா!" என்றாள் இனியா.

"டானா யூஸ் பண்ணாதே. வலிக்குது."

"வஸந்த்! கட்டுரை போனாப் போவுது விட்டுரு. விஷயம் ரொம்பத் தீவிரமாயிடும் போலிருக்கு. இப்ப வந்தானே அந்தாளு யார் தெரியுமா?"

"காலைல இவன்தான் ஸார் என் சுண்டுவிரலை மடக்கினான்."

"அந்த ராஜராஜன் கிணத்திலே என்னவோ இருக்கு. இப்ப வந்தவன் என்ன சொல்லிட்டுப் போனான் தெரியுமா? கொஞ்ச நாளில அவங்களே கட்டுரையைத் திருப்பிக் குடுப்பாங்களாம். அதுவரைக்கும் அதைப் பத்தி யார் கிட்டயும் மூச்சுவிடக் கூடாதாம்."

"லிட்டர்?"

"பளபளன்னு கத்தியைக் காமிச்சான், வஸந்த். அப்பா கழுத்துக்கிட்ட லேசாக் கீறிக் காட்டினான். எனக்கு ரொம்பப் பயமா இருக்கு வஸந்த். அவங்கள்ளாம் யாரு?" என்றாள் இனியா. அவள் வதனத்தில் பய ரத்தம் பாய்ந்து இன்னும் சிவப்பாகி இருந்ததில் வஸந்த்தின் டயஸ்டாலிக் ஒரு பத்துப் பாயிண்ட் எகிறியிருக்கிறது. "இனியா கொஞ்சம் அப்பால ஒத்தி நின்னுக்க, அப்பாகிட்ட சீரியஸாப் பேசணும். அய்யா உங்களாலே அந்த ரா.ரா. கிணத்தை அடையாளம் காட்ட முடியுமா?"

"ஏன்? எதுக்கு?"

"பொடி நடையா அங்க போயிட்டு வந்துறலாம்னுட்டு பாஸ் யோசனை சொன்னார்."

"வேண்டாம்ப்பா! ஏதாவது விபரீதமாய்டும்."

"நாங்க விபரீதத்திலேயே கை அலம்பறவங்க. நீங்க பயப்படாம சொல்லுங்க."

"உக்கல் எக்கல்?"

"வட ஆர்க்காடு மாவட்டத்தில."

"செங்கல்பட்டு மாவட்டமில்லையா?"

"இல்லை."

"அது எக்ஸாக்ட்டா எங்க இருக்குன்னு படம் வரைஞ்சு பாகங்களைக் குறிக்க முடியுமா உங்களால?"

"முடியும்."

"முதல்ல அதைச் செய்யுங்க. அதுவரைக்கும் உங்க டாட்டரை விசாரிக்கிறேன். என்ன இனியா கொஞ்சம் ஆடிப்பூட்டே போலிருக்கே? பயப்படாதே. இவங்கள்ளாம் சுண்டைக்காய்ப் பசங்க."

"அப்பா, அந்தக் கிணத்துல என்னதான் இருக்கு?"

"இல்லம்மா. எனக்குத் தெரிஞ்சவரை அது வெறும் பாழுங்கிணறு. திடீர்னு இவ்வளவு பேருக்கு அதில என்ன இன்ட்ரஸ்ட்டுனு புரியலை."

"நீங்க அந்த இடத்தைப் பார்த்திருக்கீங்களா?"

"பாக்காம தீஸிஸ் எழுத முடியுமா? என்னய்யா கேள்வி?"

"கோவிச்சுக்காதீங்க. இப்பல்லாம் டிராமா நோட்டிஸ் மாதிரி குடுக்கிறாங்கன்னு கேள்வி. அதனாலதான் கேட்டேன்."

"ஆறு வருஷம் ரிசர்ச் பண்ணேன்யா ஒரு வெள்ளைக்காரன் கூட!"

"பாழுங்கிணத்து மேலேயா? கில்லாடி ஸார் நீங்க."

"கிணறு மட்டும் இல்லே. அதுக்கும் பக்கத்தில இருக்கிற இன்ஸ்க்ரிப்ஷன்ஸ் . . ."

"அடடா . ."

"வைத்தியநாத சுவாமி கோயில், மாறவர்மன் த்ரிபவீர பாண்டியன் சகலலோக சக்கரவர்த்திண்ணன் . ."

"ஈஸி ஈஸி. பளிங்கு மாதிரி புரியுது! எனக்கு வேண்டியது ஒரு சின்ன மாட்டர். அந்த இடத்துக்கு என்னப் போல ஒரு பாமரன் போக வழி! அவ்வளவுதான்."

"தரேன்."

பேராசிரியர் ஒரு காகிதத்தில் வரைபடம்போல் போடத் துவங்க, வஸந்த் இனியாவிடம் தன் கையைக் காட்டி "எப்படிக் கன்னிப் போயிருக்கு பாரு. காலைல பட்ட தர்ம அடி. எல்லாம் அந்தக் கட்டுரையைத் தேடிட்டுப் போனப்ப ஏற்பட்ட விழுப்புண்கள்" என்றான்.

"ச் . . . ச் . . . ச் . . ."

"உனக்கென்ன மூணு ச்! என்ன வலி வலிக்குது தெரியுமா?"

இனியா சைகையில் 'அப்புறம்' என்றாள்.

பேராசிரியர் ஏதோ குறிப்புக்காக அடுத்த அறைக்குச் செல்ல வஸந்த் உடனே உயிர் பெற்று, "இத்தனை நேரம் உங்கப்பா கடிச்சார். காலைல உங்களுக்காக உதைபட்டேன். மூணு 'இச்'சில ஒண்ணாவது கன்னத்தில் குடுத்தாகணும் நீ" என்றான்.

வஸந்த் அவளுக்கு மிக அருகில் வந்துவிட்டான். இனியா அவனை ஒரு முறை வாசனை பார்த்துவிட்டு மூக்கால் சின்னதாக அவன் மூக்கை உரசிவிட்டு அவன் மார்பில் கை வைத்துத் தள்ளிவிட்டகற்றினாள்.

"இது போதும். ரெண்டு நாளைக்குத் தாங்கும்."

பேராசிரியர் வந்து "இந்தா இதில் எல்லாம் குறிச்சுக் கொடுத்திருக்கேன். எனக்கென்னவோ இவங்களுக்கும் சரித்திரத்துக்கும் சம்பந்தம் இல்லைன்னு தோணுது. எதுக்காகன்னுதான் தெரியலை" என்றார்.

"அவங்க ஏதோ ஒரு கெட்ட காரியத்துக்குக் கோஷ்டியாக அங்க போயிருக்காங்க. என்ன காரியம்னு கண்டுபிடித்தல் எங்க காரியம். வரேன் ஸார். வரேன் இனியா."

வஸந்த் தீர்மானத்துடன் திரும்பிச் செல்லும்போது ஒமர்கய்யம் என்கிற ரெஸ்டாரண்டில் வாசல் இழுத்து மூடப்பட்டு உள்ளே திடும் திடும் என்று காபரே இசை வழிந்தது. வெளியே கலாட்டாவை எதிர்பார்த்து ஒன்றிரண்டு தாட்டியான தர்வான்கள் காவல்.

வஸந்த் அந்த மர நிழலில் பைக்கை மறுபடி பார்த்தான்.

"என்ன பிரதர் ஷோ நடக்குதா?"

வஸந்த் தந்த ரூபத்தை துவார பாலகன் பற்றிக்கொண்டு கதவைத் தேவைக்கு உட்பட்ட அளவு திறந்து அனுமதித்தான்.

சங்கீதம் கலந்த புகைப்படலம் தாக்கியது. பூராவும் ஆண்கள் கூட்டம். அவர்கள் ஊடே லாவினியா என்று பெயரிடப்பட்ட ஒரு சேலம் லோக்கல், ஜிகினாக்களை ஒவ்வொன்றாக உதறிக்கொண்டிருக்க, வஸந்த் மொபைக் ஆசாமியைத் தேடினான். இருட்டில் அடையாளங்கள் கரைந்திருந்தன. லாவினியா ஒரு சுற்று சுற்றி அரை ஹெக்டேர் முதுகைக் காட்டினாள்.

ஆர்க்கெஸ்ட்ரா கைவசம் இருக்கும் வாத்தியங்களையெல்லாம் தொம்சம் பண்ணி முடித்து, கடைசி நேர 'உம்பம்ப்பா'வில் விளக்கணைவதற்கு ஒரு கணம் முன்னால் அந்தப் பெண்ணின் மார்ப . . . விளக்கணைந்தது.

மற்ற விளக்குகள் மறுபடி மலர்ந்தபோது மேடை காலியாகி இண்டர்வல் விட்டிருந்தார்கள். வஸந்த் சுற்றிலும் பார்த்தான்.

அவனைக் காணோம்.

"யாரைப் பார்க்கறீங்க பிரதர்?"

வஸந்த் சட்டென்று திரும்ப சாட்சாத் அவன்தான்! மோபைக் தடியன்.

"அட நீங்களா? காலைல சந்திச்சோம்ல. அப்ப அதிகம் உங்க கூடப் பேச முடியாமப் போயிடுச்சு. சந்தர்ப்பம் சரியா இல்ல. என்ன சாப்பிடறேள்?"

"என்னவா? உன்ன."

"ஜோக்கடிக்கறேளா? . . ."

"ஏய், உனக்கு எவ்வளவு தெரியும்?"

வஸந்த் சுற்றுமுற்றும் பார்த்து, "அண்ணாகிட்டே ஒரு ரகசியம் சொல்லட்டுமா? கிட்ட வாங்கோ, காதோட சொல்றேன்." என்றான்.

அந்த மூர்க்கன் காதைக் காட்ட, வஸந்த் "எல்லாம் தெரியும்" என்றான்.

"அப்ப என்ன செய்யறதா உத்தேசம்?"

"நீங்க என்ன செய்யப் போறீங்களோ அதே"

வஸந்த்துக்கு அவன் என்ன கேட்கிறான், என்ன பதில் சொல்கிறோம், இரண்டு விஷயங்களும் குண்ட்ஸாக இருந்தன.

"பிரதர் உனக்கு ஒரு சுவாரஸ்யமான பெண்ணைச் சந்திக்க விருப்பமா?"

"பிரதர் அதை விட முக்கியமான, சந்தோஷமான காரியம் இருக்க முடியுமா?"

"அப்ப உள்ளே வரீங்களா?"

# 7

காபரே இடைவேளை என்பது ஓர் அசட்டுத்தனமான நேரத் தீவு. புதுசாக வந்திருப்பவர்கள் தத்தம் மனைவிமார் ஞாபகம் வந்து வெளிச்சத்துக்கு வந்த வெள்ளெலி போல் விழிக்க வஸந்த் தன் தற்காலிக நண்பனைப் பார்த்துப் புன்னகைத்தான். அவன் முக மாறுதலின்றி "சொல்லு எப்படித் தப்பிச்சே?" என்றான்.

"அது ஒரு ஜீனி வேலை."

"நீ ஒரு கவர்மெண்ட் ஆசாமியா?"

"இருக்கலாம்."

"அவங்களுக்கும் தெரியுமா?"

"தெரியலாம்; தெரியாமலிருக்கலாம். நீங்க யாரையோ சந்திக்கணும்னு சொன்னீங்களே!"

"உள்ற வா."

'உள்ற' அந்தப் பெண் பழுப்பாக இறைச்சி போல இருந்த எதையோ கடித்துக்கொண்டு ஸன்ன நீலப் போர்வைக்குள் மொத்தம் முக்கால் மீட்டர் துணியில் 'மற்றவை நேரில்' என்றாள்.

"ஹலோ! உங்களை நான் பார்த்திருக்கிறேன்."

அவள் வஸந்த்தைக் கவனிக்காமல் தன் இரை மேல் கவனமாக இருந்தாள்.

"த பாரு, உன் பேர் என்ன சொன்னே?"

"ரங்காச்சாரி."

"இவ பேரு செல்லம்."

"அப்படின்னா லாவினியாங்கறது புனைப்பெயராக்கும்?"

"அது டான்ஸுக்காக வெச்சுக்கிட்டது."

"ரோஸ்ட் நல்லா இருக்குதுங்க மகா" என்றாள் செல்வம்.

"த பாரு ரங்கா! இவளைப் பார்த்தில்ல. குட்டி ஷோக்காத் தானே கீரா."

"ரா."

"உனக்குன்னு பெஷலா இவளை சும்மா உருவி விட்ட மாதிரி ஒரு டான்ஸ் காட்டச் சொல்லவா?"

"அதுக்கு நான் என்ன காட்டணும்?"

"எங்கே இருக்கு சொல்லிவிடு."

வஸந்த் அந்தப் பெண்ணைப் பார்த்தான். சம்பாஷணை தன்னைப் பற்றியே இல்லை போல் தன் நகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பெரும்பாலும் கேள்வி பதில் புரியாத பாதையில் சென்றுகொண்டிருப்பது அவனுக்குச் சற்று கவலையாக இருந்தது. எவ்வளவு தூரம் இந்த நாடகத்தை நடத்த முடியும் என்று தீர்மானமாகத் தெரியவில்லை.

"எங்க இருக்குன்னு தெரிஞ்சா நான் இன்னேரம் அங்க இருக்க மாட்டேனா பிரதர்?"

"லாவினியா யுர் நெக்ஸ்ட் டான்ஸ்."

"வந்துட்டேன்" என்று அவள் தன் தோகையைத் துறந்துவிட்டு மேடைக்குச் சென்றாள். உய்யு உய் என்று சீழ்க்கைகள் வரவேற்றன.

"அப்ப நான் வரட்டுமா?"

"எங்க கிளம்பிட்டே! எனக்குப் பதில் வரலியே?"

"முதல்ல நீங்க யாரு கட்சி. அதைச் சொல்லு முன்னால."

அவன் சுதந்திரமாக வஸந்த்தின் சட்டைப் பையைத் தொட்டு, "பைக்குள் என்ன வச்சிருக்கே?" என்றான்.

"சும்மா காயிதம்?"

"காட்ட மாட்டியா?"

"காட்டிட்டாப் போச்சு." வஸந்த் சட்டென்று உதறிக்கொண்டு எழுந்தான். ஒரே பாய்ச்சலில் கதவை நோக்கி ஓடினான். கதவை மோதித் திறந்தான். வெளியே விரைந்தான். சந்துக்குள் நுழைந்து மற்றொரு முனை திரும்பி மோட்டார் சைக்கிள் திடுதிடு என்று உயிர் பெறும் ஓசை கேட்டுவிட்டுச் சற்று நேரம் கழியக் காத்திருந்து மறுபடி அந்த ரெஸ்டாரெண்ட் வாசலை நண்ணினான்.

லாவினியா தன் டூட்டி முடிந்து ஸாரி அணிந்து, பொட்டலமாக வீட்டுக்குப் பாக்கி சிக்கனை . .

"செல்லம்! எங்கே? வீட்டுக்கா?"

"ஆமா."

"வீடு எங்கே சிந்தாதிரிப்பேட்டையா?"

"ஏதோ ஒரு பேட்டை."

"கொஞ்சம் வெறுப்பில இருக்கீங்க போல. எனக்குத் தெரிஞ்ச காபரே ஆர்ட்டிஸ்ட் எல்லோருடைய வாழ்க்கையிலும் பின்னணியில ஒரு சோகக் கதை இருக்கு. கடைசி கேஸ் ஒரு நொண்டித் தங்கை."

“எனக்கு அதெல்லாம் ஒண்ணுமில்ல. காசு தர்றாங்க, ஆடறேன்.”

“நல்ல பிரின்ஸிபிள்.”

செல்லத்துக்குச் சுமார் இருபது இருக்கலாம். ஒரு இடது கையால் தூக்கிவிடலாம் போல மெல்லிசாக இருந்தாள்.

“அந்தாளை உனக்கு எப்படித் தெரியும்.”

“முதலாளிக்கு வேண்டியவர்.”

“எனக்குக் கூட முதலாளியைத் தெரியும்.”

“அப்படியா? நான் வரேன்.”

“வீட்டு வரைக்கும் துணைக்கு வரட்டுமா?”

“வேண்டாம். உன்னைப் பார்த்தா ஆளு புதுசு மாதிரி இருக்கு. இவங்க சவகாசம் வேண்டாம். அதான் சொல்வேன். விலகிக்க, அடி படறதுக்குள்ள விலகிச்சு.” அவள் பின் கதவைத் திறந்து இருட்டில் சைக்கிள் ரிக்ஷா ஏறிச் சென்றாள்.

“ஒரு மோட்டார் சைக்கிள் மூர்க்கன். ஒரு காபரே கன்னி விஷயம். கொஞ்சம் சுவாரஸ்யமாகப் போவுது இல்ல பாஸ்?”

“திருடங்க சவகாசம் அதிகமாய்ட்டு வருது. நீ ஏன் அங்கெல்லாம் போறே. நேர வீட்டுக்கு வர வேண்டியவன்தானே?”

கணேஷ் கலைந்த தூக்க வெறுப்பில் இருந்தான்.

“அந்தாள் என்னை கவர்மெண்டான்னு கேட்டான். அப்படின்னா இது சர்க்கார் சம்பந்தமான விஷயம். எங்க எது இருக்கு?”

“எல்லாத்தையும் காலைல யோசிக்கலாம். தூங்கித் தொலை.”

“காலைல போறமில்ல?”

“போலாம் போலாம்.”

அதிகாலை வஸந்த் உற்சாகத்துடன் கணேஷின் தூக்கத்தைக் கலைத்தான். பால் வாங்கி வந்து காப்பி தயாரித்தான். ரேடியேட்டருக்குத் தண்ணீர் நிரப்பினான். காரைத் துடைத்தான். உடுப்பியிலிருந்து பொட்டலங்கள் தருவித்தான்.

“முதல்ல காஞ்சிபுரம் அங்கேயிருந்து வந்தவாசி போற பாதையைப் பிடிக்கணும். அங்கிருந்து . . .”

“ஏங்க கூழமந்தல் போற பாதை இதுதானே?”

“கூளமந்தல்ல எங்கே போகணும்?”

“உக்கல்.”

“அட நானும் அங்கதான் போவணும். பஸ் வருமான்னுட்டுக் காத்துக்கிட்டிருக்கேன்.”

“ஏறுங்க பெரியவரே.”

பெரியவர் சந்தோஷமாக ஏறிக்கொண்டு கதவைப் படீரென்று சாத்தினார்.

“சினிமாக்காரங்களா?”

“இல்லை.”

“உக்கல்ல என்ன சோலி?”

“கோயிலுக்குப் போகணும்.”

“பெருமா கோவிலா?”

“எல்லாக் கோயிலையும் பாக்கணும்.”

“சாமி கும்பிடவா?”

“இல்லை.”

“ஆராய்ச்சியா?”

“அது மாதிரிதான் வெச்சுக்கங்களேன்.”

“கூளமந்தல்லயே ஒரு பளய கோவில் இருக்குது. கவர்மெண்ட்டு பாதுகாக்கறாங்க.”

“பெரியவரே கன்ஃப்யூஸ் பண்ணாதீங்க. முதல்ல உக்கலைப் பார்க்கலாம். அங்க ராஜராஜன் கிணறுன்னு ஒரு எடம் தெரியுமா உங்களுக்கு?”

“தெரியாதுங்க. ஆனா கெணறு நிறைய இருக்குது.”

ஆற்றில் நீரில்லை. சவுக்குத் தோப்புகள் தெரிந்தன. நகர நாகரிகம் தீண்டிய ஒரு இரண்டுங்கெட்டான் நிலையில், தன்னை இன்னும் தீர்மானிக்காத நிலையில் இருந்தது உக்கல் கிராமம். புழுதி மேகத்தில் சிறுவர்கள் தொடர, தெருத் திண்ணைச் சீட்டாட்டங்களிலிருந்து கேள்வி முகங்கள் எட்டிப் பார்த்தன. பாண்ட் அணிந்த வாலிபர்கள் தென்பட்டனர்.

“இந்த ஆத்துக்குப் பேரென்ன பெரியவரே?”

“செய்யாறுங்க.”

“கோயில் எங்கே?”

“இதாங்க பெரிய தெரு, இப்படியே கிளக்கால போனீங்கன்னா பெருமா கோயில் சந்து வருங்க. இப்படியே வடக்கே போனா ஈஸ்வரன் கோயில்.”

“நேரப் போனா?”

“கம்மாளத் தெரு, முதலியார் தெரு, அப்பறம் பாப்பாரத் தெரு.”

“ஹோல்டான். தொடர்கதையை நிறுத்திருவாங்க.”

"மேக்க போனா செம்படவத் தெரு வருங்க!"

"சரிதான் பாஸ், மனு இன் ஆக்ஷன்."

"கோவில்ல கிணறு இருக்கா பெரியவரே?" என்றான் கணேஷ்.

"பெரியவரே நேத்திக்கு உங்க கிராமத்துக்குப் புதுசா பட்டணத்தில இருந்து யாராவது வந்தாங்களா? பழுப்பா நீளமா ஒரு மோட்டார்ல?"

"இல்லிங்களே. எனக்குத் தெரிஞ்சவரைக்கும் தெரியலீங்களே. நான் ஊர்லதானே இருந்தேன்."

கார் பெருமாள் கோவில் வாசலில் நிற்க, சிறுவர்கள் சூழ்ந்து கொள்ள, வஸந்த்தும் கணேஷும் பெரியவர் வழிகாட்ட உள்ளே சென்றார்கள்.

நுழைவாயில் சிதிலமாக இருந்தது. கோபுரமற்று உயர்ந்த கல் தூண்கள் மேல் கூரை வேய்ந்திருந்தது. எதிரே நடன மேடை போன்ற அமைப்பு தெரிந்தது. சுமார் பன்னிரண்டடி உயரத்தில் அதன் பின் தெரிந்த கருவறை திறந்திருந்தது.

"கிணறு இருக்கா?"

"அங்க பாருங்க. ஓரத்தில் ஒண்ணு இருக்குதுங்க."

கோயிலின் தென்மேற்கு மூலையில் அந்தக் கிணறு இருந்தது.

சுமார் பத்து அடி விட்டத்துக்கு ஏறக்குறைய பாழுங்கிணறு. தண்ணீர் இல்லை.

"இந்தக் கிணத்தைப் பத்தி ஏதாவது கதை உண்டா பெரியவரே?"

"இதில புதையல் இருக்கிறதாச் சொல்லுவாங்க. எங்க இருக்குன்னு அந்தக் கல் சுவத்தில எளுதி வெச்சிருக்கிறதா சொல்றாங்க. அதை யாராலும் படிக்க முடியாதுங்க! நீங்க அதைத் தேடிட்டுத்தான் வந்திருக்கிங்களா?"

"இண்ட்ரஸ்டிங்" வஸந்த் கணேஷைப் பார்த்தான். கணேஷ் அந்தக் கருவறைப் பக்கம் செல்ல வஸந்த் அவனைப் பின் தொடர்ந்தான்.

கருவறையின் கற்கட்டின் வெளிப்புறத்தில் எழுத்துக்கள் வெட்டப்பட்டிருந்தன.

'லப்பெருநிலச் செலவியுந்தனக்கே உரிமை'

"தலை கால் புரியலை பாஸ்"

"ஒரு சில பேருக்குப் புரிஞ்சிருக்கு."

"மடவிளாகத்தில கை கால் ஒடிஞ்ச செலைங்க இருக்குங்க. பாத்துங்க. முள்ளுச் செடிங்க அதிகம் இருக்கும்."

வஸந்த் நெருஞ்சி முட்களின் உபயத்தில் நொண்டினான்.

“எனக்கு என்னவோ நாம தேடற இடமே தப்புன்னு தோணுது. பேராசிரியர் இதையா ஆராய்ச்சி செய்திருக்கார்? அஞ்சு நிமிஷத்துக்கு மேலே இந்த இடத்தில எவனாலயும் நிக்க முடியாது. ஏன்யா உங்க உக்கல் கிராமம் முழுக்க இங்கதான் வந்து உக்கார்றாங்களா? கப்பூ தாங்கலியே.”

“நம்ம வீட்டுக்கு வர்றீங்களா மோர் குடிக்கலாம்?”

“அப்புறம் வரோம் பெரியவரே.”

“இல்லை. பட்டணத்துக்காரங்களுக்கு டீத்தண்ணி வேணும்னா எம் மவ நல்லா டீ வைக்கும்.”

“மவளுக்கு என்ன வயசு?”

“சின்னதுங்க. பத்துப் பதினைஞ்சு.”

“பாஸ் ஒரு கப் டீ அடிச்சுட்டு வந்துறலாமே.”

“யு ஆர் ஸப்போஸ்ட் டு பி இன் லவ் வித் இனியா வஸந்த்.”

“ஓ எஸ்! மறந்தே போய்ட்டேன். நீங்க போய்க் கங்க பெரியவரே.”

கணேஷ் மறுபடி கிணற்றுக்குச் சென்று எட்டிப் பார்த்தான். “ம்ஹூம். இதில் ஏதும் இருக்கிறதா எனக்குத் தெரியலை.”

“அப்ப நான் வரட்டுங்களா?”

“வாங்க.”

“ராத்திரி தங்குவீங்களா?”

“சான்ஸே இல்லை.”

பெரியவர் சிறுவர்களை விரட்டியடித்துக்கொண்டு விலக, வஸந்த்தும் கணேஷும் தனியே விடப்பட்டார்கள். கோயிலை விட்டு வெளியே வந்து சற்று தூரம் நடந்தார்கள்.

“வஸந்த் ஒரு ஆள் நம்ம பின்னால வந்துகிட்டிருக்கான். கவனிச்சியா?”

“கவனிச்சேன் பாஸ், விசாரிக்கலாமா?”

“கண்டுக்காதே. நட.”

நேராக வெளித் தெருவில் நிறுத்தப்பட்டிருந்த காருக்கு நடந்தார்கள்.

காரைக் கிளப்பும் தருணத்தில் அவன் சற்று அவசரமாக அருகில் வந்து “ஒரு நிமிஷம் உங்களோட பேசணும்” என்றான்.

“பேசுங்க.”

“கார் மெட்ராஸ் போறதா?”

“இப்போதைக்கு இல்லை!”

“நான் ஏறிக்கலாமா?”

"நீங்க யாரு?"

"உங்க கிட்ட முக்கியமா ஒரு விஷயம் சொல்லணும்."

"சொல்லுங்க." கணேஷ் காரின் இஞ்ஜினை இளைப்பாற்றினான்.

"தனியா உடனே வந்தா சொல்றேன்."

"ஏன் இங்கேயே சொல்லுங்களேன்."

"நீங்க என்ன பண்றீங்க உடனே சதாசிவம்கிறவரைப் போய்.."

அவன் சொல்ல வந்ததை முடிக்காமல் சடக்கென்று நிறுத்தி விட்டான். அல்லது நிறுத்தப்பட்டுவிட்டான். அவனிடமிருந்து அடுத்து 'அக்' என்று ஒரு வினோத சப்தம் எழுந்தது. அப்படியே கார் கதவுக்குள் எட்டிப் பார்ப்பவன் போல் வஸந்த்தின் முகத்தோடு முகம் ஒட்டிக்கொண்டான்.

"என்ன ஸார் முத்தம் கொடுக்கறீங்க?"

அவன் வாய் திறந்து காற்றுதான் வெளி வந்தது.

"வஸந்த்! ஸம்திங் ராங். டெரிப்ளி ராங்க்."

வஸந்த் கார் கதவைத் தள்ள முயற்சி செய்தான். முடியவில்லை. இதனிடையில் கணேஷ் காரின் மறுபுறம் வெளிப்பட்டு அந்தப் புதியவனைப் பின்புறத்திலிருந்து அணுக,

"மை காட்!"

அவன் முதுகில் கத்தி சொருகப்பட்டு ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

# 8

மெல்ல மெல்ல கூட்டம் சேர்ந்துகொள்ள ஆரம்பித்தது. கூட்டத்தின் நெருக்கத்தில் பிறகு எதுவும் செய்ய முடியாது; மிக விரைவில் ஏதாவது செய்தாக வேண்டும். அவசரம். கணேஷ் அந்த உடலை அப்புறப்படுத்துவதற்குத் தயங்கினான். கிராமத்தின் போலீஸ் அமைப்பில் சிக்கல்கள் இருக்கலாம். "வஸந்த் க்விக், காரை எடு."

"பாஸ், உயிர் இருக்கற மாதிரி தெரியுது! ஏம்பா இங்க பக்கத்தில ஆஸ்பத்திரி எங்க இருக்கு?"

"மாட்டாஸ்பத்திரிங்களா?" ஸ்டார்ட்டரை நான்கைந்து முறை இயக்கியும் பயனில்லை.

"மன்ஷாஸ்பத்திரிப்பா! பாஸ் ஃபிளட் ஆயிருக்கு; கார் சண்டி பண்ணுது."

"யாருங்க இந்தாளு?"

"செத்துட்டான் இந்தாளு!"

"இல்லடா மூச்சு வருது."

கணேஷ் தீர்மானித்து அவனை நிமிர்த்தினான். "வஸந்த்! போலீஸ் ஸ்டேஷன் எங்கன்னு முதல்ல விசாரி. அந்த மாட்டு வண்டியை நிறுத்துங்க."

"யோவ் மாட்டு வண்டி கொஞ்சம் வரியா?"

"கத்திக் குத்து! அம்சமா குத்திருக்குதுங்க."

"செத்த பொணமா? நான் மாட்டங்க."

"யோவ் சாவுகிராக்கி. இன்னும் ஆளு சாகலிய்யா. தூக்குடா டேய்!"

"புஸ்ஸு புஸ்ஸுன்னு மூச்சு உடறதைப் பார்த்தா பன்னண்டு மணிக்குள்ற போயிடுவான்யா."

"இல்லை, நீங்க பேசி முடிக்கிறதுக்குள்ளேயே போய்டுவான். தூக்குய்யா!" என்றான் வஸந்த். கணேஷ் அந்த முதுகின் கத்திக்

குத்தைப் பார்த்தான். ரத்தம் கட்டி தட்ட ஆரம்பித்திருந்தது

"பாஸ் வசமா கிராமத்துல மாட்டிக்கிட்டம். ஏம்ப்பா இந்தப பக்கம் தங்கற ஓட்டல் நல்லதா இருக்கா?"

"அதுக்கு டவுனுக்குப் போயிருங்க. என்னங்க ஆச்சு? ஏதாவது நிலத் தகராறா? குத்திப் போட்டாங்களா? இந்த ஊர்ல இது சகஜங்க."

வண்டியின் முன் பகுதியில் வஸந்த் ஏறிக்கொள்ள கணேஷ் அந்தத் தெரு அத்தனை பேருடனும் பின்தொடர்ந்தான். தெருக் கதவுகள், ஜன்னல்கள் எல்லாம் உயிர் பெற்று பளிச்சென்று பெண் முகங்கள் எட்டிப் பார்த்தன.

கணேஷ் அருகே நடந்த சற்றே வயதானவரிடம் "ஏங்க இங்கே சதாசிவம்னு யாரும் இருக்காங்களா?" என்றான்.

"இதோ, ஏ சதாசிவம்!"

குறிப்பிட்ட சதாசிவம் அருகே வந்தான். சின்னப் பையன். பத்து வயதிருக்கும்.

"இவன் இல்லிங்க. வேற சதாசிவம்."

"யாரைச் சொல்றீங்க? ஊர்ல எட்டு நூறு சதாசிவம் இருக்காங்க."

கணேஷின் ஞாபகத்தில் அந்த அரைகுறை வாக்கியம் வெட்டியது. "சதாசிவம்னு ஒத்தரை."

"இங்க அந்தப் பேர்ல ஊர்ப் பெரிய மனுசங்க யாராவது இருக்காங்களா?"

"டாக்டரையா பேரு சதானந்தம்."

"சதாசிவங்களைச் சொல்லுங்க முதல்லே."

**லோ**க்கல் பண்டு ஆஸ்பத்திரி அந்த எமர்ஜென்ஸிக்குத் தயாராக இல்லை. டாக்டர் சாப்பிடப் போயிருந்தார். உதவியாளர் லீவில் இருக்கிறாராம். நர்ஸ் இன்னும் போஸ்ட் ஆகவில்லையாம்.

"பின்ன நீங்க யாரு?"

"நான் இங்க வைத்தியம் பார்த்துக்க வந்தவங்க."

"நாசமாப் போச்சு! பாஸ் இவன் காலி. ஏன்யா அடுத்த ஆஸ்பத்திரி எவ்வளவு தூரம்?"

"யாருப்பாது? ஆளு புதுசா இருக்கு" என்று ஒரு அதட்டுக் குரல் கேட்டது. கிராமத்தின் போலீஸ் தொப்பி தென்பட்டது.

"வாங்க" என்றான் வஸந்த்.

"ஒதுங்குடா. என்ன கூட்டம் போட்டுகிட்டு! பட்டணத்துக் காரங்கன்னாங்களே நீங்கதானா?"

"ஆமாங்க."

"என்னம்மா நீங்க பாடியை எடுக்கப்போகும்?"

கான்ஸ்டபிளுக்கு நாற்பது வயதிருக்கும். கிராமத்திலேயே பிறந்து வளர்ந்து மணந்து பழசாகிப் போன ஆசாமி என்று தோன்றியது. ரூல்ஸ் அவருக்கு தெரிந்திருக்க அவசியமில்லை.

"ஆனா அடிபட்டிருக்கான்! ரத்தம் கொட்டுது. உசிர் இருக்கு. அப்படியே போட்டுட்டு வந்திருக்கணும்ங்கிறீங்களா?"

"அதுகூடச் சரிதான்" கான்ஸ்டபிள் குத்துப்பட்டவனை அணுகி "யோவ் யாருய்யா நீ" என்றார். அதிக ரத்த சேதத்தால் அவன் அரை மயக்கத்தில் இருந்தான். "இந்தாளு யாருன்னு யாருக்காவது தெரியுமாய்யா?"

சுற்றுப்பட்டவர்கள் மௌனமாக இருந்தார்கள். "வெளியூராளு மாதிரி தெரியுது அண்ணே."

"என்ன பாடாவதியோ! யோவ் உன்னைக் குத்தினது யாரு சொல்லு."

அருகே கணேஷ் செல்ல அவன் உதடுகள் லேசாக அசைந்தன. கணேஷ் உன்னிப்பாகக் கேட்டான்.

"கிணறு! கிணறு!"

"என்ன கிணறு?"

"கிணத்தில... கிணத்தில..." அதை முடிக்க முடியாமல் சோர்வு அவனை ஆக்ரமிக்க அவன் கண்கள் மூடிக்கொண்டன.

"கிணத்தில என்ன?"

"தெரியலையே."

"வாங்க டாக்டரய்யா. இந்தாளைப் பாருங்க."

டாக்டர் சமீபத்தில் போஸ்டிங் ஆன இளைஞன் போலத் தெரிந்தான். "ஓ காட், ஹி இஸ் ப்ளீடிங்! ஒதுங்குய்யா, ஒதுங்குய்யா! என்ன கூட்டம்!"

"பொளைக்குமா போயிருமா?"

"சொல்ல முடியாது. நீங்கள்ளலாம் வெளியில போங்க."

கணேஷ் வஸந்த்துடன் வெளியே வந்தான்.

"பாஸ்! மறுபடி கிணறு துரத்துது!" வஸந்த் சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு ஈச்ச மரத்தின் சிக்கனமான நிழலில் நின்றான்.

"அவனுக்கு ஏதோ தெரியக் கூடாதது தெரிஞ்சிருக்கு."

"அபாயகரமானது."

"குத்தினவனைப் பார்த்தியா வஸந்த்?"

"ம்ஹூம். முடியவே இல்லை. பக்கத்தில ஒரு சந்து. அதில மறைஞ்சிண்டிருந்திருக்கணும். நான் பார்த்தபோது பின்னால் ஒரு

ஈ இல்லை. ஒருவேளை . . .

"ஒருவேளை?"

"கத்தி பின்னால எங்க இருந்தாவது எறியப்பட்டதோ என்னவோ?"

"இருக்கலாம்."

"பாஸ்?" என்று வஸந்த் தன் முதுகுப் பக்கம் கை செலுத்தித் தடவிக்கொண்டான்.

"நம்ம முதுகிலே ஏதாவது கத்தி கத்தி தொத்திக்கிட்டிருக்கா பாருங்க!"

"அதுக்கு இன்னும் கொஞ்சம் சமயம் ஆகும்னு தோணுது. கிணறு! கிணறு! எந்தக் கிணறு வஸந்த்?"

"அதான் நம்ம ராராதான்."

"அந்தாளு பிழைக்கணும் வஸந்த்."

"ம்ஹூம். டாக்டரைப் பார்த்தா நம்பிக்கையாத் தெரியலை. பல்ஸ் பாக்கறப்ப இவனுக்கு பல்ஸ் எகிறுது."

"சின்னவனா?"

"முப்பது வயசிருக்கும் பாஸ். பாடில வலு இருந்தாப் பிழைச்சுப்பான். ரத்த சேதம் நிறைய ஆயிடுச்சு. ரத்தம் குடுக்க வேண்டியிருக்கும். இந்த ஆஸ்பத்திரிலே குடுத்தாலும் எடுத்துக்க வசதி இருக்காது. ஏதாவது ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கிட்டுப் போக வேண்டியிருக்கும்."

"காஞ்சிபுரத்துக்குக் கூட்டிட்டுப் போறாங்களோ என்னவோ?"

"கூட்டிட்டு எங்கே? எடுத்துட்டுத்தான் போக முடியும்."

"வஸந்த்! அவனை எப்படியாவது பேச வெக்கணும். அவன் என்ன சொல்ல வந்தான்னு நமக்குத் தெரிஞ்சே ஆகணும்."

"வாங்க பாஸ், டாக்டரைக் கேட்கலாம். எனக்கென்னவோ அந்தாளு வெட்டர்னரி டாக்டரோன்னு சந்தேகம். ஊசியைப் பார்த்தா பெரிசா இருக்கு."

"ஒரு ஆளு உயிருக்கு மன்றாடிக்கிட்டிருக்கிறபோது இந்த மாதிரி அறுவை ஜோக் அடிக்கிறது எனக்கு கட் . . ."

"டோட பிடிக்கலை. அதானே? ஸாரி. இப்ப ஸீரியஸா இந்த விவகாரத்தை விடறதில்லை. அங்கங்க முதுகிலே ஒண்ணு ரெண்டு கத்தி குத்தினா என்ன? எடுத்துட்டு வேற வேலையைப் பார்க்கிறது! ஸாரி! மறுபடியும் ஜோக்கடிக்கிறேனில்லை!"

"நீ சாவறதுக்கு முன்னாடி கூட ஜோக்கடிச்சுட்டுத்தான் செத்துப் போவே! வாடா."

அவர்கள் மறுபடி ஆஸ்பத்திரியின் முன்னறைக்குச் சென்றபோது கத்திக் குத்தாளி மல்லாந்து படுத்திருந்தான். மூச்சு இலேசாக

வருவதைக் கணேஷ் கவனித்தான்.

"ஊண்டை டிரஸ் பண்ணிட்டேன். நிறைய இரத்தம் இழந்திருக்கான். இவனுக்கு இப்ப ரத்தம் கொடுத்தாகணுமே."

"இந்த ஊர்ல டெலிபோன்னு ஏதாவது சமாசாரம் உண்டுங்களா கான்ஸ்டபிளய்யா?"

"இருக்குதுங்க. அதுக்கு முன்னாடி நீங்க யாரு, என்ன போக்குவரத்து எல்லாத்தையும் துப்புரவாச் சொல்லிப் போடுங்க. கேஸு ரிஜிஸ்தர் பண்ணிக்கணும் பாருங்க."

"அதெல்லாம் அப்புறம் பண்ணிக்கலாங்க. முதல்ல ஆளு பொழைக்கிற வழியைப் பார்க்கலாமா?"

"அது கூடச் சரிதாங்க! இருங்க. பி.டி.ஓ. ஜீப்பு இருக்கா பார்த்துக்கிட்டு வர்றேன். இருந்தா சௌகரியமாப் போயிரும்."

"சீக்கிரம் வாங்க."

"நீங்க எங்கேயும் போயிராதீங்க, பட்டணத்துக்காரவங்களே."

"போகலை. துப்புரவா விசாரிக்க வேண்டாமாங்க!"

"அதானே!"

"டாக்டர், பேஷண்ட் எப்படி இருக்கான்?"

"ப்ச். சொல்ல முடியாது" என்று டாக்டர் ஒரு மாத்திரையை விழுங்கிக்கொண்டார்.

"அப்புறம் ஏதாவது பேசினானா?"

"இல்லை. கான்ஸ்டபிள்தான் ஏதேதோ கேட்டுக்கிட்டிருந்தாரு, சத்தம் போட்டு ஓத்துய்யான்னேன்."

கணேஷ் படுத்திருந்தவன் பக்கத்தில் சென்றான். சூடு பார்த்தான்.

"தொடாதிங்க! போலீஸ் கேஸ்."

"இவன் பேசியே ஆகணும் டாக்டர்."

"எப்படி ஆச்சு?"

"எது?"

"கத்திக்குத்து."

"சரியாத் தெரியலை டாக்டர். நாங்க பாட்டுக்குக் கார்ல உக்கார்ந்துக்கிட்டிருந்தோம். திடீர்னு எங்க மேலே தலை குப்புற விழுந்தான். திரும்பிப் பார்த்தா ரத்தம்; கத்தி. ரொம்பக் கோவக்காரப் பயலுவ. எதுக்கெடுத்தாலும் கத்தி."

கணேஷ் கத்தியைப் பார்த்தான். ரத்தம் உறைந்திருந்தாலும் அதன் கூர்மை புரிந்தது. நீளம் தெரிந்தது. பளபளப்பு அச்சுறுத்தியது. சமையலறைக் கத்தி இல்லை அது. முதுகுகளையும் மார்புகளையும் குத்துவதற்கென்றே ஏற்பட்ட கெட்ட கத்தி அது.

என்ன சொல்ல வந்தான், யார் அவன்?

"லோகல் ஆளில்லைன்னு தெரியுது. பைக்குள் பஸ் டிக்கெட் வச்சிருக்கான்."

"டாக்டர்? இவன் பையை நாங்க பார்க்கலாமா?"

"கான்ஸ்டபிள் வந்தா காச் மூச்சுன்னு கத்துவான்யா."

"அவர் வர்றதுக்குள்ளே ..."

"நீங்க யாருன்னு தெரியலையே?"

"நாங்க ரெண்டு பேரும் லாயர்ஸ். மெட்றாஸ்காரங்க."

"உங்களுக்கு டி. ம்.எஸ். ஆபீஸ்ல யாரையாவது தெரியுமா?"

"டைரக்டரையே தெரியும்."

டாக்டரின் சுபாவத்தில் ஒரு மின்னல் மாற்றம் ஏற்பட்டது. "உக்காருங்க. உங்க பேர் என்ன?"

"வஸந்த்."

"என்ன பார்க்கணுமோ, பார்த்துக்கங்க."

கணேஷ் படுத்திருந்தவனை அசைத்தான். காவி நிறத்தில் பூப்பூ சட்டை. நெற்றியில் குங்கும லேசு. பாண்ட் காலோரத்தில் நூல்.

கூந்தல் எண்ணெய் படிந்து சமீப வீழ்ச்சியின் காரணத்தால் புழுதியும் ரத்தமுமாக இருந்தது.

வஸந்த், "உங்களுக்கு எந்த ஊருக்கு டாக்டர் மாத்தல் வேணும்?"என்றான்.

கணேஷ் அவன் சட்டைப் பையைக் காலி செய்தான். டி.டி.ஸி.யின் பஸ் டிக்கட், ஓர் அழுக்குக் காகிதத்தில் மொத்தம் செலவு செய்த ரூபாய் நாப்பத்து ஏழு அறுபதுக்கு முழுமையான கணக்கு. "தஞ்சாவூர் ப்ராப்பர்லே கிடைச்சதுன்னா நல்லதுங்க."

போஸ்ட் கார்டு, 'அன்புள்ள அண்ணன் அவர்களுக்கு' என்றது. விலாசத்தைப் பார்த்தான். ஆதம்பாக்கம். ஆள் யாரென்று அறிந்து கொண்டுவிடலாம்.

"அதான் டாக்டர் உங்களுக்குச் சௌகரியம். நாலு வருஷம் கவர்ன்மெண்ட் உத்தியோகம் பார்த்துட்டுப் பளிச்சுனு க்ளினிக் வெச்சுடலாம்."

"சதாசிவம் முதலியார் தெரு, உக்கல் போஸ்ட், வ.ஆ. மாவட்டம்."

"டைரக்டரையேவா தெரியும்னீங்க?"

"பின்னே?"

வெறும் விலாசம் மட்டும். கணேஷ் அந்தத் தபால் கார்டை எடுத்துக்கொண்டான். வெளியே ஜீப் அரவம் கேட்டது. கணேஷ் அவசரமாக அறையை விட்டு விலகினான்.

"காஞ்சிபுரமே எடுத்துட்டுப் போயிறலாங்க."

"ஆளு யாருன்னே இன்னும் தெரியலியே!"

"நிச்சயம் வெளியூர்க்காரன்."

"இதோ இவங்க கூட வெளியூருதான். நீங்கள்ளாம் எந்த ஊரு?"

"மெட்றாஸ்தாங்க" என்றான் வஸந்த்.

"இந்தச் சீட்டை ஆஸ்பத்திரியிலே காட்டுங்க. உடனே வைத்தியம் பார்ப்பாங்க."

டாக்டரிடம் சீட்டைப் பெற்றுக்கொண்டு கணேஷ், வஸந்த்தைத் தீர்மானமில்லாமல் பார்த்தார், கான்ஸ்டபிள். "நீங்க போயிட்டு வாங்க. நாங்க இந்த இடத்தை விட்டு நகர மாட்டோம்."

"ஏய்யா! கார்ல வந்தீங்களாமே ரெண்டு பேரும்? அத அப்பவே சொல்லக் கூடாது? ஜீப்புக்கு அல்லாடறேன்."

"கார் ரிப்பேர் ஏட்டய்யா, முக்கி முக்கிப் பார்த்தாச்சு. பொவகூட வல்ல."

"அதனாலதான் சொல்றேன். நாங்க எங்கயும் வெளிய போயிற மாட்டோம். நீங்க காஞ்சீபுரம் போயிட்டு வாங்க."

"அதுகூடச் சரிதான்."

"இல்லை வஸந்த்! நாமும் கான்ஸ்டபிள் கூடப் போயிட்டு வந்துறலாம். அவருக்கு நம்ம மேலே சந்தேகம் ஏதும் வரக் கூடாது பாரு."

"அதுகூடச் சரிதான்."

கணேஷ் வஸந்த்தைத் தனியே அழைத்து, "அவன் மயக்கம் நீங்கி மறுபடி பேசறபோது கூட இருக்கணும்" என்றான். வஸந்த் குரலைத் தாழ்த்தி, "அதுகூடச் சரிதான்" என்றான்.

"கார் ஃப்ளடிங் சரியாப் போயிருக்கும் பாஸ்! பார்த்துட்டு வந்துர்றேன். சரியாப் போயிடுச்சுன்னா அதையே எடுத்துட்டுப் போயிறலாம்."

வஸந்த் ஆஸ்பத்திரியிலிருந்து கார் நின்றுபோயிருந்த இடத்துக்குச் செல்லும் வழியில் இனியாவைப் பார்த்தான்.

# 9

“இனியா! ஹாய்! என்னது மெட்ராஸ் பூரா உக்கலின் பக்கம் வந்துடுத்தா?”

இனியா சற்றே திடுக்கிட்டு, திரும்பி வஸந்த்தைப் பார்த்ததும் உடனே மலர்ந்தாள். “எய் வஸந்த்! வஸந்த காலம் வழங்கிய ரேஸர் பிளேடுகளைத்தான் தேடிக்கிட்டு வந்தோம்.”

“தோம்’னா அப்பாவும் வந்திருக்காரா?”

“மாம்!”

“போச்சுடா! எதுக்கு இந்த வயசான காலத்திலே பேராசிரியரைப் போட்டு இப்படி அலைக்கழிக்கிறே? தனியா வரக் கூடாதா? பகல் வேளையில என்ன பயம்? வயல்காட்டுப் பக்கம் சைக்கிளில் அழைச்சுக்கிட்டுப் போயிருப்பனில்ல, ஒரு டுயட் சான்ஸ் போச்சு பாரு.”

“அப்பாதான் பிடிவாதமா மறுபடி இங்க வரணும்னாரு.”

“பாத்தியா, உன்னைப் பார்த்ததில வந்த காரியத்தையே மறந்து போயிட்டேன். இன்னி இனி இந்த இடத்தில நீங்க ரெண்டு பேரும் ஒரு நிமிஷம் கூட இருக்கக் கூடாது.”

“ஏன்?”

“விஷயம் ரொம்பத் தீவிரமாயிடுச்சு. சந்துக்குச் சந்து கத்திக் குத்து. இப்பத்தான் ஒரு கேஸ் காஞ்சிபுரம் போயிட்டிருக்கு. உங்கப்பா வெட்டின ராரா கிணத்துல இருந்து பூதம் புறப்பட்டுடுச்சு.”

“என்ன சொல்றீங்க வஸந்த்?”

“ரத்தினச் சுருக்கமாகச் சொன்னா ஆபத்து! புறப்படு மகளே!”

“அய்யய்யோ! அப்பா கோயிலுக்குள்ள தனியாப் போயிருக்காரே!”

“சான்ஸே இல்லே. வா அங்க ஓடலாம். சௌகரியமா என் கையைப் புடிச்சுக்கோ.”

வஸந்த் இனியாவுடன் மறுபடி அந்தச் சிதிலமான கோயிலுக்குள் நுழைந்தான்.

பேராசிரியர் அணைந்த பைப்பைக் கடித்துக்கொண்டே கோயில் மண்டபத்தின் கற்தூண்களைப் பரிசீலித்துக் கொண்டிருந்தார்.

"ஸாாாாார்! குட் மார்னிங்!"

"குட் ஆஃப்டர்நூன்" என்றார் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே.

"கொஞ்சம் திரும்புங்க."

"ஏன்?"

"இல்லை, கத்தி கித்தி குத்தி கித்தி இருக்கான்னு பார்த்துறலாமேன்னுட்டு."

"என்னப்பா சொல்றே?"

புரியும்படி சொன்னான். "ஆமா! 'அங்க போகாதே ஆபத்து'ன்னு எங்கிட்டே சொல்லிட்டு நீங்களே வந்து நிக்கறீங்களே?"

"இல்லை வஸந்த். எனக்கே 'ஏண்டா இந்தக் கிணத்து மேலே திடீர்னு இவ்வளவு பேருக்கு இன்ட்ரஸ்ட். நாம ஏதாவது பார்க்க மறந்துட்டோமோ? இன்னொரு தடவை எதையாவது விட்டுட்டேனான்னு பார்த்துறலாம்னு'தான் புறப்பட்டு வந்தேன்."

"ஏதாவது ஆராய்ச்சில விட்டுப் போயிருக்கா பார்த்தீங்களா?"

"ம்ஹூம். எனக்குத் தெரிஞ்சவரைக்கும் இங்க அவங்க எல்லாம் பறக்குறதுக்கு எதுவும் இல்லை."

"அதை ஏன் கேக்கறீங்க. இன்னிக்குக் காலையில் இங்க ஒரு ஸ்டாபிங் இன்ஸிடண்ட். ஒரு ஆள் எங்களை நோக்கி வந்தான். என்னமோ சொல்ல வந்தான். சொல்லி முடிக்கறதுக்குள்ள கத்திக் குத்து வாங்கிட்டுத் தொடரும்னு போட்டுட்டுப் போயிட்டான்."

"அய்யோ! செத்துட்டானா?"

"இல்லை. இன்னும் உயிர் இருக்கு. விளக்கு காத்தில துடிச்சுண்டு இருக்கு. இப்ப அவனைப் பார்த்து, 'யோவ் சொல்ல வந்ததைச் சரியாகச் சொல்லிட்டு அப்புறம் சாவகாசமா செத்துக்க'ன்னு விசாரிக்கத்தான் காஞ்சீபுரம் போய்க்கிட்டிருக் கோம். நீங்களும் கையோட புறப்பட்டு வந்துடுங்க. இந்த இடத்துல தனியா இருக்கறது நல்லதில்லை."

"கொலை வரைக்கும் போறாங்கன்னா விஷயம் பெரிய விஷயம்னு தோணுது."

பேராசிரியரும் இனியாவும் பின் சீட்டில் வீற்றிருக்க வஸந்த் ரியர் வியு மிர்ரரை அவள் மேல் சரிசெய்துகொண்டான். அவனருகே

கணேஷ்.

"ஸார்! இந்தக் கல்வெட்டுகளில் இந்த வட்டாரத்தில் ஏதாவது புதையல் இருக்கறதைப் பத்தி தகவல் இருக்கா?"

"ம்ஹூம். இல்லவே இல்லை."

"ஆர் யூ ஷ்யூர்?"

"நிச்சயம். நான் இந்த வட்டாரம் முழுக்க ஒண்ணு விடாம எல்லாத்தையும் பார்த்திருக்கேன்."

"விலை உயர்ந்த சிலை ஏதாவது இருக்க சான்ஸ் உண்டா கோயில்களில?"

"அதுக்கு ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்டைத்தான் கேக்கணும்."

"இன்ஸ்கிரிப்ஷன்ஸ்ல அதைப் பத்தி ஏதாவது மென்ஷன் இருக்கா?"

"இல்லை கணேஷ்! அது என்னவோ என்னைப் பல்லாவரத்துக்கு அழைச்சுட்டுப் போனவன்களையும் வீட்டுக்கு வந்தவன்களையும் பார்த்தா சரித்திரத்துக்கும் அவங்களுக்கும் ஸ்நான ப்ராப்தி கூட இல்லாதவங்க மாதிரிதான் தோணுது."

"ஆனா ராஜராஜன் கிணறுங்கற பேரு இவங்களுக்குத் தெரிஞ்சிருக்கே? உள்ளூர்க்காரர்களுக்கே தெரியலையே!"

"ஸார், அந்தக் கிணத்தின் அடியிலே ஒரு தங்க மாளிகைக்குச் சுரங்கப் பாதை ஏதாவது இருக்குமோ?"

"இறங்கிப் பார்த்துறேன்."

"அல்லது இப்படி இருக்குமோ" என்றான் கணேஷ்.

"எப்படி?"

தலையை ஆட்டி "ம்ஹூம்" என்றான். "இப்ப அதைப் பத்தி யோசிக்க வேண்டாம். முதலிலே அந்த ஆளைப் பார்த்து அவன் என்ன சொல்ல வந்தான்னு அறிஞ்சுக்கலாம். அதில்தான் இருக்கு க்ளூ."

"அந்தக் கட்டுரையிலும் இருக்கு பாஸ். அதுக்குத்தானே அந்தக் கோஷ்டியே அலைஞ்சுது."

"அந்தக் கட்டுரையைக் காப்பி வெச்சுக்கலை நான். மடத்தனம்!"

"குறிப்புகள் இருக்குமில்ல?"

"இருக்கு."

"அதை அப்புறம் கவனிக்கலாம்."

**கா**ஞ்சி நகரத்தின் கோபுரங்கள் தென்பட்டன. கரையோரமாகச் சென்ற பாதையில் தென்னை மரங்கள் விரைந்தன.

"ஆஸ்பத்திரி எங்க இருக்குன்னு விசாரிச்சுக்க வஸந்த்."

நெருக்கமான தெருக்களில் இருட்டு வீடுகளுக்குள் நெசவு ஜொலித்தது. பற்பல வடிவ பஸ்களில் பற்பல வடிவப் பிரயாணிகள் வரதராஜனையும் காமாட்சியையும் நோக்கி விரைந்தார்கள். "ஆவோ ஆவோ ஏ தேக்கோ வரதராஜ ஸ்வாமிகி மந்திர்" என்று தொந்தி குலுங்க ஓடினவர்களின் பின் வடக்கத்தி முகங்கள் விரைந்தன.

நெட்டையான மண்டபத்தின் அருகில் காரை நிறுத்தி வஸந்த் விசாரித்தான்.

"இப்படியே நேராப் போனீங்கன்னா டாக்கீஸ் வருங்க. அங்க போய் விசாரிச்சுக்குங்க."

"சரிதான்! எல்லாருக்கும் வழி காட்டின அண்ணா பிறந்த ஊர்ல இப்படியா வழி காட்றிங்க."

"வஸந்த், அங்க பார் ஒரு ஆம்புலன்ஸ் போறது. அதும் பின்னாலே போ."

ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு உரித்தான அத்தனை குணாதிசயங்களும் இருந்தன. காரிடாரில் நூறு பேர் உட்கார்ந்திருந்தார்கள். அல்லது படுத்திருந்தார்கள். டாக்டர்களைக் காணோம். ஸ்பெஷல் வார்டில் சிலர் குடும்பமே நடத்திக்கொண்டிருந்தார்கள். நர்ஸுகள் ட்யூட்டி மாறிக்கொண்டிருந்தார்கள்.

"காஷுவாலிடியே போ! இன்னும் பாரம் எழுதியே முடிச்சிருக்க மாட்டாங்க."

கணேஷ் அந்த போலீஸ் கான்ஸ்டபிளை அடையாளம் கண்டுகொண்டான். "இதோ இருக்காரே நம்ம 'அதுகூட சரிதான்."

"ஷ் . . ."

"வணக்கங்க. நம்மாளு அட்மிட் ஆயிட்டாரா?"

"இல்லை."

"ஏதாவது பேசினாரா?"

"இல்லை. போயிட்டாரு."

"என்னது!"

"ஷ்."

"வார்டு பாய் யாரையாவது கூப்பிடுங்க. பாடியை பி.எம்.முக்கு எடுத்துட்டுப் போகணும்."

கணேஷ் அந்த மூடியிருந்த உடலைப் பார்த்தான். ரத்தக் கறை தெரிந்தது.

"அன்னியனே! நீ என்ன சொல்ல வந்தாய்?'

"நீங்க ரெண்டு பேரும் இன்ஸ்பெக்டரைப் பார்த்துட்டுப் போயிருங்க. குத்தின ஆளு முகம் ஞாபகம் இருக்கா?"

"ஆளையே பார்க்கலைன்னுதானே சொன்னோம்."

"அங்க பார்த்ததாச் சொன்னீங்களே?"

"இல்லிங்க. சரியா ஞாபகப்படுத்திப் பாருங்க."

"என்னைப் போட்டுக் குளப்பறியா நீ! இன்ஸ்பெக்டர்கிட்ட நீங்க ஆளைப் பார்த்ததாகச் சொல்லிப் போட்டிருக்கேன்."

"அதுக்கு நாங்க என்ன பண்ண முடியும்?"

"அடப் போய்யா! அவர் கிட்டவே பதில் சொல்லிக்க."

அந்தச் சமயம் மற்றொருவன் உள்ளே நுழைந்தான். நடுத்தர வயதினனாக இருந்தான். சற்றுப் பதற்றத்துடன் காணப்பட்டான். "நாங்க கூட உக்கல் கிராமந்தாங்க. கேள்விப்பட்டதும் அடுத்த பஸ்ஸைப் புடிச்சு ஓடியாந்துட்டேன். எங்க அந்த ஆளு?"

"எவனைக் கேக்கறீக?"

"அதான் கத்திக் குத்துப் பட்டானே?"

"அது போயிடுச்சுங்க. அங்க பாருங்க பாடி."

"போய்ட்டானா?" புதியவன் சற்றுத் தயங்கி மூடியிருந்த அந்த உடலை அணுகினான்.

"பார்க்கலாங்களா?"

"தாராளமா."

"அட!" முகத்தை மூடியிருந்த வெள்ளைத் துணி விலக்கப்பட்ட சற்று நேரம் அந்தக் கருக்கத் தொடங்கிவிட்ட முகத்தைப் பச்சாதாபத்துடன் பார்த்துவிட்டு "மூடிடுங்க" என்றான். துண்டால் வாயைப் பொத்தியபடியே விலகினான்.

"காலைலதான் உயிரோட முழுசாப் பார்த்தேங்க."

"இந்தாளை உங்களுக்குத் தெரியுங்களா?" என்றான் வஸந்த்.

"தெரியாதுங்க. ரெண்டு மூணு நாளாத்தான் பழக்கம். வீட்ல வந்து யாரோ வந்தாங்களா வந்தாங்களான்னு விசாரிச்சுக்கிட்டே இருந்தாங்க."

"அவங்க வரத்துக்குள்ள இவன் போய்ட்டான்! ஆமா உங்க பேர் என்ன?"

"சதாசிவம்."

"அட நீங்கதானா அது?"

"நீங்கதானான்னா?"

"உங்களைத்தான் வந்து பார்க்கும்படியா சொல்லிகிட்டிருந்தாரு இந்த ஆளு, அதுக்குள்ள குத்திட்டாங்க."

"குத்தினது யாருன்னு தெரிஞ்சுதா?"

"எங்க? அவனை யாரு பார்த்தா?"

"நீங்கள்ளாம் யாரு?"

"பட்டணத்துக்காரங்க."

"என்னை வந்து பார்க்கும்படியா சொன்னானா? எதுக்கு?"

"அதை உங்ககிட்ட கேக்கலாம்னு இருந்தோம்."

"சரிதான் எனக்கும் ஒண்ணும் தெரியாது! நிலவரமே புரியலை. என்னமோ ஏதோ பேசி வெச்சுக்கிட்டு வெளியூர்க்கார பயலுவள்ளாம் ஊருக்குள்ளாற வந்திருக்கானுவன்னு நினைக்கிறேன். என்னமோ நடக்கப் போவுது! இவன் வெளியூர்க்காரன் மாதிரிதான் தெரியுது."

"உங்களுக்கு வேற ஒண்ணுமே தெரியாதுங்களா?"

"ம்ஹூம்."

கான்ஸ்டபிள் அவர்களிடம் வந்து "ஆளு யாருன்னு தெரிஞ்சு போச்சுன்னா பாதிக் கேஸ் முடிஞ்சுரும்! ஏதாவது விரோதமா இருக்கும்" என்றான்.

"நீங்க விசாரிங்க."

"பைக்குள்ற கடுதாசி கிடைச்சுது. அதில அட்ரஸ் இருக்கு. நீங்க எங்கேயும் போயிறாதீங்க. இன்ஸ்பெக்டர் வர்ற நேரம்."

"இருக்கங்க."

"அப்ப நான் வரட்டுங்களா" என்று சதாசிவம் கிளம்பினார்.

"இவரு யாரு சொல்லலிங்களே" என்றார் போலீஸ்காரர்

"அய்யா, நான் உக்கலுங்க. பெருமாள் கோயில் தெரு சதாசிவம்."

"ஓ, பார்த்திருக்கேன்."

"பயலைப் பாத்த முவமா இருந்தது. யாருன்னு கிட்டப் பார்த்தேன். உள்ளூர்க்காரனில்லிங்க."

"தெரியும்."

"வரேன். ஏதாவது தகவல் வேணுமின்னா சொல்லி அனுப்புங்க." சதாசிவம் புறப்பட கணேஷ் உடனே வஸந்த்தைத் தனியாக அழைத்து, "வஸந்த்! நான் கான்ஸ்டபிளைச் சமாளிச்சுக்கறேன். நீ அந்தாளைப் பின்தொடர்ந்து எங்க போறான், என்னென்ன பண்றான், எல்லாத்தியும் நோட் பண்ணிண்டு வந்து சொல்லு. க்விக்" என்றான்.

வஸந்த், "ஏட்டய்யா ஒரு நிமிஷம் சின்ன விஷயத்துக்காகப் போயிட்டு வந்துர்றேன்" என்றான்.

"நான் இங்கதான் இருக்கேன்" என்றான் கணேஷ்.

"அதுகூட சரிதான். போயிட்டு வாங்க!"

"இனியா, கொஞ்சம் இரு வந்துர்றேன்" என்று சொல்லிவிட்டு வஸந்த் வெளியே வந்தபோது அவன் மூலை திரும்பிக் கொண்டிருந்தான். சதாசிவத்தின் நடையில் ஒரு தீர்மானமும், குறிக்கோளும் தெரிந்தன. சந்நிதித் தெருவில் தொடர்ந்தான். நாமம் பிரதானமாக வாசலை அலங்கரித்த ஒரு வீட்டை அடைந்து கதவுச் சங்கிலியை ஓசைப்படுத்தித் திறந்ததும் சதாசிவம் உள்ளே சென்றான்.

# 10

சரிந்த கூரையின் மேல் சமீபத்தில் செல்வாக்கைக் கலந்து கட்டப்பட்ட வீடு அது. அதனுள் அந்த சதாசிவம் நுழைந்து உள்ளே சென்றதைப் பார்த்தான் வஸந்த். சற்று நேரம் திகைத்தான். உள்ளே சென்று பார்க்கலாமா? வேண்டாம். மற்றொரு ட்ரெஸ்பாஸ் வேண்டாம். காத்திருக்கலாம். உள்ளே போன ஆள் வெளியே வந்துதானே ஆக வேண்டும்.

வரவில்லை. முப்பது நிமிஷமாச்சு, நாற்பதாச்சு, ஒரு மணியாச்சு, ஆள் அட்ரஸே இல்லை. உள்ளே கரைந்துபோய் விட்டானா? எத்தனை நேரம் கிராமத்து வீதியில் இப்படி உலாத்துவது? எத்தனை நேரம் இப்படி ஸிகரெட் குடிப்பவன்போல் அலட்சியமாக நிற்பது? அவ்வப்போது ஆர்வ முகங்கள் யாரு வேணுங்க, யாரைப்பார்க்கறீங்க? என்று விசாரிக்கத் துவங்க வஸந்த் தீர்மானித்தான்.

கதவைத் தட்டினான். "யாரு?" என்று உள்ளே இருந்து சற்று வயதான குரல் கேட்டது. "மரகதம்! யாரு பாரு!"

ஈரக் கையைத் துடைத்துக்கொண்டு வந்த மரகதத்துக்கு முப்பது வயதிருக்கலாம். தேவைக்கு அதிகமான அளவு பொட்டு, உதட்டில் வெற்றிலை ரத்தம். உன்னிப்பாக வஸந்த்தைப் பார்த்து, புருவத்தால் "என்ன வேணும்?" என்றாள்.

"சதாசிவம் இங்கே வந்தாருங்களே அவரைக் கொஞ்சம் பார்க்கணும்."

"சதாசிவமா? அப்படி யாருமில்லை." அவள் ரேடியோ டிராமாவில் போல் அனாவசியத்துக்குச் சிரித்தாள்.

"கொஞ்ச நேரம் முன்னாடி இந்த வீட்டுக்குள்ள நுழைஞ்சாரே?" மறுபடி ரேடியோ டிராமா. "ம்ஹூம். யாரும் வரலிங்க." இப்போது சிரிப்பு அடக்க முடியாமல் வெடித்தது. வஸந்த் சற்று நேரம் தன்னை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தீர்மான மில்லாமல் திருதிரு என்று விழித்தான்.

“நீங்கதானே மரகதம்?”

“ஆம்மா.”

“கொஞ்சம் குடிக்கத் தண்ணி கிடைக்குமா?”

“கொண்டாரேன்.”

“அப்படியே எனக்குக் கை கால் முகம் கழுவிக்கணும்.”

அந்த ஆள் நிச்சயம் புறக்கடைப் பக்கம்தான் போயிருக்க வேண்டும்.

“அப்ப வாங்க பின்கட்டுப் பக்கம்.”

கிணற்றில் நீர் இறைத்துக்கொண்டிருந்த மரகதத்திடம், “உள்ளுக்குள்ள குரல் கேட்டுதே அது யாரு உங்கப்பாவா?” என்றான்.

இப்போ பள்ளிக்கூட மணி அடித்ததுபோல அவள் சிரித்தாள். “அப்பாவா? இல்லே; ஊட்டுக்காரரு.”

“அப்படியா ஸாரி. குரலைக் கேட்டா வயசான மாதிரி இருந்தது.”

“வயசானவர்தான்.” அவள் சிரிப்புக்கு விவஸ்தையே கிடையாதா? இதற்குக் கூடவா சிரிப்பார்கள்? வஸந்த் முகம் கழுவிக்கொள்கிறவன் போல் சுற்றும் முற்றும் பார்த்தான். தென்னை, வானம் பார்த்த கழிவறை, சொறி பிடித்த திட்டிக் கதவு. “இந்தக் கதவு எங்க போறதுங்க?”

“ஒட்டஞ் சந்துக்கு” – சிரிப்பு.

“சரி, தாங்க்ஸ். வரேங்க.”

“கொஞ்சம் இருங்க.”

“மரகதம், லொக்கு – லொக்கு, யாரது?”

“யாரோ குடிக்கத் தண்ணிகேக்க வந்தவங்க மாமோவ்.”

இப்போது அவள் குரலைத் தாழ்த்தி “சதாசிவம் வந்தாரு. சந்து வளியாப் போய்ட்டாரு” என்றாள். அவள் சிரிப்பதை நிறுத்தி விட்டாள். இந்தப் பக்கம் அந்தப் பக்கம் துருதுரு என்று கண்கள் அலைந்தன. “அப்பவே போயிட்டாரு. எல்லாம் திருடங்க.”

“என்ன சொல்றாரு அவரு?” என்றது முன் வீடு.

“ஒண்ணுமில்லை மாமோவ். நீங்க கிளம்புங்க. கிழம் மெள்ள எழுந்து வந்துரும்.” அவள் கண்களில் லேசான வருத்தம் தென்பட்டது.

“தாங்க்ஸ் மரகதம். நான் மறுபடியும் வாரன்.”

“வாங்க எல்லாம் சொல்றேன். இந்தாங்க கண்ணாடி!” அவன் வெய்யில் கண்ணாடியைத் திருப்பிக் கொடுக்கும்போது கை பட்டது.

"சரியான அராபியன் நைட்ஸ் அனுபவம் பாஸ்! கதவு திறக்கிறது. அடிமைப் பெண் ஜரீனா வரா."

"சதாசிவம் என்ன ஆனான் அதைச் சொல்லு முதல்லே."

"பின் வழியா ஜகா வாங்கிட்டாரு அவரு."

"அப்ப அவரு அவ்வளவு இன்னொஸண்ட் இல்லேன்னு தெரியுது. அவர் விலாசம் உக்கல் முதலியார் தெருவில் இருக்கு."

"ஒரு நடை போய்ப் பார்த்துட்டு வந்துடலாமே?"

"இல்லை. முதல்லே பேராசிரியரையும் மகளையும் பத்திரமா ஊருக்கு அனுப்பலாம். போலீஸ் கேஸ்லே அவங்களைப் போட்டுக் குழப்ப வேண்டாம். அப்புறம் எப்படியும் நாம மறுபடி உக்கல் திரும்ப வேண்டியிருக்கும். விசாரணை இன்னிக்கு முடியாது."

"மாட்டிக்கிட்டோம் பாஸ்"

"இல்லே. கேஸ் சுவாரஸ்யமா இருக்கு வஸந்த்! இவங்கள்ளாம் எதுக்காக இப்படி வெட்டுப் பழி குத்துப் பழியா அலையறாங்க. அதைக் கண்டுபிடிக்க வேண்டாமா?"

"ஹாய் வஸந்த்! எங்க ஆளு காணாமப் போயிட்டிங்க?" இனியா வந்தாள்.

"எல்லாம் பேராசிரியர் கிளப்பிவிட்ட வம்புனாலதான். ஸார், நீங்க என்ன பண்றீங்க சமத்தா மெட்றாஸ் போயி அந்த ஆராய்ச்சிக் குறிப்புக்களை சந்தேகத்துக்குச் சாம்பாரா இன்னொரு தடவை பார்த்துட்டு ஏதாவது புதையல் கிதையல் விட்டுப் போயிருக்கான்னு எங்களுக்குச் சொல்லுங்க. அதுக்குள்ள நானும் கணேஷும் இனியாவும் . . ."

"இனியா எதுக்கு?"

"சும்மா ஒரு பேச்சுத் துணைக்கு."

கணேஷ், "ஸார், அதெல்லாம் வேண்டாம். நீங்க உங்க டாட்டரை அழைச்சுண்டு போங்க. நாங்க மறுபடியும் மெட்ராஸ்ல வந்து சந்திக்கிறோம்" என்றான்.

"அப்ப பை! வஸந்த் உடம்பைப் பார்த்துக்குங்க. ராத்திரி வேளையில தனியா எங்கேயும் போகாதீங்க."

"போகலை இன்னி."

"ஸ்வெட்டர் போட்டுக்குங்க."

"போட்டுக்கிறேன் இன்னி."

"யோவ்! இன்னி என்னய்யா இன்னி!"

"ஓ! நீங்க இருக்கீங்களா மறந்துட்டேன் ஸார்!"

"இனியா! வஸந்த்கிட்ட சொல்லியாச்சா!"

"இல்லைப்பா" என்று சற்று ஹீனஸ்வரம் பேசினாள்.

"என்ன ?"

"இனியாவைப் பாக்க வராங்க."

"யாரு ?"

"பையன் அமெரிக்காவில ரிஸர்ச் பண்றான். லீவ்லே வரான். நாளைக்கு வந்து பார்க்கப் போறான்."

"அப்படியா? சந்தோஷம்!" என்றான் வஸந்த் சந்தோஷம் இல்லாமல்.

"சும்மா பார்க்கத்தான் வராங்க வஸந்த்."

"நீ என்ன சுற்றுலா பொருட்காட்சியா ?"

"பார்த்துட்டுப் பிடிச்சிருந்தா மேரேஜ் செட்டில் ஆயிடும்."

"எவ்வளவு தூரத்துக்குப் போயிடுமா ?"

"ஏன் ?"

"ஸார், உள்ளூர்ல மாப்பிள்ளை கிடைக்கலியா ?"

"தங்கமான பையனாம்பா."

"ஏன் லோகல் தங்கம் உதவாதோ ?"

"வஸந்த். அப்புறம் பார்க்கலாம்" என்றாள் இனியா.

"எப்ப? ரிஸப்ஷன் போதா ?"

"வா, இனியா."

அவர்கள் சென்றதும் வஸந்த் ஒரு ஒதெல்லோ பெருமூச்சு விட்டு, "அமெரிக்காவில இருக்கிற ஆசாமி பேசாம அமெரிக்காவிலேயே ஒரு வெள்ளைக்காரியைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே? எதுக்காக பெஸண்ட் நகர் வரணும்? அநியாயம்" என்றான்.

"கவலைப்படாதே வஸந்த். இனியா கடைசியா உன்னைப் பார்த்த பார்வையில நம்பிக்கை இருந்தது."

"சான்ஸே இல்லே பாஸ். ஹூம், நம்ம கேஸைப் பார்க்கலாம் வாங்க."

"இறந்துபோன அந்தாளு யாருன்னு கண்டுபிடிச்சுட்டோம் மிஸ்டர் கணேஷ்" என்று இன்ஸ்பெக்டர் அவர்கள் அருகே வந்தார். "சர்க்கார் உத்தியோகஸ்தர்."

"அப்படியா!"

"கூழமந்தல்ல ஒரு கோயில் இருக்குது. அதில ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்ட் காவல்காரன். பேரு செல்வமாணிக்கம்."

"அவன் கொலை செய்யப்பட்டதுக்குக் காரணம் என்னன்னு நீங்க நினைக்கிறீங்க?"

"சொல்ல முடியலீங்க. ஏதாவது நிலத் தகராறு இருக்கலாம்."

"இன்ஸ்பெக்டர்! சமீபத்தில் உக்கல் கிராமத்தில் வெளியூர் ஆசாமிங்க நடமாட்டம் அதிகமாயிருந்ததா?"

"இல்லீங்களே."

"பழுப்பு நிறத்திலே ஒரு வான், மெட்றாஸ் வண்டி, வந்ததா ஞாபகம் இருக்குங்களா?"

"இல்லையே! ஏன்?"

"எனக்கென்னவோ இது நிலத் தகராறாத் தெரியலை."

"வேறென்ன?"

"அதான் தெரியலை. எதுக்கும் நாங்க நடந்ததை ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுத்துடறோம். நீங்க எஃப்.ஐ.ஆர். தயாரிங்க; உங்களுக்கு முழு ஒத்துழைப்பும் தரோம். நீங்க எப்ப திரும்பிப் போகலாம்னு சொல்றீங்களோ அப்பப் போறோம். சரிதானே?"

"சரிதாங்க. எஸ்.பி. வருவாரு. அவரைப் பார்த்துப் பேசிட்டுப் போய்டலாம். நீங்க திரும்பியும் கிராமத்துக்குத்தானே போறீங்க?"

"ஆமாங்க. கார்ல போறோம். நீங்களும் எங்க கூட வர்ரீங்களா?"

"இல்லீங்க! நீங்க போங்க. எனக்கு ஏகப்பட்ட சோலி கிடக்குது."

"என்ன வஸந்த், பேச்சே இல்லை!"

"ப்ச்! லவ் இஸ் எ மித்னு சும்மாவா சொன்னான்? அமெரிக்காவில இருந்து வர ப்ளேன் புறப்படறப்பவே டயர் பர்ஸ்ட்டாகி வெடிச்சு 'என்னடாது கிளம்பறப்பவே அபசகுனமா இருக்கே'ன்னு அந்த ஆசாமி என்ன மண்ணாங்கட்டி ரிசர்ச் பண்றானோ? அவன் பேசாமத் திரும்பிப் போயிட்டான்னா . . ."

கணேஷ் சிரித்து, "பரவாயில்லை. ப்ளேனைக் கவுக்காம டயர் பர்ஸ்ட்டோட நிறுத்தினியே! வஸந்த்! கவலைப்படாதே! இனியா இந்தப் பையனைப் பிடிக்கலேன்னு சொல்லிடுவா பாரேன்" என்றான்.

"நீங்க அப்படி நினைக்கிறிங்களா பாஸ்?"

"மேலும் இந்த ராஜராஜன் கிணறு மர்மத்தைக் கண்டுபிடிச்சா பேராசிரியர் உன் மேல படு இம்ப்ரெஸ் ஆகி கொண்டு வா கையைன்னு பொண்ணைக் குடுத்துடுவார்."

"ஐஸ் ஃபாக்டரியையே வெக்கறிங்க."

"அப்படியா இந்த இனியா இல்லைன்னாலும் மெட்ராஸ்ல வேற பெண்களே இல்லையா?"

"இல்லை பாஸ். தப்பித் தவறிப் போய் ஒருத்தி என்னை லவ் பண்ண ஆரம்பிச்சா. அது என்னடான்னா டீரெய்ல் ஆய்டும் போல இருக்கு. இனியா! இனியா! பாஸ்! படக்குன்னு மெட்ராஸ்

போயி சின்னதா ஒரு காந்தர்வ விவாகம் பண்ணிண்டு வந்துறவா?"

"பொறு மகனே. இந்த விவகாரத்தை முடிச்சுட்டு அப்புறம் உன் காதலைக் கவனிக்கலாம்."

"சொல்லிட்டிங்க. அது போதும்."

"இப்ப உக்கலுக்குப் போய் முதல்லே அந்த சதாசிவத்தை விசாரிக்கலாம்."

"கலாம்! வாங்க."

**ச**தாசிவத்தின் வீடு சற்றுப் பிரதானமாக இருந்தது. வாசலில் சதுரமாகக் கொஞ்சம் தெருவில் ஆக்ரமித்து சிமெண்ட் போடப் பட்டிருந்தது. ஈட்டி ஈட்டியாகக் கம்பிக் குத்துகளுக்குப் பின் திண்ணை, மரக் கதவு, பிறையில் கார்த்திகைக் கருப்பு.

"வாங்க உங்களை ஒருவிதத்துல எதிர்பார்த்துக்கிட்டுத்தான் இருந்தேன்."

"அப்படியா? எந்த விதத்திலே?"

"அ, சும்மா பாசாங்கு பண்ணாதீங்க. ஆஸ்பத்திரி சந்தடியிலே உங்ககூட அதிகம் பேச முடியலே. போலீஸ் வேற இருந்தாங்க. அதனால கண்டுக்காம வந்துட்டேன். கொஞ்சம் வரிங்களா?"

உள்ளே குளுமையாக இருந்தது. சகல வசதிகளும் இருந்தன.

"டெலிவிஷன் இங்கே தெரியுதுங்களா?"

"ஏன் கேக்கறிங்க! சவுண்டு வந்தா படம் வரதில்லை; படம் வந்தா சவுண்டு இல்லை. எப்பனாச்சியும் ரெண்டும் தெரிஞ்சா விவசாயம் காட்டறாங்க" என்று செயற்கையாக சிரித்து "என்ன சாப்பிடறிங்க?" என்றான்.

"ஒண்ணும் வேண்டாங்க."

"அப்ப வந்த காரியத்தைப் பளிச்சுன்னு சொல்லிப் போடுங்க."

"நீங்கதான் சொல்லணும்."

"எத்தினி தருவிங்க?"

"பொருளைப் பார்க்காம எப்படி!"

"கைவசம் ஒண்ணுதான் வந்திருக்கு."

"முதல்ல அதைப் பத்தி பேசலாம்" என்றான் கணேஷ்.

"கொஞ்சம் இருங்க, வாசக் கதவைத் தாப்பாப் போட்டுட்டு வந்துடறேன்."

அவன் செல்லக் கணேஷும் வஸந்தும் பார்த்துக் கொண்டார்கள்.

“என்ன பாஸ் சொல்றேள்” என்று வஸந்த் சைகையில் கேட்க,

“வெயிட்! பார்க்கலாம்” என்று கணேஷ் கையமர்த்திக் காட்டினான்.

திரும்பி வந்த சதாசிவம் மரத் தூண்களைச் சுற்றிச் சென்று ஓரத்தில் இருந்த மரக் கதவைத் திறந்து அதன் இருட்டுக்குள் மறைந்தான்.

சற்று நேரத்தில் பழுப்பு காகிதத்தில் சுற்றப்பட்ட ஒரு என்னவோவுடன் திரும்பினான்.

சுமார் மூன்றடி இருந்தது. கச்சாவாக சணல் கயிற்றில் கட்டியிருந்தது. அதை மேசை மேல் வைத்து மெல்லக் கயிற்றைப் பிரித்தான். “இது எங்கிட்ட இருக்கிறது யாருக்கும் தெரியாது. இரண்டு நாளிலே கை மாறிடும். டெம்பரரியாகத்தான் நம்ம கைல வந்திருக்கு.”

“புரியுது” என்றான் கணேஷ் புரியாமல்.

சணல் கயிற்றை அகற்றி அகற்றி அவன் அந்த பழுப்பு காகிதத்தைப் பிரிக்கும் நிலையில் வாசலில் கதவு தடதடக்கப்படும் சப்தம் கேட்டது.

உடன் “சதாசிவம்! சதாசிவம்! கதவைத் திற, சீக்கிரம் கதவைத் திற” என்ற அதட்டல் கேட்டது.

“பாவி வந்துட்டானே! இப்ப என்ன செய்வேன்! என்று சதாசிவம் அந்தப் பொருளை ஒரே அள்ளாக அள்ளி அணைத்துக் கொண்டு “நீங்க என்ன செய்யறிங்க, அந்த ரூம்ல கொஞ்ச நேரம் போய் இருங்க. நான் அவனை அனுப்பிச்சுட்டு வந்துர்றேன்” என்று அவர்கள் பதிலுக்குக் காத்திராமல் இருவரையும் அந்த சிறிய அறைக்குள் தள்ளி கதவைத் தாளிட்டான்.

# 11

அவசரத்துக்கு அனுப்பப்பட்ட அறை இருட்டாக இருந்தது. மேலேயிருந்து ஒரே ஒரு கண்ணாடி ஓடு தயவு செய்ததில் கிடைத்த வெளிச்சத்தில் வஸந்த் கணேஷைப் பார்த்தான். கணேஷ் சுற்றிலும் பார்த்தான். பிற்பகலில் பாதி ராத்திரி. இருந்தும் சில பொருட்களின் வடிவங்கள் தெரிந்தன. பழங்காலத்து மர பீரோ, அதனருகில் ரிட்டையரான கட்டில், கட்டிலின் மேல் கட்டிலுக்குச் சம்பந்தமில்லாத சாமான்கள். உதாரணமாகப் புத்தகங்கள், சோப்பு டப்பா, காய்ந்த மாலை, மோட்டாரின் உதிரி பாகங்கள், இப்படி.

கட்டிலுக்கு அருகே இருட்டு விளிம்பில் ஒரு மகத்தான இரும்புப் பெட்டி தெரிந்தது.

"என்ன பாஸ்?"

"வெளியே அந்தாளு பேசறது கேக்கறதா பாரு."

வஸந்த் காதைத் தீட்டிக்கொண்டு கதவின் மேல் வைத்துக் கேட்டான்.

"ராத்திரிக்குள்ள வந்து வாங்கிட்டுப் போறதாச் சொன்னாங்க. அவங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கேன்."

"பத்திரமா வெச்சிருக்கல்ல?"

"ரொம்பப் பத்திரமா."

"பிரிச்சும் பாத்தியா?"

"நான் ஏங்க பிரிக்கறேன்? நான் ஒரு போஸ்ட் ஆபீஸ் மாதிரி தானே! ஹி!ஹி!"

"சிரிக்காதே, நல்லால்லே."

"என்னடா பேசறாங்க?"

"அந்தப் பார்சலைப் பத்தித்தான் பாஸ். சதாசிவம் பிஸியா பொய் சொல்லிக்கிட்டிருந்தாரு."

"என்னவாம்?"

"பிரிக்கவே இல்லையாம்."

"அது என்ன பாத்தியா வஸந்த்?"

"புதுக் கவிதை மாதிரி ஒரு வடிவமற்ற சமாச்சாரம் பாஸ்."

"அவன் அதைத் தூக்கறபோது கொஞ்சம் கஷ்டப்பட்டான்."

"கவனிச்சேன் பாஸ்! என்ன கொஞ்ச நாழியா சந்தடியே இல்லை? ஆசாமி நம்மை வெச்சுப் பூட்டிட்டுக் காப்பி சாப்பிடப் போய்ட்டானா?"

"திறந்து பாரு!"

வஸந்த் கதவைத் திறக்க முயன்று பார்த்தான். "வெளியே தாப்பாப் போட்டிருக்கு பாஸ்."

"வெளியே சந்தடி ஏதாவது?"

"இல்லை."

"அப்ப உலுக்கிப் பாரு."

வஸந்துக்குக் கதவை உலுக்கச் சந்தர்ப்பம் இல்லாமல் திறக்கப்பட்டது.

"என்னங்க அடைச்சு வச்சுட்டுக் காணாம போய்ட்டீங்க."

"மன்னிச்சுக்குங்க."

"கொஞ்சம் நெருக்கடியாய்டுச்சு. அந்த ஆசாமிக்கு நீங்க இங்க வந்தது தெரியக்கூடாது."

"அந்தாளு யாரு?"

"தெரியாதது போலக் கேக்கறிங்க! அவனும் உங்களை மாதிரி விசாரிக்க வந்த ஆளுதான்."

"அப்படியா? இப்ப நீங்க பொருளைக் காட்டறிங்களா."

"நீங்க விலையைச் சொல்லுங்க. அப்புறம் பார்க்கலாம்."

கணேஷ் வஸந்த்தைப் பார்த்தான். "எவ்வளவு கேக்கலாம் வஸந்த்?"

"பத்து கேக்கலாம்! அதுவரைக்கும்தான் பாஸ் நமக்கு அனுமதி இருக்கு!"

சதாசிவம் சிரித்து, "பத்துக்கு விரல் கூட வராதுங்க!" என்றான்.

"நீங்க எவ்வளவுதான் சொல்றீங்க?" என்றான் கணேஷ்.

"மினிமம் நாப்பத்தஞ்சுக்குக் குறையாதுங்க."

"அடேயப்பா! கட்டுப்படியாகாதுங்க! பாஸ் வாங்க போகலாம்."

"இரு வஸந்த். ஏங்க நீங்க நாப்பத்தஞ்சு கேக்கறது இதுக்கு மட்டுமா இல்லை..."

"இதுக்கு மட்டும்தான். மத்தது கிடைச்சா நான் ஏன் இங்கே சிங்கியடிச்சிக்கிட்டிருக்கேன்!"

"வாஸ்தவம்தான். ஆனா, பொருளைப் பாக்காததுக்கு முன்னாடி

எங்களாலே தீர்மானிக்க முடியாதுங்க. கொஞ்சம் காட்டறீங்களா?"

அவன் சற்று யோசித்ததாகப் பட்டது. "கொஞ்சம் இருங்க. பழயபடி எடுத்தாறேன்" என்று அந்த வீட்டின் பின்புறத்துக்குச் சென்றான்.

இடைத்த தனிமையில் வஸந்த், "பாஸ்! அத்தரதையா கதை, வசனம், நடிப்பு எதுவுமே புரியலை. ஸாம்யுவெல் பெக்கட் டிராமா போல இருக்கு" என்றான்.

"எனக்குப் புரியலைதான் வஸந்த்! அவன் எதையோ விக்க விரும்பறான். எதை? தெரியலை. ஆனா, ஒரு விதமா பேரம் பேசி யாரு ஜாஸ்தி ஆஃபர் பண்றாங்களோ அவங்களுக்குத் தரதா அவசரமா பேச்சு வார்த்தை நடத்திக்கிட்டிருக்கான்னு தெரியுது. இவனைப் பார்த்தா ஏதோ மிடில்மேன்னு தெரியுது."

"எல்லாம் சரிதான். விக்கிற மால் என்ன?"

"ஆஸ்க் மி அனதர்."

"வரான்."

வந்தவன் கையில் அந்தப் பார்ஸல் இல்லை. "காட்டறதுக்கு முன்னாடி ஒரு சின்ன விஷயங்க."

"என்ன விஷயங்க?"

"நாப்பத்தஞ்சுக்கு நீங்க சம்மதிக்கிறீங்களா?"

"அப்படித்தான் வெச்சுக்கங்களேன்."

"அதுக்கு முன் பணமா கொஞ்சம் வெக்கறீங்களா?"

"எவ்வளவு வேணும்?"

"ஒரு பத்து பதினஞ்சு."

"சரிதான்" என்று வஸந்த் கணேஷைப் பார்த்தான். கணேஷ், "அவ்வளவு பணத்துக்கு நாங்க இன்னும் தயாரா வல்லிங்க."

சதாசிவத்தின் முகம் சுருங்கியது. "அப்ப நாப்பத்தஞ்சு எப்படிப் புரட்டப் போறிங்க?"

"உங்களுக்கு எப்பத்துக்குள்ள பணம் வேணும்?"

"சாயங்காலம் நாலு மணிக்குள்ள வேணும். அதுக்கப்புறம் பொருள் கை மாறிடுது."

"சாயங்காலத்துக்குள்ள ஏற்பாடு பண்ணிடறோம். பொருளைக் கொஞ்சம் காட்டுங்களேன்."

"இல்லிங்க. முன் பண உத்திரவாதம் இல்லாமல் காட்டற தில்லிங்க."

"அப்ப எங்க மேலே நம்பிக்கை இல்லிங்களா?"

"இல்லிங்க. பச்சை நோட்டைப் பார்த்தாத்தான் நம்பிக்கை வரும். ஏற்கனவே ஒரு கொலை விளுந்துபோச்சு! நீங்க போங்க. முளுப் பணமும் கொண்டு வாங்க. அப்புறம் நல்லாப் பாத்துக்கங்க."

"அப்ப காட்ட மாட்டிங்க."

"ம்ஹூம்."

"சரி, வா வஸந்த் போகலாம்."

இருவரும் வெளியே வந்தபோது தெருவில் சூரியச் சரிவின் நிழல்கள் நீளத் துவங்கியிருந்தன. கணேஷ் அவனிடம் விடை பெறும்போது "இன்னும் ஒரு மணி நேரத்தில் வரோம்க. வீட்டில இருப்பீங்க இல்ல?" என்றான்.

"தாராளமா! நான் எங்கேயும் போறதில்லை."

காரில் வஸந்த், "ஏம் பாஸ் நேரா போலீஸுக்குப் போய், 'இந்த வீட்டில் நிழலா ஏதோ வியாபாரம் நடக்குது'ன்னு சொல்லி ரெய்டு பண்ணச் சொல்லிட்டா என்ன?" என்று கேட்டான்.

"இல்லை வஸந்த்! ஆளு உஷாராயிடுவான். அவங்க என்ன விக்கறாங்கன்னு முதல்லே தெரிஞ்சுக்கணும்."

"எப்படி?"

"நாம மறுபடி அங்க போகணும்."

"நாப்பத்தஞ்சாயிரம் ரூபாயோடயா? என்ன விளையாடறீங்களா?"

"இல்லை. பணம் இல்லாம!"

"புரியலை."

"வஸந்த்! இந்த மாதிரி பழைய வீடுகள் எல்லாம் பின்பக்கம் சுவர் அதிக உயரமா இருக்காது இல்ல?"

"இப்பப் புரியுது. பின்பக்கமா சந்து வழியாப் போயி சுவரேறிக் குதிச்சு உள்ளே போய் . . . அப்புறம் என்ன?"

"அங்க ஏதாவது மாட்டுக் கொட்டகையில் மறைஞ்சிருந்து . ."

"பட்டப் பகல்லயா? யாராவது பார்த்தா முட்டியைப் பேத்துடுவாங்க."

"பாக்காம உன்னால இதைச் செய்ய முடியும்?"

"வெய்ட் எ மினிட்! உன்னாலன்னா? நீங்க கழண்டுக்கறீங்களா?"

"ஆமாம். நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் ஸ்டேட்

மெண்ட் கொடுக்கறேன். இன்ஸ்பெக்டர் காத்துக்கிட்டிருப்பாரு. நீ என்ன பண்றே ...”

“முடியாது பாஸ்! மாட்டுத் தொட்டியெல்லாம் சுவரேறிக் குதிக்க முடியாது. இந்தக் கள்ளபார்ட் வேலையெல்லாம் நம் கைல ஆவறதில்ல”

“நான் சொல்றதை முழுக்கக் கேளு. நீ ஒண்ணும் பெரிசா ஏதும் செய்ய வேண்டாம். பின் பக்கமாப் போய்ப் பாரு. சந்து வழியா மேலேயும் கீழேயும் நட. யாரும் பார்க்காம ஏதாவது சான்ஸ் கிடைச்சதுன்னா ட்ரை பண்ணிப் பாரு. இல்லை என்னால முடியலைன்னு திரும்பி வந்துடு. உன் பலம் உனக்குத் தெரியாதுடா!”

“அய்யோ உங்களோட பெரிய ரோதனையாப் போச்சு. பேசாம மெட்றாஸ்ல இந்நேரம் ஒரு பீர் சாப்ட்டுண்டு இருப்பேன். அதுக்குப் பதிலா இங்க வந்து, சாணி மாட்டையெல்லாம் ...”

“ஜஸ்ட் ட்ரை மேன்! ஏதாவது ஆபத்துன்னா ஓடி வந்துடு.”

வஸந்த் முனகிக்கொண்டே தெரு முனையில் இறங்கிக் கொண்டான்.

பெட்டிக் கடையில் ஒரு வில்ஸ் ஃபில்டர் பற்ற வைத்துக் கொண்டான். கோயிலுக்குக் கிளம்பிக்கொண்டிருந்த ஒரு பாவாடை தாவணியை அதன் பின்னல் ஆடுவதை முக்கு திரும்பும் வரை கவனித்தான், சிகரெட்டை மிதித்துவிட்டு நடந்தான். ஏரோப்ளேன் பாண்டியைக் கடந்தான். “அம்மா பால்”லைக் கடந்தான். குறுக்கே ஓடின சிறார்களைத் தவிர்த்துத் தெரு முனைக்கு வந்தான். பலமாக யோசித்தான்.

கணேஷுக்கு வேண்டியது என்ன? அந்தக் காகிதப் பார்சலில் என்ன வைத்திருக்கிறான்? அந்த சதாசிவம் என்ன விற்கிறான்? அந்தத் தகவல்தானே? அதைக் கண்டுபிடிக்க எதற்குச் சுவரேறிக் குதிக்க வேண்டும்? வேறு வழி இல்லையா? யோசி வஸந்த்!

ஆ! இப்படிச் செய்தால் என்ன?

டேய் வஸந்த்! என்னா மூளைடா உனக்கு! இந்த சிம்பிள் ஐடியா அப்பவே தெரியாமப் போச்சே! ப்ரில்லியண்ட்! சின்ன வயசில் சாப்பிட்ட காட் லிவர் ஆயில் எல்லாம் இப்பத்தான் வேலை செய்யுது!

வஸந்த் தீர்மானித்து நேராக அந்த சதாசிவத்தின் வீட்டை நோக்கி நடந்தான். முன்புறமாகத்தான்! மறுபடி அங்கே சென்று கதவைத் தட்டினான். பதில் இல்லை.

சற்று அழுத்தமாகத் தட்டி, “சதாசிவம்! சதாசிவம்!” என்று கூப்பிட்டான்.

பதில் இல்லை. ஆசாமி கொல்லைப் பக்கம் போயிருக்கானா

என்ன! ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். உள்ளே நிசப்தமாக இருந்தது. ஏதோ நகர்த்தப்படும் சப்தம் கேட்டது.

"சதாசிவம்!"

ம்ஹூம்.

என்னடாது! கொல்லைப் பக்கம்தான் போயிருப்பான். கதவைச் சற்றுப் பலமாகத் தட்டலாம்.

தட்டினான். அந்த மரக் கதவு முனகலுடன் திறந்துகொண்டது. உள்ளே அடியெடுத்து வைத்தான். வஸந்த்தின் நடு முதுகில் குறுகுறுவென்று பூரான் ஓடியதுபோல் உணர்ந்தான்.

"ஹலோ! சதாசிவம் எங்க இருக்கீங்க? வாசக் கதவைத் திறந்து வெச்சிட்டு எங்க போயிட்டீங்க?"

வஸந்த் தயக்கத்துடன் உள்ளே நடந்தான். பின்கட்டில் ஏதோ சப்தம் கேட்டது. சரிதான் அங்கேதான் இருக்கான் போலிருக்கிறது. என்ன செய்யலாம்? காத்திருக்கலாம். வந்துவிடுவான். வரட்டும், வரட்டும். வந்தவுடன் என்ன சொல்லலாம்? "என்னங்க பணம் கொண்டு வந்தீங்களா"ன்னு கேட்பான். "ஓ! கொண்டு வந்திருக்கேனே" "எடுங்க" "நீங்க பொருளைக் கொண்டு வந்து மேசை மேலே வைங்க. நான் பணத்தைக் காட்டறேன். நீங்க பொருளைக் காட்டுங்க." அவன் அதைக் கொண்டு வந்து மேசை மேலே வைப்பான். பைக்குள்ளிருந்து பணத்தை எடுப்பது போல் பாவித்து சரேல் என்று சற்றும் எதிர்பாராத விதமாக 'சுடான் சுக்கி' கராத்தே வெட்டு, சதாசிவம் தன் தாயாரைக் கூப்பிட்டுவிட்டு அப்படியே குப்பையாக 'கரபூம்' என்று விழுந்து விடுவான். உடனே பார்சலைப் பிரித்து அதற்குள் என்ன இருக்கிறது என்று . . . என்னது; பிரம்ம கவசமாக இருக்கிறதே! ஆளையே காணோமே. வஸந்த் சுற்றிலும் பார்த்தான். இரண்டு கை நீட்டின சாய்வு நாற்காலி, மீன் எம்ப்ராய்டரி போட்டு மூடப்பட்ட ரேடியோ, அனாவசிய டெலிவிஷன், ஓரத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மூட்டைகள், உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டரின் காலாவதியான காலண்டர், கண்ணாடி பீரோ, தரையில் ஒரே ஒரு செருப்பு! வஸந்த் இப்போது கீழே தண்ணீர் கசிவதைப் பார்த்தான். ஓரத்தில் பானை உருண்டு கிடந்ததையும் அதிலிருந்து இன்னும் சொட்சொட்டையும் பார்த்தான். கண்ணாடி தம்ளர் உடைந்து சிதறி இருந்ததைப் பார்த்தான்.

"சதாசிவம்" என்று மறுபடியும் கூப்பிட்டுப் பார்த்தான். பதில் கிடைக்காமல் மெல்ல வீட்டின் பிற்பகுதிக்குச் சென்றான். "யாரும் இல்லையா?" "யாரும் இல்லையா?"

ணங் என்று நெற்றியில் இடித்தது நிலைப்படி. தேய்த்துக் கொண்டு குனிந்துகொண்டு நடந்தான். கிணறு தெரிந்தது. பின்கட்டின் வெட்ட வெளி தெரிந்தது. மரத் தொட்டி. சந்துக்குச்

செல்லும் கதவு திறந்திருந்தது. அதன் வாசலில் பாதியாக கால் தெரிந்தது. வஸந்த் திடுக்கிட்டான். சதாசிவத்தின் வேட்டி தனியாகக் கிடக்க, பட்டை பட்டை டிராயரில் படுத்திருந்த மாதிரி, பாதி உள்ளே – பாதி வெளியே அவன் கிடந்தான்.

வஸந்த் ஓடிப்போய் அவனருகில் சென்று குனிந்து "ஓ மை காட்!" என்றான்.

சதாசிவத்தின் கடைவாயின் ஓரத்தில் புதிய ரத்தம் இன்னும் சிந்திக்கொண்டிருந்தது. வாய் திறந்திருந்தது. "அடப்பாவி! ஆள் அவுட்டா?" வஸந்த் அவன் கையைத் தூக்கி பல்ஸ் பிடித்துப் பார்த்தான். இருப்பதாகத் தெரியவில்லை. மார்பில் காது வைத்துப் பார்த்தான். ஒரு மைல் தூரத்தில் இதயம் கேட்டது. "அய்யய்யோ! இப்ப என்ன செய்வேன்?" சதாசிவத்தின் முகம் முழுதும் வீங்கியிருந்தது. அங்கங்கே கன்னிப்போயிருந்தது. பல்லோ ஏதோ எகிறிப் போயிருக்க வேண்டும். ரத்தத்தின் வெற்றிலை பாக்குப் போட்டாற்போல இன்னும் சிந்திக்கொண்டிருந்தான். "சதாசிவம் யோவ்! சதாசிவம் என்னய்யா ஆச்சு உனக்குப் போய்ட்டியா?" பதில் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. தூக்கலாம்? என்ன எழவுடா இது. சரியான சமயம் பார்த்து பாஸ் கழண்டுட்டார். நம்ம கைல பாடியை ஒப்படைச்சுட்டு. என்ன இது! இந்தக் கேஸை ஆரம்பிச்சதிலிருந்தே மூலைக்கு மூலை ... இது என்ன? கீழே ஏதோ கறுப்பாக இருந்தது. எடுத்துப் பார்த்தான். இன்ச் அகலத்துக்குப் பாசி பிடித்தாற்போல கரும் பச்சையாக.. என்ன என்று பார்க்க நேரமில்லை. பைக்குள் போட்டுக்கொண்டான்.

வெளியே ஓடி வந்தான். கிரஸின் கைவண்டிக்குப் பின் சிலர் துரத்திக்கொண்டிருந்தார்கள். "யோவ்! வாங்கய்யா; வாங்கய்யா. ஆளு அடிபட்டிருக்காரு."

"எங்க எங்க?"

அவர்களில் சிலரைச் சேகரித்துக்கொண்டு உள்ளே ஓடினான் வஸந்த்.

# 12

"என்னங்க? மறுபடி கொண்டு வந்துட்டிங்களா? ஆளு பொளைச்சுட்டானா!"

"இல்லை டாக்டர்! இது வேற கேஸு!"

"அட? என்ன ஆயிட்டிருக்கு இந்த ஊர்ல! ஒரு நாள்ள ரெண்டு கொலையா?"

"டாக்டர் இந்த ஆள் பொழைக்க சான்ஸ் இருக்குன்னு நினைக்கிறேன். தயவுசெஞ்சு சீக்கிரம் ஏதாவது சிகிச்சை பண்ணுங்கன்னா!"

"நான் என்னால முடிஞ்சதைச் செய்கிறேன் மிஸ்டர்! எனக்கு இருக்கிற வசதிகளை வெச்சுக்கிட்டு இத பாருங்க ஸாவ்லான் இன்டெண்ட் பண்ணி மூணு மாசம் ஆச்சு!"

"ஆமாங்க. இந்த மாதிரி வசதி குறைஞ்ச இடங்களில் வேலை செய்யறது ரொம்பக் கஷ்டந்தான் டாக்டர். உங்க மாதிரி ஆளுங்கதான் நிஜமாவே சமூக சேவை செய்யறீங்க."

பேசிக்கொண்டே சதாசிவத்தின் காயங்களைக் கவனித்து டாக்டர் ஒவ்வொன்றாகத் துடைத்துக்கொண்டே வந்தார்.

"மண்டைல பலமா நெத்தியிருக்காங்க. அதான் மயக்கத்தில இருக்கார். கொஞ்ச நேரத்தில மயக்கம் தெளிஞ்சுடுவார். ச்ச்ச் அடாடாடா என்னமா அடிச்சுப் போட்டிருக்காங்க. யார்யா இப்படி அடிச்சது?"

இன்ஸ்பெக்டர், "அது தெரிஞ்சாத்தான் பரவாயில்லையே" என்று வஸந்த்தைப் பார்த்தார்.

"என்ன என்னைப் பாக்கறீங்க. நான்தான் நடந்தது பூரா சொல்லிட்டேனே."

கணேஷ் யோசனையில் இருந்தான்.

"பாஸ், உங்களைத்தான் கேக்கறார் ஸார்."

"என்ன?"

"காலைல கத்திக்குத்து, சாயங்காலம் கையடி. இந்தக் கிராமத்தில ஒரு வருசத்துக்கு உண்டான குத்தங்கள் ஒரு நாள்ள நடந்துபோச்சு. இதான் கடைசியா? இன்னும் பாக்கியிருக்கா?"

"தெரியலிங்க. அந்தாள் பிழைச்சுடுவாரு. அவருக்கு மயக்கம் தெளிஞ்சதும் கேட்டுப் பார்க்கலாம்." வஸந்த் ஒரு சிந்தனை; சிகரெட் பற்ற வைத்துக்கொள்ள கணேஷுடன் வெளியே வந்தான்.

"என்ன பாஸ்? பேசவே இல்லை!"

"நீதான் பேசணும், நீதானே பாத்தே எல்லாத்தையும்!"

"நான் பாத்தது அடிதடி முடிஞ்சதுக்கப்புறம் பாஸ்."

"நான் சொன்ன மாதிரி புறக்கடைப் பக்கமா போய் எட்டிப் பார்த்திருந்தா அடிச்ச பார்ட்டி யாருன்னு தெரிஞ்சிருக்கும் இந்நேரத்துக்கு. நீயா ப்ளானை மாத்தி .."

"போறது விடுங்கோ!"

"அந்த பார்ஸல் என்ன ஆச்சு?"

"எனக்கென்னவோ அது இப்ப சதாசிவத்தின் வீட்டில இருக்காதுன்னு தோணுது. ஜனங்கள் அந்தப் பார்ஸலுக்குதான் இந்த அலை அலையுதுன்னு நினைக்கிறேன்."

"எதுக்கும் இன்ஸ்பெக்டரை வெச்சுக்கிட்டு அந்த வீட்டை ஒரு தடவை துப்புரவா தேடலாம். இந்த ஆள் மயக்கம் தெளிஞ்சு வந்தா கொஞ்சம் பேசுவான்."

"அதுக்குள்ள போன கேஸ் மாதிரி பிராணனை விட்டுறப் போறான்!"

"இல்லை வஸந்த்! இது போதாது. காயங்கள்ளாம் பாத்த இல்ல? எல்லாம் ஸூப்பர்ஃபிஷியல். கொஞ்சம் முகம் வீங்கியிருக்கு. இந்த சதாசிவத்தை அவங்க கொல்ல உத்தேசிக்கலை. அவன் செஞ்ச ஏதோ ஒரு காரியத்துக்குத் தண்டனை கொடுக்க நாலு தட்டு தட்டி இருக்காங்க."

"தண்டனை நம்மோட வியாபாரம் பேசினதுக்காக இருக்குமோ?"

"இருக்கலாம். அவன்கிட்ட கொஞ்ச நேரத்துக்குத் தற்காலிகமா ஒப்படைக்கப்பட்ட பொருளை அவன் விக்க முயற்சி பண்ணியிருக்கலாம். அது அவங்களுக்குத் தெரிஞ்சு போய் . . ."

"அவங்கங்கறது யாரு?"

"அவங்க! அவ்வளவுதான்; ஒட்டுமொத்தமாத்தான் சொல்ல முடியுமே தவிர எத்தனை பேர் இருக்கா, எத்தனை கோஷ்டி அதில, ஒண்ணும் சொல்ல முடியாது."

"பொருள் என்னன்னும் சொல்ல முடியாது."

"ம்ஹூம்!"

காட்டினான்.

"என்ன இது!"

"சதாசிவம் கிடந்தாரில்லை? அவர்கிட்ட இந்தத் துண்டு கிடந்தது. இதில இருந்து ஏதாவது தெரியறதான்னு பாக்கலாம்னு பொறுக்கிட்டு வந்தேன்."

கணேஷ் அதை உரசி, தேய்த்துப் பார்த்தான். மூக்கில் வைத்துப் பார்த்தான்.

"நார்த்தங்கா வாசனை அடிக்குது. கூடவே ஒரு கெமிக்கல் ஸ்மெல்! வரப்ப நானும் மூந்து பார்த்துட்டேன்" என்று வஸந்த் சொன்னதைக் கவனிக்காமல் கணேஷ் அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

"என்னன்னு கண்டுபிடிக்க முடியலை. பார்க்கலாம். அது எதில இருந்து வந்த துண்டுன்னு நினைக்கிறே?"

"அந்த பார்ஸலிலிருந்துதான் வந்திருக்கணும்னு நினைக்கிறேன்."

"எப்படி?"

"ஏதோ பட்சி சொல்லுது, இட்சிணி!"

"அந்தப் பார்ஸல்! அந்தப் பார்ஸல்! அதுலதான் வஸந்த் இருக்கு சூட்சுமம்."

"வீடு காலியாத்தான் இருக்கும். ஒரு நடை போய்ப் பார்த்துட்டு வந்துடவா?"

"வேண்டாம். போலீஸ் ஏற்கனவே நம்மைச் சந்தேகப்படறாங்க. அந்த இன்ஸ்பெக்டர் நம்மைப் பாக்கற பார்வையே சரியா இல்லை."

"நம்மை எதுக்காகச் சந்தேகப்படணும்?"

"நாம ரெண்டு பேரும் ஊருக்குள்ள வந்தப்புறம்தானே எல்லா திடுக்கிடும் சம்பவங்களும் நடந்திருக்கு. இந்தத் துண்டை மெட்றாஸில் ஃப்ரெண்ட்ஸ் கிட்டக் குடுத்துப் பரிசோதனை பண்ணிப் பார்த்துடலாம். ஏதோ மெட்டாலிக்காத்தான் எனக்குத் தெரியுது."

"ஒரு சிலையோட பகுதியோ? பாஸ், இப்படி இருக்கலாமில்லையா? அவங்க தேடறது ஒரு விலை உயர்ந்த சிலையை! அது இதுநாள்வரை ராஜராஜன் கிணத்துல நாத்தத்தோட நாத்தமா உள்ளே கிடந்திருக்கு. இந்த விவரம் சரித்திரக் குறிப்புகள் மூலமா அவங்களுக்குத் தெரிய வந்து இங்க வந்து அதைத் தோண்டி எடுத்துட்டாங்க. சதாசிவத்துக்கிட்ட டெம்பரரியா கொடுத்து வெச்சிருக்காங்க. அந்த ஆள் என்னடான்னா சந்தடி சாக்கில் அதை நம்மகிட்ட விக்கப் பாத்திருக்கான். அது தெரிஞ்சு அவனை

அடிச்சுப் போட்டுச் சிலையைப் பிடுங்கிண்டு போய் ..."

"வர வர சுஜாதா கதை நிறையப் படிக்க ஆரம்பிச்சுட்டியா?"

"ஏன் பாஸ், இந்தத் தியரிக்கு என்ன?"

"கத்திக் குத்துப் பட்டவன் என்ன ஆச்சு?"

"அவன் இந்தச் சிலை கண்டுபிடிச்ச விவரத்தை நம்மகிட்ட சொல்ல வந்திருக்கலாம். அல்லது ... பிரில்லியண்ட்! டேய் வஸந்த் உன் மூளையே மூளைடா!"

"என்னடா கண்டுபிடிச்சே, சொல்லித் தொலை!"

"கத்திக் குத்துப் பட்டுச் செத்தானே, அவன் யாரு?"

"ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட் காவல்காரன். கூழமந்தல்."

"அவன்தான் சிலையை எடுத்திருக்கிறதைப் பார்த்திருக்கான்."

"அப்படியே வெச்சுக்க."

"அவனும் சதாசிவமும் பார்ட்னர்ஸ்! அதான் நம்மகிட்ட சதாசிவத்தைப் போய்ப் பார்க்கச் சொல்லியிருக்கான். அவன் எப்படியோ அந்தச் சிலையை அபேஸ் பண்ணிக்கிட்டு சதாசிவத்துக்கிட்டக் கொடுத்து வெச்சிருக்கான். ரெண்டு பேரும் வியாபாரத்தைப் பிளான் பண்ணியிருக்காங்க."

"வஸந்த்! வஸந்த்! போட்டுக் குழப்பாதேடா."

இன்ஸ்பெக்டர் வெளியே வந்தார்.

"என்ன ஸார் ஆளு கண் முழிச்சானா?"

"மூச்சு விட்டுக்கிட்டுத்தான் இருக்கான் ... ஸ் .. அப்பாடா."

"மிஸ்டர் வஸந்த்! கொஞ்சம் வாங்க."

"இங்கதான் ஸார் இருக்கேன். என்ன வேணும்?"

"நீங்க அந்த ஆளைப் பார்க்கப் போனீங்களா?"

"ஆமா."

"எதுக்கு."

"எதுக்கு? நல்ல கேள்வி. அது வந்து எப்படின்னா .." வஸந்த் கணேஷைப் பார்த்தான். கணேஷ் தயங்காமல் "அவர்கிட்ட ஒரு விவரம் கேக்கப் போயிருந்தோம்" என்றான்.

"என்ன விவரம்?"

"முன்னாலே கத்திக் குத்தில இறந்துபோனானே ஒரு ஆள். அதான் அந்தக் கூழமந்தல் ஆசாமி, அவன் எங்கிட்ட காலைல வந்தபோது சதாசிவம்னு ஓராளைப் பார்க்கச் சொன்னான்."

"அப்படியா? அதை ஏன் என்கிட்டச் சொல்லலை?"

"சொல்றதுக்குச் சந்தர்ப்பம் வரலை. நீங்க கொஞ்சம் பிஸியா இருந்திங்க. சந்தர்ப்பம் கிடைக்கிறபோது சொல்லலாம்னு

நெனைச்சுக்கிட்டிருந்தோம்."

"இப்பத்தான் சந்தர்ப்பம் வந்ததாக்கும்" என்றார் கொஞ்சம் அதட்டலாக.

"ஆமாம்."

"அதாவது, நீங்களா, சொந்த முயற்சியா துப்புத் துலக்கப் பார்த்திருக்கீங்க."

"அப்படி இல்லீங்க. அந்தாளு என்னவோ சொல்ல வந்தான். அதை . . ."

"இதெல்லாம் நல்லால்ல. போலீஸ் எதுக்கு இருக்கோம்? நீங்க ரெண்டு பேரும் லாயரா?"

"ஆமாங்க."

"சட்டம் படிச்சவங்களே இப்படிச் செய்யலாமா?"

"என்ன செஞ்சோம்?" என்றான் வஸந்த்.

"இந்த மாதிரி ஒரு ஆளு அடிபட்டிருக்கான். அவனைப் போய் நீங்க பாத்தீங்கன்னு சொல்றீங்க. யாருக்குத் தெரியும்? அந்த ஆளை நீங்களே அடிச்சுப் போட்டிருக்கீங்களோ என்னவோ?"

"நல்லா ஜோக் அடிக்கறீங்க."

"அடப்போய்யா! உங்ககூட ஜோக் அடிக்கறதுக்குத்தான் எனக்கு வேலை குடுத்து, சம்பளம் குடுத்து வெச்சிருக்காங்க?"

"இல்லை இன்ஸ்பெக்டர், எவனாவது புத்தி ஸ்வாதீனம் இருக்கிறவன் ஒரு ஆளை அடிச்சுப் போட்டு உடனே அவனை வண்டி வெச்சு குண்டுக்கட்டா தூக்கிண்டு வந்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வருவானா?"

"இல்லீங்க. போலீஸ் கண்ணில மண்ணைத் தூவுறதுக்குச் சில பேர் அப்படிச் செய்தாலும் செய்வாங்க."

"பாஸ், தமாஷா இல்லை?"

"இல்லை" என்றான் கணேஷ். "இன்ஸ்பெக்டர்! எங்களோட போனஃபைட்ஸ் பற்றி உங்களுக்குச் சந்தேகம் இருக்கிற மாதிரித் தெரியுது. இதைத் தீக்கறதுக்குச் சுலபமா ஒரு வழி இருக்கு."

"என்ன?"

"அந்தாளு முழிச்சிக்கிட்டப்புறம் நீங்களே அவனைக் கேட்டுக்கங்களேன்."

"கேக்கத்தான் போறேன், மிஸ்டர் கணேஷ். கேக்கத்தான் போறேன்."

"ரெண்டு தடவையா?"

"அவன்தான் இப்ப முக்கியமான சாட்சி. அவன்கிட்ட இருந்து அந்த ஸ்டாபிங் பத்தியும் முக்கியமான தகவலை எதிர் பார்த்துக்கிட்டு இருக்கேன். பார்க்கலாம்."

டாக்டர் கை கழுவிக்கொண்டு வெளியே வந்தார்.

"எப்படி இருக்காரு?"

"அப்பப்பா! செம்மையா அடிச்சு மூஞ்சி வீங்கியிருக்கு. தோள் பட்டை வேறே வீங்கியிருக்கு. எனக்கென்னவோ காலர் போன்ல க்ராக் இருக்கலாம்னு தோணுது."

"பொழைச்சுருவாரில்லே?"

"பொழைச்சுருவார். இன்னும் அரை மணியில் மயக்கம் தெளிஞ்சிடும்."

"அப்ப என்னைத் தவறாமக் கூப்பிடுங்க. வேத்து ஆளுங்களை அனுமதிக்க வேண்டாம்" என்று வஸந்த்தைப் பார்த்துக்கொண்டே சொன்னார். "என்ன மிஸ்டர் வஸந்த், உங்ககிட்ட அந்தாளு ஒண்ணுமே பேசலியா?"

"இல்லிங்க. நான் போனபோதே மயக்கத்திலதான் இருந்தாரு."

"அந்த அடி அடிச்சிருக்கீங்க... ஐ மீன் அடிச்சிருக்காங்க."

வஸந்த், "பாஸ்! திஸ் இஸ் தி லிமிட்! அவரு நம்மை அனாவசியமாச் சந்தேகிக்கிறார்." தொடர்ந்து, "இன்ஸ்பெக்டர், செக்ஷன் 197(1) ஸி.ஆர்.பி.ஸி.படி உங்களுக்கு நிறையப் புரொட்டெக்ஷன் இருக்கலாம். ஆனா செக்ஷன்..." என்று இழுத்தான்.

"வாயை மூடுடா. என்கிட்ட சட்டம் பேசறியா?"

"மூடுடாவா? என்னது சட்டம் கொஞ்சம் எல்லை மீறுது. இன்ஸ்பெக்டர் இவர் யார் தெரியுமா? கணேஷ் இவர் கிராஸ் எக்ஸாமின் பண்ணி பஞ்சாப் போன போலீஸ் ஆபீஸர்கள் எவ்வளவு பேர் தெரியுமா? நானூத்தி நாப்பத்து நாலு."

"வஸந்த்! ஷட் அப்! இன்ஸ்பெக்டர், இவன் கொஞ்சம் தத்துப் பித்துன்னு உளறுவான். மைண்ட் பண்ணாதீங்க."

"அரெஸ்ட் பண்ணி உள்ளே தள்ளினா சரியாப் போயிடும்?"

"நீங்க கோவிச்சுக்காதீங்க. எதுக்கு விவகாரம்? இப்ப அந்த ஆளு கண் முழிச்ச பிற்பாடு எல்லாம் துல்லியமாத் தெரிஞ்சுடப் போறது. எங்களோட இன்னொஸன்ஸ் நிரூபணம் ஆனப்புறம் நாங்க போறம்."

"எங்க போயிடுவீங்க? எங்கேயும் போய்விட முடியாது."

"நாங்க போறதுன்னு தீர்மானிச்சா உங்க தாத்தா வந்தாக்கூட தடுக்க முடியாது. இட்ஸ் எ ஃப்ரீ கண்ட்ரி"

"பாத்தியா என்ன ராங்கியாப் பேசறான்!"

"வசந்த்! இந்த இடத்தை விட்டு விலகிப் போறியா இல்லையா? அனாவசியத்துக்குக் கேஸை காம்ப்ளிகேட் பண்ணாதே. ஏற்கனவே நம்ம மேலே சந்தேகப்படறார்."

"படட்டும். மடியில புள்ளையிருந்தாத்தானே வழியில கணவனைப் பார்த்தாப் பயம்?"

"போ, ஒழி, தனியாப் போய் நில்லு."

வஸந்த், "அப்புறம் பார்க்கலாம் ஸார்" என்று இன்ஸ்பெக்டரிடம் விடைபெற்று, ஓரத்தில் போய் சிகரெட் பற்ற வைத்தான்.

டாக்டர் வெளியே வந்து "இன்ஸ்பெக்டர் வாங்க. அந்தாளு முழிச்சுக்கிட்டான். பேச ஆரம்பிச்சுட்டான்" என்றார்.

இன்ஸ்பெக்டர் குச்சி சுழற்றிக்கொண்டு உள்ளே செல்ல, கணேஷ் சற்றே கவலைப்பட்டான். மெல்ல அந்த டிஸ்பென்ஸரிக் கட்டிடத்தை அணுகினான். வஸந்த் விரோதபாவத்துடன் மரத்தடியிலேயே நின்றுகொண்டிருக்க அறைக்குள் பேசுவது தெளிவில்லாமல் கேட்டது. இன்னும் கொஞ்சம் அருகே செல்ல, மெலிதாக இருந்தாலும் ஸ்பஷ்டமாகக் குரல்கள் கேட்கத் துவங்க,

"சதாசிவம், சதாசிவம்!"

"ம்! அம்மா! வலி!"

"மருந்து போட்டிருக்கு! பயப்படாதே, உனக்கு உயிருக்கு ஆபத்தில்லை."

"ஆபத்தில்லையே, ஆபத்தில்லையே?"

"எனக்கு ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்லிடு; பாக்கியை உடம்பு சரியானப்புறம் கேட்டுக்கறேன்."

"என்ன?" – ஈனஸ்வரம்.

"உன்னை இப்படி அடிச்சுப் போட்டது யாரு?"

சற்று நேரம் மௌனம். அதன்பின் மெல்லிய குரலில் தீர்மானமாக.

"அதான் அந்த கணேஷும் வஸந்தும்!"

# 13

கலவரப்பட்ட கணேஷ் மரத்தடி வஸந்த்தை அவசரமாக சைகையில் கூப்பிட்டான்.

"என்ன பாஸ்?"

"ஷ்! ..." குரலைத் தாழ்த்திக்கொண்டு "வஸந்த் நீ அவனை அடிச்சியா?"

"சேச்சே தொடலை! நான் பார்த்தபோது புறக்கடையில் சாஷ்டாங்கமாகக் கிடந்தான். ஏன் மயக்கம் தெளிஞ்சுட்டானா?"

"தெளிஞ்சு அழகா தெளிவா பொய் சொல்ல ஆரம்பிச்சிருக்கான். அவனை அடிச்சது நீயும் நானுமாம்."

"அடப்பாவி! இப்ப என்ன ஆகும்?"

"இன்ஸ்பெக்டர் வெளியே வந்தார். "மிஸ்டர் வஸந்த், கொஞ்சம் இங்க வர்ரீங்களா" என்றார்.

"என்ன ஸார்"

"அந்த ஆள் முழிச்சுக்கிட்டான். அவன் சொல்றது உங்க ரெண்டு பேரையும் இன்க்ரிமினேட் பண்ணுது. நான் அப்ப சொன்னதுக்கு கெக்கேன்னு சிரிச்சீங்க. ஒரு போலீஸ் ஆபீசருக்கும் கொஞ்சம் இன்ஸ்ட்டிங்ட்டிவ்வா சொல்ல முடியுங்கறதை மறந்துட்டிங்க..."

கணேஷ், "ஸார்! கேஸ் ரிஜிஸ்டர் ஆகியிருக்கா?" என்றான்.

"இல்லை! ரிஜிஸ்டர் பண்ணப் போறேன். அந்த ஆளு கம்ப்ளெய்ண்டே கொடுக்கப் போறாரு. ரிக்கார்ட் பண்ணிக்கிட்டு அப்புறம் இன்வெஸ்டிகேட் பண்ணப் போறேன். அதுவரைக்கும் நீங்க எங்கேயும் போயிறாதீங்க என்ன?"

"நீங்க ஸ்டேட்மெண்ட் எடுத்துக்கறதுக்கு முன்னால நாங்க அந்த ஆளைப் பார்த்துப் பேச அனுமதிப்பீங்களா?"

"மாட்டேன்! உங்க வக்கீல் வேலையெல்லாம் என்கிட்டக் காட்டாதீங்க. வஸந்த்! எங்க தங்கியிருக்கீங்க?"

"ஏன் ஸார்?"

"ராத்திரி ஸ்டேஷன் லாக்அப்லே தங்கவேண்டி வரும்" என்று சிரித்துவிட்டு உள்ளே போனார்.

வஸந்த், "என்ன பாஸ் மாட்டிக்கிட்டோமா?" என்று கணேஷைக் கலவரத்துடன் பார்த்தான்.

"மா என்ன? அவன் உன்னைத்தான் அரஸ்ட் பண்ணப் போறதாத் தெரியுது. இருந்துட்டு வா. காலைல விடிஞ்சதும் பெயில் ஏற்பாடு பண்றேன். கவலைப்படாதே."

"என்ன பாஸ் விளையாடறீங்களா? நான் முன்னப் பின்னே ஜெயிலுக்குப் போயிருக்கேனா? என் மானம் என்ன ஆறது? மரியாதை என்ன ஆறது? எப்படிப்பட்ட வம்சம்!"

"பின்னே ஏன் அந்த ஆளை அடிச்சே? என்னவோ உன் கராத்தே வேலையை எல்லாம் அவன்கிட்டக் காட்டியிருக்கே!"

"என்ன பாஸ்! நீங்களே என்னைச் சந்தேகிக்கப் போகுமா?"

"நான் உனக்குச் சொன்னது ஒண்ணு. நீ செய்தது ஒண்ணு."

"நிச்சயம் அடிக்கலை பாஸ்."

"அடிக்காட்டிக் கூட ட்ரெஸ்பாஸ், ஹவுஸ் பிரேக்கிங், எதுல வேணா உன்னை இப்ப அரஸ்ட் பண்ணலாம். அந்தாளை வேறே பகைச்சுக்கிட்டிருக்கே..."

"இப்ப என்ன செய்யறது? பேசாம லா பாயிண்டைப் போட்டுக் குழப்பி விட்டுறலாமா!"

"பார்க்கலாம். நீ எதுக்கும் தயாரா இரு. ராத்திரி ரெண்டு பேரையுமே கைது செஞ்சாக் கூடப் பரவாயில்லை. ஹோட்டல் பிரச்னை விட்டுது."

இன்ஸ்பெக்டர் வெளியே வந்து "ரெண்டு பேரும் என்கூட வரீங்களா? ஸ்டேஷன்ல போய் இன்வெஸ்டிகேஷனை வெச்சுக்கலாம்."

"சரி, நீங்க போங்க. கார்ல வரோம்."

போலீஸ் நிலையத்தின் கட்டிடம் தற்காலிகம் என்று தெரிந்தது.

வாசலில் போர்டு இரண்டு சவுக்குக் குச்சிகளில் தொங்கிக் கொண்டு நிற்க அதன் தலையில் பல்பு அபாயகரமாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

வஸந்த், காரை நிறுத்திவிட்டு "ஜன்னல்லாம் பூட்டிடலாமா பாஸ்? ராத்திரி தங்கல் இருக்கலாம்."

"வேண்டாம் வா. தங்கினா நீதான் தங்கப் போறே."

"என்ன பாஸ்! கைகழுவி விட்டுடுவீங்க போலிருக்கே?"

"ரெண்டு லாயர் இருக்கோம். ஒரு லாயர் அரெஸ்ட் ஆறதுக்கு. இன்னொருத்தன் அவனை வெளியே கொண்டு வரதுக்கு.

பயப்படாதே!"

உள்ளே நுழையும்போதே சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே "பரவாயில்லே. நல்ல காத்தோட்டமா இருக்கு" என்ற கணேஷை வஸந்த் முறைத்தான். லாக்அப் அறை தெரிந்தது. பின்பக்கத்தில் யார்டு தெரிந்தது. அதில் குச்சியின் உச்சியில் ஒற்றை பல்ப். நாலடி சதுர நோட்டீஸ் போர்டில் அரசாங்கப் பழுப்பில் கத்தையாக அறிக்கைகள் சேகரிக்கப்பட்டுத் தொங்கின. ட்யூட்டி போர்ட் பள்ளிக்கூடக் கரும்பலகையிலிருந்து அந்த நிலையத்தில் ஒரு சப்இன்ஸ்பெக்டர், அவருக்கு சப்–ஆர்டினேட் ஒருத்தர், ஒரு ஹெட் கான்ஸ்டபிள், நான்கு பி.ஸி., ஒரு ஸ்டேஷன் ரைட்டர் இருப்பதாகத் தெரிந்தது. உள்ளே நுழைந்த வஸந்த்," எங்கே கிரைம் போர்டைக் காணோம்? என்ன இன்ஸ்பெக்டர் இது! கிரைம் போர்ட் இல்லை, ஏரியா மேப் இல்லை, விஸிட்டிங் ஆபீஸர் லிஸ்ட் இல்லை. என்ன போலீஸ் ஸ்டேஷன் நடத்துறீங்க!" என்றான்.

"அதை நீங்க விஸிட்டிங் போலீஸ் ஆபீஸரா வர்றபோது கேட்டுக்குங்க!"

"என்ன பாஸ்! நம்ம டி.ஐ.ஜி. ராஜேந்திரன் சொல்லு வாரில்லை, பாதி போலீஸ் நிலையங்களில் என்னென்ன ரிக்கார்ட்ஸ் வெச்சுக்கணும்னு கூடத் தெரியாதுன்னு."

"இத பாருங்க. டி.ஐ.ஜி. பேரை எல்லாம் உள்ள விட்டு எனக்குப் பயம் காட்ட வேண்டாம்."

"சேச்சே! உங்களைப் போல ஆசாமிங்களை பயங்காட்டற தாவது. டி.ஐ.ஜி. ராஜேந்திரன் நம்ம பாஸ் கணேஷுடைய கிளாஸ் மேட். அவர் ஒரு முறை எங்ககிட்டக் குறிப்பிட்டார். எந்த ஊர்ல எந்த போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனாலும் உடனே அதைப் பத்தி சின்னதா ஒரு வர்ணனைக் குறிப்பு எடுத்து அனுப்பச் சொன்னார் அதுக்குத்தான் . . ."

இப்போது இன்ஸ்பெக்டரின் முகபாவத்தில் கொஞ்சம் மாற்றம் தெரிந்தது.

"உட்காருங்க."

"பரவாயில்லை? அந்த ஆள் என்ன ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கான்?"

"அடிச்சது நீங்கதான்னு க்ளியரா கொடுத்திருக்கான்."

"அப்படியா? எதுக்கு அடிச்சமாம்?"

"நான் படிக்கிறேன், பாருங்களேன்."

அவர் காகிதத்தைப் பிரித்தார். முதலில் சில வரிகளைச் சத்தமின்றிப் படித்துவிட்டு – "இன்று பிற்பகல் சொல்லப்பட்ட இருவரும் வந்தார்கள். தம் பெயர் கணேஷ் என்றும் வசந்த் என்றும் சொன்னார்கள். என்னிடம் வியாபாரம் பேசினார்கள். அவர்கள்

எதைக் குறித்து வியாபாரம் பேசுகிறார்கள் என்று எனக்குச் சரியாக விளங்கவில்லை. நான் அவர்கள் உரம் பற்றியோ விதைநெல் பற்றியோ பேசிக்கொண்டிருக்கக்கூடும் என்று நினைத்ததால்தான் தொடர்ந்து அவர்களுடன் பேசினேன். இருவரும் பணம் கொண்டு வருவதாகச் சொல்லிக்கொண்டு வெளியே போனார்கள். சற்று நேரத்தில் இருவரும் திரும்பி வந்தார்கள்."

"என்னய்யா பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டதற்குச் சில பாசாங்கு பதில்கள் தந்தார்கள். திடீரென்று ஒருவர் என்னைப் பிடித்துக்கொள்ள மற்றவன் என்னைத் தாக்கி, மோசமாய் அடித்துப் போட்டார்கள். நான் நினைவிழந்தேன்."

இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து "என்ன சொல்றீங்க?"

"நல்லா கதை சொல்லியிருக்காரு அந்த ஆள்?"

"நீங்க அங்க போகவே இல்லியா?"

"போனோம். போகாம இல்லை. முதல் பாகம் ஏறக்குறைய அந்த ஆள் ஸ்டேட்மெண்ட்படிதான் நடந்தது. போனோம்; வியாபாரம் பேசினோம்; எல்லாம் சரிதான். அதுக்கப்புறம்தான் ரீலு; செம ரீலு."

"அப்புறம் நீங்க போகவே இல்லையா?"

"என்ன ஸார், எங்களைப் பொய்யிலே மடக்கலாம்னு பார்க்கிறீங்களா? நான்தான் சொன்னேனில்ல எதுக்காக, எப்பப் போனேன், என்ன பார்த்தேன்; நான் போனபோது அந்த ஆள் மயக்கமா சந்துகிட்ட கிடந்தார். நான் போய் இந்த ஆளைக் காப்பாத்தி வண்டிலே போட்டுக்கிட்டு கொண்டு வந்திருக்கேன். ஸ்டேட்மெண்டைப் பாருங்க! கலி முத்திப்போச்சி!"

"நீங்க எதுக்கு ரெண்டாந் தடவை போனீங்க? அதான் எனக்கு இன்னும் சரியா விளங்கலை."

வஸந்த் கணேஷைப் பார்த்தான். "என்ன பாஸ்?"

கணேஷ், "இன்ஸ்பெக்டர்! இந்த ஆள் உதைபட்டதுக்கும் முற்பகல்ல நடந்த கத்திக் குத்துக்கும் சம்பந்தம் இருக்கு. இந்த வட்டாரத்தில் ஏதோ பெரிசா ஒரு குற்றம் நடந்திருக்கு... நடக்கப்போறது. அல்லது நடந்துக்கிட்டிருக்கு. எல்லாத்தையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கணும். ராஜராஜன் கிணறு தெரியுமா உங்களுக்கு?"

"என்னது அது?"

"இந்தக் கிராமத்தில உள்ள பழங்காலத்துக் கோயில், அதில உள்ள கிணறு."

"கிணத்துல ஆளை அடிச்சுப் போட்டிருக்காங்களா?"

"இல்லை! அது ஏதோ சரித்திர சம்பந்தப்பட்ட குற்றம். சிலை

அல்லது புதையல்னு நினைக்கிறோம். அதில இந்த ஆள் சதாசிவமும் சம்பந்தப்பட்டிருக்கிறான். மத்தியானம் செத்தானே, அவனும் சம்பந்தப்பட்டிருக்கான்."

"சிலையா?"

"ம்... சாயங்காலம் அந்த ஆளைச் சந்தித்தபோது அவன் கைல ஒரு பொட்டலத்தைப் பார்த்தோம். அது என்னன்னு தெரிஞ்சுக்கறதுக்குத்தான் வியாபாரம் பண்ற மாதிரி பேசினோம். ஏதோ பத்து நாப்பத்தஞ்சுன்னு பேசினான். என்னன்னு புரியலை. பொட்டலத்தைப் பிரிக்க மாட்டேன்னுட்டான். அதுக்குத்தான் பொட்டலத்தில என்ன இருக்குன்னுட்டு நைஸா தெரிஞ்சுட்டு வான்னு வஸந்த்தை அனுப்பினேன். அவன் அந்த வீட்டில போய்ப் பார்த்ததில சதாசிவம் அடிபட்டுக் கிடந்தான். இதுதான் நடந்த விஷயம்."

இன்ஸ்பெக்டர் சிந்தனை வசமாகி "ஹூம்" என்றார்.

"உங்க எப்.ஐ.ஆர். புக், கேஸ் டயரி, ஸ்டேஷன் ஹவுஸ் டைரி எல்லாத்தையும் பார்த்து ஒரு தகவல் சொல்ல முடியுமா?" என்றான் கணேஷ்.

"என்ன வேணும்?" இருவரையும் பற்றிய அவர் மனநிலை இப்போது நிச்சயம் மாறியிருந்தது.

"சமீபத்தில் கொஞ்சம் வித்தியாசமான கேஸ் ஏதாவது ரிப்போர்ட் ஆகியிருக்கா?"

"வித்தியாசமான்னா?"

"சாதாரணமா நிலச் சண்டை, தெருச் சண்டை இப்படியெல்லாம் இல்லாம வெளியூர்க்காரங்க இந்த ஊருக்கு வந்து ஏதாவது காணாமப் போயிட்டதாகவோ, தொலைச்சுட்டதாகவோ அல்லது ஏமாறிட்டதாகவோ ரிப்போர்ட் இருக்கா?"

"கொஞ்சம் இருங்க பார்த்துச் சொல்றேன்" என்றார்.

அவர் ரிஜிஸ்தரை எடுத்து மேஜைமேல் வைத்துப் புரட்ட கணேஷை "நீங்களும் பாருங்களேன்" என்றார். வஸந்த் கணேஷின் நேர்முகமான அணுகல் முறையை வியந்தான். இன்ஸ்பெக்டருக்கு அவர்கள் மேல் இருந்த சந்தேகம் நிச்சயம் விலகியிருக்க வேண்டும்.

"லெட் மீ ஸீ... இது என்ன ஸார் கேஸு?"

"அது ஒண்ணும் இல்லீங்க. வழிப்பறி. இந்த ஆள் பஸ் ஸ்டாண்டில் நின்னுக்கிட்டு இருந்திருக்கான். திடீர்னு ஒரு ஆள் வந்து கையில் இருந்த பெட்டியைப் புடுங்கிக்கிட்டு போய்ட்டான். பெட்டியில், தானே தயாரிச்ச தைலம் சாம்பிள்களும் கொஞ்சம் பணமும் வெச்சிருக்கான். நல்லவேளை மொத்த பணத்தையும் அதில வெக்கலை. தனியா வச்சுக்கிட்டிருக்கான்..."

"இந்த ஆளோட ஒரிஜினல் புகார் கடிதம் இருக்கா?"

"இருக்கு. பார்க்கறீங்களா?"

ரிஜிஸ்டருன் பின் குத்தி வைக்கப்பட்டிருந்த காகிதத்தை எடுத்துக்காட்டினார்.

"கொலைக் கேஸைக் கண்டுபிடிக்க வாய்ப்பு இருக்குங்கறீங்க?"

"இருக்குங்க ... நீங்க விசாரித்ததில ஒண்ணும் தெரியலையா?"

"இல்லீங்க!"

கணேஷ் அந்தக் கடிதத்தைப் பார்த்தான் "நான் ஒரு விற்பனையாளன். தயாரிப்பாளன். என் தைல சாம்பிள்களை எடுத்துக்கொண்டு ஊர் ஊராகச் சென்று விற்பவன். என் பெயர் காளிதாஸ். என் விலாசம், தஞ்சாவூர் விலாசம் கொடுத்திருந்தான். நேற்று, அதாவது 17–12–80 அன்று நான் பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்தபோது ஒரு இளைஞன் என்னை அணுகி மணி கேட்டான். சொன்னேன். தஞ்சாவூர்க்காரரா என்று கேட்டான். ஆம் என்றேன். ஸாம்பிள் கொண்டு வந்திருக்கியா என்றான். நான் என் தைல ஸாம்பிள்கள் என்று எண்ணிக்கொண்டு ஆம் என்றேன். அவன் அதற்கு மேல் கேட்டது எனக்கே விளங்கவில்லை... பத்துக்கு நாற்பது என்று சொன்னதாக நினைவு. இதனிடையில் பேருந்து வந்திடவே நான் அதில் ஏறிக்கொள்ளப் போகும் சமயத்தில் 'என்ன சொல்லாமப் போறீங்களே' என்று உடன் வந்து தொந்தரவு செய்ய நான் 'போப்பா' என்றேன். அப்பொழுது திடீரென்று என் கைப்பெட்டியைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டான். அதற்குள் பேருந்து புறப்பட்டுவிட, நான் அதை நிறுத்தி இறங்கிக்கொள்வதற்குள், அவன் கூட்டத்தில் மறைந்துவிட்டான். பெட்டியில் என் தைல சாம்பிள்களும் ரூபாய் நூறு பணமும் இருக்கிறது. அவன் கரிய நிறத்தில் கால்சராயும் நீல நிறத்தில் சட்டையும் அணிந்திருந்தான். இளம் வயதினன். அவனுக்கு சுமார் இருபது வயதிருக்கலாம்." ஒப்பம்.

"அப்புறம் இந்த கேஸ் என்ன ஆச்சு?"

"கண்டுபிடிச்சுட்டேன்."

"யாரை? திருடனையா?"

"இல்லை. அந்தப் பெட்டியை. தெருவில் கிடந்ததுன்னு ஒரு ஆள் ஸ்டேஷன்ல கொண்டாந்து கொடுத்தான். திருட்டு போன சாயங்காலமே கிடைச்சுடுச்சு."

"அப்படியா? அதில் இருந்த பொருள்கள்?"

"ஒண்ணு குறையலை. தைல பாட்டில், பணம் எல்லாம் அப்படியே இருந்தது."

"அந்தப் பெட்டியைத் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்தானே அந்த ஆள் விலாசம் இருக்குமா?"

"இருங்க பார்க்கிறேன்."

“தைல வியாபாரி என்ன ஆனான்?”

“சந்தோஷமா பெட்டியை வாங்கிட்டு சாயங்கால பஸ்ஸிலே போயிட்டான். உங்களுக்குத் திருப்பிக் கொண்டாந்து கொடுத்தவன் விலாசம்தானே வேணும்?”

“ஆமா”

“இருக்கு! தரேன். நம்ம ரிக்கார்ட்ஸ் எல்லாம் அப்பழுக்கில்லாதது. ராஜேந்திரன் கேட்டா சொல்லுங்க.”

“அதுக்கென்ன தாராளமா! என்ன பாஸ் இந்த அட்ரஸ் நமக்கு வேணுமா?”

“குறிச்சு வெச்சுக்க வஸந்த்.”

வஸந்த் குறிப்பெடுத்துக்கொள்ள, “அப்ப நீங்க போகலாம். ஏதாவது தகவல் வேணுமின்னா சொல்லி அனுப்பறேன். உங்களுக்கும் ஏதாவது நம்ம டிபார்ட்மெண்ட் கிட்ட இருந்து உதவி வேணும்னா . . .”

“வேணுங்க.”

“என்ன சொல்லுங்க?”

“நாளைக்கு அந்த சதாசிவம் வீட்டை ஸர்ச் பண்ண என்னை அனுமதிக்கணும். அப்புறம் . . .”

“அப்புறம்?”

“வஸந்தை நீங்க அரஸ்ட் பண்ணணும்!”

# 14

வஸந்த் அசந்துபோய், "என்ன பாஸ்! ஸேம் ஸைட் கோல் போடறீங்களே? என்னை எதுக்கு அரெஸ்ட் பண்ணணும்?" என்றான்.

"இந்தக் கிராமத்திலேயோ அல்லது சுத்து வட்டாரத்திலேயோ ஏதோ ஒரு கோஷ்டி ஏதோ ஒரு கெட்ட காரியம் செய்யறாங்க. நடக்கறது அல்லது நடக்கப்போறது என்னன்னு ஒருத்தருக்கும் தெரியாது. ஆனா நம்ம மேலே பழி போடற உத்தேசம் தெரியுது. சதாசிவத்துக்கு விஷயம் தெரியும். ஆனா நம்மகிட்ட சொல்லப் பயப்படறான். அவனை நல்லாத் தட்டி வெச்சிருக்காங்க. அவன் இனிமேல காட்டிக்கொடுக்கிற வகையில் ஏதாவது தகவல் வெளியே சொன்னா அவனைத் தீர்த்துக் கட்டிடுவாங்க. அதுக்குப் பயந்துண்டு நம்ம மேலே பழி போட்டிருக்கான். அவன் சொன்னதைப் போலீஸ் நம்பிட்டாங்கன்னு அவங்களை நம்ப வைக்கணும். அதுக்காக உன்னை அரெஸ்ட் பண்ண மாதிரி காட்டி ஆகணும். என்ன சொல்றீங்க இன்ஸ்பெக்டர்?"

"நான் என்ன காரணத்தைக் காட்டி அரெஸ்ட் பண்ணணும் கறீங்க?"

"சும்மா ஒரு ஸஸ்பிஷன் பேர்ல வாரண்ட் இல்லாத அரெஸ்ட் பண்றதுக்கு உங்களுக்கு எத்தனையோ செக்ஷன் இருக்குதே. ஸி.ஆர்.பி.ஸியிலே 54, 55, 57, 66, 151, 401 –"

"பரவாயில்லையே? ஞாபகம் வெச்சுருக்கீங்களே நல்லா"

"அதானே தொழில்?"

"அதுவும் வஸந்த்தை அரெஸ்ட் பண்ணணும்னா எல்லா செக்ஷனும் ஞாபகம் வரும் நம்ம பாஸுக்கு!"

"வஸந்த்! நான் சொல்றதைக் கேளு. ராத்திரி நீ ஸ்டேஷன்லே இருந்தா ஸேஃப்புன்னு தோணுது. இன்ஸ்பெக்டர் உங்களுக்கு இஷ்டமில்லேன்னா கூட நியூஸன்ஸ் கேஸ்லயாவது இவனைப் பிடிச்சு உள்ளே தள்ளுங்க. காலைல ரிலீஸ் பண்ணிடுங்க."

இன்ஸ்பெக்டர், "என்ன வஸந்த் வரீங்களா?" என்றார்.

"பாஸ் சொன்னா வர வேண்டியதுதான்."

"அவன் லாக்அப்பில் இருக்க வேண்டாம். ஸ்டேஷன்லே படுத்தாப் போதும்."

"சார்? சோறு கிடைக்கும் இல்லை?"

"கவலைப்படாதீங்க. நீங்க நம்ம கெஸ்ட்! கொஞ்சம் இருங்க. சதாசிவத்தைப் பார்த்துட்டு வந்திடறேன்."

"தவறாம வஸந்த் கைது பண்ணப்பட்ட விவரத்தை அவன் கிட்ட சொல்லுங்க. அப்புறம் ஆளை விட்டுடுங்க. அவன் வீட்டுக்குப் போயிரட்டும்!"

"நீங்க ஏதோ பிளான் வச்சிக்கிட்டுத்தான் செயல்படறீங்கன்னு தோணுது."

"ஆனா என்னன்னு சொல்ல மாட்டார்! இருக்கிறவங்களை யெல்லாம் ஜெயிலுக்குப் போ, உடம்புக்கு நல்லதுன்னு சொல்லுவாரு! கேள்வி கேட்காமப் போகணும்!"

"வஸந்த்! காலைல விவரமாச் சொல்றேன். நான் சொல்றபடி கேளு என்ன?"

"ஜெயிலுக்குப் போறது போறேன். சின்னதா ஒரு டிராமா ஆடிட்டுப் போறேனே?"

வஸந்த் கண்ணில் எச்சில் தொட்டுக்கொண்டான். "அய்யா என்ன இப்படி அபாண்டமா என் மேலே பழி போட்டுட்டிங்களே! ஏங்க நானா அந்தாளை அடிச்சேன். நேரே என் கண்ணைப் பார்த்துச் சொல்லுங்க" என்றான்.

சதாசிவத்தைச் சுட்டிக்காட்டி, "எல்லாம் நீதான் அடிச்சதுன்னு அவர் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்காரே!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அய்யய்யோ அப்படிப் பொய் சொல்லாதீங்க. என்னை அரெஸ்ட் பண்ணாதீங்க! எனக்கு வேற கதி கிடையாதுங்க. நான் நல்ல குடும்பத்தில பிறந்தவன்! இதுவரைக்கும் என் வம்சத்திலே யாரும் ஜெயிலுக்குப் போனதில்லை ஸார். வேண்டாம் ஸார் . . . நான் இல்லை. நான் இல்லை."

வாசலில் சின்னக் கூட்டம் கூடிவிட "என்னங்க தகராறு, என்னங்க ஆச்சு" என்று கேள்விகள் எழ "ஒண்ணுமில்லை, ஏதோ அடிதடி. பட்டணத்துக்காரர்களைக் கைது பண்ணிக்கிட்டுப் போறாங்க. அதுல கொஞ்சம் கலாட்டா" என்றனர்.

"காலைல கத்திக்குத்தைப் பத்தி ஏதும் கண்டுபிடிச்சாங்களா?"

"அப்படித்தான் தெரியுது. இவங்கதான் போல இருக்கு. அதான் அரஸ்ட்டுப் பண்ணிட்டாங்க!"

கணேஷுக்குச் சிரிப்பு வந்தது. கஷ்டப்பட்டான். காரில் ஏறிக்கொண்டு "குட்பை வஸந்த், ஸ்வீட் ட்ரீம்ஸ்!" என்றான்.

வஸந்த் அப்படியா சேதி என்று முறைத்தான்.

கணேஷ் காரில் சற்று நேரம் யோசித்தான். ராத்திரிச் சாப்பாடு எங்கே? தங்கல் எங்கே? அங்கிருந்த ஒரு பெட்டிக் கடையில் நிறுத்தி விசாரித்தான். "பட்டணங்களைப் போல தங்கற ஓட்டல் எல்லாம் கிடையாதுங்க. ஆனா மடவிளாகத்துக்குப் பக்கத்திலே ஒரு வீட்ல ராத்தங்கறதுக்கு சௌகரியம் பண்ணிக் கொடுப்பாங்க. வீட்டுச் சொந்தக்காரங்க வடக்க இருக்காங்க. எதித்த வீட்டுக்காரங்கதான் சாவி வச்சிருக்காங்க. அவங்ககிட்ட கேட்டீங்கன்னா ஒதவி பண்ணுவாங்க."

"சரி, ரொம்ப தாங்ஸ். ரொட்டி ஏதாவது இருக்குங்களா?"

"ரொட்டி கொஞ்சம் பளசா இருக்குங்க. பன்னு தரட்டுமா? இனிப்பா இருக்கும்."

கணேஷ் அகப்பட்டதை வாங்கிக்கொண்டு அந்த மடவிளாகம் முகவரியை நோக்கிப் போனான்.

**"வீ**ட்டுச் சாவிதான் எங்கிட்ட இருக்கு. ஓனர்கிட்டச் சொல்லாத வரைக்கும் நீங்க ராத்திரி படுத்துக்கலாம். திண்ணைல படுங்க. கொஞ்சம் கொசு புடுங்கும்; பன்னண்டு மணியளவிலே காத்து வரும்."

கணேஷ் காரைக் கோயில் ஓரத்தில் நிறுத்தி பூட்டிவிட்டுத் திரும்ப அந்த வீட்டுக்கு வந்து சற்று நேரம் வாசலில் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்துகொண்டு பன் சாப்பிட்டான். "இந்தாங்க பாலு" என்று கேர்டேக்கரின் மகள் கொண்டு வந்து கொடுத்தாள். அந்தப் பெண் சந்திர ஒளியில் கொஞ்சம் தேவதைத் தனத்துடன் இருப்பதை மனதோரத்தில் கவனித்த கணேஷுக்கு வஸந்த்தின் ஞாபகம் வந்தது. இந்நேரம் அவள் குலம், கோத்திரம், ஏன் மார்பளவைக் கூட விசாரித்திருப்பான். பாவம், வஸந்த்தை ஸ்டேஷனில் மாட்டிவிட்டு வந்துவிட்டேன். இருந்தும் இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தச் செயல் ஏனோ அவனுக்கு அவசியமாகப் பட்டது. "வேற ஏதாவது வேணுங்களா?" என்று அந்த மகள் கேட்டாள்.

"ஒரு தலையணையும் பெட்ஷீட்டும்" என்றான். திண்ணையில் படுத்திருந்தவன் திடீரென்று எழுந்தான். ஏதோ யோசித்தான். பின் இரவின் நிலவொளி பால் கொட்டிக்கொண்டிருந்தது. வீதியே அமைதியாக இருக்க கணேஷ் எழுந்தான். தலையணையைத் திண்ணைக்குக் குறுக்கே அமைத்துவிட்டு அதை பெட்ஷீட்டால் மூடினான். சற்றுத் தூரத்திலிருந்து பார்த்தால் ஆள் படுத்துக் கொண்டிருப்பது போலத் தோன்ற வைத்துவிட்டு அந்த இடத்தை விட்டு நழுவிப் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்றான்.

நிலையத்தில் ஒரு பல்ப் சோம்பேறித்தனமாகக் காற்றில் ஆடிக் கொண்டிருக்க இன்ஸ்பெக்டரைக் காணவில்லை. கான்ஸ்டபிள் மட்டும் பெஞ்சில் உட்கார்ந்த நிலையில் கண்ணயர்ந்து கொண்டிருந்தார். வஸந்த்தைக் கைது செய்யவில்லை என்று தெரிந்தது. அவன் இன்ஸ்பெக்டர் அறையில் ஃபேனைப் போட்டுக் கொண்டு நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான். அவனருகில் சென்று கணேஷ் அவனை எழுப்பினான்.

"என்ன பாஸ் இந்த நேரத்தில்?"

"ஷ்! நானும் இங்கதான் படுக்கப் போறேன் ..."

"ஏன்? ஓட்டல்ல இடம் கிடைக்கலையா ..."

"ஓட்டலா? இந்த ஊர்ல ஓட்டல் எது? ஒரு வீட்டுத் திண்ணையில் எடம் கொடுத்தாங்க. படுத்தேன். ஆனா அங்க இருப்புக் கொள்ளலை. உன்னை இங்க அனாவசியமா சேர்த்துவிட்டு வந்திருக்கோமே, என்ன கஷ்டப்படறியோன்னு வந்துட்டேன்."

"எனக்காகப் பச்சாதாபப்பட்டு வந்துருக்கீங்கன்னு சொன்னா அது பரம ரீல்! நான் நம்பலை."

"வஸந்த், அந்த காளிதாஸ்ங்கற ஆளைப் பார்க்கணும்"

"எந்த காளிதாஸ்?"

"அதான், பஸ் ஸ்டாண்டிலே பெட்டியைப் பறிகொடுத்துத் திரும்பப் பெற்ற தைல ஸாம்பிள்!"

"ஓ! அவரா? அவரு தஞ்சாவூர் அட்ரஸ்ல கொடுத்திருக்கிறார்?"

"பொடி நடையாப் போய்ப் பார்த்துட்டு வந்துரேன்."

"சரிதான். ஒண்ணு ஜெயிலுக்குப் போங்கறீங்க! இல்லை தஞ்சாவூருக்கு ... காஞ்சி ஜில்லாவிலிருந்து ஆபரேஷன் தஞ்சாவூருக்கு ஷிப்ட் ஆறதா? ஆமா எதுக்கு திடீர்னு காளிதாஸ் மேலே ஈடுபாடு?"

"அந்த ஆசாமி கிட்டேயும் வியாபாரம் பேசியிருக்காங்க. அதே பத்துக்கு நாப்பது. ஞாபகம் இருக்கா? சதாசிவம் நம்மகிட்ட பேசின போதும் பத்து, நாப்பது இந்த ரேஞ்சிலதான் பேசினான். வியாபாரம் ஒண்ணுதான்."

"எனக்கென்னவோ காளிதாஸ்ங்கறவன் இதில் தன்னை அறியாமக் கலந்துபோய்ட்ட ஆசாமிதான்னு படுது."

"அது சரிதான். எனக்கு அவங்கிட்ட இருந்து முக்கியமாத் தெரிய வேண்டிய தகவல் ... ம்ஹூம். இது காளிதாஸ் கிட்ட இருந்து கிடையாது. இங்க உக்கல்லதான் கிடைக்கும்."

"நீங்க பேசறது பூரா ஜென்னா இருக்கு."

"இருக்கலாம். கிணறு, பார்ஸல், கூழமந்தல் ஆர்க்கியாலஜி

டிப்பார்ட்மெண்ட் காவல்காரன். பேராசிரியர், இனியா, சதாசிவம், அவன் சொன்ன பொய், ம்ஹூம் த்ரெட்டே இல்லையே, சீட்டுக்குச் சீட்டு சம்பந்தமே இல்லையே!"

"ஸ்கூட் பண்ண வேண்டிய கை பாஸ்! நான் சொல்ற கதை வசனம்தான் சரிப்பட்டு வரது. எல்லோரும் சேர்ந்துண்டு வெலை உயர்ந்த செலையை விக்கறாங்க. அதுக்கு குறுக்கேதான் நாம வந்துட்டோம். அல்லது கடத்திக்கிட்டுப் போறாங்க."

"விலை உயர்ந்த சிலைன்னா அதுக்கு சரித்திர பூர்வமான ஆதாரம் இருக்கும். இந்த வட்டாரத்தில் அந்த மாதிரி சிலை இருந்தா நிச்சயம் பேராசியருக்குத் தெரிஞ்சிருக்கணும்."

"பேராசிரியரையும் சதாசிவத்தை மாதிரி பயம் காட்டி வெச்சிருக்காங்களோ என்னவோ?"

"இருக்கலாம்."

"இருக்கலாம் என்ன? வேற ஒரு பாஸிபிளிட்டியும் எனக்குத் தென்படலே."

"எனக்கு வேற சில சாத்தியங்கள் தோன்றது."

"உதாரணமா?"

"எல்லாத்தையும் சொல்லக்கூடிய நிலையில்லை. படுத்துத் தூங்கு."

காலை இருவரும் இன்ஸ்பெக்டரால் எழுப்பப்பட்டனர்.

"என்ன கணேஷ்! இங்க இருக்கீங்க! நான் தேடிக்கிட்டிருக்கேன்."

"எதுக்கு?"

"நல்ல காலம் தப்பிச்சீங்க கணேஷ்!"

"என்ன விஷயம்?"

"நீங்க படுத்திருந்த திண்ணை மேலிருந்த தலையணையை ஆளுன்னு நினைச்சுட்டு கத்தியால் குத்திட்டுப் போயிருக்கான் ஒருத்தன். நல்ல வேளை தப்பிச்சீங்க. இல்லை! இந்நேரம் நீங்க காலி."

# 15

**வ**ஸந்த்! கணேஷை தாசானு தாசத்தனத்துடன் பார்த்தான். "பாஸ்! நீங்க என்னைக் காப்பாத்தினீங்க. நேத்து ராத்திரி என்னை அரெஸ்ட் பண்றதுக்கு எதுக்காக ஆலாப் பறந்தீங்கன்னு இப்பத்தான் புரியுது."

"இல்லை வஸந்த். இந்த மாதிரியான தாக்குதலுக்குச் சாத்தியம் இருக்கலாம்னு எனக்கு பின்னிரவில்தான் தோணிச்சு. நான் உன்னை கைது செய்யறதுக்கு இன்ஸிஸ்ட் பண்ணதுக்கு நான் முதல்ல சொன்னதுதான் காரணம். நம்ம மேலே பழி போட்டதைப் போலீஸ் நம்பிட்டாங்கன்னு அவங்களுக்குப் பாவலா காட்டணும்."

"ரொம்ப சுத்தி வளைக்கிறீங்களே கணேஷ்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இந்தக் கேஸ்ல இதுவரைக்கும் எனக்குச் சரியான பிக்சர் கிடைக்கவில்லை. உங்களுக்கு?"

"ம்ஹூம்! கிரைம் என்னன்னு கூடத் தெளிவா இல்லை கணேஷ். நீங்க அந்தச் சதாசிவத்தின் வீட்டுக்குப் போய்ச் சோதனை போடணும்னிங்களே?"

"அதை நீங்க செய்யுங்க இன்ஸ்பெக்டர். நாங்க இன்னிக்கு முழுக்கப் பெரும்பாலும் போலீஸ் ஸ்டேஷனிலேயே இருக்கறது தான் பத்திரம்னு தோணுது. நீங்க ஸர்ச் பண்ணுங்க. முக்கியமா அந்தப் பார்ஸலை பீரோ அல்லது அலமாரி அல்லது வேற எங்கேயாவது ஒளிச்சு வெச்சிருக்காங்களான்னு பார்த்துருங்க. அது முக்கியம்."

"துப்புரவாப் பார்த்துர்றேன்."

"இன்னொரு வேலை செய்யணும் நீங்க."

"சொல்லுங்க."

"பஸ் ஸ்டாண்டிலே பெட்டி பறிகொடுத்த கேஸ் உங்க ரிக்கார்ட்ஸ்லே இருக்கே, தஞ்சாவூர்க்கார தைலப் பாட்டில் காளிதாஸ். அன்னிக்குச் சாயங்காலம் அவன் பெட்டியைத்

திருப்பிக் கொண்டு கொடுத்தானே அவன் விலாசம் கொடுத்தீங்க இல்ல? . . ."

"ஆமா, அங்க கூடப் போகணுமா?"

"வேண்டாம் ஸார். அவனை இங்கே ஸ்டேஷனுக்கு வரவழைக்க முடியுமா?"

"தாராளமா, வேணும்னா வாரண்ட்டோட கூட . . ."

"அதெல்லாம் வேண்டாம். சும்மா ருட்டீன் விசாரணைக்குன்னு அதிக தடபுடல் இல்லாமக் கூட்டி வரச் சொல்லுங்க."

"செய்துட்டாப் போவுது."

"அப்ப நீங்க போய்ப் பார்த்துட்டு வந்துர்றீங்களா? நானும் வஸந்த்தும் இங்கதான் இருக்கப் போறோம். வெளியில் எங்களுக்குப் பத்திரமில்லை."

இன்ஸ்பெக்டர் புறப்பட, வஸந்த் "ஏட்டய்யா இங்க பக்கத்திலே சிகரெட் கடை இருக்கா?" என்று கேட்டான்.

"எதுத்தாப்பலே இருக்குது; பையனை வரச் சொல்றேன்."

"அப்படியே ரெண்டு வேப்பங்குச்சி கொண்டுவரச் சொல்லுங்க. காலைல இருந்து பல் விளக்கக்கூட இல்லை."

வஸந்த் சோம்பல் முறித்துக் கொட்டாவி விட்டான். உக்கல் கொசு கொஞ்சம் ஃபாமிலி சைஸ்ல இருக்கும். பாஸ் நேத்திக்கு ரெண்டு மூணு சேர்ந்து என்னைத் தூக்குடா வீட்டுக்கு எடுத்துப் போயிடலாம்னு பேசிக்கிச்சு."

கணேஷ், "வஸந்த்! நாம ரெண்டு பேரும் இந்தக் கிராமத்தில் இனி இருந்தா ராத்திரிக்குள்ள தீர்த்துக் கட்டிடுவாங்க. திங்ஸ் ஆர்கெட்டிங் ஹாட்" என்றான்.

"அந்தக் காளிதாஸ் பொட்டியைத் திருப்பிக் கொடுத்தவன் எதுக்கு? சில சமயம் உங்க மூளை வேலை செய்யற பாதை பனாரஸ் சந்துகள் மாதிரி சிக்கலா இருக்கு."

"ரொம்ப சிம்பிள் லாஜிக்! சதாசிவம் நம்மகிட்டப் பத்துக்கு நாப்பதுன்னு ஏதோ பேரம் பேசினான். என்னன்னு இனிமே சொல்ல மாட்டான். உஷாராய்ட்டான். ஆனா அந்த இன்ஃபர்மேஷனை நாம வேற விதத்தில பிடிக்கப் பார்க்கலாம். காளிதாஸ் கேஸைப் பாரு. யாரோ ஒருத்தன் வந்து தஞ்சாவூர்க்காரரான்னு கேக்கறான். ஆமாங்கறான். 'ஸாம்பிள் கொண்டு வந்திருக்கியா'ன்னு கேக்கறான். கவனி ஸாம்பிள்!

"இவன் தன் நாத்த தைல சாம்பிள்தான்னு நினைச்சுகிட்டு ஆமானிருக்கான்."

"அப்புறம் வியாபாரம் பத்துக்கு நாப்பது! பத்துக்கு நாப்பது என்ன?"

"தெரியாது."

"ஆனா ஏறக்குறைய சதாசிவம் பேசின 'பத்துக்கு நாப்பது!"

"அதெல்லாம் சரி பாஸ்! வாட் ஆர் யு எய்மிங் அட்?"

"பஸ் ஸ்டாண்டிலே காளிதாஸ் கிட்ட வந்து பேசினவன் அந்தக் கோஷ்டியில் ஒரு ஆசாமி. இரண்டாவது இந்த பிஸினஸ் ரெண்டு மாசமா நடந்துகிட்டிருக்கு . . ."

"அதாவது ராஜராஜன் கிணத்துக்கு முன்னாடியே?"

"ஆமா, என்ன பிஸினஸ், யார் நடத்தறாங்க? தெரியாது?"

"சிலைத் திருட்டுதான் பாஸ். அதில் சந்தேகமில்லை."

"என்னால இவ்வளவு ஷ்யூராச் சொல்ல முடியாது. அதைப் பத்தி கவலையும் இல்லை."

"பெட்டியைக் கொண்டு கொடுத்த ஆள்கிட்ட இருந்து என்ன கண்டுபிடிக்க முடியும்? ஏதோ ரோட்டில பெட்டியைப் பார்த்திருக்கான். ஒரு உண்மையுள்ள பிரஜை. கடமை உணர்ச்சியோட டாண்ணு போலீஸ் ஸ்டேஷன்ல கொண்டு வந்து கொடுத்துட்டான்."

"வஸந்த்! மர மண்டை! அவன் அந்தப் பெட்டியை எந்த இடத்தில கண்டுபிடிச்சான். அந்தச் செய்தி முக்கியமில்லையா?"

"எப்படி?"

"அந்தப் பெட்டியை வாங்கிட்டுப் பிடுங்கிட்டுப் போனவங்க அதைத் தங்களுடைய ஆபீஸுக்கோ, டென்னுக்கோ எங்கேயோ கொண்டு போய்ப் பிரிச்சுப் பார்த்திருக்கணும். அது உபயோகமில்லை; ஆள் மாறாட்டம் ஆயிடுச்சுன்னு தெரிஞ்சதும் விசிறிக் கடாசி இருப்பாங்க. அதனால . . ."

"புரியுது! பெட்டி கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலிருந்து சமீபத்தில் அந்தக் கோஷ்டியோட இடம் இருக்கு."

"அதான்! என்ன ஸார் வந்துட்டீங்க?"

இன்ஸ்பெக்டர் உள்ளே வந்து மேஜை அருகில் உட்கார்ந்து "ஸ் . . .அப்பாடா! காலைல எட்டு மணிக்கு என்ன வெய்யில் பார்த்தீங்களா" என்றார்.

"போன காரியம் என்ன ஆச்சு?"

"சதாசிவத்து வீட்டைத் துப்புரவாப் பார்த்துட்டோம். அங்க ஒண்ணும் கிடையாது. ரெண்டு மூணு மரக்கா நெல்லு, ஓட்டைப் பாத்திரங்கள், பழைய ஈஸி சேரு . . ."

"சதாசிவம் எங்க இப்போ?"

"வீட்டுக்குப் போயிட்டான். அங்கதான் படுத்திருக்கான். ஸர்ச் வாரண்ட் வேற இல்லை. இருந்தாலும் அவனை மிரட்டியே எல்லாத்தையும் துப்புரவாப் பார்த்துட்டேன். அவனே சந்தோஷமா

எல்லாத்தையும் திறந்து திறந்து காட்டினான். அவன் நேத்து என்ன வெச்சிருந்தாலும் இப்ப இல்லை அது."

"எங்களைப் பத்தி ஏதாவது கேட்டானா?"

"விசாரிச்சான். நான் சொல்லிட்டேன் அவங்களை அரெஸ்ட் பண்ணி ஸ்டேஷன்லே வெச்சிருக்கேன்னு."

"தாங்க்யூ."

"இப்ப என்ன? அந்தப் பெட்டியைக் கொண்டு கொடுத்த ஆளைக் கூட்டியாரணும்."

"அவ்வளவுதான்."

"இன்ஸ்பெக்டர்! நீங்க இந்தக் கேஸை ஸால்வ் பண்ணிங்கன்னா உங்க கியாதி பல மடங்கு அதிகமாகிப் பிரமோஷன் கிடைக்கும் . . ."

"சும்மா ஐஸ் வெக்காதீங்க. இந்த ஸ்டேஷன் இதுவரைக்கும் கொய்ட்டா இருந்தது. இப்ப என்னவோ எசகேடா ஊர்ல நடந்துகிட்டிருக்கு. அதை ஸால்வ் பண்ணறதுக்கு உங்க ஹெல்ப்பையும் எடுத்துக்கிறதில எனக்கு ஒண்ணும் தப்பு இருக்கிறதா தெரியலை."

"கரெக்ட்."

இன்ஸ்பெக்டர் மறுபடி கேஸ் டயரியைப் பார்த்து விலாசம் குறித்துக்கொண்டு "இந்தாளைக் கையோட கூட்டிக்கிட்டு வாங்க" என்று கான்ஸ்டபிளைப் பணித்தார்.

"அதிகம் காபராப்படுத்தி விட்டுராதீங்க."

"சரிதாங்க."

"என்ன சாப்பிடறீங்க? நாஷ்தா ஏதாவது கொண்டு வரச் சொல்லட்டுமா?"

"வேண்டாம்."

"என்ன பாஸ் வேண்டாம்! பசி குலையைப் பிடுங்குது. ஒரு டஜன் இட்லி வாங்கிட்டு வரச் சொல்லுங்க."

"அப்புறம் ஒரு பக்கெட் சாம்பாரா?" என்றான் கணேஷ்.

"சும்மாருங்க பாஸ். ஸார் தரேங்கறார். அவர் சொன்னா பூ மாதிரி இட்லி கொண்டுட்டு வருவாங்க."

இன்ஸ்பெக்டர் பர்ஸிலிருந்து பணம் எடுத்துத் தந்தது கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது.

"கணேஷ்! உங்களுக்கு என்ன வேணும்னு சொல்லலியே?"

"எனக்கு காஞ்சிபுரத்திலே டிபன் சாப்பிட்டது வயறு சரியில்லை. பட்னி போடலாம்னு பார்க்கிறேன். ஒரு சோடா போதும்."

"வெறும் வயத்தில் சோடாவா? சரிதான்."

"இன்ஸ்பெக்டர் நீங்க?"

"எனக்கு வீட்ல இருந்து தோசை வரும். கொஞ்சம் ஷேர் பண்ணிக்கலாம்."

"பார்க்கலாம்" என்றான் கணேஷ்.

வஸந்த் இட்லியை ரசித்துத் தின்றான். கடைசியில் தண்ணீர் அருந்திவிட்டு ஏ . . . என்று ஏப்பம்.

கணேஷ், இன்ஸ்பெக்டருக்கு வீட்டிலிருந்து வந்திருந்த தோசையில் கொஞ்சம் விள்ளல் மட்டும் சாப்பிட்டுவிட்டு சோடாவை நிராகரித்துவிட்டு அவர் தந்த மோர் கொஞ்சம் அருந்தினான்.

பெட்டி கொண்டு வந்தவனைத் தேடப் போன கான்ஸ்டபிள் "அந்த ஆள் வீட்டில இல்லீங்க" என்று திரும்பி வந்துவிட்டான். "தகவல் சொல்லி வச்சிருக்கேன், வந்தவுடனே ஸ்டேஷனுக்கு வரச் சொல்லி."

"என்னன்னு சொன்னீங்க? பயங் காட்டலியே?"

"சேச்சே. அதெல்லாம் இல்லீங்க. முன்னை ஒருக்கா பொட்டியை போலீஸ் ஸ்டேஷன்ல திரும்பக் கொடுத்ததுக்கு ரிவார்டு கொடுக்கிறதைப் பத்தி பேச வரச் சொன்னாருன்னு சொல்லி வந்திருக்கிறேன்."

"சபாஷ் சரியான கான்ஸ்டபிள் வெச்சிருக்கீங்க."

"எல்லாம் நம்ம டிரெயினிங் இல்லை?"

"பாஸ்! காஞ்சீபுரத்தில் சாப்பிட்ட டிபன் எனக்கும் இப்பத்தான் கொஞ்சம் லேட்டா வேலை செய்ய ஆரம்பிச்சிருக்கு."

"ஏண்டா?"

"கொஞ்சம் வயத்தை என்னவோ செய்யுது. எக்ஸ்கியூஸ் மி" என்று ஸ்டேஷன் பின்புறத்துக்குச் சென்றான்.

கணேஷ் கேஸ் டயரியில் இன்னும் சில எண்ட்ரிகளைப் பார்த்தான்.

"வேற ஏதாவது கேஸ்கள் வெளியூர்காரங்க சம்மந்தப்படுத்தி இருக்குமான்னு பார்க்க விரும்பறேன் . . . ஸாரி இன்ஸ்பெக்டர். உங்க ஸ்டேஷன் விவகாரத்தில நாங்க அநாவசியமாக குறுக்கிடறதா நீங்க நினைக்கக் கூடாது."

"சேச்சே! உங்களை முகத்தைப் பார்த்ததுமே தெரிஞ்சுக் கிட்டேன். இதுல எனக்கென்ன? நான் ஒண்டி ஆளா இதைச் சமாளிக்க முடியாது. ஒத்தாசைக்கு நீங்க வந்திங்கன்னா அதை நான் ஏன் மறுக்கணும் . . . ஆஃப்டர் ஆல் நீங்களும் சட்டம் படிச்சவங்கதானே?"

கணேஷ் மறுபடி ரிஜிஸ்தரில் ஆழ்ந்தான். "இது என்னங்க கேஸு?"

"ரொம்ப சின்ன விஷயங்க. கேஸுகூட இல்லை. ஒரு ஆளு பஸ் ஸ்டாண்டில நூறு ரூபா நோட்டு கீழ கிடக்கறதைப் பார்த்து அதைக் கொண்டுவந்து எங்ககிட்ட ஒப்படைச்சிருக்கான். ஓனர் வர வரைக்கும் மூணு மாசமாவது காத்திருந்துவிட்டு அப்புறம் டிரஷரியில் கட்டணும். இந்த மாதிரி சின்ன கேஸுகள்தான் டயரியில் நிறையக் கிடைக்கும்."

"நான் தேடறது கொஞ்சம் வித்தியாசமான சம்பவங்களை. இந்தக் காளிதாஸ் மாதிரி வழக்கத்துக்கு மாறா . . ."

"அப்படி ஒண்ணும் இல்லைன்னுதான் தெரியுது. என்ன பார்க்கறீங்க?"

"வஸந்த் எங்க? போன ஆளை இன்னும் காணமே?"

"என்ன அங்கேயே உட்கார்ந்துட்டாரா?"

"போய்ப் பத்து நிமிஷம் இருக்காது?"

"இருங்க. கான்ஸ்டபிளைப் போய்ப் பார்த்துட்டு வரச் சொல்லறேன்."

கணேஷுக்கு திடீர் என்று மின் அதிர்ச்சி போல் ஒரு பயம் அடித்தது.

"ஸார்! ஸம்திங் ராங்! இருங்க, நான் போய்ப் பார்த்துட்டு வர்றேன்."

"நானும் வரேன்."

இருவரும் போலீஸ் நிலையத்தின் பின்கட்டுக்கு விரைந்தார்கள். சதுர வடிவமாகச் சுமாராக பரேடு பழகக்கூடியதாக சின்ன இடம். அதன் வட கோடியில் ஜி.ஐ. தகடுகளால் அமைக்கப்பட்ட கழிவறை இருந்தது. அதன் கதவு ஒன்றும் அவ்வளவு வலுவானதாகத் தெரியவில்லை. மூடியிருந்தது. கணேஷ் அருகில் சென்று "வஸந்த்! வஸந்த்!" என்று கூப்பிட்டான். பதில் இல்லை.

"இதுக்குள்ளதான போனாரு?"

கணேஷ் கதவைத் தட்டினான்.

உள்ளே தாளிடப்படாமல் தட்டின சுருக்கில் ஆடியது.

கணேஷ் உள்ளே எட்டிப் பார்த்தான்.

வஸந்த் கன்னாபின்னா என்று வாந்தி எடுத்திருந்தான். அந்தக் குறுகலான இடத்தில் கீழே விழுந்து கிடந்தான்.

# 16

"மை காட்! ஃபுட் பாய்ஸனிங்! ஏன் ஸார் ரெண்டு நாளைக் குள்ளேயே நான் கத்துண்டதெல்லாம் பிராக்டீஸ் பண்ணணுமா? என்ன ஸார் நடக்குது இந்த டவுன்லே?"

"டாக்டர்! ஆசாமி பொளைப்பானான்னு பாருங்க மொதல்ல?"

"சாப்டதெல்லாம் வெளியே வரணும். அப்புறம்தான் சொல்ல முடியும். என்னத்தைத் தின்னாரு?"

"டாக்டர் ப்ளீஸ்! டூ சம்திங் க்விக்" என்றான் கணேஷ்.

"பாய்ஸன் என்னன்னு தெரிஞ்சா அதுக்கேத்தாப்ல ட்ரீட் பண்ணலாம். பட்டை அடிச்சாரா? இப்ப ஸ்டமக் வாஷ் பண்ணறேன். பொட்டாசியம் பர்மாங்கனேட் யூஸ் பண்ணா அது ஏதாவது ஓப்பியமா இருந்தா நியூட்ரலைஸ் ஆயிடும். பாருங்கோ, அப்புறம் என்னைக் கோர்ட்டுல போட்டு வாட்டிடுவாங்க!"

"ஸார் இது சிம்பிள் ஃபுட் பாய்ஸனிங். இட்லி சாம்பார்ல ஏதோ கலந்து கொடுத்திருக்காங்க!"

"கிரிமினல் கேஸ் இருக்கா? லேபுக்கு வாமிட் சாம்பிள் அனுப்பணும். டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசருக்கு ரிப்போர்ட் பண்ணணும். பையா! சட்னு போய் ஒரு பொட்டலம் பொடி உப்பு வாங்கிட்டு வா! ஓடு."

கணேஷ் தவித்தான். நேரமாக நேரமாக வஸந்த் சோர்ந்து போய்க்கொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது. "ஏய் வஸந்த்!" என்று அடிக்கடி அவன் கன்னத்தைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தான். அவன் மத்தியானப் பூனை போல மறுபடி மறுபடி கண்ணயர்ந்துகொண்டிருந்தான்.

"உயிருக்கு ஒண்ணும் பயமில்லை. ஏற்கனவே நிறைய வாந்தி எடுத்திருக்கார். பூரத்தைக் கீரத்தைக் கரைச்சுக் குடுத்திட்டாங் களோ? எப்படி ஸார்?"

இன்ஸ்பெக்டர் கணேஷிடம் வந்தார். "நீங்க வேணா ஒண்ணு செய்யுங்க. இந்த டிஸ்பென்சரிலே அவ்வளவு தீர்மானமாச்

சொல்ல முடியாது. இவருக்கு அனுபவம் இருக்கிறதாகவும் தெரியலை. வாந்திக்குத்தான் மருந்து கொடுப்பாரு போல இருக்கு. எனக்கு என்னவோ உயிருக்கு ஆபத்து இல்லேன்னு தோணுது. பளிச்சுனு டவுனுக்கோ மெட்ராஸுக்கோ கூட்டிக்கிட்டுப் போய் வைத்தியம் பார்த்துருங்க. அப்புறம் இங்க வாங்க. நீங்க ரெண்டு பேரும் இங்க இருக்கிறதாலேயே கொஞ்சம் சிக்கல்கள் இருக்காப்பல தெரியுது. நான் அந்தக் கடைக்காரப் பயலைத் தட்டி விசாரிக்கிறேன். முயற்சி உங்க ரெண்டு பேரையும் கொல்லறதுக்குத்தான்னு க்ளீனாத் தெரியுது. நான் உடனே சூப்ரண்டுக்கு மெஸேஜ் சொல்லிடறேன். என்னால ஒண்டியா இதைச் சமாளிக்க முடியாது."

"உவேக்!" என்றான் வஸந்த். கணேஷ் உள்ளே செல்ல அவனைப் பரிதாபமாகப் பார்த்தான். என்னவோ சொல்ல நினைத்துப் பேச முடியாமல் கஷ்டப்பட்டான்.

"கவலைப்படாதே வஸந்த். இன்ஸ்பெக்டர் கிளியரன்ஸ் கொடுத்திட்டார். உனக்குக் கொஞ்சம் பெட்டரான உடனே நாம ஊருக்குப் புறப்பட்டுப் போயிடலாம்."

வஸந்த் புன்சிரிப்பில் கண் மயங்கினான். நெற்றியைச் சுருக்கிக்கொண்டு மறுபடி 'உவேக்!'

"பாத்திங்களா மஷ்டு எல்லாம் வெளியே வருது. ஏதோ பாக்டிரியல் பாய்ஸனிங் மாதிரித்தான் தெரியுது. எதுக்கும் கெமிக்கல் எக்ஸாமினேஷனுக்கு நாலு அவுன்ஸ் வாமிட் எடுத்துத் தனியா பாட்டில்ல வெச்சிருக்கேன். அவங்க கண்டு பிடிச்சுருவாங்க. என்ன வஸந்த் எப்படி இருக்கீங்க?"

இன்ஸ்பெக்டர், "நீங்க அழைச்சுகிட்டுப் போயிட்டுக் குணமானதும் சீக்கிரம் திரும்பி வந்திருங்க. கேஸு பாதில நிக்குது. உங்க ஸ்டேட்மெண்ட் எல்லாம் பதிவு பண்ணிக்கணும்" என்றார்.

"நிச்சயம் வருவோம் ஸார். மேலே ரெண்டு முறை முயற்சி நடந்திருக்கு. யாரு அந்தப் பார்ட்டின்னு கண்டுபிடிக்க எனக்கு ஆவலா இருக்குதுங்க!"

"அந்த காளிதாஸ் பொட்டியைத் திருப்பிக் கொடுத்த ஆள் வந்திருவான் இப்ப."

"அவங்கிட்ட இது மட்டும் கேட்டு வெச்சுக்குங்க. அந்தப் பெட்டியை எக்ஸாக்ட்டா எந்த இடத்தில, எந்த ஸ்பாட்ல கண்டு எடுத்தான்னு கேட்டு விசாரிச்சுக்குங்க. இப்போதைக்கு அது போதும்."

"நீங்க வரதுக்குள்ள உங்களுக்கு விஷம் கொடுக்க முயற்சி பண்ணவன் யாருன்னு கண்டுபிடிச்சு வச்சுக்கறேன். கவலைப் படாதீங்க."

"எவ்வளவு சீக்கிரம் முடியுமோ வந்துர்றோம். இந்தாங்க என்

கார்ட். அப்படி ஏதாவது அர்ஜண்டா வேணும்னா காண்டாக்ட் பண்ணுங்க. டெலிபோன் நம்பர் கூட இருக்கு."

மறுபடி அவர்கள் சென்னைக்குக் கிளம்பும்போது மணி மூன்றாகிவிட்டது. கணேஷ் காரை ஓட்டிக்கொண்டு செல்ல வஸந்த் பின்னால் விஸ்தாரமாகப் படுத்திருந்தான்.

"அதிர்ஷ்டசாலிடா நீ."

"இட்லி தின்னதுக்கா?"

"இல்லை, செத்துக் கித்துப் போகாம பொழைச்சதுக்கு, ராத்திரியே நம்ம மேல கரு கட்டிண்டு கத்திக் குத்துக்கு வந்து தலையணையைக் குத்திட்டுப் போயிருக்காங்க. காலைல . . ."

"காலைல நம்மை ஃபாலோ பண்ணிக்கிட்டு வந்திருக்காங்க பாஸ். அந்தப் பையனை விசாரிச்சீங்களா ஏதாவது?"

"எந்தப் பையனை?"

"அதான். அழகான இட்லி சாம்பார் வாங்கிட்டு வந்தானே சோக்ரா."

"எல்லா விசாரிப்பும் திரும்பி வந்ததுக்கு அப்புறம்தான்." இன்ஸ்பெக்டர் பார்த்தார். அவருக்கு உள்ளூர் டாக்டர் மேலே நம்பிக்கை இல்லை. போய் குணமானதும் வந்தாப் போதும்னு அனுப்பிச்சுட்டார்."

"மெட்ராஸ் போயிட்டுத் திரும்ப வர்றமா பாஸ்?"

"ஆமா, வந்தாகணும்."

"எக்கேடு கெட்டுப் போகுதுன்னு விட்டுட்டா என்ன?"

"அவங்க என்ன நடத்தறாங்கன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா? தோல்வியை ஒப்புக்கொண்டுடறதா?"

"லோகத்தில எத்தனையோ கெட்ட காரியங்கள் நடக்கறது. எல்லாத்தையுமா நாம கவனிக்க முடியும்?"

"இந்தக் காரியம் நம்ம பாதையில குறுக்கிட்டதால அதுல நமக்கு ஒரு இன்வால்வ்மெண்ட் வந்துடுத்தே."

"பார்க்கலாம். முதல்ல பாடி ஒழுங்கில வரட்டும். இப்பத்தான் பாஸ் புரியுது எனக்கு."

"என்ன?"

"ஒரு சப்பிப் போட்ட மாங்கொட்டை எப்படி ஃபீல் பண்ணும்கிறது."

"வாந்தியெல்லாம் நின்னு போச்சோல்லியோ?"

"சொல்லாதீங்க. 'வா'ன்னு ஆரம்பிச்சாலே வயத்தைச் சங்கடம் பண்றது."

"கரப்பாம்பூச்சி மாதிரிடா நீ! உன்னை லேசில கொல்ல முடியாதுடா."

"ஏதோ முதல் தடவையாவது நீங்க காப்பாத்தினீங்க."

"இரண்டாவது முறையும் சுலபமா சந்தேகப்பட்டிருக்கலாம். ஆனா இவ்வளவு கிட்ட வந்து போலீஸ் ஸ்டேஷன்லேயே முயற்சி ஒண்ணு நடக்கும்னு எதிர்பார்க்கலை."

"பாஸ் ஒரு சமயத்தில நான் அந்தக் கக்கூஸ்ல இருக்கறப்போ ஏறக்குறைய செத்தே போயிட்டேனா? எமனைக் கூடப் பார்த்தேன். எருமை மாட்டில ஒண்ணும் கன்னங்க கருக்க வரலை. நல்லா டை கட்டிண்டு 'என்னங்க கொஞ்சம் சீக்கிரம் வந்துட்டிங்களே; ரிஸர்வேஷன் இல்லியே உங்களுக்கு'ன்னு கேட்டாங்க பாஸ்; போன உடனே இனியாவுக்குப் போன் பண்ணிக் கொஞ்சம் சிசுருஷை பண்ண வரச் சொல்லிடுங்க, என்ன?"

"இன்னிக்குத்தான் அவளைப் பெண் பார்க்க வந்திருப்பாங் கன்னு சொன்னதா ஞாபகம்."

"ஓ! அது வேற சிக்கல் இருக்கு இல்லை? பாஸ்! நீங்கதான் எனக்குக் காதல் பாதையில இருக்கிற கரடு முரடை நீக்கி ஒத்தாசை பண்ணணும். ஏற்கனவே இட்லியைச் சாப்பிட்டு நொந்து போயிருக்கேன்."

"முதல்ல உடம்பு குணமாயிடட்டும். அப்புறம் உன் காதலைப் பார்க்கலாம்."

"அதுகூட சரிதான். சுவத்தை வெச்சுண்டு தானே ஒண்ணுக் கடிக்க முடியும்?"

"ஆரம்பிச்சுட்டியா உன் பழமொழிகளை? அப்பன்னா உனக்குச் சரியாய்க்கிட்டு வரதுன்னு அர்த்தம்."

"இனியாவை நெருங்க நெருங்கவே எனக்கு இம்ப்ருவ் ஆய்க்கிட்டே வருது பாஸ்."

வஸந்த்தைப் பிரைவேட் நர்ஸிங் ஹோமில் அட்மிட் செய்துவிட்டு அங்கிருந்து கணேஷ் பேராசிரியர் வீட்டுக்குப் போன் செய்தான்.

"என்ன கணேஷ்?"

"ஸார், உங்க ராஜராஜன் கிணறு விவகாரம் ரொம்ப ஆழமாப் போய்டுத்து."

"என்ன ஆச்சு? வேற ஏதாவது சம்பவங்கள் நடந்ததா?"

"நிறைய ஸார்! அதுக்கப்புறம் ஒரு ஆள் அடிபட்டு நாங்க ரெண்டு பேரும் கத்திக்குத்துப்பட இருந்தது. இன்னிக்கு காலைல ரெண்டு பேரும் பாய்ஸன் ஆக இருந்து, வஸந்த் விஷத்தைச் சாப்பிட்டதில தப்பிச்சு, என்ன ஸார் இதெல்லாம்?"

“ஐ ஆம் ஸோ ஸாரி. ஹௌ இஸ் ஹி நவ்?”

“பெட்டர். என்ன ஸார் அந்தக் கிணத்தில மாயம்? ‘ஒரு பாசி படிஞ்ச கிணத்துக்காக இத்தனை ரகளை நடக்குமா’ன்னு எனக்கு ஆச்சரியமா இருக்கு. இல்லை நாம் முக்கியமா ஒரு விஷயத்தைத் தப்ப விட்டிருக்கோமா?”

“நானும்தான் எல்லா ரிக்கார்ட்ஸையும் பார்த்துட்டேன் கணேஷ். கிணத்தில ஏதும் டிரஷர் இருக்கிறதாப் பேச்சே இல்லை.”

“ராஜராஜன் கிணறுன்னா அது ஒண்ணுதானே?”

“அது ஒண்ணுதான், எனக்குத் தெரிஞ்ச வரைக்கும். ஏன்?”

“வேற ஜில்லால வேற ஏதாவது கிணறு?”

“எனக்கென்னவோ அது சரித்திர சம்பந்தமான விவகாரம் இல்லைன்னு தோணுது.”

“யு ஆர் ரைட்! எதுக்கும் பார்க்கலாம். இனியா இல்லையா? வஸந்த் மெஸேஜ் கொடுக்கச் சொன்னான்.”

“இருக்கா. கூப்பிடட்டுமா?”

“மாப்பிள்ளைப் பையன் வரலையா?”

“இல்லை. பிளேனை மிஸ் பண்ணிட்டானாம். இனியாவோட பேசுங்க.”

“ஹாய் கணேஷ்! எப்படி இருக்கீங்க? நல்லா இருக்கீங்களா?”

“நல்லாத்தாம்மா இருக்கேன்.”

“வஸந்த் நல்லா இருக்காரா?”

“அவர் நல்லா இல்லை. ஆஸ்பத்திரியில படுத்திருக்கார்.”

“அப்படியா? என்ன ஆச்சு?”

கணேஷின் தோளருகே இருந்த வஸந்த் “சொல்லுங்க பாஸ்! குத்துயிரும் குலை உயிருமாப் படுத்திண்டிருக்கான். டாக்டர் இது ஒரு விஷ ஜுரம், ராத்திரி பன்னண்டு மணிக்கப்புறம்தான் பிழைக்குமா இல்லையான்னு சொல்ல முடியும்னு . . .”

கணேஷ், “ஃபுட் பாய்ஸனிங் ஆய்டுச்சு. ஹி கேவ் மி ஸம் அன்க்ஸைட்டி. முடிஞ்சா வந்து பாரேன்” என்றான்.

“வரேன் கணேஷ்! நிச்சயம் வரேன்னு சொல்லுங்க. அது வரைக்கும் அவரைப் பாத்துக்குங்க.”

டெலிபோனை வைத்தான். “என்ன பாஸ் ஸ்ட்ராங்காவே சொல்லலை நீங்க.”

“பொய் சொல்லி வரவழைக்கிறது நல்லால்ல வஸந்த். எனக்கு ராஜேந்திரனைக் கொஞ்சம் பார்க்கணும்.”

“உடனே வரேன்னாளா?”

“வருவா வருவா. ஏன் அவசரப்படறே?”

இனியா வரும்போது வஸந்த் கண் மூடிப் படுத்திருந்தான். "வஸந்த்! வஸந்த்!"

பதில் இல்லை. கிட்ட வந்து தொட்டுப் பார்த்தாள். "சிஸ்டர்! சிஸ்டர்!" என்று கூப்பிட்டாள். மூக்கருகில் கை வைத்துப் பார்த்தாள். "என்ன இது, மூச்சு இல்லையா? .. சிஸ்டர்!"

"என்னம்மா!"

"இந்த பேஷண்டைப் பாருங்க."

"இந்த பேஷண்டு அப்பவே இறந்துபோயிட்டாருங்களே?"

"அய்யய்யோ!" என்று திரும்ப, வஸந்த் எழுந்து உட்கார்ந்து "ஹாய்!" என்றான்.

"போங்க வஸந்த்! என்னைப் பயமுறுத்திட்டிங்க."

"நிஜமாவா இன்னி பயந்தியா?"

"ஆமாம்."

"படக்கு படக்குன்னு உன் மார் அடிச்சுண்டுதா!"

"பின்னே?"

"எங்க நான் பார்க்கலாமா? எப்படி புறா மாதிரியா? தொட்டுப் பார்க்கலாமா?"

"என்ன ஆச்சு வஸந்த்?"

"ஏன் கேக்கறே? உக்கல் பூரா ஒரே வெட்டுப்பழி, குத்துப்பழி. போதாக் குறைக்குப் பாய்ஸன்கள். ஏதோ பாதாள பைரவில வர மாதிரி எந்த மூலையை எடுத்தாலும் டேஞ்சர். ஆமா மெட்ராஸ் டேஞ்சர் என்ன ஆச்சு?"

"ப்ச்! அந்த ஆள் வரலையாம். பிளேனை மிஸ் பண்ணிட்டாங்களாம்."

"ஹைஜாக் பண்ணலையா? அப்ப இன்னும் பொண் பாக்க வரலை?"

"இல்லை."

"எனக்கு இன்னும் சான்ஸ் இருக்கு?"

"உனக்குத்தான் சான்ஸ் வஸந்த்!"

வஸந்த் வாயில் இரு விரல்களைப் பின் பக்கமாகச் சொருகிக் கொண்டு "உய்யு உய்" என்று அழுத்தமாக விசில் அடித்தான். வார்டே திரும்பிப் பார்த்தது.

"அய்யோ என்ன இது. டெண்ட்டுக் கொட்டாய் மாதிரி?"

"இனியா, உக்காந்துக்கோ! ஆஸ்பத்திரியில படுத்துண்டிருக்கேன்.

என்ன நீ ஒரு இளனி வாங்கிண்டு வராம வந்திருக்கே. அட ஒரு சாத்துக்குடி?"

"அவசரத்தில் அலறி அடிச்சுண்டு ஓடி வந்தேன் வஸந்த்."

"அப்ப நான் செத்துப்போனா நிச்சயம் அழுவியா நீ?"

"அய்யோ! நிறைய."

"உண்மைக் காதல்னா இதுதானே இன்னி!"

"ஆமா வஸந்த்."

"எனக்கு மருந்து வாங்கறதுக்குக் காசில்லேன்னா மோதிரம் ஏன் தாலி எல்லாத்தியும் வித்து எனக்கு பிஸ்மத் மிக்சர் வாங்கிண்டு வருவியா இன்னி?"

"எனக்கு உடம்பு சரியில்லைன்னா நீ எதை விப்பே?"

"நானா? என் வலது கையை! ஹ!" என்றான் வஸந்த். "இனியா, ராத்திரி எப்படி சவுகரியம்? இங்கயே தங்கறாப்பலதானே? பிரைவேட் நர்ஸிங்ஹோம். அலவ் பண்ணுவா. வேற ஒண்ணும் இல்லை. ஆசாமி பார்க்கறதுக்கு சியர்ஃபுல்லா இருந்தாலும் ஸிம்டம்ஸ் எல்லாம் இன்னும் இருக்கு. ராத்திரி பன்னண்டு மணி போனப்புறம் தான் நிச்சயமாச் சொல்ல முடியும்னு சொல்லிட்டுப் போயிருக்கார் டாக்டர். இந்த நிலையில என்னைத் தனியா விட்டுட்டுப் போறது எவ்வளவு தூரம் ஸேஃபுன்னு யோசிச்சுப் பாரு."

"கணேஷ் இல்லையா?"

"அவர் எங்கேயோ வெளில போயிருக்காரு. வரதுக்கு ராத்திரி ஒரு மணியாகும்னு சொன்னார்."

"ஹாய் இனியா!" என்று கணேஷ் வந்தான். "ஏன் பேஸ்த் அடிச்ச மாதிரி இருக்கே வஸந்த்?"

"கணேஷ்! வஸந்த்துக்கு நிஜமாகவே சீரியஸா இருக்கா? ராத்திரி பன்னண்டு மணி கெடு வெச்சிருக்காரா டாக்டர்?"

"இல்லியே?"

"பாஸ் நீங்க இல்லை அப்ப!"

"ஒண்ணுமில்லே. குத்துக்கல்லாட்டமா இருக்கான்!" வஸந்த் தன்னை முறைப்பதைக் கவனிக்காமல் "வஸந்த்! ஒரு முக்கியமான விஷயம் கண்டுபிடிச்சேன். நீ அந்த சதாசிவத்தின் வீட்டுப் பின் கட்டில் கிடந்ததுன்னு சின்னதாய் ஒரு வஸ்துவைப் பொறுக்கிக் கொண்டு வந்த பாரு? அதை கெமிக்கல் அனாலிஸிஸ் பண்ணி அது என்னதுன்னு கண்டுபிடிக்க வெச்சுட்டேன். ஸம்திங் வெரி இண்ட்ரஸ்டிங்" என்றான்.

# 17

கணேஷ் தன் பையிலிருந்து அந்த ரிப்போர்ட்டை எடுத்துக் கொடுக்க, வஸந்த் அதை ஆர்வத்துடன் பார்த்தான். சிக்கலான சங்கேத பாஷையில் ஏகப்பட்ட ரசாயன பதங்கள் சேர்த்து எழுதப் பட்டிருந்தது அந்த ரிப்போர்ட். "கொடுக்கப்பட்ட சாம்பிளை இன்ன தேதியில் அலசிப் பார்த்தபோது அதிலிருந்து கண்ட விவரங்கள் வருமாறு :"

"கொடுக்கப்பட்ட துண்டு சுமார் அரை அங்குல நீளமும் கால் அங்குல பருமனும் சற்றே வெண் பழுப்பு நிறத்தில் இருந்தது. அதை அடையாளம் கண்டுகொள்ள ரசாயனப் பரிசீலனை செய்த போது அந்தத் துண்டு ஆர்கானிக் வகையைச் சேர்ந்தது என்பதும் அது ஒரு வகை ஃபைப்ரஸ் மரத்தின் துண்டாக இருக்கலாம் என்பதும் தெரிகிறது. மரத்துண்டின் மேல் சில இன்–ஆர்கானிக் வகை ரசாயனப் பொருட்களும் தென்பட்டன. குறிப்பாக ஸோடியம் ஹைட்ராக்ஸைட், ஸோடியம் சல்ஃபேட், ஸோடியம் மானோ சல்ஃபைட், மிகத் துளி டைட்டேனியம் ஆக்ஸைடையும் பார்த்தேன். ஆர்கானிக், இன்–ஆர்கானிக் பொருட்கள் கலவை ஒரு செயற்கைக் கலவை என்றுதான் படுகிறது..."

வஸந்த் அந்தக் காகிதத்தைத் திருப்பிக் கணேஷிடம் கொடுத்து விட்டு, "தத்! ஒரு அட்சரம் புரியலை பாஸ்! எனக்குத் தெரிஞ்ச ஒரே ஒரு ரசாயனம் பாட்டரி காச்சறதும் சல்பேட்டாவும்தான். பாஸ் உங்களுக்கு ஏதாவது புரியுதா?" என்றான்.

"இல்லை."

"பின் சம்திங் இன்ட்ரஸ்டிங்குன்னு சொன்னீங்க? தொடரும்னு போடறதுக்கா."

"இல்லை வஸந்த். இதிலே ஒரு க்ளூ கிடைச்சிருக்கு. அதான் இண்ட்ரஸ்டிங்குனு சொன்னேன்."

"என்ன?"

"உக்கல் கிராமத்தில் சோடியம் சல்பேட்டுக்கும் ஹைட்ராக் ஸைடுக்கும் டைட்டேனியத்துக்கும் என்ன வேலை?"

"என்ன வேலை? அதானே!"

"அதுக்குப் பதில் கண்டுபிடிச்சா கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாப்பல இருக்கே அது கொஞ்சம் குறையும் தோணுது. எப்படி இருக்கு உடம்பு? இனியா வந்தப்புறம் சரியா போயிருக்கணுமே?"

இனியா, "என்கிட்ட என்னமோ ராத்திரியே செத்துப் போகப் போற மாதிரி பேசினார்."

"ராத்திரி என்ன, இப்பவே கூட செத்துப் போனதாய் நடித்திருப்பானே!"

"என்ன பாஸ்! எத்தனை வாந்தி எடுத்துக் குத்துயிரும் குலையிருமாகக் கிடந்தேன்! நீங்கதானே பாத்தீங்க."

"ஆமா இனியா, அதென்னவோ வாஸ்தவந்தான்."

"எல்லாம் யாருக்காக? சொல்லுங்க பாஸ்."

இனியா வஸந்தைப் பரிவுடன் பார்த்து, "வஸந்த்! எல்லாம் என்னாலதான் வந்தது. ஒப்புத்துக்கிறேன். அதுக்காக என் மனசு கிடந்து அல்லாடுது. பத்தியா நம்மால வஸந்த்துக்கு கஷ்டம். எதுக்காக அவரை ஊர் ஊரா அனுப்பிச்சு அவஸ்தைப்பட வைச்சு . . . உங்களுக்கும்தான் சொல்றேன். போதும் இந்தக் கேஸ். யார் என்ன செய்யறாங்கன்னு தெரியலை. கட்டுரை கிடைக்காட்டிப் பரவாயில்லை. அப்பாக்கிட்ட அடிச்சுச் சொல்லிட்டேன். வேணுமின்னா இன்னொரு கட்டுரை எழுதிக்குங்க. பாவம், அவங்களை அனுப்பிச்சு கிணறு வெட்ட பூதம் கிளம்பினாப்பல ஆயிடுச்சு பாருங்கன்னு கோபமாகவே பேசிட்டேன். கணேஷ், போதும் விட்டுத் தள்ளுங்க!"

"அந்த நிலைமையிலே நாங்க இல்லை இனியா. சாட்சி சொல்லவாவது அங்க நாங்க திருப்பிப் போகணும். வஸந்துக்குக் குணமானதும் ஒரு நடை போயிட்டு வந்துருவோம். அதுக்குள்ள இந்த விநோதமான நிகழ்ச்சியைப் பற்றி நினைச்சுக்கிட்டே அசை போட்டுக்கிட்டே இருந்தா . . ."

"திடீர்னு பாஸுக்கு இன்ஸ்பிரேஷன் வந்துரும். அட! அதாண்டான்னு கண்டுபிடிச்சிடுவார். இனியா, லேட்டஸ்ட் கேட்டியோ? ஒரு அப்பா பையன்கிட்ட அம்பது ரூபாய் கொடுத்து டவுனுக்குப் போய் என்ன வேணா பண்ணிட்டு வாடான்னாராம். பையன் காலேஜ் பையன் . . ."

அங்கு வந்த நர்ஸ் "அய்யோ அந்தக் கதையைக் கேக்காதீங்க. ரொம்ப மோசம். என்ன வஸந்த் இது!" என்றாள்.

"ஏய்! ஜோக்கெல்லாம் வேண்டாம். பேசாமப் படு."

"குட் நைட் வஸந்த்! ஸ்லீப் வெல்!"

"இரு. இரு. ஒரு புதுக்கவிதையாவது கேட்டுட்டுப் போ!"

"அது நல்லால்ல" என்றாள் நர்ஸ்.

"போச்சுடா. சிஸ்டர்! தர்மா மீட்டரை ஒளிச்சு வச்சுருவேன்." என்றான் வஸந்த்.

"அப்ப காலைல பார்க்கலாம்."

"இனியா போறயா? பாஸ் டிராப் பண்ணிடுவார். பின் சீட்ல உட்கார்ந்துண்டு போ."

அவர்கள் சென்றதும் வஸந்த் தலையணைக்கு அடியிலிருந்து சிகரெட் எடுத்து பற்ற வைத்துக்கொண்டான்.

தன் கட்டிலில் தலைமாட்டில் இருந்த ஆஸ்பத்திரிக் காகிதத்தில் ஒரு வெள்ளைத் தாளைக் கிழித்துக்கொண்டு நர்ஸிடம் பேனாவை வாங்கி எழுத ஆரம்பித்தான்.

"பத்துக்கு நாற்பது, என்ன அர்த்தம்? நீ பத்து ரூபாய் கொடு, நான் நாற்பது ரூபாய் கொடுக்கிறேன் என்றா? இந்த வியாபாரம் யார் செய்வார்கள்? மட்கா? இல்லை அபத்தம். ஏதோ ஒரு பொருளுக்கு நாற்பதாயிரம்? நாலாயிரம் ரூபாய் விலை மதிக்கக் கூடிய பொருள் என்ன? இப்படி இருக்கலாம். பத்து கிராம் விலை நாற்பது ரூபாயா? அல்லது நாற்பதாயிரம் ரூபாயா? அது என்ன ஒப்பியம்? சே! துப்பறியும் கதைகள் நிறையப் படிப்பதால் வரும் யோசனை இது. பாஸ் ஏன் அந்தப் பஸ் ஸ்டாண்டு சம்பவத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் தருகிறார்? மரத்துண்டு, சோடியம் ஹைட்ராக்ஸைடு, ராஜராஜன் கிணறு, என்ன சம்பந்தம்? ஏதாவது சின்ன விஷயத்தை, ஆனால் முக்கியமான விஷயத்தை விட்டு விட்டேனா? மரத்துண்டு! மரத்துண்டை வைத்துக்கொண்டு என்ன என்ன செய்யலாம்? எரிக்கலாம். ஆயுர்வேத மருந்து செய்யலாம். இல்லை இல்லை. மரத்துண்டு, அந்த ரசாயனப் பொருட்களின் பட்டியல், பத்துக்கு நாற்பது, இவை எல்லாவற்றுக்கும் பொதுவானது எது? ஒரு மண்ணும் புரியல . . ."

வஸந்த் தூங்கிப்போனான்.

அதே சமயம் கணேஷ் தன் அறையை அடைந்து படித்துக் கொண்டிருந்தான். புத்தக வார்த்தைகளில் அவன் கவனம் நிலைத்திருக்கவில்லை. பிளாஸ்கிலிருந்து பால் ஊற்றிச் சாப்பிட்டான். பேனாவைக் கடித்துக்கொண்டு யோசித்தான். சதாசிவத்திடம் விடை இருக்கலாம். ஆனால் அவன் சொல்ல மாட்டான். உயிருக்கு ஆபத்து என்று தெரியும்போது எப்படிச் சொல்வான்?

கணேஷுக்கு நடந்த எல்லா சம்பவங்களுக்கும் மறைமுகமாக ஒரு சங்கிலித் தொடர்பு இருக்க வேண்டும் என்று பட்டது. இப்போது அந்தச் சங்கிலி அறுந்து சிதறியிருந்தது. எடுத்துக் கோக்க வேண்டும். எப்படி என்பது தெரியவில்லை.

ஸாம்பிள்? ஸாம்பிள் கொண்டு வந்திருக்கிறாயா?

அவர்கள் என்ன சாம்பிளை எதிர்பார்த்துக்கொண்டிருந்

தார்கள் ?

பஸ் நிலையத்தில் இரண்டு சம்பவங்கள். முதல் சம்பவம் தஞ்சாவூர்க்காரனிடமிருந்து பெட்டி பறிக்கப்படுகிறது. பெட்டி திருப்பிக் கொடுக்கப்படுகிறது. இல்லை, தெருவில் எறியப்படுகிறது. பணம் பாதிக்கப்படவில்லை! பத்துக்கு நாற்பது! பணம் இல்லை. ஸாம்பிள் போதைப் பொருளாக இருக்கலாம். இது ஒரு முக்கியமான சாத்தியம். மரத்துண்டு, சோடியம் வகை ரசாயனப் பொருட்கள்.

ம்ஹூம். கணேஷுக்கும் புரியவில்லை. சோடியம் பற்றிப் படி!

**கா**லை எழுந்ததும் நர்ஸிங் ஹோமுக்குப் போன் செய்து வஸந்த்தை விசாரித்தான். தூங்குகிறான் என்று தெரிந்தது. மனம் சற்றுத் தெளிந்திருந்தது. இன்று கோர்ட்டுக்குப் போக வேண்டும். கொஞ்ச நாள் கிணற்றை மறந்துவிட்டுக் கோர்ட்டை கவனிக்க வேண்டும். வஸந்த் பூர்ண குணமாவதற்கு இன்னும் இரண்டு தினங்கள் ஆகலாம். இரண்டு தினங்களுக்கு இந்த விவகாரத்தை மூட்டை கட்டி வைத்துவிடலாம். அதன் பின் யோசிக்கலாம்.

கணேஷ் தன் ப்ரீஃப்கேஸைப் பார்வையிடத் துவங்கினான்.

பத்து மணிக்குக் கோர்ட்டுக்குக் கிளம்புவதற்கு முன் டெலிபோன் அடித்தது.

“கணேஷ்! நா அப்பாதுரை பேசறேன்!”

“ஓ! புரொபஸர்! எப்படி இருக்கீங்க!”

“பரவாயில்லை. வஸந்த்துக்கு உடல் நலமில்லைன்னு இனியா சொல்லிச்சு.”

“பரவால்லிங்க.”

“உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே?”

“இல்லைங்க. இதை விசாரிக்கத்தான் போன் பண்ணிங்களா?”

“உங்க குரல்லே ஆயாசமும் கோபமும் தெரியுது. உங்களுக்கு நிகழ்ந்துபோனது எல்லாம் கேள்விப்பட்டேன். அதற்காக ரொம்ப வருத்தப்படறேன். ஏதோ விளையாட்டா ஒரு கட்டுரையைத் தேடறதில் ஆரம்பிச்சது இவ்வளவு தூரத்திற்குப் போகும்னு கனவிலேயும் நான் நினைக்கலை. நான் எதுக்குப் போன் பண்ண வந்தேன்னா அந்த ராஜராஜன் கிணற்றைப் பற்றி இன்னும் சில சரித்திரத் தகவல்கள் கிடைச்சிருக்கு. அதைப் பத்தி உங்ககிட்டச் சொல்லலாம்னு உத்தேசித்து . . .”

“ப்ரொபஸர்! எனக்கு இப்ப கோர்ட்டுக்குப் போக வேண்டிய அவசரம் இருக்கு. இப்ப நீங்க சொன்னீங்கன்னா எதுவும் புரியாது. சாயங்காலம் வரட்டுமா? ஃபிரீயா இருப்பீங்களா?”

"வாங்க! அதுக்கு முன்னாடி நான் கண்டுபிடிச்ச புதிய தகவலோட சாரத்தை மட்டும் சொல்ல விரும்பறேன். இல்லைன்னா எனக்கு மண்டை வெடிச்சுப்போகும்."

"சொல்லுங்க" என்று கணேஷ் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான்.

"அந்தக் கிணற்றில ஒரு பெரிய செல்வத்தை மறைச்சு வச்சதா சரித்திரபூர்வமா இப்ப தகவல் கிடைச்சிருக்கு."

"செல்வம்னா?"

"நிறைய தங்கங்கள், நாணயங்கள். குடம் குடமா!"

"இஸ் இட்? இன்ட்ரஸ்டிங்! சாயங்காலம் விவரமாச் சொல்லுங்க. தாங்க்ஸ். வெச்சுரட்டுமா?"

கணேஷுக்கு பியட்டின் ஸ்டியரிங்கில் மனம் பதியவில்லை.

குடம் குடமா தங்கக் காசுகள்! இப்போது புரிகிறது. பத்துக் காசுகளுக்கு நாற்பதாயிரம். அதுதான் வியாபாரம் போலும். ராஜராஜன் கிணற்றைத் தோண்டி எடுத்துப் பார்க்கலாம்... தாவாதே! முதலில் பேராசிரியரின் புதிய தகவலைப் பார்க்கலாம்...

**க**ணேஷ் கோர்ட்டில் நுழைந்தபோது தாமதம் ஆகிவிட்டது. அவசர அவசரமாக கருப்பு கவுன் பறக்க காரிடாரில் விரைந்தான். "மிஸ்டர் கணேஷ்! ஐ வாஸ் எபவுட் டு அட்ஜார்ன் தி கேஸ்."

"ஸாரி! ஸாரி! யுவர் ஆனர்... ஒரு ஸிவில் கோர்ட்டுக்கு பேனாமி டைட்டில்களில் ஜுரிஸ்டிக்ஷன் உண்டா என்று மதிப்புக்குரிய நண்பர் கேட்டது எனக்கு வியப்பாக இருக்கிறது. செக்ஷன் 66(1)ஐ மறுபடி பரிசீலிக்க அவரை அழைக்கிறேன். சதத்மான் கான் புல்கர் வழக்கில்...

கோர்ட்டின் பின்னல் பாதைகளில் மாக்னா கார்ட்டா காலத்திலிருந்து வாரிசாக வந்திருக்கும் சட்டப் புத்தகங்களின் சிக்கலான வாக்கியங்களில் கணேஷ் பரிபூர்ணமாகத் தன்னை ஆழ்த்திக்கொண்டு முன் தினம் நடந்த எல்லா சம்பவங்களையும் மறந்துபோனான் கொஞ்ச நேரத்துக்காவது!

**வ**ஸந்த்துக்கு மத்தியானம் பதினொரு மணிக்குள் சரியாகிப் போய்விட்டது. ஆஸ்பத்திரியிலிருந்து டெலிபோன் செய்தான், "பாஸ்! எப்படி இருக்கீங்க?"

"நீ சொல்லுடா."

"பேனாமி கேஸ் எடுத்துட்டாங்களா இல்லை அட்ஜார்ன்

மெண்டா?"

"எடுத்துக்கிட்டாங்க. ஜூரிஸ்டிக்‌ஷனே கிடையாதுன்னு வாதாடறாரு? ஏண்டா வஸந்த்! ஸிக்ஸ்ட்டி ஸிக்ஸ்ல அப்படி ஏதாவது இருக்கா?"

"66(22–இ)யைப் பாருங்க. மெட்ராஸ் ஸ்டேட்டுக்கு அமெண்ட்மெண்ட் இருக்கு."

"பத்தியா? அதை மிஸ் பண்ணிட்டேன். எப்படி இருக்கே? வர முடியுமா? இன்னிக்கு ரெஸ்ட் எடுத்துக்க. பேராசிரியர் போன் செய்தார். அந்தக் கிணத்திலே ட்ரெஷர் இருக்கிறதா இன்னொரு சரித்திரக் குறிப்பு கிடைச்சிருக்காம். சாயங்காலம் வரதாச் சொல்லியிருக்கேன்."

"பாஸ் தனியாப் போகாதிங்க. ஏதாவது ஆபத்துக்கள் நிகழலாம்!"

"மெட்ராஸ்லேயா?"

"சொல்ல முடியாது. வெத்துக் குண்டங்க எல்லா ஊர்லயும் இருக்காங்க. அப்ப பாஸ் ஒரு வழியாப் படம் பளிச்சுன்னு தெரியுது."

"உனக்குத் தெரியுதா?"

"பின்ன? எல்லாரும் கிணத்துல போட்டிருக்கிற தங்கச் சொத்துக்கு அலையறாங்க!"

"அப்படின்னா பத்துக்கு நாப்பதுன்னு என்ன வியாபாரம் அது?"

"அது ஏதாவது சங்கேத பாஷையா இருக்கலாம்."

"பார்க்கலாம். லெட்டஸ் நாட் ரஷ்!"

"எனக்கு ஏதாவது வேலை? நான் ஆஸ்பத்திரியை விட்டு இன்னும் அரை மணில கிளம்பிடுவேன். நர்ஸை மாத்திட்டாங்க. சுத்தளவு ஜாஸ்தியா ஒரு பெரியம்மாவைப் போட்டிருக்காங்க. பார்த்தா எங்க..."

"சரி, சரி. வஸந்த்! எனக்கு ஒரு காரியம் பண்ணு. லைப்ரரிக்குப் போய் சோடியம், அதன் உபயோகங்கள் பற்றி, அதன் இண்டஸ்ட்ரியல் யூஸஸ், கெமிக்கல் யூஸஸ் எல்லாத்தையும் பத்தி ஒரு சின்னக் குறிப்பு தேவை. சுமார் நாலு அஞ்சு பக்கம் போதும். வளவளன்னு எழுதாதே!"

"டன். அப்புறம்?"

"ராரா கிணத்தைப் பத்தி வேறே யாராவது ஆராய்ச்சி செஞ்சு வச்சிருக்காங்களா? இருந்தா என்ன அது? என்ன கண்டு பிடிச்சிருக்காங்க?"

"டன். கிணத்தையே தலைகீழா கவுத்துர்றேன். அப்புறம்?"

"ஒரு வினோதமான கேள்வி. பேராசிரியர் நிஜமாவே சரித்திரப்

பேராசிரியரா. இல்லை ரீலா."

"பாஸ்! என்ன அடி மடியிலேயே கையை வைக்கிறீங்க?"

"எதுக்கும் யுனிவர்சிட்டிக்குப் போய் ஒரு நடை விசாரிச்சுட்டு வந்துரேன்."

"அவரைச் சந்தேகப்படறீங்களா?"

"அவரையும் சந்தேகப்படறேன்."

"நான் உண்டா உங்க பட்டியல்ல?"

"இல்லை. உன்னை எனக்குத் தெரியும். இன்னிக்கு இந்த மூணு விஷயங்களையும் பாத்துரு போதும். நான் கோர்ட்டு முடிஞ்சதும் பேராசிரியரைப் பார்த்துட்டு ராஜேந்திரனைப் போய்ப் பார்க்கலாம்னு இருக்கேன். வஸந்த் இந்தக் கேஸ் எனக்குப் பெரிய சவாலா இருக்கு. பைத்தியமா அடிக்குது. ஒண்ணுக்கொண்ணு சம்பந்தமில்லாத எத்தனையோ விஷயங்கள் இருக்கு. யார் செய்யறா? என்ன செய்யறாங்க? எதுவுமே இல்லாம ஒரே ஒரு பாழுங் கிணறு மட்டும்தான் கான்கிரீட்டா இருக்கு. அதைச் சுத்தி என்னவோ பித்தலாட்டம் நடக்குது. கண்டுபிடிக்கலேன்னா தூக்கம் வராது போல இருக்கு."

"கண்டுபிடிக்காம விட்டர்றதாவது, தா . . . பாத்ரலாம்!"

கணேஷ் மாலை அறைக்குத் திரும்பியபோது அவனுக்கு வந்த கடிதங்களில் மேல் விலாசம் எழுதப்படாத கடிதம் ஒன்று கலந்திருந்தது. பிரித்தால் . . .

"மேல் விவரம் தெரிந்துகொள்ள வேண்டுமா? அருணாவுக்கு வா."

# 18

கணேஷ் டைரக்டரியில் அருணாவைத் தேடினான். அருணா இண்டஸ்ட்ரிஸ், அருணா ஆர்ட்ஸ் தியேட்டர், ஹோட்டல், ஆட்டோமொபைல்ஸ், இவைகளில் எங்கே செல்வது? எழுதினவன் தெளிவாக இன்ன இடத்தில் இன்ன விலாசத்தில் என்று எழுதித் தொலைக்க மாட்டானோ? என்ன இது புதுக் குழப்பம். வஸந்துக்குத் தெரிந்திருக்கலாம். மொட்டையாக அருணாவுக்கு வா என்றால் எங்கே போய்ச் சேர வேண்டும் என்கிற நிழலான விஷயங்கள் எல்லாம் அவனுக்குத்தான் சரியாகத் தெரிந்திருக்கும். அவனைக் கேட்பதற்கு முன் பேராசிரியர் புதுசாகத் தங்கக்காசு என்று புரளி பண்ணுகிறாரே, அது என்ன என்று பார்க்கலாம்.

பேராசிரியர் வீட்டுக்குச் சென்றபோது அவர் ஒரு நோபல் கண்டுபிடிப்பு செய்துவிட்ட பரபரப்புடன் இருந்தார். "வாங்க கணேஷ்! வருவீங்க வருவீங்கன்னு எதிர்பார்த்துக்கிட்டே இருந்தேன். இப்பத்தான் உங்களுக்கு போன் பண்ணேன். அடிச்சிக்கிட்டே இருந்தது."

"என்ன ஸார் விஷயம்? யு ஸீம் எக்ஸைடட்!"

"கணேஷ் இதை உங்ககிட்டச் சொல்லாட்டா என் தலையே வெடிச்சுப் போயிடும் போல இருக்கு. அவங்கள்ளாம் எதுக்காக அந்தப் பாழுங் கிணத்துக்கு அலையறாங்கன்னு இப்பத் தெளிவா தெரிஞ்சு போச்சு. அதுக்காகப் பத்து கொலை கூட அங்க விழும்."

"அதான் சொன்னீங்களே தங்கக் காசுன்னு!"

"காசு மட்டும் இல்லை. இன்னும் எத்தனையோ விஷயங்கள் இருக்கு. இனியா! இனியா!"

"என்னப்பா!" என்று உள்ளே இருந்து வந்த இனியாவைப் பார்த்து கணேஷ், நல்ல வேளை வஸந்த் வரவில்லை என்று நினைத்துக்கொண்டான். வந்திருந்தால் வாயில் விரல் வைத்து 'ஷ்ய்' என்று விசில் அடித்திருப்பான். இனியா அப்படி ஒரு அசாத்திய உடை அணிந்திருந்தாள்.

"அலமாரியில புஸ்தகமும் குறிப்புகளும் வெச்சிருக்கேன். எடுத்துட்டு வாம்மா."

மறுபடியும் ராஜராஜன் கிணறு ஆராய்ச்சியாப்பா? ஏம்பா நடந்த குழப்பங்கள் போதாதா? வஸந்த் அடிபட்டு ஆஸ்பத்திரில இப்பவோ அப்பவோன்னு கிடக்கிறார்ப்பா."

"சும்மாரும்மா. வீட்டுக்குள்ள ஆராய்ச்சி பண்ணிக்கிட்டுருக்கிறதுல ஒருவித ஆபத்தும் கிடையாது."

இனியா அலுத்துக்கொண்டு அலமாரிக்குப் போக, "கணேஷ்! உங்ககிட்டே இதை எல்லாம் காட்டறதுக்கு முன்னாடி ஒரு கண்டிஷன்" என்றார்.

"சொல்லுங்க."

"அந்தக் கள்ளக் காசு ஒரு காசு எனக்கு வேணும். ஒரே ஒரு காசு போதும் ஸாம்பிளுக்கு."

"முதல்ல அது என்ன காசு சொல்லுங்க."

இனியா நோட்டுப் புத்தகத்தையும் – புத்தகத்தையும் எடுத்து வர அதைப் பேராசிரியர் ஆவலுடன் பிடுங்கிக்கொண்டு பரபரவென்று பிரித்து, "இத பார் மெய்கீர்த்தி தொடக்கம். ராஜராஜன் காலத்தது. 'காந்தளூர்ச்சாலை களமறுத்தருளிய'ன்னு ஆரம்பிக்கிறது பாரு" என்றார்.

"ப்ரொபஸர்! ரொம்ப டெக்னிக்கலா வேண்டாம். நீங்க ஆராய்ச்சி பண்ணியிருந்தீங்கன்னா அதில ஆதாரப்பூர்வ விஷயங்கள் இருக்கும். அதைப் பத்திச் சந்தேகம் எனக்கில்லை."

அவன் சொன்னதைப் பேராசிரியர் சிறிதும் கவனிக்காமல், "பூமருவிய பொழிலேழும் பூமருவிய திருமாதும் இரண்டாம் ராஜராஜனைக் குறிக்கிறது. அண்டர்ஸ்டாண்ட்?"

'அடடா வஸந்த் இல்லையே. தனியாக மாட்டிக்கொண்டு விட்டோமே' என்று எண்ணினான்.

"கணேஷ் கவனமாகக் கேளுங்க. சோழர்களுடைய கல்வெட்டுக்கள் ஒரு ஊரைக் குறிப்பிடறபோது எந்த மண்டலத்தை, எந்த கூற்றத்தைச் சார்ந்ததுன்னு தெளிவாக சொல்லும். ராஜ ராஜன் ஆட்சிக்கு வந்தப்புறம் நாட்டைக் கிளீனா அளந்து வகை செஞ்சான். அதனால இடத்தைக் கண்டுபிடிக்கறது ரொம்பவும் சுலபம். கூழமந்தல் உக்கல் பிரதேசத்தில் இருக்கிற எல்லா கல்வெட்டுக்களையும் நான் பூரா பிரதியெடுத்து ஆராய்ச்சி செய்திருக்கிறேன். எல்லாத்தையும் ஒண்ணு விடாமத்தான் எடுத்தேன். தீஸிஸ் எழுதறபோது ஒரே ஒரு இன்ஸ்கிரிப்ஷன் விட்டுப்போயிருக்கு. மறுபடி என் குறிப்புக்களைச் சமீபத்திய சம்பவங்களுக்கு அப்புறம் சரிபார்த்ததிலதான் விட்டுப்போயிருக்கிறது தெரிய வந்தது. அந்தக் கல்வெட்டு வாசகங்கள் என்ன தெரியுமா கணேஷ்? நீங்க அதிர்ந்து போயிருவீங்க. படிக்கிறேன் கேளுங்க."

'உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார்க்குச் செய்த வீரபட்டம் ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் முந்நூற்று நாற்பத்து முக்கழஞ்.. தடவிக் கட்டின பளிங்கு.. கழஞ்சே மஞ்சாடியும் பொத்தி முன்றினால் நிறை மஞ்சாடியும் பளிங்கு வயிரம் பத்தினால்.. திருப்பட்டிகை முதலியனவும்...?' அப்புறம் கேளுங்க.

'கண்டநாண் ஒன்றிற் கட்டின மாணிக்கம் பதினைஞ்சும் பதினைஞ்சும் மரகதம் பதினாறும் வயிரம் இருபத்தெட்டும் தைத்த முத்து ஒப்பு முத்தும் குறுமுத்தும் பாட்டமும் ஆக முத்து நாற்பதும் உட்பட நிறை நூற்று எழுபத்தின் கழஞ்சேய் எழுமஞ்சாடிக்கு விலை ராஜராஜன் மாடை ஐஞ்ஞூறு உக்கல் ராஜராஜன் கிணற்றிலிடப்பட்டது.'

பேராசிரியர் பிரகாசமாகப் "பாத்தீங்களா?" என்றார்.

"ஒரு அட்சரம் புரியலை ஸார்! முதல்ல கழஞ்சுன்னா என்ன?"

"தங்கத்தை நிறுக்க ஒரு அளவு அது. பலம், வராகன், எடை, கழஞ்சு, குன்றி!"

"ஈஸி! ஈஸி! கன்ஃப்யூஸ் பண்ணாதீங்க! எப்படி இதில காசைப் பத்தி ஒண்ணையும் காணமே?"

"காணமா? கடைசி வரியைப் பாருங்க! ராஜராஜன் மாடை ஐநூறு உக்கல் ராஜராஜன் கிணற்றிலிடப்பட்டது. என்ன அர்த்தம்?"

"என்ன அர்த்தம்?"

"மை டியர் கணேஷ்! மாடைன்னா பொற்காசுன்னு பொருள். ராஜராஜன் காலத்துப் பொன் காசு தமிழ்நாட்டில் கிடைச்சிருக்கு. ஒரு பக்கத்தில புலி போட்டிருக்கும். அப்புறம் ரெண்டு மீன் வில். அதுக்குக் கீழே ராஜராஜசோழன் நாகரி எழுத்தில இருக்கும். பின்பக்கத்திலயும் அதே போல இருக்கும். ரொம்ப அரிதான காசு மாடை!"

கணேஷ் சிந்தனையில் இருந்தான்.

"இப்ப புரியுதா? அந்தக் காசுக்கு எத்தனை பேர் அலைஞ்சாங்கன்னு. ஏன்?"

"ப்ரொபஸர்! திஸ் இஸ் வெரி இன்ட்ரஸ்டிங்! இப்ப அந்தக் காசு கிடைச்சா?"

"அரசாங்கத்துக்குப் போகணும்."

“மதிப்பு எவ்வளவு இருக்கும்?”

“பொன்னாலான காசு! அதுக்கு மதிப்பை விடுங்க. அந்த காலத்துச் செப்புக் காசு கிடைச்சாலே இப்ப அதுக்கு மதிப்பு எவ்வளவுங்கிறீங்க கணேஷ்? இது ரொம்பப் பெரிய விஷயம். எல்லோரும் கிணத்துல காசைத் தேடிட்டு அலைஞ்சிருக்காங்க. புரியுது. இதில வெளிநாட்டுக் கோஷ்டி கூடக் கலந்திருக்கலாம்.”

“கிணத்துக்குள் காசைப் போட்டாங்களா? ஆச்சரியமா இருக்கே?”

“அதைப் பத்தி ஒரு கல்வெட்டு இருக்கு! அது பழங்காலத்து வழக்கம். நம்ம கலீக் ராமச்சந்திரா அதில பிஎச்.டி. பண்ணியிருக்கார். காட்டட்டுமா?”

“இல்லை ஸார். இன்னிக்கு ஜீரணிக்கிறதுக்கு இது போதும்னு தோணுது. ஆனா ஒரு வழியா ஸினேரியோ புரியுது. கிணறு கிணறுன்னு ஏன் அலைஞ்சாங்கன்னு அர்த்தம் விளங்குது ...”

“அந்தக் காசுகளை மட்டும் நாம கண்டெடுத்துட்டோம் ..”

“இன்னும் கண்டெடுத்திருக்க மாட்டாங்கன்னு நினைக்கறீங் களா?”

“கண்டெடுத்திருக்கக் கூடாதுன்னு தெய்வத்தை வேண்டிக் கிறேன் கணேஷ். நாம போலீஸ் உதவியோட உடனே அந்தக் கிணற்றை ஸீல் பண்ணிடறதுதான் நல்லதுன்னு தோணுது.”

“ஏன் ஸார் இதுக்கு முந்தி இந்தக் கல்வெட்டை யாரும் பார்த்துப் பணத்தை அபேஸ் பண்ணியிருக்க மாட்டாங்களா?”

“இந்தக் கல்வெட்டு ரகசியமா அடிச்சுப் புதைச்சு வெச்சிருந்த கல்வெட்டு! இந்த மாதிரி காசு பற்றின ரகசியம் அதில இருக்கிற தினாலே இந்த மாதிரி கல்வெட்டுக்களை மறைவான இடத்தில தான் வெட்டுவாங்க, கள்ளர் பயத்தினால. டட்டாங்கமன்னுடைய சமாதியைப் பத்திக் கேள்விப்பட்டிருப்பீங்களே. அதுக்குள்ள திருடர்கள் யாரும் போக முடியாதபடி வழிகளையெல்லாம் மறைச்சு வெச்சிருப்பாங்களாம். அதுபோல இது மறைச்சு வெக்கப் பட்ட கல்வெட்டு. நான்தான் இந்த சீரிஸையே கண்டுபிடிச்சு டிரான்ஸ்க்ரைப் பண்ணி அந்த ஸ்லாபைக் கூட ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்டிலே ஒப்படைச்சிருக்கேன்.”

“ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்ட்! ஸார் குத்துப்பட்டு செத்தானே கூழமந்தல் ஆசாமி? அவங்கூட ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்ட் ஆசாமிதான்.”

“பாத்தீங்களா? பிளாட் உருவாகறது கணேஷ்! எனக்கு இந்தத் துப்பறியற வேலைகளில் எல்லாம் இஷ்டம் இல்லே. எனக்கு வேண்டியது அந்தக் காசுகளிலே ஒண்ணே ஒண்ணு! ஸ்பெஸி மனுக்கு. ராஜராஜன் காலத்தில பொறிச்ச காசை என் கையால

தொட்டுப் பார்த்தாக் கூடப் போதும்! அதுவே எனக்கு திரில்லிங்கா இருக்கும்."

"பார்க்கலாம் ஸார். ஏற்கனவே லேட்டுன்னு நினைக்கிறேன். இப்ப போய் டி.ஐ.ஜி. ராஜேந்திரனைப் பார்க்கப் போறேன். அவர்கிட்ட விவரம் எல்லாம் சொல்றேன். நீங்க சொல்ற மாதிரி உடனே அந்த உக்கலுக்குத் தகவல் சொல்லிக் கிணத்தை சீல் பண்ணிடச் சொல்லிடலாம். நாங்க போறவரைக்கும் யாரையும் கிட்டவிட வேண்டாம்னு ஆணை கொடுத்துறலாம். அதான் முந்திச் செய்யவேண்டியது. எனக்கென்னவோ ஹோப் இல்லை. பார்க்கலாம். வரட்டுமா? இனியா! நான் வரட்டுமா?"

கணேஷ் உடனே அறைக்குச் சென்று ராஜேந்திரனுக்கு போன் செய்தான். அவர் இல்லை என்று தெரிந்தது. எங்கே போயிருக்கிறார் என்று சொல்லத் தயங்கினார்கள். வந்தால் கணேஷ் போன் பண்ணியதாகத் தகவல் தெரிவிக்கும்படி மெஸேஜ் கொடுத்துவிட்டு வஸந்த்தை அடித்தான்.

"என்ன பாஸ்?"

"பொருள் என்னன்னு தெரிஞ்சிருச்சு."

"சிலைதானே?"

"இல்லை. காசு! தங்கக் காசு!"

"சில்லறையா? அட! எவ்வளவு பெறும்?"

"வஸந்த் கழஞ்சுன்னா என்னன்னு தெரியுமா உனக்கு?"

"கழஞ்சா?"

"ஆமா, கழஞ்சு!"

"கழண்டு இல்லியா? அல்லது 'குழஞ்சு'ன்னு ஒரு பிரயோகமும் உண்டு. ஆமா என்ன இது திடீர்னு பழந்தமிழ்ல விளையாடறீங்க?"

"கிணத்துல ஐந்நூறு காசைப் போட்டிருக்காங்க. அத்தனையும் பொன்னு! அதுக்குத்தான் ஜனங்க இந்த அலை அலையுது."

வஸந்த் விசிலடித்தான். "இப்பப் புரியுது பாஸ்."

"உடம்பு எப்படி இருக்கு?"

"அதை ஏன் கேக்கறீங்க? லேகியம், ஸ்பெஷல் பஸ்பம் மிக உயர்ந்த ரகம் ஒரு செட் தொண்ணூறு ரூபாய்க்கு அடிக்கலாம் போல உடம்பு பூரா ஒரு இயலாமை, ரத்தக் குறைவு, உஷ்ணம், சோம்பல், தளர்ச்சி, ஆயாசம், மனத் தடுமாற்றம்!"

"திமிரு! வேற ஒண்ணும் இல்லை உனக்கு!"

"இல்ல பாஸ்! மருத்துவ நிபுணர்களின் கருத்துப்படி."

"போது போகாம விளம்பரங்களை எல்லாம் படிச்சுக்கிட்டிருக்

கேன்னு தெரியுது. காலைல ஆபீசுக்கு வந்துரு."

"நம்ம கேஸ் விஷயமா ..."

"அட்ஜர்ன்மெண்ட் வாங்கிட்டேனே."

"அதில்ல பாஸ். பேராசிரியர் கிட்ட நம்மப்பத்தி சுக வாக்கியங்கள் ஏதாவது பேசினீங்களா? இந்த வாரம் வார பலன்ல 'சரசங்கள், பொழுதுபோக்கு, கேளிக்கைகள் என்று பொழுது உல்லாசமாகச் செல்லும்; ஒரு முக்கியமான முதியவரின் உறவு கிட்டும்'னு போட்டிருக்கே என்ன அர்த்தம்?"

"மண்ணாங்கட்டி! உனக்கு உடம்பு சரியாப் போச்சு. சும்மா கதை பண்ணிட்டு இருக்காதே. ஏகப்பட்ட வேலை இருக்கு."

"மறுபடி கிணத்தைத் தோண்டப் போறமா? இங்க இருந்தே டிபன் கட்டிண்டு பிளாஸ்கில தண்ணி எடுத்துண்டு போயிறலாம் பாஸ்."

"மறுபடி நிச்சயம் அங்கே போக வேண்டியிருக்கும். விஷயம் ரொம்பப் பெரிசு!"

"தங்கக் காசு."

"பேராசிரியருக்கு அதில ஒரு காசு கொடுத்திட்டா உனக்கு அடுத்த முகூர்த்தத்திலயே இனியாவைக் கட்டிக் கொடுத்துட்டு உன் மூஞ்சிக்கு வரதட்சிணை வேற கொடுப்பார்."

"அப்ப இப்பவே வரட்டுமா?"

"காலைல வந்தாப் போதும். இனியா இன்னிக்குப் பிரமாதமா டிரஸ் போட்டுண்டிருந்தா."

"வெறுப்பேத்தறீங்களா?"

"பார்த்த உடனே எனக்கே ஒரு மாதிரியா இருந்தது."

"என்ன டிரஸ்? வெய்ட்! சொல்லாதீங்க. ராத்திரி பூரா ஒத்தெல்லோ மாதிரி பெருமூச்சு விட்டுக்கிட்டு இருப்பேன்."

"வளவளன்னு பேசாதே. ஒரு காலை எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்."

"நான் வேணா பொடி நடையாப் போய் அவளைப் பார்த்து விசாரிச்சுட்டு வந்து படுத்துறவா?"

"டிரஸ்ஸைக் கழட்டியிருப்பா!"

போனைச் சிரித்துக்கொண்டே வைத்ததும் ராஜேந்திரனிடமிருந்து கால் வந்தது.

"என்ன கணேஷ், என்ன விஷயம்? ஸி.எம். மீட்டிங் போயிருந்தேன்."

"ஸார் உக்கல்ங்கிற கிராமத்தைப் பத்தித் தெரியுமா உங்களுக்கு?"

"உக்கல்! கேள்விப்பட்டாப்பல இருக்கே.. இருங்க. வடார்க்காடு மாவட்டத்தில ..."

"தேர் யூ ஆர்! அங்க நான் நேற்றைக்குப் போயிருந்தேன் சில விநோத சம்பவங்கள் எல்லாம் நடந்தது."

"அப்படி நடக்கலைன்னா நீங்க ஏன் அந்தக் கிராமத்துக்குப் போறீங்க? அதென்ன அந்தக் கொலையுதிர் காலத்தை அப்படி முடிச்சுட்டீங்க?"

"அது சமாசாரம் வேறங்க! அப்புறம் சொல்றேன். இப்ப ராஜராஜன் கிணத்தைப் பார்க்கலாமா?"

"என்ன கிணறு?"

"ராஜராஜன்"

"ஏதாவது எண்ணெய்க் கிணறா?"

"தெரியலை. ஆனா நாட்டிலே இருக்கிற பாதிக் கேடிங்க அதைச் சுத்திக்கிட்டு இருக்காங்க."

"அப்படியா? இண்ட்ரஸ்டிங்! நடந்ததைச் சொல்லுங்க."

**சொ**ன்னான். பேராசிரியரின் சரித்திர ஆராய்ச்சிக் கட்டுரையில் ஆரம்பித்து வஸந்த்தின் பல்லாவரப் பயணம், உக்கல் கத்திக்குத்து, சதாசிவம் விவகாரம், உணவில் விஷம், அந்த விநோத வியாபாரங்கள், திரும்பி வந்தது, பேராசிரியரின் சமீபத்திய கண்டுபிடிப்பு ...

ராஜேந்திரன் அவன் முடித்துக் கொஞ்ச நேரம் கழித்து "விஷயம் ரொம்பச் சிக்கலா இருக்கு. பார்ட்டி பெரிசுன்னு தோணுது. காசு, அதுவும் தங்கக் காசு, பழங்காலத்து தங்கக் காசு. பழங்காலத்து தங்கக் காசுன்னா ரொம்பப் பேர் அலையறதில ஆச்சரியமில்லை. நான் உடனே அந்தக் கிணத்தைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யறேன். கம்ப்ளீட்டா ப்ரொட்டெக்ட் செய்துறலாம். கவலைப்படாதீங்க. ஆனா நீங்க சொல்ற மாதிரி பொருள் பறந்து போயிருக்க வாய்ப்புக்கள் அதிகமா இருக்கு. இத்தனை நேரம் சும்மா விட்டிருக்க மாட்டாங்க. அண்டை மாநிலங்களிலயும் சொல்லி வைக்கணும். காலைல பார்க்கலாம்."

அவருடன் பேசி முடித்ததும் மறுபடி டெலிபோன் ஒலித்தது. எடுத்தால் .....

"தூரத்தில் இருந்து உன்னைப் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன் பிரதர்! வரன்!"

# 19

கணேஷ் உடனே உஷாராகி டெலிபோனைத் தட்டிப் பார்த்தான். அந்த முனைக்காரன் கிட்டத்தில் இருக்க வேண்டும் என்று தோன்றியது. சற்று நேரம் கேட்ட டயல் டோன் வெட்டுப்பட்டு டெலிபோன் மவுனமாகியது. வெறும் காற்றுத்தான் கேட்டது. வெளியே யாரோ இணைப்புகளைத் துண்டித்துவிட்டார்கள். கணேஷ் வாயிற் கதவைப் பார்த்தான். உள்ளே தாளிட்டிருந்தது. என்ன செய்யலாம்? இரு சாத்தியக் கூறுகள் . . . கதவைத் திறந்து கொண்டு பத்திரத்தை நோக்கி ஓடிவிடலாம். இல்லை காத்திருந்து யார் வருகிறார்கள் என்று பார்க்கலாம். முதல் சாத்தியத்தில் பத்திரம். இரண்டாவது சாத்தியத்தில் துடிப்பு.

வேண்டாம். தனியாக இருக்கும்போது அசட்டுத் தைரியம் வேண்டாம். வஸந்த் இருந்தால் கதை வேறு. இப்போது மணி ஒன்பது. இந்தச் சீக்கிர ராத்திரியில் தைரியமாக உள்ளே நுழைந்து விடுவார்களா என்ன? மெல்ல வாயில் கதவை அணுகி அதன் தாளைத் திறக்க முற்படும்போது வெளியே தீர்மானமான, தெளிவான காலடிகள் கேட்டன.

வருகிறான். கதவு தட்டப்பட்டது. சலனமில்லாமல் நின்றான். ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கலாம். வந்திருப்பது எத்தனை பேர்?

ஸன்னமாகத் திரைச்சீலையை விலக்கி எட்டிப் . . .

கொத்தாக அவன் காலரை இறுக்க ஒரு ஜன்னல் கரம் பிடித்து மூர்க்கத்தனமாக இழுத்து ஜன்னலுடன் ஒட்ட வைத்தது. "ஜன்னலுக்கு வருவே! எட்டிப் பாப்பே! தெரியும்! திறக்கிறியா மாப்பிள?"

கணேஷுக்கு நாக்கு உலர்ந்தது. பேச முடியாமல் மென்னியை இறுக்கியது. மூக்கு கம்பி மேல் பதிந்து சப்பையாகியிருந்தது. "ம்! ம்! திற'றேன்" என்றான் சிரமத்துடன்.

"ரொம்ப டைம் வேஸ்ட். பண்ணாதே ராஜா! உங்கிட்ட காரியம் இருக்கு. சீக்கிரம். இல்லாட்டி கதவை ஒடப்போம்."

"திற'றேன். திற'றேன்."

கை அவனை விடுவித்து அவசியமில்லாமல் ஒரு தள்ளு தள்ளியது.

கணேஷ் தன் இழுப்பறையைத் திறந்து பார்த்தான். ஆயுதம்! ஆயுதம்! கத்தி, ஸ்குரூ டிரைவர், ஏதாவது, ஏதாவது! எப்போது கடைசியாகச் சண்டை போட்டோம்? டில்லியில்! வஸந்த் வந்த பின் சண்டைக்குச் சந்தர்ப்பமே இல்லை.

"என்னடா லேட்டாவுது?"

"வரேன், வரேன்."

வாயிற் பக்கம் சென்று லேசாகத் திறந்து பார்த்தான். இரண்டு ஜோடிக் கால்கள் தெரிந்தன. கதவு வேகமாகத் தள்ளப்பட்டு இருவரும் தம்மைத் திணித்துக்கொண்டு மூடினார்கள். இருவரும் சுத்தமாக கணேஷை விட இருபது இருபத்தைந்து பவுண்டு கனமான ஆசாமிகள். ஒருவன் சூயிங் கம்மோ எதுவோ மென்று கொண்டு, கணேஷை உடனே ஏர்ப்போர்ட்டில் போல் ஆராய்ந்தான். மற்றவன்தான் பேசினான். "ஏதாவது விஷமம் செஞ்சே, தீத்துருவோம்!" வரிவரியாகப் பனியன் போட்டிருந்தான்.

"விஷமம் பண்ண எனக்கு என்ன பைத்தியமா, சொல்லுங்க. விஷயம் என்ன சொல்லுங்க. என்னால ஏதாவது உங்களுக்கு ஆக வேண்டியது இருக்கா?"

"அதை நீதான் சொல்லணும்."

"என்ன சொல்லணும்?"

"உனக்கு என்ன தெரியும்? அதைச் சொல்லு."

"எதைப் பத்தி?"

"இத பாரு, பாசாங்கு பண்ணிக்கிட்டு விளையாடிக்கிட்டிருக்க நேரமில்லை. பளிச்சுன்னு சொல்லு. என்ன தெரியும்?"

"எதைப் பத்தின்னுதானே கேக்கறேன்."

தலைவன் கணேஷின் அருகில் வந்து பளீர் என்று கன்னத்தில் அறைந்தான். விண் என்று மண்டைக்குள் அது ஒலித்தது.

"எதுக்காக அடிக்கிறீங்க; சொல்லிட்டு அடிங்க."

"சொல்லு."

"என்ன கேக்கறீங்கன்னே தெரியலியே. சொல்லு சொல்லுன்னா என்னத்தை சொல்லறது?"

"உனக்குத் தெரிஞ்சதை எல்லாம் கக்கு."

"எனக்கு ஒண்ணுமே தெரியாது."

சூயிங்கம் மறுபடி ஓங்க, "இரு பெரியசாமி. மயிலே மயிலே இறகு போடுன்னா போடாது."

கணேஷ் சற்றுக் கலவரத்துடன் பார்த்துக்கொண்டிருக்க, அவன் தன் உள் பெல்டிலிருந்து எதையோ எடுத்து 'கிட்டக்' என்றான். ஒரு கத்திமுனை பிறந்தது. "பாத்தியா ஷெஃபீல்டு கத்தி. கிட்டக்க பார்க்கிறியா?" மற்றவன் கணேஷைப் பிடித்துக் கொள்ள அவன் அந்தக் கத்தியின் ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் பளபளப்பை நிதானமாக கணேஷின் புருவத்தின் மேல் ஓட்டிக் காட்டினான்.

"கண்ணைக் குத்திரலாமா பெரியசாமி?"

"வேண்டாம்" என்றான் கணேஷ் தீர்மானமாக.

"அப்ப பதில் வருமா பெரியசாமி?"

"எனக்குத் தெரிஞ்சதைச் சொல்றேன். நீங்க ராஜராஜன் கிணற்றைப் பத்தித்தான் கேக்கறீங்கன்னு அனுமானிக்கிறேன். அதைப் பத்தி எனக்குத் தெரிஞ்சதெல்லாம் இவ்வளவுதான். கிணத்துக்குள்ளே பழங்காலத்துப் பொற்காசுகள் நிறைய போட்டிருக்காங்க. அதன் தற்போதைய மதிப்பு மிக மிக அதிகமாக இருக்கும். உக்கல் கிராமத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எல்லாம் இதனோட சம்பந்தப்பட்டதுதான். இதை யாரு செய்யறாங்க, யார் நடத்திக் காட்டறாங்க, இந்த விவரமெல்லாம் எனக்கோ போலீசுக்கோ கூட இதுவரை தெரியாது."

"கிணத்துல என்ன இருக்கு?"

"புதையல்! தங்கக் காசுகள்!"

"அது பற்றிச் சரித்திரக் குறிப்புகள் இருக்கு. நானே பார்த்தேன். ராஜராஜ சோழன் காலத்துக் காசு."

"வேற ஏதும் கிடையாதா?"

"வேற நிறையப் பாசித் தண்ணி இருக்கு!"

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். "பாத்திங்களா தெரியுது இவனுக்கு! டேய்! முழு விவரத்தையும் சொல்லிடு. இல்லை கிழிச்சுப் போட்டுருவேன்."

"அவ்வளவுதான் எனக்குத் தெரியும்."

"பார்த்துறலாம் பெரியசாமி புடீ!"

முதல் மூர்க்கன் அவனைக் காட்டுத்தனமாக நாற்காலியுடன் அழுத்திப் பிடிக்க, மற்றவன் விருட்டென்ற கீறலில் கணேஷின் கன்னத்தைத் தொட்டுவிட்டான். முதலில் வலிக்கவில்லை. ஆனால், சட்டையில் சொட்டுச் சொட்டாக ரத்தம் கசிவது உடனே தெரிந்தது. கணேஷ் திடுக்கிட்டான். என்னடா இது வம்பில் மாட்டிக்கொண்டுவிட்டோம். இவர்கள் மனத்தில் என்னவோ நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். பதில் அவர்கள் நினைத்திருக்கும் வடிவில் வரும்வரை என்னை விடப் போவதில்லை. தர்ம சங்கடம்!

"அடுத்த வெட்டு இன்னும் ஆழமா போட்டுறலாமா வக்கீலய்யா."

"வேண்டாம் வேண்டாம்."

அவன் ஓங்கிக் கத்தியை மறு வீச்சுக்குத் தயார் செய்யும்போது கணேஷ் ஒரு பிரம்மப் பிரயத்தனமாக எழுந்திருக்க முற்பட்டு உடனே அடிக்கப்பட்டு பிடிக்கப்படாமல் தப்பித்து உருண்டு உடனே எழுந்து ஓடினான். இருவரும் கவனமாக அவனையே பார்த்துக்கொண்டு வந்தார்கள். "தப்பிச்சு ஓடிடுவிங்களா ராஜா?"

கணேஷ் வாயிற் கதவைப் பார்த்தான். அந்தப் பக்கம் சான்ஸே இல்லை. கத்திப் பார்க்கலாம் என்றால் ஒன்று கிடக்க ஒன்று செய்துவிடுகிறார்கள். கன்னத்தில் இன்னும் ரத்தம் வடிய பின் பக்கத்துக் கதவு திறந்திருக்குமா என்று யோசித்தான். இல்லை. பூட்டி சாவி பாத்ரூம் ஆணியில் மாட்டியிருக்கும். அதற்குள் வந்து விடுவார்கள். கணேஷ் சரேலென்று பாய்ந்து விளக்கை அணைத்தான். "பெரியசாமி! டிரிக் பண்றான். வாசக் கதவை விடாதே! அங்கேயே இரு. அந்த இடத்தை விட்டு நகராதே."

கணேஷ் தெரு விளக்குகளைச் சபித்தான். அவர்கள் இருவரும் உலவும் அவுட்லைன் தெரிந்தது. அதேபோல் நானும் அவர்களுக்குத் தெரிவேன். அவன் தொடர்ந்து நேர்த்தியாக நெருப்புக் குச்சிகளைப் பற்ற வைக்கப் பற்ற வைக்க மற்றவன் சிகரெட் லைட்டரை இயக்க கணேஷ் தெரிந்த மூக்கில் சொட்டேல் என்று குத்திவிட்டு இடம் மாற்றிக்கொண்டான். மூக்கு உடைந்திருக்க வேண்டும். "பெரியசாமி! அடிச்சுட்டான்" என்றான். "அங்கேயே இரு. இவ்னை இன்னிக்குச் சமாதி பண்ணிட்டுப் போயிடலாம்." இப்போது அவன் தடவித் தடவிச் சுவரிலிருந்த சுவிட்சைக் கண்டு பிடித்துப் போட்டுவிட அறையில் மறுபடி வெளிச்சம் பரவியது. கணேஷ் கையில் பெரிய மேஜை விளக்கைக் குறி பார்த்து ஓங்கிக் கொண்டிருந்தவன் அப்படியே நின்றான். "போடுறா போடு. மூக்கில குத்தின இல்ல. இப்ப குடலைக் கிழிக்கிறேன் பாரு."

"வேண்டாம் வேண்டாம். எல்லாமே சொல்லிடறேன்" என்றான் கணேஷ்.

"அப்படி வா வழிக்கு" என்று மூக்கில் கர்ச்சீப்பை வைத்துக் கொண்டே,

"பெரியசாமி! லைட்டாண்டையே இரு. ஆசாமி சாலாக்கு. பார்த்துக்கிட்டே இரு. நகர்ந்தான்னா சொல்லிடு, கிழிச்சுர்றேன். டேய்! கிழிக்கத்தான் போறேன். மூக்கில அடிச்சில்ல?"

"தெரியாமப் பட்டுடுத்து."

"படும். இரு உன்னை ... முதல்ல பேசு! விஷயத்தைச் சொல்லு."

கணேஷ் உட்கார்ந்தான் – தப்பிக்க ஐடியா உதயமாகும் வரை காலம் தாழ்த்த வேண்டும். என்ன செய்யலாம்? ரீல் விட்டுப் பார்க்கலாம்.

"கிணத்தில மட்டும் இல்லை ரகசியம்."

"பின்ன எதில?"

"சதாசிவம் இல்லை!"

"அவன் ஏதாவது சொன்னானா?"

"சதாசிவம் இல்லாமயே தெரிஞ்சுக்கிட்டோம்... பத்துக்கு நாப்பது குடுத்து வாங்கத்தான் நாங்க வந்தோம். சரியான பார்ட்டி கிடச்சுச்சு. பத்துக்கு அம்பது கேட்டாங்க..."

"சே! அதுக்கு யார் வருவாங்க?"

"அதான!"

"நீ என்ன கேட்டே?"

"முப்பது."

"அது சரி. முப்பதுன்னா ஆள் வருதா?"

கணேஷ் உற்சாகத்துடன் "அதுக்குத்தான் அருணாவுக்கு வரலாம்னா அதுக்குள்ள நீங்களே வந்துட்டிங்க" என்றான்.

"முதலாளிதான் பயலுக்கு எவ்வளவு தெரியும்னு தெரிஞ்சுட்டு வரச் சொன்னாரு."

"எனக்குத் தெரிஞ்சதெல்லாம் வியாபாரம் மட்டும்தான். என்ன ஏது எல்லாம் தெரியவே தெரியாதுன்னு சொல்லிடுங்க."

"முக்கியமா அந்த விஷயம் தெரியுமா?"

"எந்த விஷயம்?"

"அதை நீ சொல்லணும்."

பெரியசாமி முதல் முறையாகப் பேசினான். "அண்ணே இது வரைக்கும் விஷயத்தை விடாமப் பேசியிருக்கான் பாத்திங்களா. முதலாளிக்கு என்ன பதில் சொல்வீங்க?"

"பழுது பாக்காம பெரிய விஷயத்துக்கு வர மாட்டான் போலத் தெரியுது. என்ன செய்யலாம்?"

"முதலாளி சொன்ன ரெண்டாவது விஷயம்தான்."

"என்னது!" என்றான் கணேஷ்.

"பெரியசாமி வா! சுருக்கமா முடிச்சுட்டு வீட்டுக்குப் போயிர லாம். வக்கீலு! உக்கல் கிராமத்துல கோயில் வாசல்ல அந்த ஆளுக்கு என்ன ஆச்சு தெரியுமா?" அவர்கள் இருவரும் அவனை நெருங்க, கணேஷ் இப்போது இருவர் கையிலும் கத்தி இருப்பதைப் பார்த்தான்.

"அய்யோ! நான் இன்றைக்குக் காலி!"

அவர்கள் சேதம் பண்ணும் உத்தேசத்துடன் விரோதத்துடன் நெருங்க கணேஷ் மறுபடி உரக்கக் கத்திவிடலாமா என்று யோசித்தான். பிரயோசனமில்லை. கழுத்தைக் கிழிக்க ஒரு பத்து பதினைந்து செகண்டுக்கு மேல் ஆகாது. வேறு என்ன செய்வது?

குலதெய்வத்துக்கு வேண்டிக்கொள்ளலாம் என்றால் குலதெய்வம் என்ன என்று சட்டென்று ஞாபகம் வரவில்லை. இருங்க இருங்க என்று அவர்களைத் தடுக்க முயற்சி செய்து, செய்யக்கூடியது எதுவும் தோன்றாத நிலையில் அந்தக் கத்திமுனை விசுவரூபம் எடுத்து அவன் பார்வை முழுதும் வியாபிக்க . . .

வாசல் கதவு தட்டப்பட்டது.

சட்டென்று நின்றார்கள். "பெரியசாமி, யாரு பாரு" என்றான் பெரியசாமி அல்லாதவன்.

"பாஸ்! பாஸ்!" என்று வஸந்த்தின் குரல் கேட்டது. கதவு பொறுமை இல்லாமல் 'தட்தட்' தட்டப்பட்டது.

"பேசாதே!" என்றான் கத்திக்காரன்.

என்னது? டெலிபோனானா அவுட் ஆஃப் ஆர்டர்னாங்க! ஆள் உள்ளே இருக்காப்பல இருக்கு! விளக்கு எரியுது. நிழலாடுது . . .

"பாஸ்! ஏதாவது கெட்ட காரியம் பண்ணிக்கிட்டு இருக்கீங்களா? யாராவது சில்லறை உருப்படி . . . சேச்சே அப்படிப்பட்ட ஆசாமி இல்லையே நீங்க. ரிஷ்ய சிருங்கராச்சே. திறங்க பாஸ்!"

"ஷ்! பேசப்படாது. பேசினா நாக்கைக் கிழிச்சிடுவேன்." கத்தி மிக மிக அருகில் பளபளத்தது.

"இப்பத் திறக்கப் போறீங்களா, கதவை உடைக்கட்டுமா?"

கணேஷ் அவனைப் பார்த்தான். அவன் சற்றுக் குழப்பத்தில் இருப்பது தெரிந்தது. இப்போது அவர்கள் விபரீதமாக ஏதும் செய்ய மாட்டார்கள். வெளியே போக ஒரே வழிதான் இருக்கிறது. அதை வஸந்த் அடைத்துக்கொண்டிருக்கிறான். 'சீக்கிரம் ஜன்னல் வழியே எட்டிப் பாரேன். முட்டாளே!"

பெரியசாமி கதவருகே சென்று "யாரு" என்றான் அதட்டலாக.

"அது யாரு அசரீரி?"

"சொல்லு! சொல்லுடா. போச்சொல்லு. நான் பிஸியா இருக்கேன். அப்புறம் வான்னு சொல்லு" என்றான் கத்தி, சின்னக் குரலில்.

"வஸந்த்! பிஸியா இருக்கேன் அப்பறம் வா!"

"கட்சிக்காரங்களோட இங்கே பேசிக்கிட்டிருக்கேன்னு சொல்லு."

"கட்சிக்காரங்களோட பேசிக்கிட்டிருக்கேன். காலைல ஏழே காலுக்கு வந்தா போதும் . . ."

"சரி பாஸ்" என்றான் வஸந்த். ஏழே கால் என்றால் எஸ்.ஓ.எஸ். என்று அவர்கள் சங்கேத பாஷையில் அர்த்தம்.

பெரியசாமி திரும்பி கணேஷை நோக்கி வருகையில் படீர் என்று கதவு வெடித்து திறந்தது.

வஸந்த் உள்ளே மடை திறந்தாற்போல் பாய்ந்தான். பெரியசாமி

யின் காலை ஒரே வீச்சில் வீழ்த்திவிட்டு அதனால் கீழே விழுந்த கத்தியை எடுத்துக்கொண்டு மற்றவனை நோக்கி, "யோவ்! வரியா கத்திச்சண்டை? அந்தாள் கிட்ட ஆயுதமில்லை. எங்கிட்ட தைரிய மிருந்தா வா. தொப்பைல கீறி சைனீஸ் ரெஸ்டாரண்ட்லே நூடில் போடுவாங்க பாரு. அந்த மாதிரி குடல் பூரா துப்புரவா வெளில கொண்டு வர்றேன். வாடா டபுள் சோமாறி!" என்றான்.

கத்திக்காரன் வஸந்த்தின் மேல் பாய கணேஷ் விலகி சின்னதாக ஒரு ஸ்டூலை எடுத்துப் பெரியசாமி எழுந்திருக்காமல் அவன் மண்டை மேல் போட்டான்.

"பாஸ்! அந்தக் கூஜா! அதை உபயோகியுங்க."

வஸந்த் கத்திக்காரனைப் பார்த்து, "எதுக்கய்யா இந்த வயசுல இப்படி ஓடி வர! இப்ப நான் ஒதுங்கிட்டேன். என்ன ஆச்சு பாரு! நேரப் போய் சுவத்திலே மோதிக்கிறே இல்லே? மூக்கில் பட்டுதா? ரத்தம் வரதா இல்லையா? இல்லையா . . . வா . . . வா மறுபடி ஓடி வா! உனக்குப் போறாத வேளை. வஸந்த்தோட ஓடிப் புடிச்சு விளையாடணும்னு ஜாதகத்தில எழுதி வச்சிருக்கு . . வா . ."

மறுபடி வஸந்த்தை நோக்கி ஓடி வந்தவனை அட்டாக் கொடுத்து வீழ்த்தினான்.

"பாஸ் என்ன செய்யலாம்? தொப்புள்ல கத்தியை வெச்சுத் திருகலாமா? இல்லை இங்கேயே ஜபேட் பண்ணிடவா?"

"இல்லை வஸந்த்! இவங்ககிட்ட கேள்விகள் கேட்கணும்."

# 20

"உட்காருங்க உஸ்தாத்" என்றான் வஸந்த்

சரியான அடிபட்டிருந்த அவ்விருவரும் மாரத்தான் ஓடி வந்தவர்கள் போல இரைத்தார்கள். "சொல்லுங்க, எதுக்கு வந்தீங்க?"

"சத்தியமா எங்களுக்குத் தெரியாது!"

"கேள்வி கேட்க மட்டும் தெரியுமா? பதில் சொல்லத் தெரியாதா ...? இதப் பார் என்ன எழவுடா உம் பேரு? அடிக்க வந்தியா ..? அவ்வளவு சுலபமா அடிச்சுட்டுப் போக முடியுமா? இவரு யாரு தெரியும் இல்லை ...? உங்க மாதிரி நூறு கேடிகளைச் சமாளிச்சுட்டு இருபத்தி அஞ்சு வாரமா ஹவுஸ் ஃபுல்லா ஓடிக் கிட்டிருக்கோம் தெரியுமா? இந்தா வாங்கிக்க ஒண்ணு பாக்கி இருந்தது" என்று தாடையில் அடித்தான்.

"வஸந்த்! போதும்!" என்றான் கணேஷ் "இத பாருப்பா! உன்னை அனுப்பிச்ச ஆள் யாருன்னு சொல்லிடு .. பொழுதோட விட்டுர் றோம். இல்லை முரண்டு பண்றேன்னு தீர்மானிச்சாலும் போலீஸ் கிட்ட ஒப்படைக்கறோம்."

"அவுங்க பதினைஞ்சு நிமிஷத்தில நீ சாப்பிட்ட பாயா குஸ்காவோட உண்மையையும் கக்க வெச்சிடுவாங்க! நகம் நல்லா வளர்த்திருக்கே இல்லை? ஊசி ஏத்தினாத் தாங்குமா?"

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"எங்களை விட்டுடுங்க. நாங்க கூலிக்காரங்க!"

"சரி! சரி! கூலி கொடுக்கறது யாருன்னு சொல்லு."

"அவரு பேரு சரியாத் தெரியாதுங்க. நிசம்மா."

"அவரு பேரு சரியாத் தெரிய உன்னை எந்த இடத்தில பிசியணும் சொல்லு. அங்கப் பிசியறோம் .. இல்லை உபரியா ஏதாவது எலும்பை உடைச்சுக்கலாமா?"

"வேண்டாம் வேண்டாம். அவரு பேரு அருண் பிரகாஷ் ..."

"அட்ரஸ்ஸு?"

"பீட்டர்ஸ் ரோடில அவருக்கு ஆபீஸு. அருணா எண்டர் பிரைசஸ்!"

"என்ன பிஸினஸ்?"

"ஏற்றுமதி இறக்குமதி."

"என்ன ஏத்தறாங்க? என்ன இறக்கறாங்க?"

"சரியாத் தெரியாது. அப்புறம் ஓட்டல் வெச்சிருக்காரு. அப்புறம் அச்சாபீஸு ... அப்புறம் நிறைய பிஸினஸ் நடத்தறாங்க! அவர் தான் எங்க ரெண்டு பேத்தையும் அனுப்பிச்சு அந்தாளுக்கு என்னத் தெரியும்னு கேட்டுட்டு வரச் சொன்னாரு."

"சில்லறை எவ்வளவு?"

"நூறு ரூவாங்க!"

"இப்ப நீ பொய் சொல்றியா பார்த்துறலாமா? ..." கணேஷ் டெலிபோன் டைரக்டரியை எடுத்து ஆராய்ந்தான்.

"இப்ப ஆபீஸ் திறந்திருக்காதுங்க!"

"வீட்ல இருப்பாரா?"

"வீடு எங்கே தெரியாதுங்க! அய்யா! என்னை விட்டுடுங்க! நிசமாகவே நான் கூலிக்காரன் ... அவங்க பின்னாடிப் போவோம். அவருக்குப் பாதுகாப்பு தருவோம் ரெண்டு வேளை சோறு போட்டு பேட்டா கொடுத்து அங்கங்கே அனுப்புவாங்க!"

"எவனாவது குடுமி ஆப்ட்டான்னா தர்ம அடி அடிச்சுட்டு வந்திடுவீங்க! அப்படித்தானே?"

"அடி உதை கொஞ்சம்தாங்க. பயப்படுத்துவோம். சினிமாவில் இருந்தங்க. எம்.ஜி.ஆர். ஆக்டிங்கை நிறுத்தினதுக்கு அப்புறம் வாய்ப்பு கம்மி ஆய்டுச்சுங்க! சம்சாரம், ரெண்டு பொட்டைப் புள்ளைங்க. ஒண்ணு ஜெனரல் ஆஸ்பத்திரிலே நர்ஸா இருக்குதுங்க. மத்தது பத்தாங் கிளாஸ் படிக்குது ..."

"பேர் என்ன?"

"ஏய் பேரும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம்! வஸந்த், அருணா எண்டர்ப்ரைஸஸ் பீட்டர்ஸ் ரோடில இருக்குது. அது வரைக்கும் பொய் சொல்லலை இவன் ... அனுப்பி வைச்ச ஆள் தான் இவங்க."

"விட்டுறலாமா பாஸ்!"

"கூடாது! வீட்டில நுழைஞ்சு கலாட்டா பண்ணதுக்கு போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்துடு; அரெஸ்ட் பண்ணிட்டுப் போகட்டும்!"

"வேண்டாங்கய்யா. நான் போலீஸ் ஸ்டேஷன் வாசலை மிதிச்சதில்லை."

"மிதிச்சுப் பாரு. எல்லாத்துக்கும் ஆரம்பம் வேண்டாமா?"

"அய்யா தயவு செய்து விட்டுருங்க . . ."

"ஏய், நீ சமீபத்தில் உக்கல் கிராமத்துக்குப் போனியா ?"

"போனேங்க!"

"பல்லாவரத்தில் உங்க எஜமானருக்கு வீடு இருக்குதா ?"

"பல இடத்துல இருக்குதுங்க!"

"இரு வஸந்த்! உக்கல் கிராமத்துல என்ன செஞ்சே? கரெக்டா சொல்லு. விட்டுர்றோம்!"

"ஒண்ணும் செய்யலிங்க. வான் ஓட்டிக்கிட்டுப் போனேன். பொட்டில லோடு ஏத்தினாங்க. எடுத்து வந்து கொடவின்ல விட்டேன்."

"எத்தனை பொட்டி ?"

"ஒரே ஒரு பொட்டி !"

"எவ்வளவு பெரிசு இருக்கும் ?"

"இத இவ்வளவு!" என்று அவன் கையில் சுமார் ஒண்ணரை அடி அகலம் காட்டினான்.

"உயரம் ?"

"அதும் அதேதாங்க. சீல் வைச்ச பொட்டி !"

"அதுக்குள்ள என்ன ?"

"தெரியாதுங்க. சத்தியமாத் தெரியாது. நான் கேட்கிறதில்லை. கேக்கக் கூடாது . . . சொல்லறதில்லை."

"சரி இப்ப வந்தியே, உனக்கு என்ன குறிப்பாச் சொல்லி அனுப்பிச்சாங்க?"

"கிணத்துல என்ன இருக்குன்னு திருப்பித் திருப்பிக் கேளுன்னாங்க. தங்கம்னு சொல்றானா, நகைன்னு சொல்றானா, வெறும் பாசித் தண்ணின்னு சொல்றானா . . . எல்லாத்தையும் கேட்டு வந்து சொல்லுன்னு சொன்னாங்க. அவ்வளவுதாங்க!"

"உக்கல் கிணத்துல என்ன செய்தீங்க?"

"நான் கிணத்துப் பக்கம் போனதில்லிங்க. அந்தக் கிணறு எங்க இருக்குன்னு தெரியாதுங்க!"

"கிணத்துல என்ன இருக்கு தெரியுமா ?"

"அதுவும் தெரியாதுங்க. நான் கூலிக்காரன் !"

"டெலிபோனை எங்க வெட்டினே ?"

"அவங்கதான் வெட்டச் சொன்னாங்க!"

"சரி, எங்க வெட்டினே ?"

"உள்ள போற கேபிளைப் புடுங்கிப் போட்டேங்க!"

"வா ! வந்து காட்டு . . . வஸந்த் ! அந்தக் கேபிளை டெம்பரரியா

மறுபடி கனெக்ஷன் கொடு."

"அப்ப நான் போவலாங்களா?"

"இல்லை பிரதர், இன்னும் உன்னோட பேச வேண்டியது நிறைய இருக்கு!"

இந்நேரம் உட்கார்ந்திருந்ததில் அவர்கள் இருவருக்கும் புதிய தெம்பு பிறந்திருக்க வேண்டும். சற்றும் எதிர்பாராத சமயத்தில் திடீர் என்று புறப்பட்டு வாயிற் கதவை நோக்கி ஒருவன் ஓட, மற்றவன் அவனைத் தொடர . . . வஸந்த் அவர்களைத் துரத்த முயல, கணேஷ் அவனிடம் "வஸந்த்! லீவ் தெம்!" என்றான்.

"ஏம் பாஸ்?"

"போகட்டும்; இவங்க வெறும் கையாளுங்க! நாம பிடிக்க வேண்டியது எஜமானனை. என்ன பேர் சொன்னான்?"

"அருண் பிரகாஷ்."

"காலைல முதல் காரியமா அங்க போய்ப் பார்க்கலாம். மேல் விவரம் தெரியணும்னா அருணாவுக்கு வரவும்னு அவங்கதான் நமக்கு இன்விடேஷன் அனுப்பிச்சிட்டிருக்காங்க! கொஞ்சம் கொஞ்சமாப் புரியுது வஸந்த். அந்த ஆள் நம்மை ஆழம் பார்க்கிறான். அருணான்னு மொட்டையா பேர் கொடுத்துட்டா நமக்குப் பேர் தெரிஞ்சா வருவோம்னு எதிர்பார்த்திருக்கான். வரலை. அப்புறம் அடியாளுங்களை அனுப்பிச்சிருக்கான். இதிலேருந்து என்ன தெரியுது . . . ."

"ஒரு மண்ணும் தெரியலை. க.க. காட்டில விட்டாப்பல இருக்குது."

"வஸந்த்! முதல்ல இருந்து பாரு . . . . ராஜராஜன் கிணறு எங்க இருக்குதுன்னு அந்த விவரம் அவங்களுக்கு தேவையா இருந்திருக்கு. ப்ரொபஸருக்கு அந்த விவரம் தெரிஞ்சிருக்கு. அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரையைச் சரக்குன்னு பிடுங்கிட்டுப் போனாங்க. நீ பல்லாவரத்திலே போய் குட்டையைக் குழப்பிட்டு வந்தே . . . ஆனா அவங்க ஒரு வான்ல உக்கல் கிராமத்துக்குப் போறதுக்குத் தயார் பண்ணிக்கிட்டிருக்கிறதைப் பார்த்திருக்கே . . . இப்ப ஸீன் ஆஃப் ஆக்ஷன் உக்கல். அங்க என்ன நடக்கிறது? கோயில் வாசல்ல ஒரு கத்திக் குத்து. சதாசிவத்தோட வினோத வியாபாரம். குறுக்கே வந்த நம்மைக் கொல்ல முயற்சி. அந்தக் கோஷ்டி கொலைக்கு அஞ்சாதவங்க! தே ஆர் டெஸ்பரேட்! அவங்க என்ன செய்யறாங்க அல்லது செய்தாங்கங்கறது வெளியே தெரியாம இருக்கிறதுக்கு எதுவும் செய்வாங்க போல! இல்லையா? இதுவரைக்கும் கிளியராத்தானே இருக்கு?"

"ம்ஹூம்!" என்று தலையாட்டினான் வஸந்த்.

"ஏதோ ஒரு பெரிய குற்றம் செய்யறாங்க!"

"அது தெரியுது. நான் சொல்றேன் பாஸ்! கிணத்துக்குள்ள இருக்கிற ட்ரெஷரை எப்படியோ பாதாளக்கரண்டி போட்டு எடுத்திருக்காங்க . . . தங்கக் காசுகள் . . . நகை ஏதேதோ . . . அதை அப்படியே மெட்ராஸுக்கு எடுத்து வந்து விக்க ஏற்பாடு செய்திருக்காங்க . . . தட்ஸ் இட்! ஐ காட் இட்! ஏற்றுமதி . . இறக்குமதி! அருணா எண்டர்ப்ரைஸஸ்! வெளிநாட்டில பெரிய விலைக்குத் தங்கக் காசுகளை வித்திருக்காங்க! என்ன சொல்றீங்க?"

கணேஷ், "ம்! இருக்கலாம். அது ஒரு சாத்தியம்!" என்றான்.

"வேற என்ன எழவு சாத்தியம் இருக்கு?"

"லூஸ் எண்ட்ஸ்!"

"என்ன? ஒண்ணொண்ணாச் சொல்லுங்க . . . முடிச்சுப் போடறேன்."

"பத்துக்கு நாப்பது வியாபாரம்!"

"ஸிம்பிள்! பத்துத் தங்கக் காசுக்கு நாப்பதாயிரம் ரூபா! அந்தச் சதாசிவம் நம்மை வியாபாரம் பேச வந்தவங்கன்னு தப்பா நினைச்சுட்டார் . ."

"இல்லை வஸந்த்! இந்த வியாபாரம் தலைகீழ் வியாபாரமா இருக்கு! பத்துக்கு முப்பது அல்லது பத்துக்கு இருபதுங்கறது பத்துக்கு நாப்பதை விட பெட்டரா, நல்லதா இருக்கே!"

"அப்படியா?"

"ஆமாம். அதுக்கப்புறம் பாரு. பஸ் ஸ்டாண்டிலே ஸாம்பிள் கொண்டு வந்தியான்னு யாரோ ஒருத்தனைக் கேக்கறான் . . ."

"தஞ்சாவூர்க்காரனை."

"அங்கேயும் அதே வியாபாரம்!"

"எனக்கு என்னவோ அது ஒரு கோயின்ஸிடன்ஸ்னு தோணுது."

"எனக்கு அப்படித் தோணலை. ம்! ஸோடியத்தைப் பத்தி ஏதாவது தகவல் சேகரிச்சியா?"

"இருங்க. இப்பத்தானே ஆஸ்பத்திரிலே இருந்து கழண்டுண்டு வந்திருக்கேன். ஒரு நாள் டயம் கொடுங்க! ஸோடியத்தைப் பத்தி ஸோடியத்தோட பெண்டாட்டிக்குக் கூடத் தெரியாத தகவல்கள் சேகரிச்சுட்டு வர்றேன்!"

"முதல்ல டெலிபோனை எங்க வெட்டித் தொலைச்சிருக்கான்னு பாரு! காலைல கோர்ட் வேற இருக்கு. பேனாமி கேஸ் இழுத்து அடிக்கிறது. அப்புறம் தமிழ்நாடு டைரக்டர் ஆஃப் ஆர்க்கியாலஜி ஆபீஸ்ல ஒரு சின்ன வேலை இருக்குது."

"அந்தப் பொண்ணு ஏதாவது கார்ப்பரேஷன் ஸ்கூல்ல படிக்கிற பொண்ணா இருக்கும்."

"யாரு?"

"அந்த ஆளோட ரெண்டாவது பொண்ணு!"

"விவஸ்தையே கிடையாதா உனக்கு. இனியா கிட்டச் சொல்லப் போறேன்."

"ஒரு கேஸை எடுத்துக்கிட்டா எல்லா விவரமும் தெரிஞ்சுக்க வேண்டாமா?"

**கா**லை எட்டு மணிக்கு வஸந்த் இனியாவைச் சந்திக்கச் சென்றான். வாசலிலேயே நாற்காலி போட்டுப் பேராசிரியர் வீற்றிருந்தார். எதிரே குள்ளமான மேசையில் டீ போலும். அதில் ஒரு கப் எடுத்துக்கொண்டு சுந்தரமாக இனியா சீப்பிக்கொண்டிருந்தாள். அந்த இடமே அவளால் கொஞ்சம் பிரத்தியேகமாக வெளிச்சம் பெற்றிருந்ததாக வஸந்த்துக்குத் தோன்றியது.

"ஹலோ வஸந்த்!"

"ஹலோ இன்னி.. ஐ மீன் இனியா... ஹலோ ஸார்! காலைல என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க. பேப்பர் படிக்கிறீங்களா? உடம்பு சுகமா?"

"சுகம்தாம்ப்பா. நீ எப்படி இருக்கே? சரியாப் போச்சா?"

"எல்லாம் ஸார் ஆசீர்வாதத்தாலே... வெய்யிலா இருக்கே. உள்ளே போய் உட்காரலாமே நீங்க?"

"பரவாயில்லை" என்றார், பைப்பை இழுத்துவிட்டு. தொடர்ந்து,

"வஸந்த் உன்கிட்ட ஸீரியஸா ஒண்ணு பேசணும்" என்றார்.

"பேசுங்க ஸார்... நான் எல்லாம் காது. ஐ'ம் ஆல் இயர்ஸ்!"

இனியா, "அப்பா, நான் உள்ளே போறேன்!" என்றாள்.

"இரு இனியா! நீ இப்ப உள்ள போனா வெளிச்சம் குறைஞ்சு போயிடும். அப்புறம் ஸார் பேப்பர் படிக்க முடியாது..."

"வஸந்த்! இனியாவுடைய கல்யாணத்துக்கு அவசரமா ஏற்பாடு செய்யணும்!"

வஸந்த் திடீரென்று மலர்ந்து "அதுக்கென்ன ஸார்! மாப்பிள்ளைங்கிற ரீதியில அதுகூட செய்ய மாட்டேனா?" என்றான்.

"மாப்பிள்ளையா? நீயா? யார் சொன்னது... அமெரிக்கா மாப்பிள்ளை! போட்டோவைப் பார்த்து ஒத்துக்கிட்டான்... அடுத்த வாரம் வரான்..." அவர் மேலே சொல்வது கேட்காமல் வஸந்த்தின் மனதுக்குள் ஆயிரம் மின்னல்கள் ஓவர் டைம் செய்து கொண்டிருந்தன.

# 21

**கா**லை டி.ஐ.ஜி. ராஜேந்திரனைப் பார்க்கச் சென்றார்கள்.

"என்ன ஸார், நீங்க டி.ஐ.ஜி. ஆனதுக்கு பார்ட்டி ஏதும் இல்லையா?" என்றான் வஸந்த்.

"இன்னும் ஒரு வருஷம் கழிச்சிக் கேளுங்க. என்ன வஸந்த்! உங்க கல்யாணம் எப்ப?"

"அதை ஏன் கேக்கறீங்க! நம்ம ஜாதகத்தில் அந்தக் கட்டம் காலியாவே இருக்கு!"

"இப்ப காதல் பண்ணிண்டிருக்கான், அதிலேதான் விவகாரமே ஆரம்பிச்சது" என்றான் கணேஷ்.

"என்ன இது சரித்திர ஆராய்ச்சில எல்லாம் இறங்கியிருக்கீங்க!"

"கிணத்துக்குள்ள இறங்கலை. அது ஒண்ணுதான் பாக்கி."

"அந்தக் கிணத்தைப் பாதுகாக்கறதுக்கு மெஸேஜ் அனுப்பிச்சு வச்சிருக்கேன். விவரம் என்ன சொல்லுங்க. டெலிபோன்ல சொன்னது குழப்பமா இருந்தது."

"சிம்பிள் மேட்டர் ஸார். தங்கக் காசுக்கு அலையறாங்க எல்லாரும்... பழைய காலத்தில குன்றிமணி, கழஞ்சு, காசு, மாடைன்னு அடிச்சுப் போட்டிருக்காரு ராஜராஜ சக்கரவர்த்தி. அதில மாடைங்கிறது தங்கக் காசு. அதில் 500 காசு கிணத்தில போட்டுட்டதா சரித்திரக் குறிப்பு, கல்வெட்டு இருக்குது. அதுக்கு ஜனங்க ஆலாப் பறக்குது."

"சரித்திரக் குறிப்புன்னா ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்லே எக்ஸ்கவேட் பண்ணியிருப்பாங்களே!"

"இது ஏதோ இன்னும் வெளியே வராத ரகசியக் கல்வெட்டு மாதிரி தோணுது. அதனாலதான் உக்கல் கிராமத்தில போக்கு வரத்து அதிகமா இருக்குது."

"அப்ப அந்தக் கிணத்தை இரைச்சுப் பார்த்துறலாமா வாரிங்களா? என்ன கிராமம் சொன்னீங்க? உக்கலா?"

"சார், இரைச்சு அகப்பட்ட காசில ஒரே ஒரு காசு இந்தப் பக்கம் தள்ளினிங்கன்னா என் காதலுக்கு உபகாரமா இருக்கும்!"

"எனக்கென்னவோ காசு அகப்படும்னு தோணலை" என்றான் கணேஷ்.

"ஏன்? ஏற்கனவே எடுத்திருப்பாங்களா?"

"சொல்ல முடியாது. இருந்தும் அதை ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்ல விசாரிச்சுப் பார்த்துறலாம். பேராசிரியர் அப்பாதுரை கல்வெட்டு ஆராய்ச்சி மூலம் அந்தக் கிணத்துல தங்கக் காசு, நகைகள் எல்லாம் இருக்கிறதா முடிவு பண்ணியிருக்கார். அப்படி அந்த செல்வம் அந்தக் கிணத்துக்குள்ள இருந்தா இதுவரைக்கும் வேற ஒருத்தரும் அதை எடுக்காமவிட்டு வெச்சிருப்பாங்களான்னு முதல் சந்தேகம். டிப்பார்ட்மெண்டுக்கு அதைப் பத்தித் தெரியாமப் போயிருக்குமா? எவ்வளவு தீவிரமா எவ்வளவு வருஷமா எவ்வளவு பேர் ஆராய்ச்சி பண்ணி இருப்பாங்க. இந்தக் கிணத்துல புதையல் இருக்கிற விஷயத்தைக் கண்டுபிடிக்காம இருந்திருப்பாங்களா? முதல்ல அதை விசாரிக்கணும். இருந்தும் இந்தக் கிணத்தைச் சுத்திச் சில மர்மமான விஷயங்கள் எல்லாம் நடக்குது. சரித்திர சம்பந்தமே இல்லாத வெத்துக் கோஷ்டி உலாத்துது. ராஜேந்திரன், நேத்தைக்கு இரண்டு ஆளுங்க வந்து எங்கிட்ட ரஃபா நடந்துக்கிட்டு உனக்கு என்ன தெரியும், என்ன தெரியும்னு திருப்பித் திருப்பிக் கேட்டாங்க. நான் ஏதோ மழுப்பினேன். அவங்க ஒரு விதமான பதிலை எங்கிட்ட இருந்து எதிர்பார்க்கறாங்கன்னு தெரிஞ்சுது. என்ன பதில் அது?"

"அவுங்க ரெண்டு பேரையும் விட்டுட்டீங்களா?"

"ஓடிப் போயிட்டாங்க."

"அடையாளம் சொல்ல முடியுமா?"

"ஒரு பேர் தெரியும். அடையாளம் தெரியும்."

"பழைய கேடி யாராவதான்னு பார்த்துறலாம். இப்ப நீங்க கிணத்தில் என்னதான் இருக்குந்றீங்க?"

"சுருக்கமாச் சொன்னா அதான் இப்பிரச்னை. கிணத்துல தங்கமா, அல்லது வேற ஏதாவதா?"

"தங்கந்தான் பாஸ்!"

"அப்படின்னா பத்துக்கு நாப்பது, முப்பது இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?"

"காசுக்கு விலை பேசறாங்க!"

"பத்துக்கு முப்பது, பத்துக்கு நாப்பதை விட நல்ல விலையா? இதென்ன தலைகீழ் விலை?"

"அதானே!" என்றான் வஸந்த்.

"அப்புறம் பாருங்க . . . உக்கல் பஸ் ஸ்டாண்டிலே ஒரு ஸ்ட்ரே கேஸ்! ஸாம்பிள் கொண்டு வந்திருக்கியான்னு கேட்டு ஒரு தஞ்சாவூர் வியாபாரியோட பொட்டியைப் புடுங்கிக்கிட்டு ஓடியிருக்காங்க. அங்கயும் அந்தப் பத்துக்கு நாப்பது வியாபாரம் பேசியிருக்காங்க!"

"அது என்னவோ இந்தக் கேஸுக்குச் சம்பந்தம் இல்லாத தற்செயலான விஷயம்னு தோணுது பாஸ்!"

"இருங்க வஸந்த். கணேஷ் நீங்க உங்க சந்தேகத்தை எல்லாம் சொல்லுங்க."

"எல்லாமே நெபுலஸ்ஸா இருக்கு ராஜேந்திரன் . . . முதல்ல அருணா எண்டர்ப்ரைஸ்னு ஒரு கம்பெனிக்கும் இந்தக் கோஷ்டிக்கும் சம்பந்தம் இருக்குன்னு தெரியுது. விஷயம் தீவிரமானதுன்னு தெரியுது. கொலை செய்யவும் அஞ்சாத ஆசாமிங்கன்னு தெரியுது. கூழமந்தல்ல தொல்பொருள் இலாக்கா சிப்பந்தி ஒருவனுக்கு ஏதோ தெரியக் கூடாத விஷயம் தெரிஞ்சு போய் அவனைத் தீர்த்துக் கட்டிட்டாங்க. சதாசிவம்னு ஒரு ஆளுக்கு இதில ஏதோ தரகு வேலைன்னு தெரியுது. ஆனா அவனைச் சித்ரவதை செய்தாலும் ஏதும் சொல்ல மாட்டான்னு தோணுது."

"ஒமர்கய்யாம்னு ஒரு ஹோட்டல்ல காபரே ஆடற பொண்ணு எங்கிட்ட வந்து அவங்க கூடச் சேராதேன்னு எச்சரிக்கை செஞ்சது. அதையும் சொல்லிருங்க! அதை வேணா கொஞ்சம் சித்ரவதை செஞ்சு பார்க்கலாம் . . ."

"இதனிடையே சரித்திரப் பேராசிரியருடைய ஆராய்ச்சி . . . வஸந்த் அந்த சதாசிவத்தின் கைல பார்த்த ஒரு பொட்டலத்தில் இருந்து விழுந்திருந்த மரத்துண்டு, அதிலே ஸோடியம் ஹைட்ராக்ஸைடு, டைட்டேனியம்னு என்ன என்னவோ கெமிகல்ஸ்!"

"சரியான குழப்பங்க! இதையெல்லாம் ஒட்ட வைக்கிற சரடு வேணும். அவ்வளவுதானே?"

"அவ்வளவுதான்!"

"அப்புறம் பல்லாவரத்திலே ஒரு தனி வீடு."

"இருங்க இருங்க. தலை சுத்துது. கணேஷ் நீங்க என்ன பண்றீங்க எல்லாத்தையும் எனக்கு ஒரு ரிப்போர்ட் மாதிரி எழுதிக் கொடுத்திருங்க . . . ஸி.ஐ.டி. டிபார்ட்மெண்ட்டிலே ஒவ்வொரு ஆங்கிளையும் துப்புரவா விசாரிக்கச் சொல்லிடறேன்."

"எல்லாத்தையும் எழுதிட்டு வந்திருக்கோம் ராஜேந்திரன்."

"செஞ்சிருப்பீங்களே! சரி என்னை நாலு நாள் கழிச்சு வந்து பாருங்க . . . ஆமா! கோர்ட்டையும் பார்த்துக்கிட்டு இதையும்

பார்த்துக்கிட்டு ... எப்படி உங்களுக்கு டயம் இருக்கு!"

"இருபத்தி நாலு மணி நேரம் பத்தலை ... இடையில் கொஞ்சம் அடிதடி வெடி ... அப்புறம் நடுநடுல தேங்காய் மூடி கேஸ் வேற எடுத்துக்கிட்டிருக்காரு!"

"அது என்ன?"

"டாக்டர் நரேந்திரன்னு ஒருத்தரோட வழக்கு ... டார்ட்ஸ், ஐ.பி.ஸி. டிரக் ஆக்ட் எல்லாம் வருது ... எனக்குத் தண்டனை கொடுத்தே ஆகணும்னு மன்னாடறாரு!"

"கேள்விப்பட்டேன். ஒரு மால்பிராக்டிஸ் கேஸ்தானே! சான்ஸே இல்லை."

"ட்ரை பண்றோம் ... வரோம்."

ராஜேந்திரனின் அலுவலகத்தை விட்டு வெளியே வரும்போது கணேஷ் "வஸந்த்! லைப்ரரிக்குப் போய் ..." என்று ஆரம்பித்தான்.

"தெரியுமே! விட மாட்டீங்களே? சோடியம் பத்தித்தானே? உடனே கவனிக்கிறேன்" என்றான்.

**நூ**ல் நிலையத்தில் அந்தப் பெண் கண்ணாடியை எடுத்து விட்டால் அழகாக இருப்பாள் என்று நினைத்தான். அவளருகே சென்று மெல்லிய குரலில் "குட்மார்னிங் .." என்றான்.

"குட்மார்னிங்."

"சோடியம் .."

"பார்டன்?" என்று நிமிர்ந்தாள்.

"சோடியம் பற்றி எனக்குத் தெரிந்துகொள்ளணும் ..."

"நேரே போங்க. எட்டாவது அலமாரி. கெமிஸ்ட்ரி."

"தாங்க்ஸ்! உங்க பேரு ஸ்ரீலேகாதானே?"

"இல்லை."

"பேரை மாத்திட்டீங்களா?"

"மிஸ்டர்? உங்களுக்கு ஸோடியம் வேணுமா, இல்லை என் பெயர் வேணுமா?"

"ரெண்டுமே."

"என் பேரு மிஸஸ் ராகவன். மிஸ்டர் ராகவன் அதோ கண்ணாடி அறைக்குள்ளே உட்கார்ந்திருக்கார்!"

வஸந்த் புன்னகைத்து, "அப்படியா? அவரைத் தொந்தரவு பண்ண வேண்டாம். மேலும் என்கிட்ட பயந்துண்டு கண்ணாடிக் குள்ள இருக்கற ஃபெர்னாண்டஸை பேர் மாத்தவும் வேண்டாம். ஸீ யூ!" என்று விலகினான்.

அவள் பார்வை முதுகில் சுட கெமிஸ்ட்ரி அலமாரியை அணுகினான். சின்னச் சின்ன மேஜைகளின் முன் புத்தகங்கள் இறைந்திருக்க இங்கே ஒரு சோடா பாட்டில் கண்ணாடியும், அங்கே ஒரு சோல்னாப் பையுமாகத் தீவிரவாதிகள் படித்துக் கொண்டிருந்தார்கள். சரித்திரப் பகுதியில் அலுமினிய ஏணியில் மூன்றாம் படியில் இனியா நின்றுகொண்டு சதாசிவ பண்டாரத்தாரின் லேட்டர் சோளாவை எவ்வ முயன்று கொண்டிருந்தாள்.

"இனியா! சர்ப்ரைஸ்...! உன்னை இங்க பாப்பேன்னு எதிர் பார்க்கலை. பார்த்த உடனே வயித்துக்குள்ள சின்னதா வண்ணாத்திப் பூச்சி பறக்கறது... இனியா..."

"ஷ்!" என்றார் பேராசிரியர் அப்பாதுரை.

"ஓ! ஸார் நீங்களும் வந்திருக்கீங்களா?"

நூல் நிலையமே "ஷ்ஷ்ஷ்..." என்றது.

இனியா வஸந்த்தை ஒரு முறை பார்த்துவிட்டு மீண்டும் சதாசிவப் பண்டாரத்தாருக்குத் திரும்பினாள்.

வஸந்த் சற்று நேரம் நின்று பார்த்தான். பேராசிரியர் அவர் அளவுக்கு இருந்த புத்தகத்தில் ஆழ்ந்திருந்தார். வஸந்த் விரோதத்துடன் நடந்து மூலை திரும்பி மற்றொரு ஏணி எடுத்துக் கொண்டு எதிர்ப் பக்கத்தில் அதை நகர்த்தி வின்ஸ்லோவின் டிக்ஷனரியை விலக்கி இனியாவை மறுபடி பார்த்தான். அவள் திடுக்கிட்டு ம்ஹூம் என்று தலையாட்டினாள்.

வஸந்த் புருவத்தை உயர்த்தி, கைக்குட்டையால் கண்களை ஒத்திக்கொண்டான். இனியா தலையை உயர்த்தி, புருவத்தால் என்ன என்றாள். வஸந்த் விரல்களைச் சேர்த்துக்கொண்டு சாப்பிடுவது போல் பாவனை செய்து மேலே விரல் காட்டினான். அவள் வருகிறேன் என்று தலையாட்டினாள். வஸந்த் வாயில் பின் விரல் வைத்துச் சப்தமின்றி விசிலடித்தான்.

முதல் மாடியில் இருந்த காண்டீனில் வஸந்த் காத்திருக்க இனியா அவசர அவசரமாக வந்தாள்.

"அப்பாவுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு வந்திருக்கேன். அஞ்சு நிமிஷம்தான் பேச முடியும்... என்ன விஷயம்? சொல்லித் தொலை."

"இனியா அஞ்சு நிமிஷத்திலே என் மனசின் அல்லல்களை எப்படிச் சொல்ல முடியும்? ஆறு நிமிஷம் வேணும்... இன்னி! என் மனம் கவர்ந்த கன்னி... இன்னும் கன்னிதானே நீ...!"

"வெத்துப் பேச்சுன்னா நான் ஆட்டத்துக்கு வரலை. போறேன்!"

"அய்யோ போகாதே! ஜன்னலைத் திறந்து குதிச்சுட்டு நாளை பேப்பர்லே வந்துடுவேன். இன்னி நீ செய்யறது நியாயமா? லோக்கல் தோத்தோ நாய் மாதிரி உன் கூடவே சுத்திக்கிட்டிருக்

கேன்; அமெரிக்காங்கறியே!"

"அப்பாதானே சொல்றார். அப்பா பேச்சை என்னால மீற முடியாது வஸந்த்!"

"ஐயகோ! வள்ளுவரே சொல்லியிருக்காரே, 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் அப்பனின் சொல் லென்றால் மீறு"ன்னு . . .

"வஸந்த்! நீ என்னை நினைச்சுப்பியா?"

"என்ன கேள்வி இனியா? எனக்கு பிளட் பிரஷர் எடுத்துப் பாரு. ஸிஸ்டாலிக், டயஸ்டாலிக் ரெண்டுமே இனியாங்கும்!"

"என் கல்யாணத்துக்குத் தனியா மெள்ள நடந்து வந்து 'எங்கிருந்தாலும் வாழ்க'ன்னு ஒரு பூச்செண்டைக் கொடுத்திட்டு விழியோரக் கண்ணீரைத் துடைச்சுண்டு ஃபேட் அவுட் ஆவியா?"

"என்னது! அதுக்கு வேற ஆளைப் பாரு.' 'நிறுத்து இந்தக் கல்யாணத்தை'ன்னு புயல் கணக்கா குதிரைல வந்து ஒரு லாவு லாவிண்டு போவேன்! குதிரை நுழையற மண்டபமாப் பார்த்து வை."

"கல்யாண மண்டபம் புக் பண்ணியாச்சே வஸந்த்!"

"இனியா, இத பாரு! என் கையைப் புடிச்சுண்டு வாழ்க்கையின் ஓரத்துக்கு ஸ்லோ மோஷன்ல ஓடத் தயாரா நீ?"

"தயார் வஸந்த்!"

"கவலைப்படாதே, கல்யாணத்தை நிறுத்திடறேன். வாத்தியார் அட்ரஸ் கொடு. பால்ல பர்கோலாக்ஸ் கலந்துடறேன். நாயனத்தை சீவாளியைப் பிடுங்கிடறேன். ஊர்கோலக் காரைப் பஞ்சர் பண்ணிடறேன். நீ என்ன பண்றே, மாப்பிள்ளை வரான் பாரு அவன் கிட்ட எனக்கு ரகசியமான ஒரு இடத்திலே தழும்புன்னு சொல்லிடு . . .

"உனக்குத் தழும்பா இருந்தா அவருக்கு என்ன?"

"எனக்கு இல்லை, உனக்கு! இனியாவுக்கு" என்று அவளைத் தொட்டான்.

"தொடாதே வஸந்த்!"

"ஏன் இனியா புல்லரிக்குதா?"

"இல்லை. அப்பா என்னைத் தேடிக்கிட்டு மேஜை மேஜையா வந்துக்கிட்டிருக்கார்."

வஸந்த் உடனே அவளை விட்டுவிட்டான்.

"வாங்க ஸார் . . . காப்பி சாப்பிடறீங்களா?"

"இனியா இங்கேயா இருக்கே?"

"கொஞ்சம் போர் அடிச்சதுப்பா!"

"உட்காருங்க ஸார்!"

பேராசிரியர் உட்காராமல் "இல்லைப்பா, நான் யூனிவர்ஸிட்டி போகணும். அப்புறம் கல்யாண ஏற்பாடு எல்லாம் பாக்கி இருக்கு. இனியா, வஸந்த் கிட்டச் சொல்லிட்ட இல்லை, ஒத்தாசைக்கு வரும்படி?"

"அதைப் பத்தித்தான் பேசிக்கிட்டிருந்தோம் ஸார்... எல்லாம் சுபமா முடிஞ்சுரும். கவலைப்படாதீங்க..."

"வா, இனியா!"

"போ, இனியா. பயப்படாம போ. நான் பாத்துக்கறேன்!"

அவர்கள் சென்றதும் வஸந்த் சற்று நேரம் மிச்சமிருந்த காப்பியை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். பில் கொண்டு வந்த சர்வரிடம், "வாழ்க்கையே மாயமய்யா!" என்று சொல்லி விட்டு, மறுபடியும் லைப்ரரிக்குள் நுழைந்தான்.

"சோடியம்! இதோ வர்றேன்."

முதலில் கெமிஸ்ட்ரி இன்ஆர்கானிக் பகுதியில் பார்த்தான். அப்புறம் இண்டஸ்ட்ரியல் யூஸஸ் ஆஃப் ஸோடியம் பார்த்தான். அதன் பின் நேஷனல் கெமிக்கல் லாபரேட்டரியின் ஆராய்ச்சிக் குறிப்புகளை வருஷாந்திர அனுபந்தங்களைப் பார்த்தான்.

"அட!"

சட்டென்று நிமிர்ந்தான்.

"இதில எப்படி ராஜராஜன் கிணறு வருது?"

# 22

வஸந்த் அந்தப் பெண்ணை மறுபடி அணுகி, "எக்ஸ்க்யூஸ் மீ மிஸஸ் ராகவன், கன் ஐ யூஸ் யுவர் டெலிஃபோன்" என்றான். கண்ணாடிக்காரி நிமிர்ந்து "யூ எகய்ன்!" என்றாள்.

"ரொம்ப அவசரம். காசுக்கு உண்டான காலைக் கொடுத்துட றேன். ஸாரி காசுக்கு உண்டான காசை.. எப்படிக் குழம்புது பாத்திங்களா? தலை போற விஷயம். உதவி பண்ணிங்கன்னா என் உயில்ல உங்களுக்கு ஒரு எவர்சில்வர் லோட்டா எழுதி வெக்கறேன்."

அந்தப் பெண்ணைச் சிரிக்க வைத்துவிட்டான். "ஆல்ரைட். அந்தக் கண்ணாடி அறைக்குள்ள இருக்கிற போனை உபயோகப் படுத்துங்க."

"பாஸ் கை கொடுங்க."

"டெலிபோன்லியா? என்னடா?"

"சோடியம் கிணறு."

"விஷயம் என்ன? புரியுற மாதிரி சொல்லு."

"நீங்க சோடியத்தைப் பத்தி தகவல் சேர்க்கச் சொன்னீங்கல்ல. இருக்கிற எல்லா புத்தகத்தையும் பார்த்தேன். நேஷனல் கெமிக்கல் லாபரேட்டரியா. பல புத்திசாலிகள், விஞ்ஞானிகள் பேப்பர் பேப்பரா எழுதியிருக்காங்க. எல்லாம் ஆராய்ச்சிக் கட்டுரைகள். அதில ஒரே ஒரு கட்டுரையோட தலைப்பு என்ன தெரியுமா?"

"என்ன?"

"சொல்லிடட்டுமா?"

"சொல்லுடா."

"சொல்லியே டட்டுமா?"

"வஸந்த்!"

"கேளுங்க. நல்லா காது கொடுத்துக் கேளுங்க. 'இன்ட்ரஸ்டிங் கெமிகல் காம்பொஸிஷன் ஆஃப் ஸ்லைம் இன் என் ஏன்ஷியண்ட் வெல்–ராஜராஜன் கிணறு' பை டாக்டர் எச். அகர்வால், ப்ரொஸீடிங்ஸ் ஆஃப் தி ஐ.ஸி.ஏ.. தமிழ்ல சொன்னா புராதன

ராரா கிணற்றின் கலக்கலின் வசீகர ரசாயன அமைப்பு."

"வஸந்த்! அந்தப் புத்தகத்தை உடனே எடுத்து வா."

"முடியாது. ரெஃபரன்ஸ் செக்ஷன்ல இருக்கு. இந்தப் பக்கம் பார்க்கறேன். பரக்குன்னு நாலஞ்சு பக்கத்தையும் கிழிச்சுட்டுப் பனியனுக்குள்ள வெச்சுண்டு வந்துரவா?"

"சேச்சே அப்படி செய்யாதே. லைப்ரரியில ஃபோட்டோஸ்டாட் சர்வீஸ் இருக்குமே. பணம் கொடுத்துர்றேன்னு சொல்லு. காப்பி எடுத்துத் தருவாங்க. அப்படி இல்லைன்னா ஆர்ட்டிக்கிளை அப்படியே காப்பி அடிச்சுப் பேப்பர்ல எழுதிக்கிட்டு வா."

"தலை கால் புரியாத ஆர்ட்டிக்கிள்."

"பரவாயில்லை. காப்பி அடிச்சுண்டு வா, கிழிக்காதே என்ன?

வஸந்த் அறையை விட்டு வெளியே வந்து மறுபடி அந்தப் பெண்ணிடம் சென்று, "பொய் சொன்னீங்க" என்றான்.

"பார்டன்?"

"உங்க பேர் நளினி. மிஸ் ஆர்.நளினி."

"எப்படித் தெரியும் உங்களுக்கு?"

"எனக்கு கொஞ்சம் அஸ்ட்ரல் பவர்ஸ் உண்டு. ஒரு பெண்ணுடைய மூக்கு நாஸ்ட்ரில்ஸ் மூச்சு விடறப்போ எப்படி விரியறதுங்கறதை வெச்சுட்டு அவங்க பேரை கெஸ் பண்ணலாம்."

"அப்படியா?"

"மேலும் அந்த அறைக்குள்ளே இருந்த ரிஜிஸ்டர்ல ஸ்டாஃப் லிஸ்ட்டில உங்க பேரைப் பார்த்தேன். உங்க லைப்ரரியில் ஃபோட்டோஸ்டாட் சர்வீஸ் இருக்குமா? ஒரு ஆர்ட்டிக்கிளைப் பிரதி எடுக்கணும்."

அவள் இப்பொழுது வஸந்த்தை 'இவன் என்ன மாதிரி மனுஷன்' என்கிற மாதிரி ஆர்வத்துடன் பார்த்தாள்.

"அப்படிப் பார்க்காதிங்க. ஏற்கனவே எனக்குக் கொஞ்சம் பி.பி. டிரபிள்."

"இந்த மாதிரி நீங்க எத்தனை பெண்களை அப்ரோச் பண்ணியிருக்கீங்க."

வஸந்த் அடிபட்டவன் போல் "பெக் யுவர் பார்டன். நான் ரொம்ப ஸீரியஸான இளைஞன். எனக்கு வாழ்க்கையில சோடியம் ஒண்ணுதான் இன்ட்ரஸ்ட்."

அவள் சிரித்து "ஆர்ட்டிக்கிள் என்னன்னு சொல்லுங்க?" என்றாள்.

"ரெஃபரன்ஸ் செக்ஷன்ல இருக்குது. வாங்க காட்டறேன்."

வஸந்த் மறுபடி அந்த அலமாரிக்குச் சென்று அந்தப் புத்தகத்தை எடுத்து அடையாளம் வைத்திருந்த பக்கத்தில் பிரித்துத் திடுக்கிட்டான்.

"என்னடாது! ஜீனி வேலையா இருக்கு." சுற்றுமுற்றும் பார்த்தான். எல்லோரும் ஆழ்ந்து படித்துக்கொண்டிருந்தார்கள். மௌனம். டெலிபோன் செய்துவிட்டு வருவதற்குள் அந்தப் பக்கங்களை யாரோ கிழித்து எடுத்துவிட்டார்கள்.

"என்ன கிடைச்சுதா?" என்று அந்த நளினி அருகே வர, வஸந்த் சட்டென்று பக்கத்தைப் புரட்டி வேறு கட்டுரையைத் தேர்ந்தெடுத்து, "இதான்" என்றான்.

அவள் அதில் விரல் வைத்துக்கொண்டு எடுத்துச் சென்றாள். "அரை மணி கழிச்சு வாங்க. காப்பி ரெடியா இருக்கும்."

"அதுக்குள்ள ஒரு காப்பி அடிச்சுட்டு வந்துர்றேன்."

"உங்க பேர் சொல்லலியே."

"கோவிந்தா" என்று புறப்பட்டான்.

"அடுத்த முறை இந்த லைப்ரரிக்கு மாறு வேஷத்திலதான் பாஸ் போக முடியும். ஏதோ சொல்லிட்டுத் தப்பிச்சு வந்துட்டேன்."

"கிழிஞ்சு இருந்தது?"

"பக்கங்கள் நீக்கப்பட்டுவிட்டன. இதில இருந்து என்ன தெரியுது? என்னை யாரோ தொடர்ந்து லைப்ரரிக்கு வந்திருக்கான்னு."

"அந்த ஆர்ட்டிக்கிளை நாம பார்க்க விடாமப் பண்ற அமெச்சூர் முயற்சி அது. அதில் என்னதான் எழுதியிருந்தது?"

"எனக்கென்ன பாஸ் புரியும்? சாவகாசமாப் படிச்சுக்கலாம்னுட்டு உங்களுக்கு போன் செய்ய வந்தேன். அதுக்குள்ள சிட்டாப் பறந்துடுச்சே."

"ஜர்னல் பேர் என்ன?" என்றான் கணேஷ்.

"ப்ரொஸீடிங்ஸ் ஆஃப் தி ஐ.ஸி.ஏ."

"சரி தேடிப் பார்த்துறலாம். ரகசியம் அதிலதான் இருக்குன்னு இப்ப நிரூபணமாயிடுத்து. சபாஷ்! நீ எப்படியாவது ராத்திரிக்குள்ள அந்த ஆர்ட்டிக்கிளை மறு பிரதி எடுத்துப் பார்த்துட்டு நகல் எடுத்துட்டு வந்துடு என்ன? எங்கே போவே?"

"சரித்திர பேராசிரியராச்சு. இப்ப ரசாயனப் பேராசிரியர் ஒருத்தரைப் பிடிச்சுக்க வேண்டியதுதான்."

"என்ன பண்ணுவியோ எனக்கு ராத்திரிக்குள்ள ஆர்ட்டிக்கிள் வந்தாகணும்."

"வந்துடுத்து. கவலைப்படாதீங்க... பாஸ்! சின்னதா ஒரு போன் அடிச்சுக்கலாமா?"

"இனியாவா?"

"ஆமா. கல்யாண மண்டபம் விசாரிச்சு வெச்சுக்கணும். குதிரை

நுழையுமான்னு பார்க்கணும். அல்லோ கொஞ்சம் இனியா போடுங்க."

"குதிரையா? வடக்கத்திக் கல்யாணமா?"

"இல்லை பாஸ். வடக்கத்திக் கடத்தல். ஓ! ஹலோ இன்னி! இந்திரன் தோட்டத்து முந்திரியே ... மன்மத நாட்டுக்கு மந்திரியே ராஜ பார்வை பாத்தியா?"

"ஓ! பக்கத்தில அப்பா இருக்காங்களா? கொஞ்சம் கல்யாண மண்டபத்தின் பேரு ஊரு ஜாதகம் எல்லாம் சொல்லிட்டன்னா சௌகரியமா இருக்கும்."

கணேஷ் யோசனையில் இருந்தான். ரசாயன கட்டுரைக்கும் ராஜராஜன் கிணற்றுக்கும் என்ன சம்பந்தம்? விந்தையாக இருக்கிறதே! ரசாயனம் இந்த விவகாரத்தில் அடிக்கடி வருகிறது! சோடியம் ஹைட்ராக்ஸைடு, டைட்டேனியம். கணேஷ் சற்று நேரம் எல்லாவற்றையும் கழற்றிவிட்டு ஏகாக்கிரக சிந்தையாக யோசித்துப் பார்த்தான். இருக்க வேண்டும்! ஏதாவது ஒரு ஒட்டு இருக்க வேண்டும். முதலில் ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்ல விசாரித் தார்களா என்று ராஜேந்திரனைக் கேட்க வேண்டும்.

"வஸந்த் கொஞ்சம் சுருக்கமாகப் பேச்சை முடிக்கிறியா? டெலிபோன் வேணும்."

"பை இன்னி! கனா காண்றபோது அமெரிக்கா பார்ட்டி வந்தான்னா வெரட்டி விட்டுரு.. என்ன பாஸ்! யாருக்கு போன்?"

"கொஞ்சம் ராஜேந்திரனைக் கூப்பிடு."

வஸந்த் மறுபடி நம்பர்களைச் சுழற்றும்போது "பாஸ் ஏதாவது கிணத்துக்குள்ள தென்பட்டுதா?" என்றான்.

"கொஞ்சம் கொஞ்சம் தெரியுது."

"தங்கக் காசுதானே?"

"இருக்கலாம்."

"தங்கக் காசு இல்லைதானே?"

"அப்படியும் இருக்கலாம். வஸந்த் அந்தக் கிணத்துல தங்கக் காசுகளைப் போட்டுட்டதா கல்வெட்டுக் குறிப்பு இருக்கிறது என்னவோ நிஜம். ஆனா இவங்க தேடறது தங்கக் காசுகளான்னு ஊர்ஜிதமா நமக்கு இன்னும் தெரியலை."

"ஹலோ கொஞ்சம் டி.ஐ.ஜி. கூடப் பேசலாங்களா? என் பேர் வஸந்த். லாயர் கணேஷ் அஸிஸ்டண்ட். தாங்க்ஸ்! பாஸ் ராஜேந்திரன் ராஜராஜன் கிணறு; ராஜேந்திரன்–டி.ஐ.ஜி. சரித்திரம் எப்படி மாறிப் போச்சு பாருங்க. அப்பா புள்ளையா இருந்தவங்க கிணறும் போலீஸ் ஆபீஸருமா மாறிப்போயிட்டாங்க. என்னே! ஸார் வணக்கம். நான்தான் வஸந்த்?"

கணேஷ் டெலிபோனைப் பிடுங்கிக்கொண்டு "ராஜேந்திரன்

தொல்பொருள் இலாக்காவில விசாரிச்சீங்களா? சொல்லியிருந்தேனே" என்று கேட்டான்.

"விசாரிச்சேன் கணேஷ். அவங்க ரிப்போர்ட் கொடுத்திருக்காங்க."

"ரிப்போர்ட் என்ன சொல்லுது?"

"யூஷுவல் கவர்ன்மெண்ட் வழவழ! ராஜராஜன் கிணற்றில் தங்கக் காசுகள் போடப்பட்டிருப்பதைப் பற்றிக் கல்வெட்டு செய்திகள் இருப்பது இந்த டிபார்ட்மெண்டுக்குத் தெரிந்த விஷயம். அந்தக் காசுகள் மறுபடி பதினாலாம் நூற்றாண்டில் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டன என்றும் நாகபட்டன் என்கிற ஒருத்தன் அவைகளைக் கவர்ந்து சென்றுவிட்டதாகவும் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. இப்போது அந்தக் காசுகள் எங்கிருக்கின்றன், யாரிடம் இருக்கின்றன என்பது பற்றிப் பற்பல அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. போலீஸ் டிபார்ட்மெண்ட் இது பற்றி மேற்கொண்டு-தகவல் தந்தால் நன்றியுடையவர்களாக இருப்போம்."

"சரிதான்."

"அவுங்க என்ன சொல்றாங்க புரியுதா கணேஷ்!"

"தங்கக் காசு இருந்தது கிணத்துல. ஆனா இப்ப இல்லைங்கறாங்க."

"இருந்தாலும் இருக்கலாம்கறாங்க. நடுவில யாரோ அடிச்சுட்டுப் போய்விட்டாங்கன்னு ஒரு பட்டனைச் சொல்றாங்க."

"இது பற்றிப் பேராசிரியரைக் கேட்டுப் பாக்கறேன். அப்பத்தான் ஊர்ஜிதமாகும். அவர் இந்த வெட்டில எல்லாம் அத்தாரிட்டி."

"அப்புறம் கணேஷ் அந்தக் கூழமந்தல் ஆசாமி குத்தப்பட்டுச் செத்தான்னு சொன்னிங்க பாருங்க. அதைக் கொஞ்சம் விசாரிச்சேன். சிலதெல்லாம் சுவாரஸ்யமா இருக்கு. ஆசாமி குத்தப்பட்டதுக்கு முத நாள் உக்கல் வந்திருக்கான் ஒரு நண்பரைப் பார்க்கறதுக்கு. அந்த நண்பனைப் பிடிச்சு தீர விசாரித்ததிலே தெரிஞ்ச விஷயம் கொஞ்சம் சுவாரஸ்யமா இருக்கு. அந்த ஆள் நண்பன்கிட்டச் சொன்னானாம். உக்கல்ல அந்தக் கிணத்தைச் சுத்தி ஏதோ வினோதமா நடக்குதுப்பா. எனக்கு அந்த ராஜராஜன் கிணத்தையும் பாக்கறது ரேட்டி. அதைப் பார்த்துவிட்டு வர நேத்து ராத்திரி போனேன். அங்க கோஷ்டியா நாலைஞ்சு ஆசாமிங்க வான்ல வந்து இறங்கி பக்கெட் பக்கெட்டா அந்தக் கிணத்துல ராத்திரியில் தண்ணி இறைச்சாங்களாம் இவன் போய் 'இத பாருப்பா எதுக்காகப் பாழுங் கிணத்தில ராத்திரில தண்ணி இறைக்கிறே? இது சர்க்கார் கிணறு. நான்தான் காவல்காரன்'ன்னு சொல்ல அவனைப் போடான்னு விரட்டிவிட்டாங்களாம். மறுநாள் அதைப் பத்தி பட்டணத்துக்காரங்க பார்வையாளர்கள் யாராவது வந்தா ரிப்போர்ட் பண்ணப் போறேன் என்று

சொன்னானாம். அதைச் சொல்றதுக்குத்தான் உங்ககிட்ட வந்திருக்கான் மறுநாள். அதுக்குள்ள குத்தப்பட்டிருக்கான். சுருங்கச் சொன்னா சம்பவ தினத்துக்கு முதல் நாள் வான்ல வந்து தண்ணி இறைச்சிருக்காங்க."

"தண்ணி இறைச்சிருக்காங்களா இல்லை, சேகரிச்சிருக் காங்களா?"

"அதென்னவோ சரியாத் தெரியலை. கிணத்துல தண்ணியை யாராவது சேகரிப்பாங்களா?"

"அதானே! அப்புறம் ராஜேந்திரன்! அந்த அருணா என்டர்ப்ரைஸஸ் பற்றி விசாரிச்சீங்களா?"

"விசாரிச்சுட்டேன் கணேஷ். பிஸினஸ் எல்லாம் பார்த்தா நிழலா ஏதும் இல்லை எக்ஸ்போர்ட் இம்போர்ட் பண்றாங்க. பெல்ஜியம்ல ஒரு கம்பெனி மிஷினரி ஏஜன்ஸி எடுத்திருக்காங்க. அப்புறம் மேற்கு ஜெர்மனி ஹீடல்பர்க் மாதிரி ஒரு கம்பெனி பிரிண்டிங் மிஷினரி ஏஜென்ஸி, ஆக்சுவல் யூஸர்ஸ் லைசென்ஸில் இறக்குமதி பண்ணி கமிஷன் வாங்கிக்கிறாங்க."

"எக்ஸ்போர்ட்டிங்?"

"விக்ஸ்."

"தலைமயிர்?"

"ஆமாம். அது ஒண்டிதான் இந்தியாவில சல்லிசா கிடைக்கிற சமாசாரம். ஸ்ட்ரைக் ஏதும் இல்லாமத் தானே வளர்ந்துக்கிட்டு இருக்குது."

கணேஷ் சிரித்து "தலைமயிர்க்குள்ள ஏதும் பொதிந்து இல்லையே? ஓப்பியம் வைரம்?"

"அப்படியெல்லாம் ஏதும் இருக்கிறதாத் தெரியலை. இருந்தும் இந்தக் கம்பெனியை இன்டெலிஜன்ஸ் லிஸ்ட்டிலே போட்டிருக் கேன். வாட்ச் பண்ணிப் பார்க்கறோம். கணேஷ் சந்தேகப்பட்டா அதில ஏதாவது விஷயம் இருந்துதான் ஆகணும். அருண்பிரசாதோ என்னவோ ஓனர் பேரு. நான் எல்லாத்தையும் தீர விசாரிக்கச் சொல்லியிருக்கேன். கணேஷ், நீங்க என்ன சொல்றீங்க? அந்தக் கிணத்தில தங்கம் இல்லைங்கறீங்களா?"

"நான் இதுவரைக்கும் எதும் முடிவுக்கு வரலை ராஜேந்திரன். தனித்தனி துண்டுகளாக இருக்கு. இப்பத்தான் ஒட்ட வைக்கலா மான்னு பாக்கறேன். அந்தக் கிணத்தைப் பாதுகாக்கறதுக்கு ஏற்பாடு செஞ்சுட்டீங்கல்ல?"

"செய்தாச்சு."

கணேஷ் டெலிபோனை வைத்துவிட்டு; "வஸந்த்! நீ மறுபடியும் உக்கல் போறியா?"

"சரி பாஸ்."

"மாறு வேஷத்தில்" என்றான் கணேஷ்.

# 23

"என்னது? நான் மாறு வேஷத்தில் போகணுமா! எதுக்கு" என்றான் வஸந்த் சற்று அதிர்ந்து.

"அந்த வியாபாரம் என்னன்னு கண்டுபிடிக்கறதுக்கு. நீதான் நல்லா வேஷம் போடுவியே. கேள்விப்பட்டிருக்கிறேனே."

"எப்ப பாஸ்? நான் சின்ன வயசில ஒரே ஒரு தடவை பள்ளிக் கூடத்தில பாரதியாரா வேஷம் போட்டுக்கிட்டு ஸ்டேஜ் பூரா தலைப்பாவை இழுத்துக்கிட்டு கப்பலோட்டிய தமிழனைக் கவுத்திட்டேன். அதுக்கப்புறம் ஜன்மத்துக்கும் வேஷம் போடறதில்லைன்னு எங்கம்மா கிட்ட எச்ச உமிஞ்சு சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கிறேன். என்ன வேஷம் போடணும்? ரெப்ரிஜிரேட்டரா வா? அப்படி ஏதாவது இம்பாஸிபிளா சொல்லுவீங்களே!"

"நீ என்ன வேஷம் போட்டுக்கிறியோ கொஞ்சம் நம்பும்படியாப் போடு ... அங்க போய்க் கொஞ்ச நேரம் அல்லது கொஞ்ச நாள் பஸ் ஸ்டாண்டில அலைஞ்சு அந்தப் பத்துக்கு நாப்பது பார்ட்டியை எப்படியாவது காண்டாக்ட் பண்ணணும். என்ன?"

"என்ன வியாபாரம்னு தெரியாம பேந்தப் பேந்த விழிக்கிறதா?"

"கண்டுபிடிக்கிறேன் வஸந்த்."

"கண்டுபிடிக்காம தொடரும் போடறதில்லேன்னு வெச்சிருக்கீங் களா பாஸ்?"

"அந்தக் கட்டுரையை மறுபடி எப்படியாவது கொண்டு வந்துட்டாத் தெரிஞ்சுபோயிரும். நீதான் ஏதோ கெமிஸ்ட்ரி பேராசிரியரைத் தெரியும்னு சொன்னியே?"

"பேராசிரியை!"

"இங்க கூட பெண்பாலா?"

"அவங்களுக்கு ஒரு முறை கிரிகெட் மாட்சில தர்மாஸ் பிளாஸ்க் நிறைய பால் வாங்கிட்டு வந்தேன். அப்பலேந்து பழக்கம். வயசு முப்பதுதான் ஆறது. எங்கிட்ட ரொம்ப ஒரு இது. அக்கா தம்பி

மாதிரி ஒரு அட்டாச்மெண்ட் ...

"விவரங்கள் வேண்டாம். சாயங்காலத்துக்குள்ள அந்தக் கட்டுரை எனக்கு ..."

"வந்தாச்சு. கவலையை விடுங்க பாஸ், நான் கோவிந்தா சொம்பு ஒண்ணு எடுத்துக்கிட்டுத் திருப்பதில வேண்டுதலைன்னு மொட்டை அடிச்சுக்கிட்டுப் போகட்டுமா?"

"இல்லை வஸந்த். ஏதாவது நம்பும்படியாப் போ. எனக்கென்னவோ ஒரு சின்ன மீசை, கன்னத்தில் கறுப்பு மச்சம், கொஞ்சம் விந்தி விந்தி நடை. இது போதும்னு தோணுது. அதுக்கு முன்னாடி கட்டுரையைப் பார்."

வஸந்த் செல்ல கணேஷ் தன் கேஸ கட்டுகளைப் பார்க்க விழைந்து அவைகளைப் பிரித்தான். காவேரி பேப்பர் மில்ஸுக்கும் சென்னகேசவனுக்கும் ஒரு சின்ன சிக்கலான வழக்கு. பேப்பர் மில்லின் சார்பாக அவன் வழக்காட வேண்டும். பகாஸ் சப்ளை செய்து அதிலிருந்து நியூஸ் பிரிண்ட் உற்பத்திக்கும் புதிய முறைக்கு அந்த மில்லை விரிவுபடுத்தும் திட்டத்தில் கரும்பு பயிரிடுபவர் களின் கோஆபரேட்டிவ் நிறுவனத்தின் சார்பில் சென்னகேசவன் ஆலைச் சக்கையான பகாஸைத் தருவதாக வாக்களித்துவிட்டு இப்போது கையை விரித்துவிட்டதால் காவேரிக்கு ஏகப்பட்ட நஷ்டம் ... கணேஷ் கொட்டாவி விட்டான். காவேரியின் இன்ஜினியர் பின்னணிச் செய்தியாக அவனிடம் காகிதம் செய்யும் பல முறைகளைப் பற்றிய ஒரு குண்டுப் புத்தகத்தை வேறு கொடுத்துப் போயிருந்தார். அதை அசுவராஸ்யமாகப் புரட்டினான். மனம் உக்கல் கிராமத்திலேயே இருந்தது. ஒரு சங்கிலி, ஒரு தொடர், ஒரு கண்ணி கிடைத்துவிட்டால் போதும். பத்துக்கு முப்பது எப்போது? பத்துக்கு நாப்பதை விட சிலாக்கியமானது?

The soda process uses caustic soda (Sodium Hydroxide). The kraft or sulphate process results in a stronger fibre. Sodium Monosulphate is one of the newer working methods.

கணேஷ் விழித்துக்கொண்டு ... சோடியம் ஹைட்ராக்ஸைட்! சோடியம் மானோ சல்ஃபேட்! எங்கே பார்த்திருக்கிறோம்? ஆம். அந்தத் துண்டை – வஸந்த் பொறுக்கிக்கொண்டு வந்த துண்டை ஆராய்ச்சி சாலைக்கு அனுப்பிக் கிடைத்த ரிப்போர்ட்டில்! கணேஷ் தொடர்ந்து படித்தான்.

The logs are sliced and the the slices broken up into chips from ¼ to 1 inch size and pressure cooled in a steam heated digester chip – சபாஷ் மரத்துண்டு!

To make paper dimensionally stable and for good finish china clay titanium oxide.

டைட்டானியம் ஆக்ஸைடு! இதையும் பார்த்த ஞாபகம் கணேஷுக்குச் சற்றுப் புரிய ஆரம்பித்தது. பேப்பர் தயாரிக்கிறார்கள். நல்ல தாமுள்ள பேப்பர்; அந்த அருணா எண்டர்ப்ரைஸஸின் பலதரப்பட்ட பிஸினஸ்களில் ஒன்றாக இருக்கலாம் அல்லது . . பேப்பர்! உக்கலின் பக்கலில் பேப்பர் எதற்குத் தயாரிக்க வேண்டும்? ஏதாவது ரகசிய பத்திரிகையா? சதி இலக்கியமா? கணேஷ் யோசித்தான். Sizing agents of which resin is the most common render the paper resistant to penetration by water.

அட! இப்படி இருக்குமோ?

கணேஷுக்குள் மின் புயல் அடித்தாற்போல் எண்ணங்கள் பறந்தன. இப்படித்தான் இருக்க வேண்டும். அல்லது இப்படியா? எங்கே போய்த் தொலைந்தான் இந்த வஸந்த்? இந்தச் சமயத்தில் என் சந்தேகங்களைப் பகிர்ந்துகொள்ள இல்லாமல் போய் விட்டானே . . . டெலிபோனை எடுத்தான். சுழற்றினான். மறுமுனை கிர்ர்ரிங்கிக்க, கணேஷ் ஒரு காகிதத்தில் "காகிதத் தொழில்கள் என்ன என்ன?" என்று எழுதிப் பார்த்தான்.

"ராஜேந்திரன், கணேஷ்! அந்தக் கேஸ்ல ஒரு ப்ரேக்!"

"என்ன கணேஷ்?"

"அவங்க காகிதம் சம்பந்தப்பட்ட ஏதோ செய்யறாங்க!"

"காகிதமா?"

"ஆமா, காகிதம் தயாரிக்கிறாங்க. அல்லது காகிதத் தயாரிப்போட சம்பந்தப்பட்ட ஏதோ செய்யறாங்க. பல்ப்பு செய்யறது, பீட்டிங் ஏதாவது . ."

"கொஞ்சம் இருங்க. பறக்காதீங்க?"

"அங்க இருந்த ஒரு ஆளோட வியாபாரம் பேசிட்டு இருக்கறப்போ அவன் கையில ஒரு பார்ஸல் மாதிரி ஏதோ ஒண்ணு வெச்சிருந்தான்னு சொன்னேனில்ல . ."

"ஆமா."

"அடுத்த தடவை வஸந்த் அவனைச் சந்திக்கப் போனபோது அந்தப் பார்ஸலிலிருந்தோ அல்லது அதோட சம்பந்தப்பட்ட ஏதோ ஒன்றிலிருந்தோ விழுந்த பொருள் ஒன்றைப் பொறுக்கிட்டு வந்து அதைக்கூட நான் உங்ககிட்ட போலீஸ் லாபில அனலைஸ் பண்ணி ரிப்போர்ட் தரும்படி கேட்டுக்கிட்டேனே ஞாபகம் இருக்கில்ல?"

"இருக்கு"

"அந்த ரிப்போட்டில கண்ட பொருள்கள் எல்லாம் பேப்பர் தயாரிக்கிறதில உபயோகப்படற ரசாயனப் பொருட்கள்!"

"அந்தத் துண்டு என்னதான்னு சொல்றீங்க?"

"சரியாத் தெரியலை. ஒருவேளை மரத்துண்டா இருக்கலாம்.

பேப்பர் தயாரிக்கற மெட்டீரியல், சின்னச் சின்னத் துண்டுகளா மரத்தை வெட்டித்தான் பேப்பர் தயாரிப்பாங்க. அந்தத் துண்டுகளில் ஒண்ணா, பேப்பர் தயாரிப்பதற்கு முன்னாடி கெமிக்கலா ட்ரீட் பண்ண துண்டா இருக்கலாம். அதுதான் தப்பித் தவறி அந்தப் பார்ஸலோட ஒட்டிக்கிட்டு வந்திருக்கணும்."

"பேப்பர், பேப்பர்! இருங்க கணேஷ்! இந்தக் கேஸ் நான் நினைக்கிறதா இருந்தா பெரிய விஷயம். உடனே வரீங்களா? முதல்ல அந்த அருண் எண்டர்ப்ரைஸ்ஸைப் பார்க்கலாம்."

"அதுக்கு முன்னாடி வஸந்த் கிட்ட ஒரு கட்டுரை எடுத்துக்கிட்டு வரும்படி சொல்லியிருக்கேன். அது வந்ததும் இன்னும் கொஞ்சம் தெளிவாகும்னு நம்பறேன் . . ."

"சரி. ஏதாவது தெரிஞ்சாச் சொல்லுங்க. நாங்களும் இப்பவே தீவிரமா விசாரிக்கப் போறோம்."

"ராஜேந்திரன்! ஏதாவது இன்டிகேஷன் தெரியுதா உங்களுக்கு"

"ஆமாம்! கணேஷ்! ஆமாம்! நீங்க இப்ப சொன்னதில் இருந்து புடிச்சுக்கிட்டேன்."

"என்ன"

"இவ்வளவு தூரம் கண்டுபிடிச்சிருக்கீங்களே. இதையும் கண்டு பிடிங்களேன்! போலீசுக்குக் கொஞ்சமாவது விட்டு வைங்க" என்று சிரித்துக்கொண்டே டெலிபோனை வைத்துவிட்டார்.

கணேஷ் சற்று நேரம் ரிசீவரைப் பார்த்துவிட்டு வைத்தான். வஸந்த்துக்காகக் காத்திருந்தான். இப்போதைக்கு வருவான் போலத் தெரியவில்லை. கேஸ் கட்டை மறுபடி பார்த்தான். எண்ணம் அதில் செல்லவில்லை. கிணற்றையே சுற்றியது. காகிதம்! கிணறு! காகித உற்பத்திக்கும் கிணற்றுக்கும் என்ன சம்பந்தம்?

கோர்ட்டுக்குச் சென்று ஆஜராகி அந்தச் சிக்கலான வழக்கின் மந்தமான போக்கில் அவன் மேம்போக்காகத்தான் ஈடுபட்டான். உள்ளே கிணறு உறுத்திக்கொண்டே இருந்தது. சாயங்காலம் நாலரை மணி வரைக்கும் வஸந்த் வரவில்லை. கணேஷுக்குப் பதற்றம்தான் அதிகரித்தது. கோர்ட்டை விட்டு மீண்டும் அலுவலக அறைக்கு வந்த மாத்திரத்தில் பேராசிரியர் அப்பாதுரையும், அவர் மகள் இனியாவும் வந்து சேர்ந்தார்கள்.

"கணேஷ்! ஒரு முக்கியமான விஷயம்!"

"என்ன ஸார்?"

பேராசிரியரின் முகம் சற்றுச் சுருங்கிக் கவலையுடன் இருந்தது தெரிந்தது.

"எனக்கு ஆதாரமா ஒரு சந்தேகம் கிளம்பியிருக்கு."

"என்ன சந்தேகம் ஸார்?"

என்ன சந்தேகம் என்று சொல்லாமல் பேராசிரியர் சிந்தனை

வயப்பட்டு இருந்தார். "சே! எப்படிச் சாத்தியம் இது!" என்றார்.

கணேஷ் இனியாவைக் கேள்விக்குறியுடன் பார்த்தார்.

"மறுபடி உக்கல் போகணும்கிறார்."

"வேண்டாம். நானும் வஸந்த்தும் போப்போறதா இருக்கோம். என்ன வேணும் சொல்லுங்க."

"நீங்க போகப் போறீங்களா? அப்ப நாங்களும் வரோம்!"

"இனியாவுமா?"

"ஆமா!"

"இந்தச் சமயத்தில அங்கே வர்றது சரியில்லை இனியா. அந்த இடத்தில விநோதமான காரியங்கள் எல்லாம் நடக்குது."

"இல்லை கணேஷ்! நான் அங்க போயே ஆகணும். இல்லைன்னா எனக்குத் தலை வெடிச்சுப் போயிரும். அவ்வளவு முக்கியமான ஜோலி எனக்கு!" என்றார் பேராசிரியர்.

"உக்கல்ல எங்க?"

"ராஜராஜன் கிணற்றில."

"சரிதான். நீங்களும் கிணத்தை இன்னும் விடலியா?" என்று வஸந்த் உள்ளே நுழைந்தான்.

"ஹலோ இனியா! ரகசிய ராத்திரி புத்தகமே! எப்படி இருக்கிறே? எல்லோரும் நலமா? அமெரிக்கா மாப்பிள்ளை நலமா?"

"ஏய், போன காரியம் என்ன ஆச்சு?"

"பாஸ் கிடைச்சிருச்சு! அந்த ஆர்ட்டிக்கிள் பேரறிஞர் அண்ணா டெக்னாலாஜிக்கல் பல்கலைக்கழகத்தில் . . ."

"வஸந்த்! தி ஆர்ட்டிக்கிள் ப்ளீஸ். அந்த யூனிவர்சிட்டி பெயரைச் சொல்லி முடிக்கிறதுக்குள்ளப் பொழுது விடிஞ்சுடும்!"

"நானும் வந்தே ஆகணும்" என்றார் பேராசிரியர்.

"அழைச்சுண்டு போறோம் ஸார்! கவலைப்படாதீங்க."

"ஆமா, நீங்க எதுக்கு உக்கலுக்கு வரணும்?"

"எனக்கு அந்தக் கல்வெட்டைப் பார்த்தாகணும்"

"எதுக்கு ஸார் இந்த வயசான காலத்தில? உங்க டாட்டரை மட்டும் அனுப்பி வைங்க. நல்லா காமிச்சு அனுப்பறேன்.!"

"அவளுக்குத் தெரியாது. நான் வந்தே ஆகணும். இது என் தன்மானப் பிரச்னை!"

"நீங்க என்ன சொல்றீங்கன்னு புரியறது சிரமமாயிருக்கு. ஆனா அதுக்கு இப்ப அவகாசம் இல்லை. என்ன பாஸ்?"

கணேஷ் அந்த ஆராய்ச்சிக் கட்டுரையைப் படித்துக் கொண்டிருக்க அவன் முகம் திடீரென்று பிரகாசமடைவது

தெரிந்தது.

"என்ன பாஸ்! பளிச்சுனு பல்பு போட நீங்க!"

"வஸந்த்!"

"என்ன பாஸ்?"

"வஸந்த்!!!'

"என்ன பாஸ் பக்கத்திலேயே இருக்கேன்! என்னது உங்க முகத்தைப் பார்த்தா கியூ இல்லாம கிருஷ்ணாயில் கிடைச்சவன் மூஞ்சி மாதிரி டாலடிக்குது. என்ன கண்டுபிடிச்சிங்க."

"வஸந்த் எல்லாம் இப்ப சக்குனு பொருந்துது. எல்லாம் எல்லாம்!"

"நான் போய்ப் பார்த்தே ஆகணும்."

"ஸார்! கொஞ்சம் சும்மா இருக்கீங்களா. ஒரு தடவை சொல்லியாச்சுல்ல, உங்களையும் அழைச்சுக்கிட்டுப் போறோம் னுட்டு. திரும்பித் திரும்பி அதையே ஸிந்துஸ்தானி சங்கீதம் மாதிரி பாடிக்கிட்டு இருக்கீங்களே, பாஸ் என்ன சொல்றீங்க? சரியாச் சொல்லுங்க!"

"அவங்கள்ளாம் சேர்ந்துண்டு என்ன செய்யறாங்கன்னு தெரிஞ்சுபோச்சு வஸந்த்! சந்தேகமே இல்லாமத் தெளிவாத் தெரிஞ்சுபோச்சு. முதல்லே இருந்து எல்லாம் பொருந்துது! முதல் கத்திக்குத்து, அந்தப் பார்ஸல்! பத்துக்கு நாப்பது வியாபாரம், சதாசிவம்! போலீஸ் ஸ்டேஷன் வழக்குகள், பஸ் ஸ்டாண்டில் ஸாம்பிள் கேக்கப்பட்டுப் பொட்டியை இழந்த தஞ்சாவூர்க்காரர் ... ஏன் அந்த நூறு ரூபா நோட்டை ரோட்டில் கண்டெடுத்த கேஸ், எல்லாமே பொருந்தறது. வஸந்த் உனக்குத் தெரியலை? ரொம்ப சிம்பிள்."

"என்ன பாஸ் கிண்டலா பண்றிங்க! ஒரு எழவும் தெரியலை! சொல்லுங்க!"

"கணேஷ்! நான் உக்கலுக்கு போயே ஆகணும்."

"போலாம் ... போலாம் ... எல்லாரும் போலாம் ஸார்! இந்த விநோத விவகாரத்தின் கடைசிக் காட்சி உக்கல்ல அந்தக் கிணத்துக்குப் பக்கத்தில நடக்கப் போறது" என்றான் கணேஷ்.

# 24

வஸந்த் தலையைச் சொறிந்துகொண்டான்; கலைத்துக் கொண்டான். கன்னத்தில் மச்சம் ஒட்டிக்கொண்டு, பொய் மீசை பொருத்திக்கொண்டு கண்ணாடி பார்த்து 'பயமா இருக்கு!' என்றான். விலகினான். இனியா "பர்ஃபக்ட்! சார்மினார் விளம்பரத்தில வர ஆசாமி மாதிரி இருக்கே!" என்றாள்.

"பாஸ் எதுக்கு இந்த வேஷம்னு சொல்லித் தொலைச்சிங்கன்னா உபகாரமா இருக்கும்,"

"உதர நிமித்தம் பஹுக்ருத வேஷம்."

"சம்ஸ்க்ருதத்தில் விளையாடறிங்க! என்னது பகவத் கீதையா?"

"பஜகோவிந்தம்."

"உக்கலுக்குப் போய் ஏதாவது பஜனை பண்ணணுமா?".

"கணேஷ்! நாம எப்ப உக்கல் போகப் போறோம்?"

"காலைல சார்" என்றான் கணேஷ். பேராசிரியர் இன்னும் சிந்தனை வசப்பட்டுத்தான் இருந்தார்.

"அதுக்காக இப்பவே வேஷம் போட்டுக்கணுமா பாஸ்?"

"இல்லை வஸந்த். நீ இன்னிக்கே போயிடறே."

"சரி. இதெல்லாம் எதுக்கு பாஸ்? அவங்க என்ன செய்யறாங்க?"

"எங்க போயிருக்கும் அந்த மாடை காசெல்லாம்?"

"அடாடாடா? ஸார்! கொஞ்ச நேரம் இந்த மாடையை உள்ள விடாமப் பார்த்துக்கறீங்களா? ஏற்கனவே சிண்டைப் பிய்ச்சிண்டு தலை மொட்டையா இருக்கு. இனியா! அப்பாவைக் கூட்டிண்டு போய் ஒரு தம்ளர் ஐஸ் மோர் வாங்கித் தா"

"அப்ப நான் வரட்டுமா கணேஷ். நாளைக்குக் காலைல கட்டாயம்?"

"கட்டாயம்! நீங்க இல்லாம நான் கிளம்ப மாட்டேன் ஸார்."

"நாளைக்கு ஒண்ணில்ல ஒண்ணு தீர்த்துடணும். நான்தான் தப்பு பண்ணிட்டேனா, கிணறு வேறயா?"

"எல்லாம் நாளைக்குப் பார்த்துறலாம் ஸார்."

"இனியா வரியா?"

"பை வஸந்த்!"

"பை இனியா! உயிரோட இருந்தா நாளைக்குப் பார்க்கலாம்."

இனியா கிளம்பும் சமயத்தில் அந்தப் பெண் "எக்ஸ்க்யூஸ் மீ"யுடன் உள்ளே நுழைந்தாள்.

இனியாவும் அந்தக் கண்ணாடிப் பெண்ணும் சந்தித்துக் கொண்ட பார்வையில் மின்பொறிகள் சிற்சில பறந்தன. லைப்ரரிப் பெண்தான். இப்போது வேறு மாதிரி இருந்தாள். பனியன் பேண்ட். 'லுக்' என்றாள் இனியா விநோதக் குரலுடன்.

"எஸ்? யார் வேணும்?" என்றது.

"மிஸ்டர் வஸந்த் இருக்காரா?"

"இதோ சாட்சாத்!"

"நீங்களா!" அவள் நிமிர்ந்து பார்த்தபோது அவள் மார்பு விம்மியது.

"ஓ எக்ஸ்க்யூஸ் மீ! ஒரு நிமிஷம்!" வஸந்த் மீசையை நீக்கிவிட்டு "இப்ப பாருங்க" என்றான்.

லைப்ரரி கைகொட்டிக் குதித்து சிரித்து,"ஓ! வஸ்ஸ்ஸந்த்! யு ஆர் நாட்டி" என்றாள்.

"உங்களை லைப்ரரியில் பார்த்திருக்கிறதா ஞா" என்றான்.

"அதுக்குள்ள மறந்துட்டிங்களா? நீங்கதான் கோவிந்தான்னு பெயர் கொடுத்து ஏமாத்திட்டு வந்துட்டா கண்டுபிடிக்க முடியாதுன்னு நினைச்சீங்களா?"

"எப்படிக் கண்டுபிடிச்சீங்க."

"கெஸ் பண்ணுங்க பார்க்கலாம்."

"என்னது?"

"கெஸ். ஜி.யு.இ.எஸ்.எஸ்! கிஸ் இல்லை."

"அதானே பார்த்தேன். காதில வேற மாதிரி விழுந்தது."

"உங்க ரிஸ்ட் பாகை விட்டுட்டுப் போயிட்டீங்க. அதில உங்க கார்டு இருந்தது. அட்ரஸ் இருந்தது. இந்தாங்க உங்க கைப் பை. இந்தாங்க உங்க போட்டோஸ்டட் காப்பி." இடுப்போடு ரொம்ப ஒட்டினாற்போல் பேண்ட் அணிந்திருந்த அவள் வஸந்த்துக்கு தேவைக்கு அதிகமாக அருகில் வாசனையாக வந்து பையைக் கொடுத்துவிட்டு, "கன்னத்தில் என்ன கருப்பா?" என்று வஸந்தின் மச்சத்தை அழித்தாள்.

வஸந்த் ஒரு கணம் இனியாவைப் பார்த்தான். அவள் கண்களில் பளபளவென்று கத்திகள் தெரிந்தன. "பை த வே திஸ் இஸ் இனியா!

திஸ் இஸ் . . . உங்க பேர் என்ன சொன்னீங்க? மிஸஸ் ராகவன்னு ரீல் விட்டீங்க . . ."

இனியா காத்திராமல், "அப்பா வாங்க போகலாம்." என்றாள்.

வெளியே காரில் கோபக் கதவு சாத்தப்பட்டதைக் கவனிக்காமல் வஸந்த். "அப்ப என்னைத் தேடி கண்டுபிடிச்சுட்டீங்க?" என்றான்.

"நான் வரட்டுமா? சீ யூ ஸம் டைம்" என்று அவள் குதித்துக் கொண்டு கிளம்ப வஸந்த் "கொஞ்சம் இருங்க. வாசல் வரைக்கும் கொண்டுவிடறேன்." அவளுடன் சென்று அவளுடைய வெஸ்பாவை உதைத்துக் கிளப்பிக் கொடுத்து ஸீட்டைத் தட்டிக் கொடுத்து வழியனுப்புவதை, புறப்பட்டுக்கொண்டிருந்த் இனியா பார்த்தாள். உதட்டைக் கடித்துக்கொண்டாள்.

திரும்ப அறைக்குள் வந்ததும் "யார்றா இது புது சிநேகிதம்?" என்றான் கணேஷ்.

"லைப்ரரிலே பார்த்தேன் பாஸ். அப்ப ஸாரி கட்டியிருந்ததாலே சரியாத் தெரியலை. என்ன மாதிரி சாஸி பார்த்தீங்களா?"

"அடப் போடா! இனியா உன்னைப் பார்த்த பார்வையை கவனிச்சியா?"

"சேச்சே! இன்னி தப்பா எடுத்துக்காது! அது வேற பாஸ்! அது காவியம், கவிதை!"

"பின்ன இது?"

"இது சும்மா பொம்மை பார்க்கறது."

"உருப்படவே மாட்டே."

"கேஸுக்கு வாங்க பாஸ். என்ன கண்டுபிடிச்சீங்க அதைச் சொல்லவே இல்லியே."

"வஸந்த், நீ கொண்டுவந்த ரசாயன ஆராய்ச்சிக் கட்டுரை ராஜராஜன் கிணத்தில இருக்கிற தண்ணியை அலசி எழுதியிருக்கிற கட்டுரை. அதில இருக்கு சூட்சுமம்."

"என்ன அது? நானும்தான் படிச்சேன். ஒரு அட்சரம் புரியலையே!"

கணேஷ் அந்தப் புத்தகத்தைப் பிரித்து, குறிப்பிட்டிருந்த பக்கத்திலிருந்து படித்தான்.

The chemical properties of the water in this well render is admirably suited for preprocess pulp treatment. Moreover in Block Printing Process with this water treatment halftone block and Lithographic stones and other surface deposition systems can be made to look like those printed from engraved intaglio plates.

"இப்ப மட்டும் புரிஞ்சுதா?"

"வஸந்த், இரண்டாயிரத்து ஐநூறு வருஷத்துக்கு முந்தி ஸன்

ட்ஸூன்னு ஒரு சீனாக்காரர் என்ன சொன்னார் தெரியுமா? 'உன் எதிரியை அறிந்துகொண்டு உன்னையும் அறிந்து கொண்டாயானால் நீ நூறு யுத்தங்களுக்கும் பயப்பட வேண்டி யதில்லை'ன்னு"

"ஸன் ட்ஸூ! இப்ப இதில எங்கே வர்றார்?"

"எதிரியைத் தெரிஞ்சுண்டுட்டேன். இனிப் பயமில்லை?"

"என்ன தெரிஞ்சுண்டிங்க?"

"வஸந்த், இன்ட்டாக்லியோ பிளேட்டுங்கறது எதுக்கு யூஸ் பண்ணுவாங்க தெரியுமா?"

"எதுக்கு?"

கணேஷ் பையிலிருந்து எடுத்துக் காட்டி, "இதுக்கு" என்றான்.

வஸந்த் சற்று நேரத் தயக்கத்துக்குப் பின் திடீரென்று பிரகாசமாகி "மை காட்! இப்ப புரியுது பாஸ்!" என்றான்.

"பத்துக்கு முப்பது, பத்துக்கு நாப்பதை விடச் சிறப்பா இருக்கிறது புரியுதா!"

"புரியுது! பளிங்கு மாதிரி! பஸ் ஸ்டாண்டில நடந்தது, சரித்திர சம்பந்தமில்லாதவங்க ரா.ரா.வுக்கு நாயா அலைஞ்சது, கத்திக்குத்து, அடிதடி எல்லாம் சொருகினாப்பல அப்படியே வந்து விழுது."

"இப்ப எதுக்காக முதல்ல உன்னை அங்க அனுப்பறேன்னு தெரியுதா? கோஷ்டியாப் போனா சந்தேகப்படுவாங்கல்ல?"

"தெரியுது பாஸ்? நீங்க கில்லாடி! கவலையே படாதீங்க. இடத்தைக் கண்டுபிடிச்சுட்டுத்தான் ம.கா. அதான வேணும் உங்களுக்கு?"

"அதான்! இப்ப எல்லாச் சம்பவங்களுக்கும் இருக்கிற இணைப்பு புரியுதா?"

"அய்யோ! சொல்லாதீங்க. அவ்வளவு மரமண்டை இல்லை நான்."

"வஸந்த்! எதுக்கும் ஜாக்கிரதையாவே இருந்துக்க. அநாவசியமா ரிஸ்க் எதும் எடுக்காதே. சந்தேகமா இருந்தா நான் வர்ற வரைக்கும் காத்துக்கிட்டு இரு. சரிதானே?"

"நோ ப்ராப்ளம்!"

"நான் ராஜேந்திரனுக்கு போன் பண்ணி ரீ–இன் போர்ஸ்மெண்டோட நாளைக்கு வந்து சேர்றேன்."

"அப்ப நான் உக்கலின் பக்கம் சென்று வரவா?"

"வா! பெஸ்ட் ஆஃப் லக்."

**வஸந்த்** மறுபடி உக்கலுக்கு வந்தபோது மாலை ஐந்து மணி. பஸ்

நிலையத்தில் கொஞ்ச நேரம் திரிந்தான். அந்தப் பெட்டிக் கடைக்காரன் மார்பு சட்டைப் பித்தான் திறந்து அதில் ஒரு புலி நகம் தொங்க, காட்டுத்தனமாக கிராப் வைத்துக்கொண்டு பக்கவாட்டமாகப் பார்த்தான். வஸந்த் அங்கே சென்று சிகரெட் பற்ற வைத்துக்கொண்டான். மச்சமும் மீசையும் கையில் சிறிய அளவு வி.ஐ.பி. பெட்டியுமாக நின்றான். கடையில் தொங்கிக் கொண்டிருந்த பத்திரிகைகளில் ஏராளத்தில் முன் பக்கம் பின் குத்தியிருந்த வகைகளைப் பிரித்துத் தலையைச் சாய்த்துக்கொண்டு படித்தான்.

சோப்பைத் தேடு . . .

பிறகு அவள் எனக்கும் . . .

மாதிரி செய்தாள் . . .

கொருவர் வாய் மூலம் . . .

ரம்பித்தோம் நான்கைந்து . . .

நேரடியான உடலுற . . .

"என்னங்க? உங்க டேஸ்டுக்கு புத்தகம் வேணுமா?" என்று கடைக்குள்ளிருந்து "பக்கத்து வீட்டுப் பருவச் சிட்டு" "இன்ப மயக்கம்" "மலபார் தேங்காய்" "இரவும் உறவும்" இவைகளை எடுத்துப் போட்டான்.

"வாழு வாழ விடு' இருக்கா"

"யாரு சின்மயானந்தாவுங்களா?"

"இல்லையப்பா. சரோஜா தேவி!"

"இல்லைங்க."

"அது படிச்சுப் பாரு. டாப்பா இருக்கும்"

"ஐயா வெளியூங்களா?"

"ஆமாங்க. வியாபார விஷயமா வந்தேன்."

"என்ன வியாபாரம்"

"ஸாம்பிள்!"

கடைக்காரன் இங்கே அங்கே பார்த்துவிட்டு, "வாங்கறீங்களா?" என்றான்.

"ஆமாம்."

"பணம் கொண்டு வந்திருக்கிங்களா?"

"இருக்கு. மாலைப் பாக்கணும். போன தடவை ஏமாந்திட்டேன். எல்லாம் வேஸ்ட் ஆயிடுச்சு. எரிச்சுட்டேன்."

"இந்த முறை சிறப்பாவே போட்டிருக்காங்க."

"கேள்விப்பட்டேன்."

"என்ன ரேட்?"

"முப்பதுதான் மாஜூலே."

"முப்பதுக்கு வர மாட்டாங்க."

"மாலைப் பார்த்துட்டா மேலே போகலாம்னு எங்க முதலாளி சொன்னாரு"

"எந்த ஊருங்க."

"கோயமுத்தூர்தான்."

"பாக்கறீங்களா?"

"இப்ப வேண்டாங்க. இருட்டட்டும். போலீஸ் கயவாணிப் பயங்க பிடிச்சுட்டா பேர் கெட்டுப் போயிரும்?"

"அப்ப எத்தினி மணிக்கு வரீங்க?"

"ஏழு மணிக்கு கூட்டிப் போறீங்களா?"

"ஆகா அதுக்கென்ன?"

"வரட்டுமா?"

"மலபார் தேங்காய்' வேணுமா, படிக்கிறீங்களா?"

"படிச்சு என்னய்யா பிரயோஜனம்?"

"பார்க்கணும்னாக்கூட சௌகரியம் பண்ணிக் கொடுக்கலாம்."

"வந்த வேலையை முதல்ல கவனிச்சுரலாமா?"

"உங்க பேரு?"

"ஏங்க! நம்ம வியாபாரத்தில பேர் சொல்வாங்களா? நான் உன் பேர் கேட்டேனா?"

"ஏழு மணிக்கு வாங்க."

வஸந்த் அந்த இடத்தை விட்டு விலகி மெல்ல நடந்தான். போலீஸ் பக்கமே போகக் கூடாது. பார்த்துக்கொண்டு இருப்பார்கள். சந்தேகத்துக்கு இடம் கூடாது. அவர்கள் பணத்தைக் கேட்டால்? காட்டச் சொன்னால்? . . .

அதை அப்போது சந்திக்கலாம். முதலில் அந்த இடத்துக்குப் போயாக வேண்டும். டீ சாப்பிட்டான். பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு மற்றொரு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு அதை நிதானமாக ஊதினான்.

ஒரு பையன் வந்து "கடைக்காரர் கிட்டப் பேசிக்கிட்டு இருந்தது நீங்கதானே?" என்று கேட்க,

"ஆமா. நாந்தான். ஏன்?"

"கூட்டி வரச் சொன்னாங்க" என்று அவன் விருவிருவென்று நடக்க, வஸந்த் அவனைப் பின்தொடர்ந்தான்.

பஸ் ஸ்டாண்டிலிருந்து பிரிந்து சற்றுத் தூரம் நடந்தபின் பையன் நெல் வயல்கள் மேல் பாய்ந்து வரப்பில் விரைந்தான். வஸந்த் ஓட்டமும் நடையுமாகத் தொடர ஒரு மாந்தோப்பில் நுழைந்து

பண்ணை முற்றம் போல் இருந்த, சாணி மெழுகப்பட்ட இடத்தைக் கடந்து, ஒரு மண்டபத்தை வளைந்து, சின்னதாக ஷெட்டு போல் இருந்த மறைவான இடத்துக்கு வந்து அதன் வாசலில் பையன் நிற்க, “உள்ளே போங்க. நான் இனிமேக்க வரக் கூடாது” என்றான்.

வஸந்த் அந்த மரக்கதவைத் திறக்க அது கிறீச்சிட்டது. உள்ளே வைக்கோல் பரவி மாட்டு மூத்திர நாற்றமடித்தது. ஷெட்டு போலத்தான் இருந்தது. ஒற்றை மாட்டு வண்டிக்கூடு சாய்ந்திருந்தது. எதிர்ச் சுவரில் ஒரு கதவு தெரிந்தது. வஸந்த் அதை நோக்கிச் சென்றான். ‘ஜாக்கிரதை. ரிஸ்க் எடுக்காதே!’ கணேஷ் எச்சரிக்கை காதில் ஒலித்தது. என்ன ரிஸ்க் பார்த்துடலாம் என்று ஆவல் மேலிட அந்தக் கதவைத் தட்டினான்.

சற்று நேரத்தில் அது திறக்க உள்ளே இருட்டாக இருந்தது.

“வாங்க வஸந்த்” என்றது ஒரு குரல்.

சட்டென்று அத்தனை விளக்குகளும் உயிர் பெற்றன.

# 25

அந்த இடத்தில் களேபரமாக இருக்கும் என்று எதிர்பார்த்தான். இல்லை. ஏதோ ஓர் அலுவலகத்தின் முன் அறை போல இருந்தது. ஒரு மேசை போட்டு அதன் மேல் வெளிநாட்டுக் காலண்டர் நட்டு வைத்திருந்தது. எதிரே திரைச்சீலையில் பச்சை பச்சையாக டிராகன் வேலைப்பாடுகள். ஒரு பெரியவரின் போட்டோ மாலை போட்டுப் பொட்டிட்டு தொங்கிக்கொண்டிருக்க வஸந்த் முதன் முதலாக அவனை "வாங்க" என்றவரைப் பார்த்தான். முப்பத்து ஐந்திருக்கலாம். தலை கலைந்திருந்தது. கண்களில் புன்னகை இருந்தது. கையில் ஒரு பற்ற வைக்காத சிகரெட்டுடன் வஸந்த்தை நோக்கி லேசாகப் புன்னகைத்துக்கொண்டே வந்தான். "என்ன வஸந்த்! வியாபாரம் பேச வந்தீங்களா?"

"உண்மையைச் சொல்லப் போனா ஆமாம்!"

"என்ன வியாபாரம் தெரியுமா?"

"ஏறக்குறையத் தெரியும்."

"போலீஸைக் கூட்டிக்கிட்டு வந்திருக்கீங்களா?"

"போலீஸா?"

"மிஸ்டர் வஸந்த்! எங்களுக்கும் கொஞ்சம் புத்திசாலித்தனத்தை மிச்சம் வெச்சிருங்க. எங்களைப் பிடிக்கலாம்னு பிளான் பண்ணிக்கிட்டுத்தானே வந்திருக்கீங்க?"

"சேச்சே! எங்கம்மா மேலே ஆணையா அப்படியெல்லாம் இல்ல ஸார்; உங்க பேர் தெரியலியே?"

"அருண்குமார்."

"நீங்கதானோ?"

"ஆமா நாங்களேதான். ரொம்பக் கிட்டக்க வந்துட்டீங்க இல்லையா?"

"சேச்சே! அப்படியெல்லாம் இல்லையே. அருண்! இத பாருங்க. நான் வந்த விஷயம் ப்யூர் அண்ட் ஸிம்பிள் பிஸினஸ். பேரம் பேசறதுக்குத்தான் வந்தேன்."

"அப்ப எதுக்கு இந்த அமெச்சூர்தனமான மாறுவேஷம்?"

"அது போலீஸுக்குப் பாச்சா காட்டறதுக்குத்தான்." அவன் முகத்தில் சலனம்—நம்பிக்கை ஏதாவது தெரிகிறதா என்று பார்த்தான்.

"மேலே சொல்லுங்க."

"நோட்டுக்களை வாங்கறதுக்குத்தான் வந்தேன் அருண். என்கூட யாராவது வந்திருக்காங்களா, நீங்களே செக் பண்ணிப் பாத்துருங்க. தனியாத்தானே வந்திருக்கேன். பார்த்துக்கங்க."

"பார்த்தேன்! போலீஸ் பின்னால வரப்போவுது. அதும் தெரியும். ஆனா இந்த இடத்தை அவங்களாலே ஜென்மத்துக்கும் கண்டுபிடிக்க முடியாது. நிமிஷமா மாத்திப்புடுவோம். கொஞ்சம் உள்ளே வரிங்களா, உங்களோட பேசணும்."

வஸந்த் தயங்க, "உங்களை மட்டும் நாங்க நம்பணும். நீங்க என்னை நம்ப மாட்டீங்க?" என்றான்.

"சேச்சே! வரேன்."

திரையைத் தள்ளிக்கொண்டு நுழைந்ததும் பிரமித்தான். "இங்கதான் நடக்குதோ!"

"ஆமா! ஓரத்தில் சின்னதா ஒரு ஹீடல்பர்க் இயந்திரம் இருந்தது. காம்ப்பாக்ட்டான மிஷின். பத்து நிமிஷத்திலே டெம்போவிலே லோடு பண்ணிவிடலாம். லோடு பண்ணத்தான் போறோம். இன்னிக்கு எல்லாத்தையும் காலி பண்ணிடலாம்னு உத்தேசம். திங்க்ஸ் ஆர் கெட்டிங் ஹாட்!"

"நீங்க என்னைப் பொறுத்தவரை கவலையே பட வேண்டாம். எனக்காக காலி பண்ண வேண்டியதில்லை."

"உங்களைப் பொறுத்தவரை கவலை இல்லை வஸந்த்! உங்களைத்தான் தீர்த்துக் கட்டிடலாம்னு இருக்கமே!"

"என்னது!"

"ஆமா! இங்க இருந்து எங்க பார்ட்டியோட சம்பந்தமில்லாதவங்க—எங்க ரகசியத்தைத் தெரிஞ்சுக்கிட்டவங்க திரும்பிப் போறதில்லை. போகக் கூடாது. விடறதில்லை."

"அப்படியா?" என்றான் வஸந்த். அவன் முகத்தில் சலனம் ஏதும் இல்லை.

"உட்காருங்க. ஸாம்பிள் பார்க்கணும்னிங்களே பாக்கறீங்களா?"

அவன் சிகரெட்டை இப்போது பற்ற வைத்து, இழுத்துவிட்டு, நிதானமாக அலமாரியைத் திறந்து, ஒரு பழுப்புக் கவரைப் பிரித்து, ஒரு நோட்டை உருவிக் காட்டினான்.

"இப்பத்தான் ஃபிரஷ்ஷா போட்டிருக்கோம். இன்னும் கொஞ்சம் உலர்ந்தா சரியாயிடும்."

வஸந்த் அந்த நூறு ரூபாய் நோட்டை வாங்கிப் பார்த்து "ரிமார்க்கபிள். நிஜமாவே நீங்க தேர்ந்த கலைஞர் ஸார்! இது குற்றமோ சட்டப்படி நியாயமோ, அநியாயமோ எப்படி வேணா இருந்துட்டுப் போகட்டும். வேலை சுத்தம்!" என்றான்.

"இதுவரைக்கும் ஒரு நோட்டு கண்டுபிடிச்சதில்லை மிஸ்டர் வஸந்த். பம்பாய், கல்கத்தா, டில்லி, ஆமதாபாத் எல்லா இடத்துக்கும் நம்ம சரக்கு போயிருக்கு. வாட்டர் மார்க்கைப் பாருங்க!"

"ப்யூட்டிஃபுல்!"

"பேப்பரைக் கையால நிரடிப் பாருங்க."

"அதே நிஜ நோட்டு உணர்ச்சி! எல்லாம் தண்ணியோட மகிமை!"

"தண்ணியா?"

"ஆமா. ராஜராஜன் கிணத்து ஸ்பெஷல் கெமிக்கல்களினால உங்க இன்டாக்லியோ பிளாக்குகளை அலம்பறதினாலதானே இந்த எஃபக்ட் வர்றது உங்களுக்கு!"

"அட! அதுகூடத் தெரியுமா உங்களுக்கு!"

"அதுக்குத்தானே உக்கல் பக்கத்திலேயே வேலையை ஆரம்பிச்சிருக்கீங்க!"

"இது எப்படி உங்களுக்குத் தெரிய வந்தது?"

"அந்த ரசாயன ஆராய்ச்சிக் கட்டுரையை நாங்களும் படிச்சோம்."

"அதைத்தான் கிளிச்சிட்டதா லைப்ரரியில உங்களைத் தொடர்ந்த ஆசாமி சொன்னானே!"

"உலகத்திலே ஒரு காப்பிதானா அது? விசாரிச்சுட்டு வேறே காப்பி பார்த்துட்டோம்."

"பரவாயில்லை! நல்லா சொந்தமா கண்டுபிடிச்சு இங்க வரைக்கும் வந்துட்டிங்க. ஆனா ஒரு தப்புப் பண்ணிட்டீங்க வஸந்த். தனியா வந்திருக்கக் கூடாது."

"போலீஸோட வந்திருந்தா உங்களைச் சந்திக்கிற சந்தர்ப்பமே கிடைச்சிருக்காதே!"

"என்னதான் சோப்பு வெச்சாலும் உங்களை நான் விடப் போறதில்லை வஸந்த்!"

"என்ன செய்யறதா உத்தேசம்?" என்றான் வஸந்த் கவலையுடன்.

"பயப்படாதீங்க. இந்தி சினிமாவிலே வர்ற மாதிரி சித்ரவதை எல்லாம் பண்ண மாட்டேன்."

அவன் பேசிக்கொண்டே மேசையின் இழுப்பறையிலிருந்து ஒரு

பிஸ்டலை எடுத்துக் காட்டினான்.

"கைக்கடக்கமா கச்சிதமா திருக்குறள் மலிவுப் பதிப்பு மாதிரி இருக்கே" என்றான் வஸந்த். "ஸார் என் கையெல்லாம் நடுங்கறதைப் பாத்திங்களா!"

"ஸெல்ஃப் லோடிங்! ரீகாயில் எதும் கிடையாது. டபிள் ஆக்ஷன். நூறு அடி வரைக்கும் கூட எஃபக்டிவ்வா இருக்கும்!"

"சைலன்ஸர் இருக்கா"

"தேவையில்லை. இங்க சத்தம் போட்டா யாருக்கும் கேக்காது."

"வலிக்குமா ஸார்"

"எது?"

"பிஸ்டல் ஷாட்!"

"அதிகம் வலிக்காதுன்னுதான் சொல்றாங்க."

"நீங்க எப்படிக் கொல்றதா உத்தேசம்?"

"க்ளோஸ் ரேஞ்சில மார்பில!"

"ஷ்யூரா செத்திருவேனில்ல!"

"ஆமா."

"ஏன்னா பாதி உயிரா விட்டுட்டு என்னை வெஜிடபிள் ஆக்கிடாதீங்க. செய்யற வேலையைச் சுத்தமாச் செய்துருங்க."

"கவலைப்படாதீங்க வஸந்த்! நான் அச்சடிச்ச நூறு ரூபாய் களைப் பார்த்தீங்க இல்ல? அதுபோல சுத்தமாச் செய்துருவேன். யாராலயும் கண்டுபிடிக்க முடியாம."

"ஸார்! உங்ககிட்ட ஒரு ரிக்வெஸ்ட்."

"என்ன?"

"என்னைத் தீர்க்கறதுக்கு முந்தி ஒரு கடைசி மரண ஆசை."

"என்ன சொல்லுங்க."

"உங்க ஒர்க்ஸ் பூராவும் பார்க்கணும். இந்த பிரஸ் மாத்திரம்தானா . . ."

"இல்லை. பேப்பர் ட்ரீட்மெண்டும் இருக்கு. பின்பக்கத்தில. அதுக்கும் கிணத்துத் தண்ணி உபயோகப்படுது."

"நீங்க கெமிகல் இன்ஜினியரா?"

"இல்லை. பத்து வருஷம் இந்த ஃபீல்டில் அனுபவம்."

"நோட்டு அடிக்கிறதிலயா?"

"இல்லை. அச்சுத் தொழில்ல!"

"ஓ! பொதுவா கள்ள நோட்டுக்களை அல்ட்ரா வயலெட்ல பார்த்தா கண்டுபிடிச்சுறலாம்னு சொல்வாங்க."

"நம்ம நோட்டு அதுகூட முடியாது. அதே இங்க்தான். கெமிக்கல் அனாலிஸிஸ் பண்ணி.. இதுக்காக நாப்பதாயிரம் ரூபா செலவழிச்சேன் வஸந்த்."

"அடடா! போட்ட காசை எடுக்க வேண்டாமோ? இந்த பிரஸ் என்ன விலை?"

"இது ஆறு லட்சம்."

"ஓ.ஜி.எல்.ல வாங்கினீங்களா! எப்படி இம்போர்ட் லைசென்ஸ் கிடைச்சது?"

"அதுக்குத்தான் அருணா என்டர்ப்ரைஸஸ் கம்பெனி வச்சு ஏஜன்ஸி பிஸினஸ் செய்யறோமே!"

"ஓ! அப்படியா? உத்தமம். ஆனா இதில வர்ற காசு மாதிரி ஆகுமா! ஒரு நூறு ரூபா நோட்டு அடிக்க உங்களுக்கு அடக்க விலை எவ்வளவு ஆகும்?"

"ஒண்ணு இருவது."

"ஒரு ரூபா இருபது பைசா!"

"ஆமா."

"அப்ப எட்டாயிரம் பர்ஸண்ட் லாபம் இந்தத் தொழில்ல?"

"எட்டாயிரம் வராது. பத்துக்கு இருபதுன்னு கொடுக்கறப்ப நாலாயிரம் பர்ஸண்ட்தான் விழும். ஆனா ரிஸ்க்கு?"

"வாஸ்தவம்தான்.. சும்மா சொல்லக் கூடாது" என்றான். தொடர்ந்து, "ரிஸ்க்கே இல்லை உங்க நோட்ல. யாராலயும் கண்டுபிடிக்கவே முடியாது. இதுவரை நோட்டில இருந்து கம்ப்ளெய்ண்ட் ஏதும் வந்ததே இல்லைன்னுதான் தெரியுதே!"

"இத பாருங்க வஸந்த்! பேசிக்கிட்டே இருந்தா உங்களோட டேஞ்சர்! நாங்க இன்னும் மூணு மணி நேரத்தில இடம் மாறியாகணும். எல்லாத்தையும் காலி பண்ணிக்கிட்டுப் பாக்கி இருக்கிறதை பெட்ரோல் போட்டு எரிச்சுட்டுப் போகப் போறோம். உங்களோட அதிக நேரம் பேசிக்கிட்டிருக்க விருப்பமில்லை.

அவன் துப்பாக்கியை எடுத்துத் தன் மேல் குறி பார்ப்பதை வஸந்த் கலவரத்துடன் கவனித்தான்.

"கொஞ்சம் இருங்க. ஒரு ரிக்வெஸ்ட். என்னை ஒரு ரூம்ல தள்ளிட்டு துப்பாக்கியை கைல கொடுத்துடுங்களேன். நான் பாட்டுக்கு அக்கடான்னு உங்களுக்குச் சிரமம் ஏதும் வைக்காமத் தற்கொலை பண்ணிக்கிடறேன்."

"வஸந்த்! அப்படி ஏமாந்தவங்க இல்லை நாங்க."

"நான் யார் கிட்டயும் சொல்லலை. என்னை விட்டுட்டா உங்க கோஷ்டியிலே சேர்ந்துட்டு அங்கங்க மொபஸல்ல நோட்டு

தள்ளறேன்! வக்கீலுக்குப் படிச்சிருக்கேன். அப்பப்ப கேஸ் வந்தா அதையும் பார்த்துக்கறேன். அப்புறம் நல்லா கார் ஓட்டுவேன் ..."

அவன் சிரித்துக்கொண்டே துப்பாக்கியை வஸந்த்தின் மார்புக்கு நேர் குறி பார்த்தான்.

"ஸார் அருண் ஸார்! கடைசியா ஒரு சான்ஸ் கொடுக்க மாட்டீங்களா?"

"ஸாரி வஸந்த்! நீங்க ரொம்ப பார்த்துட்டீங்க!"

"இருங்க இருங்க. ஒண்ணுக்கு வருது."

"அதெல்லாம் செத்ததுக்கப்புறம் போய்க்கங்க."

"என்ன ஸார் நிஜமாவே சுடப்போறீங்களா? அய்யோ ஜாக்கிரதை ஸார். வெடிச்சுறப்போறது ஸார்! எனக்கு இன்னும் கல்யாணம் ஆகல்லே. ஒரு பொண்ணைக் காதலிக்கிறேன். என் வாழ்க்கைல இன்னும் எத்தனையோ செய்ய வேண்டியது இருக்கு. உருப்படியா ஒரு செடிகூட நட்டு வைக்கலை. காண்டீன்ல நாப்பது ரூபா பாக்கி இருக்கு. ஊண்டட் ஸிவிலைஸேஷன்னு வி.எஸ்.நய்பால் புத்தகம் முப்பது பக்கம்தான் படிச்சு இருக்கேன். மூகாம்பிகை கோயிலுக்கு ஒரு நடை போயிட்டு வரணும். ஸார் ஸார் ஸார்!"

வஸந்த் சொல்லி முடிப்பதற்குள் அந்தத் துப்பாக்கி ஒரு முறை டுய்க் என்று ஒலித்தது. அந்தக் குண்டு வஸந்தின் மார்பில் வலதுபுறத்தில் சுரீர் என்று குத்திப் பாய்ந்து உள்ளே பொதிந்து கொள்ள வஸந்த் முன்புறமாகக் கவிழ்ந்து விழுந்தான். மார்பைப் பிடித்துக்கொண்டதில் அவன் விரல்களின் ஊடே சற்றுத் தயக்கத்துக்குப் பின் ரத்தம் வழிந்தது. வஸந்த் வாய் திறந்து காற்றுக்குத் திணறினான். பேச முடியவில்லை. அவன் கண்களின் முன் எல்லாம் சுழற்சியாக இருந்தது. பல்பு வட்டமடித்தது. அந்த அருண்பிரசாத்தோ – குமாரோ எவனோ சிரிப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருப்பது லேசாகத் தெரிந்தது. வஸந்த் அவன் காலடியில் விழ,

"பெரியசாமி! பெரியசாமி!" என்று அவன் கூப்பிட்டான்.

உள்ளே வந்த பெரியசாமி கீழே விழுந்து கிடந்த வஸந்த்தைப் பார்த்து "கொன்னுட்டீங்களா?" என்றான்.

"ஆச்சு! பெரியசாமி, வான் வந்தாச்சா?"

"பத்து நிமிஷத்தில வந்துரும். இவனை ... இதை என்ன பண்றது?"

"பின்பக்கமா வெட்டிப் புதைச்சுறலாம்."

"நேரம் இருக்குதா?"

"ஏன்?"

"இவன் பின்னாடி போலீஸ் வர்றதுக்கு எத்தனை நேரமாகும்?"

"அப்ப போட்டுட்டுப் போயிரலாமா?"

"பிளேன் டிக்கட் ரெடியா இருக்கு. உடனே புறப்பட்டுடறதுதான் நல்லது."

"பெட்ரோல் எவ்வளவு இருக்கு?"

"ஒரு டின்தான் இருக்கு. பத்த வெச்சுட்டுப் போயிறலாம் . . . இதோ வான் வந்துரும்."

பெரியசாமி வஸந்த்தின் உடலை ஓரத்தில தரதரவென்று இழுத்துப் போட்டான்.

"முதல்ல பிரெஸ் சாமான்களை லோட் பண்ணிடு."

"நீங்க கிளம்புங்க. நான் பார்த்துக்கறேன்."

"இவனை என்ன பண்ணுவே?"

"குப்பையோட குப்பையா பெட்ரோல் ஊத்திப் பத்த வச்சுர்றேன் . . . ."

அப்போது ஜன்னலுக்கு வெளியே ஜீப் வருவது தெரிந்தது.

# 26

சென்ற அத்தியாத்தின் இறுதி நிகழ்ச்சிகளிலிருந்து சற்றுப் பின் நோக்கிப் போகிறோம். அன்று பிற்பகல் வஸந்த்தை அனுப்பிவிட்டு கணேஷ் ஆபீஸ் அறையில் வீற்றிருந்தபோது வாசலில் ஜீப்பின் சீறல் கேட்டதும் உடனே ராஜேந்திரன் அவசரமாக அறைக்குள் நுழைவதைப் பார்த்தான்.

"என்ன ராஜேந்திரன்! நீங்க என்னைத் தேடிண்டா?"

"கணேஷ்! உடனே நாம் அந்த உக்கல் கிராமத்துக்குப் போகணும்."

"நாளைக்குப் போறதா இருக்கேன்."

"இல்லை. இப்பவே கிளம்புங்க. எங்கே வஸந்த்?"

"வஸந்த்தை முன்னாலே அனுப்பியிருக்கேன்."

"தனியாகவா?"

"ஆமாம். ஏன்?"

"ஆபத்து கணேஷ்! அவங்க பார்ட்டி என்ன செய்யறாங்க தெரியுமில்லே?"

"தெரியுமே. நூறு ரூபாய் நோட்டு அடிக்கிறாங்க."

"அட! நீங்களும் கண்டுபிடிச்சிங்களா? ரொம்பக் காலமா பாச்சா காட்டிக்கிட்டிருக்கிற பார்ட்டி அது. வஸந்த்தைத் தனியா அனுப்பிச்சு என்ன சாதிக்கிறதா உத்தேசித்திருந்தீங்க?"

"அவங்களை காண்டாக்ட் பண்ணி வியாபாரம் பேசறாப்பல பேசி அவங்க ஆபரேஷன்களெல்லாம் எங்கே நடக்கிறதுன்னு கண்டுபிடிக்க."

"ஒண்டியா அனுப்பிச்சிங்களா. தப்புப் பண்ணிட்டிங்க கணேஷ்! அவுங்க கொலைக்கும் அஞ்ச மாட்டாங்க. ஆப்டுட்டார்னா தீர்த்துக் கட்டிடுவாங்க. அதிகம் பேச வேண்டாம். வாங்க போகலாம்."

"இருங்க. ப்ரொபஸரும் மகளோட கூட வரேன்னாரு. போன் பண்ணிட்டு ..."

"போற வழியில ப்ரொபஸரைக் கூட்டிக்கிட்டு போகலாம். நீங்க புறப்படுங்கங்கறேன்."

வஸந்த் சென்று இரண்டு மணி நேரத்துக்குள் கணேஷ், ராஜேந்திரன், பேராசிரியர், இனியா யாவரும் உக்கலை நோக்கி விரைவாகச் சென்றுகொண்டிருக்கையில் ராஜேந்திரன் அந்த நோட்டு விவகாரத்தைப் பற்றித் தகவல்கள் தந்தார். "கள்ள நோட்டுக்களைச் சாதாரணமா, சுலபமா கண்டுபிடிச்சுறலாம். கள்ள நோட்டு அவசரம் உள்ள இடங்களில், அதிகம் சந்தேகப் படாத இடங்களில்தான் செலாவணியாகும். பிஸியா இருக்கிற ஓட்டல், சினிமாக் கொட்டகை இந்த மாதிரி இடங்களில் ஒத்தை ஒத்தையா மாத்தணும். அனுபவஸ்தங்க சுலபமா கள்ள நோட்டுக்களைக் கண்டுபிடிச்சுருவாங்க. உதாரணமா பாங்கில வேலை செய்யறவங்க நோட்டுக் கத்தையாக நிரடிப் பார்த்துக்கூடத் தெரிஞ்சுக்கிடுவாங்க. சில பேர் தொட்டாக்கூட போதும்."

"இவங்க நோட்டு?"

"இவங்க நோட்டு ரொம்ப ஒஸ்தியான ஜாதி. இந்த மாதிரி முறைகளில் கண்டுபிடிக்கவே முடியலே. கள்ள நோட்டுக்கும் நல்ல நோட்டுக்கும் பேப்பர் திக்னஸ், ஃபீல், இங்க் கலர் இதுல எல்லாம் லேசா வித்தியாசம் இருக்கும். ஆனா இவங்க நோட்டுல அந்தக் குறைகள் எதுவுமே இல்லை. ரொம்ப க்ளோஸ். சந்தேகாஸ்பதமான நோட்டுக்கள் சிலது ஆறு மாசத்துக்கு முன்னால எங்க பார்வைக்கு வந்தது. லாப்ல கொடுத்து யு.வி.ல. பார்த்ததில லேசா வித்தியாசம் தென்பட்டது. ஆனா உத்திரவாதமா கள்ள நோட்டுன்னும் சொல்ல முடியலை. ரொம்ப நல்ல எக்விப்மெண்ட் வெச்சுக்கிட்டு நல்ல முறையில் அச்சடிக்கிறாங்கன்னு தோணிச்சு. எந்த ஏரியாவிலேருந்து ஆபரேட் பண்றாங்கன்னு தெரியலை. அந்த அருண் எண்டர்ப்ரைசஸை, க்ளோஸா வாட்ச் பண்ணிக்கிட்டுத் தான் இருந்தோம். சந்தேகப்படும்படியா எதும் இல்லை."

"பின்ன எப்படி இப்ப உறுதியாச் சொல்றீங்க?"

"நீங்க எப்படி உறுதியாச் சொல்றீங்க கணேஷ்?"

"ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையில இருந்து அந்தக் கிணத்துத் தண்ணி . . ."

"அதே கட்டுரையைப் போலீஸ் பாக்க மாட்டாங்களா? எங்களுக்கும் கொஞ்சம் திறமையைக் கொடுங்க."

"சேச்சே! உங்களுக்கில்லாத திறமையா? ராஜேந்திரன்! இப்ப வஸந்த்தை அனுப்பிச்சது முட்டாள்தனம்னு தெளிவாத் தெரியுது. விஷயம் தீவிரமானதுதான்."

"வஸந்த்துக்கு என்ன ஆகும்?" என்றாள் இனியா.

"அடி உதை பட்டுருவானோன்னு பயம்!"

"நல்லா அடிபடட்டும்" என்றாள் இனியா. அவள் முகத்தில்

கோபம் அங்கங்கே சிவப்பாகத் தெரிந்தது.

"ஏன் இனியா?"

"அந்தப் பொண்ணு கூட அவர் கொஞ்சின கொஞ்சலைப் பார்த்திங்க இல்லை?"

"சேச்சே. அது அவன் விளையாட்டுத்தனமான சுபாவம் இனியா. நான் கூட அதைப் பத்திக் கேட்டேன். என்ன சொன்னான் தெரியுமா இனியா?" கணேஷ், ப்ரொபஸர் அரைத் தூக்கத்தில் இருப்பதைக் கவனித்துவிட்டு, "உன்னோட உறவுங்கறது காவியம், கவிதை. இது வெறும் பொம்மை பார்க்கறதுதான்னான்."

"அப்படியா சொன்னார்?"

பேராசிரியர் எழுந்து, "உக்கல் வந்தாச்சா?" என்றார்.

"இல்லை ஸார். இன்னும் இல்லை. தூங்குங்க"

விழித்துக்கொண்டவர் கணேஷ், ராஜேந்திரன் சம்பாஷணையில் ஏதும் ஆர்வம் காட்டுபவராகத் தெரியவில்லை.

"அழகர் மலைல ஒரு பகுதியில கிடாரிப்பட்டில இருந்து மூணு கல் தொலைவில குகைப் படுகையிலயும் சுனைக்குப் பக்கத்து பாறையிலும் ஒரு பெரிய கல்வெட்டைக் கண்டுபிடிச்சு நான்தான் ட்ரான்ஸ்க்ரைப் பண்ணேன். கணேஷ் அதில ஒரு இடத்தில 'ஊபு வணிகன் வியகன் கணதிகள் ...'"

"ஸார் நாங்க கள்ள நோட்டைப் பத்திப் பேசிக்கிட்டிருக்கோம். நீங்க கல்வெட்டு .."

"அதில காசு இருந்துதான் ஆகணும் கணேஷ்."

"எதில?"

"ராஜராஜன் கிணத்துல."

ராஜேந்திரன், "ஸார்! அதைத் தீர விசாரிச்சுப் பார்த்துட்டோம், ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்ட்ல. அவங்க ஒரு தடவைக்குப் பத்துத் தடவையா அடிச்சுச் சொல்லிட்டாங்க. அங்க காசு இல்லை. வேற ஏதோ கல்வெட்டில அதெல்லாத்தையும் கிணத்தில இருந்து தூர்த்து எடுத்திட்டாங்கன்னு எழுதியிருக்கோம்" என்றார்.

"அப்படின்னு எந்த மடையன் சொன்னான்?"

"உங்களைப் போல இன்னொரு பேராசிரியர்தான், ஸார்."

"இத பாருங்க. இப்ப ரெண்டாயிரம் ரூபா பெட்டு கட்டறேன். அந்தக் கிணத்தில.. ஒருவேளை கொடுங்காளூர் பக்கத்தில் இன்னொரு கிணறு இருக்கு. அதில போட்டிருப்பாங்களோ?"

"அவங்க என்னமோ பண்ணிட்டுப் போகட்டும் ஸார். நமக்கு இப்ப முக்கியம் தங்கக் காசில்ல. வஸந்த்தான்."

உக்கலுக்கு வந்த கையுடன் பேராசிரியர் தம் மகளுடன் ஒரு

டார்ச் விளக்கு, பூதக் கண்ணாடி சகிதம் ரா.ரா. கிணத்தை நோக்கிப் போய்விட்டார்.

"சரியான கம்பளிய்யா அந்த ஆளு! எங்க புடிச்சிங்க?"

"ஆராய்ச்சிக்காரங்களுக்கு அதுக்கு மேலே எதிலும் ஆர்வம் கிடையாது."

ஊரைச் சுற்றி வலம் வந்துவிட்டார்கள். வஸந்தின் சுவடுகள் தெரியவில்லை.

"குறிப்பா எங்காவது போகச் சொன்னீங்களா?"

"பஸ் ஸ்டாண்டு பக்கத்தில போய் முதல்ல விசாரிக்கச் சொன்னேன்."

"சரி, அங்கதான் போகலாம் வாங்க."

பஸ் நிலையத்தில் கொஞ்ச நேரம் திரிந்தார்கள். அந்தப் பெட்டிக் கடைக்காரன் மார்பில் சட்டைப் பித்தான் திறந்து அதில் ஒரு புலி நகம் தொங்கக் காட்டுத்தனமாக கிராப் வைத்துக் கொண்டு அவர்களைப் பக்க வாட்டமாகப் பார்த்தான்.

"இங்க சாயங்காலம் ஒரு ஆள் மீசை வெச்சிக்கிட்டு கன்னத்தில் மச்சம், கைல பொட்டியோட வந்தாருங்களா?"

"அப்படி யாரும் இல்லிங்களே."

சர்பத் பையன் "அண்ணே அப்படி ஒருத்தர் வந்தாருங்களே. சிகரெட்டு வாங்கிட்டு உங்ககிட்ட ஏதோ பேசிக்கிட்டிருந் தாருங்களே!" என்று இழுத்தான்.

"அடப் போடா. அது வேற யாரையோ கேக்கறாங்க அவங்க. அந்த ஆளு இல்லை. அவரு ஏதோ பத்திரிகை வாங்க வந்தாருங்க."

"என்ன பத்திரிகை?"

"அது வந்து ..." அவன் சற்றுத் தயங்கினான்.

"கல்கியாப்பா?"

"இல்லைங்க. இந்த மாதிரிப் பத்திரிகை" 'இன்ப மயக்க'த்தைக் காட்டினான்.

"அப்ப வஸந்த்தாங்க ... அது! அந்தாளு எந்தப் பக்கம் போனான்?"

"நான் கவனிக்கலைங்க."

"இங்கதான் வந்திருக்கான் ராஜேந்திரன்." இருவரும் நடந்தார்கள். "எங்க போவான் இங்க இருந்து?" சற்று தூரத்தில் இருந்த டீக்கடைக்குச் சென்றார்கள். "டீக்கடையைப் பார்த்தா நிச்சயம் ஒரு டீ அடிப்பான். இங்க விசாரிச்சுப் பார்க்கலாம்."

"ஆமாங்க. பார்த்தா வெளியூர்க்காரர் மாதிரி இருந்ததுங்க. உக்காந்துக்கிட்டு டீ சாப்பிட்டாருங்க. யாருக்கோ காத்துக்கிட்டு இருக்கிற மாதிரி தோணிச்சு. அப்புறம் ஒரு பையன் வந்து

கூட்டிக்கிட்டுப் போனாங்க...”

“எந்தப் பக்கம்?”

“மேக்காலேங்க. தெருக்கோடிக்கு...”

டீக்கடைப் பெஞ்சில் ஒரு காகிதம் கிடந்தது. அச்சடித்த புத்தகத்திலிருந்து கிழிக்கப்பட்ட ஒரு பக்கம் அது. அதில்:

**சதன் எழுதிய மலபார் தேங்காய்**

> ஆரம்ப நாட்களில் எனது முதலாளி ராஜாவின் அந்தரங்க வாழ்க்கை எனக்குப் பிடிபடவேயில்லை... போகப் போகத்தான் அவரது சரச சல்லாப லீலைகள் புரிய ஆரம்பித்தன.

கணேஷ் புன்னகையோடு “அடையாளம் வைச்சுட்டுப் போயிருக்கான் வஸந்த். வாங்க போகலாம்” என்றான்.

அந்தத் தெருக் கோடியில் அந்த புத்தகத்தின் ஒன்பதாம் பக்கம் கிடைத்தது.

> அவளது இரண்டுமே பித்தளைப் பானை போல ஜொலித்துக்கொண்டிருந்தன.

இருட்டிக் கொண்டிருக்க, “சீக்கிரம் சீக்கிரம்” என்று கணேஷின் உள்ளம் பதறியது. நெல் வயல்களின் ஆரம்பத்தில் பதின்மூன்றாம் பக்கம் கிடைத்தது.

> அவன் பெங்களூர் பாணியில் தாவணி போடாமல் பாவாடை ஜாக்கெட் சகிதமாக இருந்தாள்.

ஒரு மாந்தோப்பின் பண்ணை முற்றம் போல இருந்த இடத்தில்–

முழு ஆப்பிள் ஒன்றை அப்படியே விழுங்க முயற்சிப்பவன் போல இருந்தது அவன் செய்கை.

சின்னதாக ஷெட்டுபோல இருந்த மறைவான இடத்திற்கு ராஜேந்திரனும் கணேஷும் வந்து சேர, ‘அவளோ தன் இரு கண்களையும் அப்படியே மூடிக்கொண்டாள்.’

அப்போதுதான் ஓரத்தில் வான் நின்றுகொண்டிருந்ததையும் அதில் சிலர் எதையோ ஏற்றுவதையும் பார்த்தார்கள். ராஜேந்திரன் தம் ரிவால்வரை ஹோல்டரிலிருந்து விடுவித்துக் கொண்டார். உள்ளே ‘டுய்க்’ என்று சப்தம் கேட்க, “கணேஷ் க்விக்! பதுங்கிக்கிங்க. ஸம்திங் ராங்!” என்றார்.

கணேஷ் பதற்றப்பட்டு ராஜேந்திரன் பின்னால் சென்று பதுங்கி எட்டிப பார்த்தான்.

உள்ளே மூவர் கீழே கிடந்தவனைச் சுற்றிலும் பெட்ரோல் கொட்டிக்கொண்டிருக்க “அய்யோ! வஸந்த்” என்று கத்தி விட்டான். உள்ளே உடைத்துக்கொண்டு ஓட, உள்ளே இருப்பவன்

உஷாராகித் தன் கைத்துப்பாக்கியை எடுத்து கணேஷை அவசரமாகக் குறி பார்த்துத் துப்பாக்கியின் குதிரையைத் தட்டிவிட, டுமீல் என்று வெடித்தது ராஜேந்திரனின் ரிவால்வர். கையில் ரத்தம் பொங்க அவன் துப்பாக்கி சிதறி விழுந்தது. கணேஷ் அதைப் பற்றிக்கொண்டு "ஆல்ரைட்.! எல்லோரும் அப்படியே நில்லுங்க. வெளியே போலீஸ் காத்திருக்குது" என்றான்.

கே.ஜே. ஆஸ்பத்திரியில் மூன்றாவது மாடிக் கட்டிட அறையில் ஜன்னலில் ஏராள மலர்கள் வைத்திருந்தன. கணேஷ் கவலை தோய்ந்த முகத்துடன் அறைக்குள் நுழைந்தான்.

திரை மூடியிருந்தது. "சரியா பத்து நிமிஷந்தான்" என்று நர்ஸின் குரல் கேட்டது.

"வஸந்த்! வஸந்த்!"

வஸந்த் மெல்லக் கண் விழித்தான். "பாஸ் நீங்களா!"

"ஆமாம் வஸந்த்!"

"இது மெட்ராஸ்தானே"

"மெட்ராஸ்தான் வஸந்த்."

"எம படாள் எல்லாம் பார்த்தேனே."

"கனவா இருக்கும். எப்படி இருக்கே வஸந்த்?"

"பொழைச்சுட்டேனா? நான்தானே பேசறேன்?"

"நீதான் வஸந்த்! நீதான் வஸந்த்!"

"சரியான சமயத்தில வந்துட்டீங்களே. இல்லைன்னா ஆபீஸ்ல இத்தனை நேரத்துக்குப் படமாத் தொங்கியிருப்பேன் இல்லை?"

"அதிகம் பேசாதே வஸந்த்!"

"எனக்குச் சரியாப் போச்சு பாஸ். டாக்டர் கில்லாடி. குண்டை வெளில எடுத்துட்டார். எனக்கு சின்னதா ஒரு பாட்டில்ல போட்டுப் பரிசாக கொடுத்திருக்கார். தழும்பைப் பார்க்கறீங்களா?" வஸந்த் தன் சட்டைப் பித்தானைக் கழற்றி மார்பில் ஆறிக் கொண்டிருந்த தையலைக் காட்டினான்.

"பத்து சென்டிமீட்டர்!"

"வஸந்த் ஐயம் ஸாரி."

"எதுக்கு ஸாரி? மலபார் தேங்காயைப் பிடிச்சிட்டு வந்தீங்களே. பெரிய ஆள் பாஸ் நீங்க! டிஸ்சார்ஜ் ஆனப்புறம் ஒரு முறை கால்ல விழணும்!"

"இனியா வந்தாளா?"

வஸந்த் கண்களில் சோகம் ஜரிகையிட்டது.

"வரலையா?"

"வந்தா! அதான் வம்பாப் போச்சு!"

"என்ன ஆச்சு?".

"இப்ப உங்களுக்குத் தழும்பு காட்டலை? அதே மாதிரி அந்த லைப்ரரி பொண்ணு வந்திருந்தபோது அவளுக்குக் காட்டினேன்."

"அந்தச் சமயத்தில் வந்துட்டாளா?"

"அப்ப வந்திருந்தாப் பரவாயில்லை. இதே மாதிரி அந்த தழும்பு தனக்கும் இருக்கிறதா அந்தப் பொண்ணு சொல்லிச்சு. 'எங்கே காட்டு! பார்த்தா எனக்குக் கொஞ்சம் சீக்கிரம் குணமாகும்'னு சொன்னேன். அவ காட்டினா. அந்தச் சமயம் பார்த்தா இனியா வந்து தொலைக்கணும்! கொஞ்சம் அசந்தர்ப்பமாப் போயிடுத்து ..."

கணேஷ் சிரிப்பை அடக்கிக்கொண்டான்.

"சிரிக்காதீங்க பாஸ். இனியா ... எல்லாம் கான்ஸலுன்னுட்டா. என் முகத்தில முழிக்க மாட்டேன்னுட்டா. பெண்களே மோசம் பாஸ். கேவலம் தழும்பைப் பார்த்தா தப்பா? வள்ளுவர் சொன்ன மாதிரி ..."

"வஸந்த் இப்ப வள்ளுவர் வேண்டாம்; ரெஸ்ட் எடுத்துக்க!"

"பேராசிரியர் என்ன சொல்றார்?"

"போன் பண்ணார். இன்னும் ஏதோ புதுசா கல்வெட்டு ஆராய்ச்சி பண்ணதில தஞ்சாவூர் ஜில்லாவில் பொதுப்படைங்கிற கிராமத்தில இன்னொரு கிணறு இருக்காம் ..."

"சரிதான். என்ன சொன்னீங்க?"

"ராங் நம்பர்னு வெச்சுட்டேன். ஒரு கிணறு ஏற்படுத்திய குழப்பம் போதாதா?"

"நோட்டு அடிக்கிறவர்களையெல்லாம் புடிச்சாச்சா?"

"எல்லாரையும் புடிச்சாச்சு. ராஜேந்திரன் உனக்கு அவார்டு கொடுக்க காத்திருக்கிறார்."

"அவார்டு உங்களுக்குத்தான்."


வஸந்த் திடீர் என்று பிரகாசமானான்.

"பாஸ்! கீழே ஒரு ரிஸப்ஷனிஸ்ட் இருக்கா. போறப்போ கவனிங்க. இன்கம் டீடெய்ல்ஸ் குறிச்சிக்கிறதுக்காக வந்திருந்தா. அந்த க்ஷணமே எனக்கு டெம்பரேச்சர் ஏறிப்போயி ... பாஸ் ஐ'ம் இன் லவ்!"

"சரிதான்! இனி எனக்குக் கவலையில்லை. உனக்கு உடம்பு சரியாப் போச்சுன்னு அர்த்தம்! நான் வரேன்."

கணேஷ் தன் தலையை இடம் வலமாக அசைத்துக்கொண்டே ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தான்.

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in



சுஜாதாவின் கணேஷ்–வஸந்த் தொடர்களில் வாசகர்களைப் பெரிதும் ஈர்த்த நாவல் வஸந்த்! வஸந்த்! ஒரு பழங்காலக் கிணறு குறித்த ஆராய்ச்சிக் குறிப்பும் அதன் பின்னணியில் நிகழும் குற்றங்களும் மிகவும் விறுவிறுப்பாகச் சித்தரிக்கப்படும் இந்நாவல் வாசகர்களின் யூகங்களை ஒவ்வொரு அத்தியாயத்திலும் வேறு திசைக்குத் திருப்பிவிட்டு எதிர்பாராத திருப்பங்களை உருவாக்குகிறது. சுஜாதாவின் அங்கதம் அதன் உச்சத்தைத் தொட்ட படைப்புகளில் இதுவும் ஒன்று.

BOOK WORLD
SPECIAL PRICE
Mob: 9844392535
₹ 75-

ISBN 81-88641-47-2
00001
9788188641475

உயிர்மை
பதிப்பகம்

Rs. 125